இறக்கை: 13 இறகு: 12

காக்கை கரவா கரைந்துண்ணும்

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

டிசம்பர் 2024 | விலை ₹ 50



## நூறாண்டு காணும் தோழர் ஆர்.நல்லகண்ணு
■ ஜி.சரவணன்

## புதிய உலக ஒழுங்கிற்கான 'BRICS' கூட்டமைப்பின் நுண்ணரசியல்
■ ஜமாலன்

## இலங்கையில் புதிய அத்தியாயம்
■ தி. சிகாமணி

## தமிழ்ச் சமூக வரலாற்று ஆய்வறிஞன் ராஜ் கவுதமன்
■ வீ.அரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடல் திறப்பு

நவம்பர் மாத இதழ் சிறந்த புத்தகத் திறனாய்வு இதழாக அமைந்தது. திறனாய்வுகள் ஆழ்ந்து வாசிக்கத் தூண்டுவனவாக அமைகின்றது. ஆய்வுலகின் பல்வேறு துறைகளை இணைத்து சிந்துவெளிக்கும் திராவிடத்திற்கும் உள்ள தொடர்பை வெளிக்கொணர்ந்தது புதியதொரு பாதையைத் திறந்து வைத்துள்ளது. சர்ச்சைகளின்றி அறிவிக்கப்பட்ட நோபல் விருதுகள் குறிப்பாக இலக்கிய விருது கொடுத்த சந்தோசம் அதிகம். விருதுகள் கொண்டாட்ட மனநிலையை கொண்டு வந்து சேர்க்கும் ஆனால் அதை படைப்பாளி எவ்வாறு கொண்டாடுகிறார் என்பதைப் பொறுத்து அவர் மீதான மதிப்பும் மரியாதையும் கூடவும் குறையவும் செய்யும். சக மனிதர்கள் போரினால் அல்லலபட்டுக் கொண்டிருக்கும்போது தனது கொண்டாட்டத்தைத் தேநீரோடு முடித்துக் கொண்ட 'ஹான் காங்கிற்கு' இவ்வுலக மக்கள் சமூகம் பெரும் நன்றிக் கடன்பட்டுள்ளது. நோபல் பரிசுக்கு இணையான படைப்புகளும் படைப்பாளிகளும் தமிழில் உண்டென்ற உண்மை பெருமையைத் தந்தாலும் அதற்கு நாம் செல்லவேண்டிய தூரத்தையும் வெளிச்சமிட்டுக் காட்டியது. இங்கே படைப்பாளிகள் சக மனிதனைப் பற்றி நினைப்பவர்களாக உள்ளார்களா என்ற கேள்வியும் தவிர்க்க முடியாமல் எழுகிறது. படைப்பாளியின் நெருப்பில் நெய்த கேள்விக்கு வள்ளுவரின் ஒழுக்கமுடைமை பதிலாக அமையும் என்பதில் ஐயமிருக்க முடியாதென்றே எண்ணுகிறேன். திறமையால் ஒழுக்கத்தை பதிலீடு செய்ய முடியாதல்லவா!! ஒவ்வொரு நாடும் தான் பெற்றிருக்கும் வளத்திற்கு அடித்தளமாய் அமைவது தொலைநோக்குப் பார்வை கொண்ட யாரோ ஒரு சிலரின் சீறிய திட்டங்கள் மூலமாகத்தான் அவ்வகையில் ஈரான் மன்னனைப் பற்றி தெரிந்து கொள்ள முடிந்தது. போர்ச்சுக்கீசியர்கள் அச்சிட்ட நூல்களை பற்றியும் தமிழின் முதல் நூல் பற்றிய தவறான தகவலையும் எடுத்துரைத்த ஆசிரியருக்கு வாழ்த்துக்கள். உண்மையென்னும் குழந்தைக்கு பொய்யென்ற இருட்டைக் கண்டால் பயமல்லவா அதனால் வெளிச்சத்திற்கு வந்துவிட்டது என்ன கொஞ்சம் தாமதமாகிவிட்டது. தேசமற்ற சேதங்கள் கட்டுரை தொழிலாளிகள் மட்டுமே இனம், மதம், மொழி, சாதி, நிறம் ஆகியவற்றால் பிரிந்து கிடப்பதையும் அப்படி பிரிந்து கிடக்க நடைபெறும் செயல்களையும் அம்பலப்படுத்தியது. எளிதில் புரிந்து கொள்ள கொஞ்சம் மெனக்கெட வேண்டியிருந்தது.. இன்னும் கொஞ்சம் இலகுவாக எழுதியிருக்கலாமே என்ற ஆவல் தோன்றியது. இந்திய தேசம் முழுவதும் பரவியிருக்கும் கருவேல மரங்களை பனையால் மாற்று நடவு செய்து அதன் மூலம் பிந்தங்கியிருக்கும் மக்கள் பலனடையும் திட்டத்திற்கு நீடா ராஜவேலு அவர்கள் தலைமை தாங்க வேண்டுமென்ற ஆசை எண்ணத்தை இங்கே பதிவிடுவது மகிழ்ச்சியாகக் கருதுகிறேன். சுற்றி நடக்கும் சில செயல்கள் வாழ்வெனும் பெரும் பயணத்தை எவ்வாறு எதிர் கொள்ளப் போகிறோமென்ற பயத்தை அவ்வப்போது கொண்டு வரும் அம்மாதிரியான காலகட்டங்களில் புரட்சியாளர்களின் வாழ்க்கை வரலாறுகள் மாபெரும் வெளிச்சத்தைத் தரும் அதுமாதிரி அமைந்ததுதான் அரெலென் வாழ்க்கையும் எவ்வளவு சிறிய வயதில் திறமையைத் தனதாக்கி மக்கள் நலனை கருத்தில் கொண்டு களமாடியிருக்கிறார் என்பது பேராச்சரியத்தையும் அவருக்கு ஏற்படுத்தப்பட்ட இறுதி முடிவு சொல்லொண்ணா துயரத்தையும் தந்தது. மானிடவியல் வரலாற்றறிஞர் தாமஸ் ஆர்.டிரவுட்மேன் பற்றிய அறிமுகம் அவர் வரலாற்றை எவ்விதத்தில் அணுகி வரலாற்று நூல்களைப் படைத்திருக்கிறார் என்ற ஆர்வத்தைத் தூண்டுகிறது. கீழிருந்து மேலாக படைத்திருந்தால் பெரும் மகிழ்ச்சி தான்.

**– சி சு ஜெகன்நாதன், பெங்களூரு**




**வாசக அன்பர்களே!**

48ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி 2024 டிசம்பர் 27 முதல் 2025 ஜனவரி 12 வரை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடக்க இருக்கிறது.

'காக்கைச் சிறகினிலே' மாத இதழுக்கு சந்தா செலுத்த விரும்புவோர் உயிர் எழுத்து பதிப்பகம் மற்றும் பொன்னி பதிப்பக அரங்கில் சந்தாவை செலுத்தலாம். நன்றி.

-V.முத்தையா
ஆசிரியர்

**ஆண்டு சந்தா**

ஓராண்டு................ ரூ. 500/-
இரண்டாண்டு ......... ரூ. 750/-
ஐந்தாண்டு............. ரூ. 2000/-
GPay மூலம் செலுத்தலாம்.

GPay எண்
**98414 57505**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

இறக்கை: 13
இறகு: 12

திருவள்ளுவராண்டு 2055

கார்த்திகை - மார்கழி
டிசம்பர் 2024

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

ஆசிரியர் குழு
முகிலன்
இரா.எட்வின்

தொடக்க கால நெறியாளர்கள்
காலஞ்சென்ற
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

உலகளாவியத் தொடர்பாளர்:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail. com

முகப்பு ஓவியம்:
நன்றி:
pexels/steve

உள் ஓவியங்கள்:
லெசி

தொடர்பு முகவரி:
காக்கை, 22, MJB தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை- 600 005.
செல்பேசி: 98414 57503

மின்னஞ்சல்:
kaakkaicirakinile@gmail.com

இணைய முகவரி: kaakkai.in
www.facebook.com/kaakkai.cirakinile

## கார்பன் உமிழ்வுக்குத் தீர்வு காணாத COP-29 உச்சிமாநாடு

ஒவ்வொரு ஆண்டும் ஐக்கிய நாடுகள் சபையானது காலநிலை மாற்றம் குறித்த உச்சி மாநாட்டினை, பொது மற்றும் தனியார் நிறுவனத் தலைவர்களைக்கூட்டி விவாதித்து அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டிற்கான 198 நாடுகள் பங்குகொண்ட COP-29 உச்சி மாநாடானது புதைபடிவ எரிபொருளை "கடவுளின் பரிசு" என்றழைத்துக்கொண்ட அஜர்பைஜான் நாட்டிலுள்ள "பாகு" என்னும் நகரில் 2024 நவம்பர் 11-23 தேதிகளில் நடைபெற்றது.

2023 ஆம் ஆண்டும் இதேபோன்றுதான் உலகின் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி செய்யும் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றான ஐக்கிய அரபு எமிரேட்டிலுள்ள "துபாயில்" COP-28 யின் உச்சி மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில், கார்பன் உமிழ்வுக்குக் காரணமாக உள்ள புதைபடிவ பெட்ரோலிய எரிபொருளின் உற்பத்தியைப் படிப்படியாகக் குறைத்து, அதற்கு மாற்றான எரிசக்தியை உற்பத்தி செய்து பயன்படுத்த முடிவெடுக்கப்பட்டது. ஆனால், 'பாகுவில்' நடைபெற்ற மாநாட்டில் இதுபற்றிய விவாதம் ஏதுமின்றி, காலநிலை நிதி பற்றியும், கார்பன் வர்த்தகத்திற்கு களம் அமைப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நிலக்கரி, புதை படிவ எரிபொருள், எரிவாயு ஆகியவற்றிலிருந்து மாற்றம் என்பது பின்னுக்குத் தள்ளப்பட்டிருப்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

**காலநிலை நிதி:** வளர்ந்துவரும் நாடுகள் யாவும் காலநிலை மாற்றத்தினால் வறட்சி, வெள்ளம், கடல்மட்டம் உயர்வு, அதிக வெப்பம்,மற்றும் இயற்கைசீற்றங்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இப்பாதிப்பினை ஈடு செய்யும் பொருட்டு வளர்ந்த நாடுகள் ஆண்டொண்டிறிற்கு 1.3 ட்ரில்லியன் டாலர் நிதியை வழங்க வளர்ந்து வரும் நாடுகள் கோரின. ஆனால், வளர்ந்த நாடுகளோ 2035 க்குள் 1.3 டிரில்லியன் டாலரை இலக்காகக்கொண்டு ஆண்டொன்றிற்கு 300 பில்லியன் டாலர் வீதம் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளன.

**கார்பன் வர்த்தகம்:** வளரும் நாடுகளிலிருந்து 'கார்பன் பிரித்தலை' (Carbon-Cutting) ஈடுசெய்யும் (Offsets) நோக்கில் வாங்குவதற்கு பணக்கார மாசுபடுத்தும் நாடுகளை அனுமதிக்கும் புதிய விதிகள் பேச்சு வார்த்தையின் போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் அன்டோனியோ குட்ரஸ்,"கார்பன் உமிழ்வைக்குறைப்பதற்கும், கால நிலை மாற்ற இன்னல்களிலிருந்து மக்களைக்காப்பதற்கும் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்கிறார்.

இம்மாநாடு நடந்து கொண்டிருந்த வேளையில், நவம்பர் 18-19 தேதிகளில் பிரேசிலின் தலைநகர் ரியோ டி ஜெனிரோ வில் நடந்த G-20 மாநாட்டில், அந்நாட்டின் ஜனாதிபதி லுலா "உலகளவில் ஏழ்மையையும், பட்டினியை எதிர்த்துப்போராடவும், கால நிலை மாற்றத்திற்கான நீதியையும் நிலைநாட்டவேண்டும்" எனக்கூறியுள்ளார். இதிலிருந்து, ஏழ்மை-பட்டினிக்கும், காலநிலை மாற்றத்திற்கும் வளர்ந்த நாடுகளே முக்கியக்காரணமாக இருப்பதைப் புரிந்து கொள்வது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும்
1 ஆம் தேதி உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே' இதழ்
அஞ்சல் செய்யப்படுகிறது.
அடுத்து வருகிற 5ஆம் தேதிக்குள் இதழ்
கிடைக்கப் பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: 98414 57503

தனிஇதழ் விலை.......... ரூ. 50.00
ஆண்டு சந்தா.............. ரூ. 500.00
இரண்டாண்டு சந்தா .... ரூ. 750.00
ஐந்தாண்டு சந்தா......... ரூ. 2000.00
வெளிநாடு
ஆண்டு சந்தா.............. $ 50.00

வங்கி விவரம்

A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
IFSC: CNRB0000914

Google Pay மூலம் செலுத்த:
செல்பேசி எண்: 98414 57503

வெளிநாட்டு வாசகர்கள் சந்தா செலுத்த:

A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
SWIFT CODE : CNRBINBBBFD

விளம்பரக் கட்டணம்

பின் அட்டை வண்ணம்............ரூ.15000
உள் அட்டை வண்ணம்............ரூ.10000
உள்பக்கம் கருப்பு - வெள்ளை... ரூ.5000

காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், எழுத்தாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

## சிறகுக்குள்ளே...


இலங்கையில் புதிய அத்தியாயம்
■ தி.சிகாமணி ........ 05

கனடா - இந்தியாவிற்கிடையில்
கூர்மையடைந்துள்ள இராஜதந்திர முரண்!
■ ரூபன் சிவராஜா ........ 08

புதிய உலக ஒழுங்கிற்கான
"BRICS" கூட்டமைப்பின் நுண்ணரசியல்
■ ஜமாலன் ........ 17

அமெரிக்காவில் அதானி மீது லஞ்ச வழக்கு..
■ காக்கையார் ........ 23

ஒரு அரசியல் பிரசவமும் பிரவேசமும்
■ வல்லபாய் ........ 25

வைரலில் குலுங்கும் சமூகம்
■ ஏகன் ........ 30

தமிழ்ச் சமூக வரலாற்று ஆய்வறிஞன்
ராஜ் கவுதமன்
■ வீ. அரசு ........ 32

நூறாண்டு காணும் தோழர் ஆர். நல்லகண்ணு
■ ஜி.சரவணன் ........ 37

பாஸ்கா நாடகம் அரங்கியலும் அரசியலும்
■ ஆ. சிவசுப்பிரமணியன் ........ 40

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பார்வையில்
■ முனைவர் க. கணேசன் ........ 45

மிஷன் நேஷனல் பார்க்
■ பா.ஆனந்தகுமார் ........ 50

உண்மை நின்றிட வேண்டும்
■ செல்லப்பா ........ 55

பாலியல் அடையாளம்:
உயிரியல் உண்மையா? சமூகக்கட்டமைப்பா?
■ சு.இராமசுப்பிரமணியன் ........ 58

குழப்பத்தில் நாம் என்ன செய்வது?
■ க.பழனித்துரை ........ 62

65/66
■ இரா. எட்வின் ........ 65

இஸ்ரோவின் லே அனலாக் ஆய்வு மையம்
■ துருவன் ........ 68

ஆன்லைன் பரதேசிகள்
■ ஜி.ஏ. கௌதம் ........ 70

போலந்தின் ஜோன் ஆஃப் ஆர்க்
■ நிழல்வண்ணன் ........ 74

மஞ்சள் கருவளையப் புள்ளி வண்டு
■ ஏ.சண்முகானந்தம் ........ 76

முஸ்லிம்கள் இன்று
■ அக்களூர் இரவி ........ 78





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: **தி.சிகாமணி**



# இலங்கையில் புதிய அத்தியாயம்

பேரினவாதம் தலைதூக்கி உள்ள ஒரு நாட்டில் சம உரிமை சாத்தியமற்றது. ஜனநாயக நடைமுறைகளை மீட்டெடுப்பது கடினம் என்ற அவ நம்பிக்கையுடன்தான் இலங்கை அரசியலைப் பார்த்து வந்தோம். ஆனால் அன்றாட வாழ்வில் முன்னேற்றத்தைக் காணாத சாதாரண மக்கள் மாற்றத்தை ஏற்படுத்த வல்லவர்கள் என்பதை நிரூபித்துள்ளார்கள். இலங்கையில் நவம்பர் 14-ம் தேதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி *(National People's power)* கூட்டணி மூன்றில் இரண்டு பங்கு இடங்களுக்கு அதிகமாகப் பெற்று வரலாறு காணாத வெற்றியை ஈட்டி உள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்பு நடந்த அதிபர் தேர்தலில் அநுர குமார திசநாயக்கா வெற்றி பெற்றார். நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மை வேண்டும் என்பதற்காக நாடாளுமன்றத்தை கலைத்து விட்டு தேர்தலைச் சந்தித்தார். அரசியலை தூய்மைப்படுத்த வேண்டும் என்ற முழக்கத்தை முன் வைத்தார். அதற்கு மக்கள் செவி சாய்த்து உள்ளனர். மார்க்சிஸ்ட் என்று தன்னை அறிவித்துக் கொண்ட அவரது தலைமையிலான இந்தக் கூட்டணி தென்னிலங்கை மட்டுமின்றி வடகிழக்கில் தமிழ் மக்கள் வாழும் பகுதியிலும் இஸ்லாமியர்கள் வாழும் பகுதிகளிலும் மலையகத் தமிழர் பகுதியிலும் வெற்றி பெற்றிருக்கிறது.

இலங்கையில் 80 வருடமாக வடக்கு, கிழக்கு மக்கள் பாரம்பரியமாகத் தமிழ் தேசிய கட்சிகளுக்கு வாக்களித்து வந்தனர். அதைக் கைவிட்டு சுமார் 50 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களை (மட்டக்களப்பு தவிர்த்து) தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு அளித்துள்ளார்கள். தனித்துப் போட்டியிட்ட இலங்கை தமிழரசு கட்சி மற்றும் கூட்டணியாக போட்டியிட்ட தமிழ் தேசியக் கூட்டணி ஆகியவை பெரிய அளவில் சாதிக்க முடியவில்லை.தமிழ் தேசிய இன பிரச்சனைக்கு அரசியல் தீர்வு, கூட்டாட்சி ,போர்க் குற்றங்களுக்கு தண்டனை போன்ற முழக்கங்களால் மட்டும் மக்கள் திருப்தி அடைந்து விடவில்லை. போர் முடிவடைந்து 15 வருடங்கள் ஆன பின்பும் எந்த நிவாரணமும் முன்னேற்றமும் இல்லாத மக்கள், தமிழ் தேசிய கட்சி தலைவர்களின் பதவி ஆசை, ஒற்றுமையின்மையைக் கண்டு விரக்தியும் கோபமும் அடைந்தனர். இவர்களின் இந்தப் போட்டி அரசியல் போக்கு தேசிய அரசியலில் தமிழர்களின் நிலைமையை மேலும் பலவீனப்படுத்தி வந்தது. போட்டி அரசியலால் முக்கியமானத் தலைவராக இருந்த எம்.ஏ. சுமந்திரன் தோல்வியை சந்தித்தார். தேசிய மக்கள் சக்தி கூட்டணியை தமிழ் மக்கள் நம்ப ஆரம்பித்துள்ளனர். புலம்பெயர்ந்த, பண பலம் படைத்தவர்கள் தேர்தலில் பல வேட்பாளர்களை களம் இறக்கினார்கள். இவர்களும் தோற்கடிக்கப்பட்டனர்.

தேர்தலுக்கு முன்பு நவம்பர் 10ஆம் தேதி அநுர குமார் தமிழர் பகுதியில் பேசிய பேச்சு குறிப்பிடத்தக்கது. தமிழர்களுக்குப் போதுமான அளவில் இதுவரை ஆண்டவர்கள் உதவவில்லை என்று அவர் குறிப்பிட்டார். ராணுவத்தாலும் பல்வேறு அரசுத் துறைகளாலும் கைப்பற்றப்பட்ட நிலங்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று வாக்குறுதி அளித்தார். குறிப்பாக



**இலங்கையில் 80 வருடமாக வடக்கு, கிழக்கு மக்கள் பாரம்பரியமாகத் தமிழ் தேசிய கட்சிகளுக்கு வாக்களித்து வந்தனர். அதைக் கைவிட்டு சுமார் 50 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களை (மட்டக்களப்பு தவிர்த்து) தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு அளித்துள்ளார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தேர்தலுக்கு முன்பு நவம்பர் 10ஆம் தேதி அநுர குமார் தமிழர் பகுதியில் பேசிய பேச்சு குறிப்பிடத்தக்கது. தமிழர்களுக்குப் போதுமான அளவில் இதுவரை ஆண்டவர்கள் உதவவில்லை என்று அவர் குறிப்பிட்டார். ராணுவத்தாலும் பல்வேறு அரசுத் துறைகளாலும் கைப்பற்றப்பட்ட நிலங்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று வாக்குறுதி அளித்தார்.**

மீனவர்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்பதாக அநுர குமார் அளித்த வாக்குறுதி கடலோர மீனவர்களின் ஆதரவை பெற்றுத் தந்துள்ளது. இந்த இடத்தில் நாம் குறிப்பிட வேண்டியது மீனவர் பிரச்சனைக்கு இலங்கை அரசு ஒரு தீர்வை எடுத்தால் இந்தியத் தரப்பு அதை எதிர்க்கும் நிலை வரும். இந்த முரண்பாடு சிக்கலானது. இந்தியாவிலிருந்து செல்கின்ற மிகப்பெரிய படகுகள், இலங்கையின் கடலோரத்தில் மீன் பிடிப்பது மட்டுமின்றி அங்குள்ள சிறு மீனவர்களின் வலைகளை அறுத்து நாசம் செய்கின்றனர் என்ற புகார் உள்ளது. இலங்கை கடலோரப் பகுதிக்கு வருபவர்களை பிடித்துக் கொடுக்கும் வேலையை அங்குள்ள தமிழ் மீனவர்களே செய்கின்றனர். இந்திய மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன் பிடிப்பதில்லை ஏனென்றால் அங்கு மீன்கள் இல்லை. எல்லை தாண்டி மீன்பிடிப்போரை கைது செய்வதை இங்குள்ள அரசியல் கட்சிகள் கண்டிக்கின்றன. இந்த அணுகு முறையில் மாற்றம் வருவது கேள்விக்குறிதான்.

### அநுரா மீதுள்ள சந்தேகம்

இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்பு வடகிழக்கில் மாகாண சுயாட்சி தந்த 13-வது சட்ட திருத்தம் விஷயத்தில் அநுர குமாரின் எதிர்ப்பு நடவடிக்கை பிரபலமானது. நீதிமன்றத்தில் அவரும் முறையிட்டார். அதனால் வடக்கு கிழக்கு இணைப்பு ரத்து செய்யப்பட்டது. சுனாமி தாக்கிய போது இலங்கை அரசு விடுதலைப்புலிகள் அமைப்புடன் இணைந்து நிவாரண நடவடிக்கை எடுத்ததை எதிர்த்தார் அநுர குமார். இதுபோன்று பழைய அவரது செயல்பாடுகளைச் சுட்டிக்காட்டி இவரா தமிழ் மக்களுக்கு நன்மை தரப் போகிறார் என்று ஐயம் எழுப்புபவர்கள் இந்தியாவில் உள்ளனர். அநுர குமாரின் உண்மை முகம் மக்களுக்கு தெரியவில்லை. அவர் குறித்த மாயத் தோற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் தெரிவிக்கிறார். வடகிழக்கு மட்டுமின்றி நாடு முழுவதும் அதிகாரப் பகிர்வு அவசியம் என்று அநுர குமார் வலியுறுத்தி வந்துள்ளார். அதனால் தமிழ் பகுதிகளுக்கும் அதிகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை சிலர் வெளிப்படுத்துகின்றனர்.

தமிழ் மக்கள் அளித்துள்ள வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்ற வாதத்தை சர்வதேச மன்றங்களில் இனி முன் வைப்பது சிரமம்.

### அரசியல் பண்பாட்டு மாற்றம்

ராஜபக்சே, சஜித் பிரேமதாசா, ரனில் விக்கிரமசிங்கே போன்ற பெரிய தலைவர்களை மக்கள் நிராகரித்துள்ளனர். ராஜபக்சே குடும்பத்தினர் மீது ஊழல் புகார்கள் ஏராளம். மற்ற சில தலைவர்கள் ஊழல்வாதிகளை தங்கள் பக்கம் வைத்திருந்தனர். இதனால் பொதுவாக அரசியல் வர்க்கம் தான் (political class) இலங்கையில் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட பெரிய பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்ற முடிவுக்கு மக்கள் வந்துள்ளனர். பாரம்பரிய மாளிகை அரசியலுக்கு, மேட்டுக்குடி அரசியலுக்கு குடும்ப அரசியலுக்கு முடிவு கட்டி, மக்கள் நல அரசியலுக்கு இலங்கை திரும்பி உள்ளது. இலங்கையில் நாடாளுமன்றத்தில் உள்ள 225 இடங்களில் 159 இடங்களில் அதாவது மூன்றில் இரண்டு பங்குக்கு மேலாக தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருப்பது வரலாறு காணாதது. இதில் 145 பேர் முதல் முறை எம்பிக்கள்.. புதிய முகங்கள். மலையகத்தில் இரண்டு பெண் எம்பிக்கள் தேசிய மக்கள் சக்தி சார்பில் வெற்றி பெற்றுள்ளனர். போர் முடிவுற்ற பின்பு ராஜபக்சேவுக்கு கூட இவ்வளவு அமோக ஆதரவு கிடைக்கவில்லை. அதிபர் தேர்தலில் அநுர குமார்

முன்னணியில் இருந்தாலும் இரண்டாவது விருப்ப வாக்குமூலம் தான் 50 சதவீத வாக்குகள் என்ற எல்லையைத் தாண்டி வெற்றி பெற்றார். அநுராவின் ஜனதா விமுக்தி பெரமுணாவுக்கு கடந்த நாடாளுமன்றத்தில் மூன்று இடங்கள் தான் இருந்தன. மக்கள் விடுதலை முன்னணி என்ற இடதுசாரிக் கட்சி மற்றும் மாணவர்கள் அமைப்பு என அவர் தலைமையில் அமைந்த அந்த அணி அதிபர் தேர்தலில் பெற்ற வெற்றியை அரசியல் நிலநடுக்கத்திற்கு ஒப்பிட்டு அரசியல் ஆய்வாளர்கள் வர்ணித்தனர். அதன்பின் நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற மகத்தான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கடன் வலையில் சிக்கி உள்ள இலங்கையில் அநுர குமார் மக்கள் நல அரசியல் செய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் தடையாக இருக்கக்கூடும். வெளிநாடுகளில் இருந்து கடனைப்பெற தாராள பொருளாதாரக் கொள்கையை அநுர குமார் தொடர நேரிடும். இது அவரது இடதுசாரி பிம்பத்துக்கு சவாலாக இருக்கும். நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருந்து வந்த சுமை அநுராமீது சுமத்தப்பட்டுள்ளது.**

வெற்றி அரசியல் சுனாமி என்று சிலாகிக்கின்றனர். குறிப்பாக இலங்கை அரசியல் பண்பாட்டில் மாற்றம் நிகழ்ந்துள்ளது. இதற்கு உதாரணமாக அமைச்சர்கள் பதவியேற்பு நிகழ்ச்சியில் அநுர குமாரின் மனைவி பங்கேற்கவில்லை என்பதையும் குறிப்பிடுகின்றனர். இதற்கு முன்பு முதல் பெண்மணி என்ற அந்தஸ்தில் அதிபரின் மனைவிகள் பங்கேற்பார்கள். 22 பேர் கொண்ட சிறிய அமைச்சரவையை அநுரா அமைத்துள்ளார். இதில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லை என்ற விமர்சனம் எழுந்துள்ளது. அமைச்சர் பதவி தருவதற்கு மத அடிப்படை பார்ப்பதில்லை என்று ஆளும் தரப்பில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

**சவால்கள்:**

அநுராவின் இந்த அமோக வெற்றி அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றங்கள் செய்ய உதவும். அவர் வாக்குறுதி அளித்தபடி அதிபர் பதவி நீக்கப்படுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அல்லது இலங்கை பவுத்த நாடு என்பதை மதச்சார்பற்ற நாடாக மாற்ற அரசியல் சட்டத் திருத்த வருமா? அநுர குமார் அனுராதாபுரம் ஜெயஸ்ரீ மகாபோதியை தரிசித்து ஆசி பெற்றுக் கொண்டார். புதுவகை 'மார்க்சிய பிராண்ட்' இது என்ற விமர்சனம் எழாமல் இல்லை. இந்நிலையில் பௌத்த மத தலைவர்களின் ஆலோசனைகள் அரசியல் முடிவில் செல்வாக்கு செலுத்தும் என்ற அச்சத்தை இலங்கை தமிழ் அரசியல் தலைவர்கள் வெளியிடுகின்றனர். போர் முடிவுக்கு பின்னரும் இலங்கை அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க அநுரா முன்வர வேண்டும். இதற்கு ஆதரவு இருக்குமா? அதேபோல் இந்தியத் தொழிலதிபர் அதானி திட்டங்களுக்கும் சீனாவின் ஹம்பன் தோட்டா துறைமுகத் திட்டத்திற்கும் அநுரா எதிர்ப்பு தெரிவித்து வந்தார். அது தொடருமா?

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியர் அகிலன் கதிர்காமர் ஒரு பேட்டியில் இலங்கை அரசியலில் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் தலையீடுகள் தடுக்கப்பட்டால் அநுரா சாதிக்க முடியும் என்று கூறியுள்ளார். சிறிய நாடுகளின் அரசியலை வல்லாண்மை படைத்த நாடுகள் ஆட்டுவிக்கின்றன. முற்போக்கு பாதையில் செல்லும் லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் அமெரிக்கத் தலையீட்டால் நெருக்கடிகள் ஏற்பட்டன. இலங்கை போன்ற சின்ன நாட்டில் தனித்துவமான அரசியல் நடத்த சவால்கள் ஏற்படும்.

கடன் வலையில் சிக்கி உள்ள இலங்கையில் அநுர குமார் மக்கள் நல அரசியல் செய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் தடையாக இருக்கக்கூடும். வெளிநாடுகளில் இருந்து கடனைப் பெற தாராள பொருளாதாரக் கொள்கையை அநுர குமார் தொடர நேரிடும். இது அவரது இடதுசாரி பிம்பத்துக்கு சவாலாக இருக்கும். நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருந்து வந்த சுமை அநுரா மீது சுமத்தப்பட்டுள்ளது. மேற்குலக நாடுகளின் பொருளாதார ஆதிக்கத்துக்கு போட்டியாக உருவான பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பில் சேர இலங்கை மனு செய்துள்ளது. இது ஒரு முக்கியமான நடவடிக்கை. நவீன சிந்தனையும் தோற்றமும் கொண்ட 55 வயது அநுர குமார் மக்களிடம் நெருக்கமாக உள்ளார். அதனால் மக்களின் ஆதரவுடன் அவர் சாதிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது. வேலையின்மை நெருக்கடியால் பலர் வெளிநாட்டுக்கு படையெடுக்கின்றனர். இப்போது ஏற்பட்டுள்ள மகத்தான அரசியல் மாற்றம் இனவாத சர்வாதிகாரத்தை விரும்பும் வலது சாரி அரசியலுக்கு எதிரானது. பாசிச, வலது சார்ரி செல்வாக்கு சில நாடுகளில் உயர்ந்து வருகின்ற நிலையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் இடதுசாரி முகாமுக்கு ஆறுதல் தரக்கூடியது. சுதந்திரம் பெற்றதிலிருந்து 1983 வரை இருந்த அரசியல் வரலாறு அந்த ஆண்டு ஜூலை கலவரத்துக்கு பின்பு மாற்றம் கண்டது. 2009 முள்ளிவாய்க்கால் படுகொலை வரை அது நீடித்தது. அதன்பின் 2022-ல் அரகலயா எனப்படும் மக்கள் போராட்டத்திற்குப் பின்பு இலங்கை அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயம் எழுதப்படுகிறது. அநுராவின் வார்த்தையில் சொல்வதென்றால் மறுமலர்ச்சி யுகம் துவங்கி விட்டது.

●

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: ரூபன் சிவராஜா

## நாடு கடந்த கொலை, வன்முறைகளில் இந்தியா

# கனடா - இந்தியாவிற்கிடையில் கூர்மையடைந்துள்ள இராஜதந்திர முரண்!

## பின்னணியும் விளைவுகளும் குறித்த விரிவான பார்வை!

**பாகிஸ்தானுக்கு எதிராகத் தொடர்ந்து முன்வைக்கும் அதே குற்றச்சாட்டைத் தான் கனடாவுக்கு எதிராகவும் இந்தியா இப்போது முன்வைக்கிறது. இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதிகளுக்கு கனடா அடைக்கலம் அளித்து நிதியுதவி செய்வதாக அது குற்றம் சாட்டுகிறது. கனடாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் இந்தியா பிரயோகிக்கும் மொழி, பாகிஸ்தானுக்கு எதிராக பிரயோகிக்கப்படுவதைவிடக் கடுமையான தொனியாக உள்ளது.**

கனடாவுக்கும் இந்தியாவிற்குமிடையிலான இராஜதந்திர முறுகல் கூர்மையடைந்துள்ளது. இந்திய உயர்ஸ்தானிகர் உட்பட்ட ஐந்து இராஜதந்திரிகளை ஒக்ரோபர் 14ஆம் திகதி கனடா வெளியேற்றியுள்ளது. படுகொலை, கொலை அச்சுறுத்தல் மிரட்டிப் பணம்பறித்தல் உட்பட்ட வன்முறைக் குற்றச்செயல்கள் தொடர்பான பல்வேறு குற்றச்சாட்டுகளை கனடியத் தேசிய காவல்துறை (Royal Canadian Mounted Police) இந்திய இராஜதந்திரிகள் மீது சுமத்தியிருந்தது. அதனை அடுத்தே இவ்வெளியேற்றம் நிகழ்ந்தது. குற்றச்சாட்டுகளை முற்றாக மறுத்த இந்தியா பதிலடியாக இந்தியாவிலிருந்து ஆறு கனடிய இராஜதந்திரிகளை வெளியேற்றியது.

காவற்துறையின்; விசாரணைகளுக்கு இந்தியா ஒத்துழைக்கத் தவறியதன் விளைவு அல்லது தண்டனையே இராஜதந்திரிகளை வெளியேற்றியதற்கான காரணமாகக் கனடிய அரசாங்கம் முன்வைத்தது. கனடாவின் இவ்வெளியேற்ற நடவடிக்கை மோசமானதும் அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்ட பழிவாங்கல் எனவும் இந்தியா தெரிவித்திருந்தது.

### இராஜதந்திர முறுகல்-பின்னணி

இதற்கான நேரடிப் பின்னணி என்று நோக்குமிடத்து, அது 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் கனடாவின் சர்றே (Surrey) நகரில் இடம்பெற்ற கனடியக் குடியுரிமையுடைய சீக்கிய அரசியல் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் (Hardeep Singh Nijjar) மீதான படுகொலையாகும். இவர் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் காலிஸ்தான் பிராந்தியத்திற்குத் தன்னாட்சி கோரும் இயக்கத்தின் பிரதிநிதி. வான்கூவர் புறநகரில் உள்ள ஒரு சீக்கிய கோவிலுக்கு வெளியே கருப்பு உடையணிந்த இரு துப்பாக்கிதாரிகளாற் சுட்டுக் கொல்லப்பட்டபோது நிஜ்ஜாரிற்கு 45 வயது. இந்தியாவின் கொலைப்பட்டியலில் அவர் இருந்ததாக, கொல்லப்படுவதற்கு முன்னதாகவே கனடிய புலனாய்வுப் பிரிவு அவரை எச்சரித்திருந்தாக அவருக்கு நெருக்கமானவர்களை மேற்கோள் காட்டி பிபிசி தகவல் வெளியிட்டுள்ளது. நிஜ்ஜார் மீதான கொலைக் குற்றச்சாட்டின் பேரில் 2024 மே மாதம் நான்கு இந்தியர்கள் கனேடியக் காவற்துறையினராற் கைது செய்யப்பட்டனர். ஹர்தீப் சிங் நிஜ்ஜார் வட இந்திய மாநிலமான பஞ்சாபியின் ஜலந்தர் மாவட்டத்தில் பிறந்தவர். 1990களின் இறுதியில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியர்களுக்கான 'காலிஸ்தான்' தனித் தாயகம் அமைக்கும் இலக்கினைக் கொண்டுள்ளது காலிஸ்தான் புலிப் படை (Khalistan Tiger Force - KTF) எனும் அமைப்பு.

இந்தியாவில் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் இவர் மீது பல குற்றச்சாட்டுகள், வழக்குகள் உள்ளதோடு, தேடப்படும் நபராகவும் அறிவிக்கப்பட்டவராவார். 2007 ஆம் ஆண்டு பஞ்சாபில் திரையரங்கு ஒன்றில் நடாத்தப்பட்ட குண்டுவெடிப்பில் ஆறு பேர் கொல்லப்பட்டு நாற்பது பேர் காயமடைந்தனர். அத்தோடு 2009 ஆம் ஆண்டு சீக்கிய அரசியல்வாதி ருல்டா சிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படுகொலை உட்பட்ட பல வழக்குகளுக்காக இந்தியாவின் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் இவர்மீது வழக்குகள் உள்ளன. 2020ஆம் ஆண்டு இந்தியாவால் இவர் பயங்கரவாதப் பட்டியலில் இடப்பட்டார்.

நிஜ்ஜார் மீதான படுகொலைகளின் பின்னணியில் கனேடிய - இந்திய உறவு வரலாற்றில் என்றுமில்லாதவாறு மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் இந்திய அரசிற்கு எதிரானவர்கள், அதனை விமர்சிப்பவர்களை இலக்குவைத்து நாடுகடந்த ரீதியிலான அடக்குமுறைகளை மேற்கொண்டுள்ளதாகக் கனடாவின் அறிக்கைகள் வெளிப்படையாகச் சுட்டுகின்றன. கனடாவிலும் அமெரிக்காவிலும் இந்தியா படுகொலைகள், வன்முறைகளை மேற்கொண்டதற்கான ஆதாரங்கள் வெளிவந்துள்ளன. கனடாவின் குற்றச்சாட்டுகளை இந்தியா 'கேலிக்குரியது' என்று நிராகரித்துள்ளது. கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, உள்நாட்டில் தனது வாக்குவங்கியை அதிகரிப்பதற்காக 'அரசியல் நிகழ்ச்சி நிரலாக' இவ்விவகாரத்தைக் கையாள்வதாகவும் இந்தியா மேலும் குற்றம் சாட்டியுள்ளது.

**கொலை, வன்முறையில் இந்திய அரசாங்க முகவர்கள் தொடர்பு**

நிஜ்ஜார் மீதான கொலையில் இந்திய அரசாங்க முகவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தும் நம்பகமான தகவல்கள் இருப்பதாக 2024 செப்டம்பரில், கனேடியப் பிரதமர் பகிரங்கமாகக் கூறியதோடு, அசாதாரண நடவடிக்கையையும் எடுத்தார். இந்தியா இம்முடிவை அபத்தமான குற்றச்சாட்டுகள் என்று கடுமையாக நிராகரித்தது. அதுமட்டுமல்லாமல் இந்திய அரசுக்கு அச்சுறுத்தலாகச் செயற்படும் பயங்கரவாதிகளுக்கும் இந்திய எதிர்ப்பு சக்திகளுக்கும் கனடா புகலிடமாக இருப்பதாகவும் குற்றம் சுமத்தியது.

கனடாவின் மூத்த தூதர் ஒருவரை வெளியேற்றியதுடன், டில்லியில் உள்ள கனேடியத் தூதரகத்திலிருந்து 41 கனேடியத் தூதரக அதிகாரிகளை நீக்கவும் கனடாவுக்கு உத்தரவிட்டது. கனேடியர்களின் அனைத்து இந்தியாவுக்கான விசா விண்ணப்பங்களையும் நிறுத்தி வைத்துள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக கனடாவிலிருந்து ஆறு மூத்த தூதர்களை மீளழைப்பதாக (*Withdrawing*) இந்தியா அறிவித்தது. ஆனால் அவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டதாக (*Expelled*) பல்வேறு அறிக்கைகள், ஊடகச் சந்திப்புகளிற் கனேடிய அதிகாரிகள் தெளிவுபடுத்தியிருந்தனர்.

**கனடா: குற்றச்சாட்டுகளும் ஆதாரங்கள் முன்வைப்பும்**

நிஜ்ஜார் படுகொலையை அடுத்து கடந்த 2023 செப்ரெம்பர் மாதமே கனேடியப் பிரதமர் நாடாளுமன்றத்தில் அப்படுகொலையில் இந்தியாவின் பங்கு குறித்த நம்பகமான ஆதாரங்கள் உள்ளதாகக் குற்றம்சாட்டியமை நினைவுகூரத்தக்கது. இந்தியாவின் இத்தகு வன்முறைச் செயல்கள் கனடாவின் இறையாண்மையின் மீதான தாக்குதல்கள் எனவும் இந்த அடிப்படை மீறல்களை ஏற்க முடியாது என்றும் அவர் கூறியிருந்தார்.

மூத்த இந்தியத் தூதர்கள் மற்றும் தூதரக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகள் 'குற்றவியல் வலையமைப்பில்' ஈடுபட்டுள்ளனர் என்பதற்கான ஆதாரங்களைத் தாம் கண்டறிந்துள்ளதாக ஒக்ரோபர் நடுப்பகுதியில் இடம்பெற்ற ஒரு ஊடகச் சந்திப்பில், கனேடிய காவல்துறை அதிகாரிகள், தெரிவித்தனர். அவ்வலையமைப்பு கனேடியச் சீக்கியர்களை இலக்குவைத்துக் கொலை, கொலை அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் பணப்பறிப்பு ஆகியவற்றை மேற்கொண்டமை குறித்தும் காவல்துறையினர் தகவல்களை வெளியிட்டுள்ளனர். இவர்கள் சீக்கிய மக்கள் பலரை மிரட்டியும் வற்புறுத்தியும், காலிஸ்தான் இயக்கத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர்கள் சார்ந்த புலனாய்வுத் தகவல்களைச் சேகரித்து வருவுதாகவும்; குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

இந்தியாவின் மிக மோசமான குற்றவியற் கும்பல் ஒன்றின் தலைவரான லோரன்ஸ் பிஷ்னோய் என்பவரால் வழிநடத்தப்படும் ஒரு வலையமைப்புடன் *(Criminal Network)* குறித்த இந்திய முகவர்கள் இணைந்து செயற்படுவதாக நம்புவதாகவும் தெரிவித்துள்ளனர். கனடாவிலுள்ள இந்தியாவின் உயர்மட்டத் தூதரக அதிகாரி சஞ்சய் குமார் வர்மா மற்றும் இதர தூதரக ஊழியர்களும் நிஜ்ஜார் மீதான படுகொலையில் ஈடுபட்டதற்கான ஆதாரம் தங்களிடம் இருப்பதாகவும் கனேடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அது மட்டுமல்லாமல் இந்திய அரசாங்கத்தின் முகவர்கள் கனடாவின் சமூகப் பாதுகாப்புக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர், தொடர்ந்து ஈடுபட்டும் வருவதற்கான துல்லியமானதும் நம்பகமானதுமான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாகவும் கூறியுள்ளனர். கனடா மண்ணில் நிலவும் வெளிநாட்டுத் தலையீடுகளில் முதலிடத்தில் இந்தியா உள்ளதாக கனேடிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் குற்றம் சாட்டியிருந்தார்.

### பேச்சுவார்த்தை தோல்வி

இவை தொடர்பாக ஒக்ரோபர் மாதத் தொடக்கத்தில் இருநாட்டுப் பிரதமர்களும் தொலைபேசியில் பேசியதாகக் கூறப்படுகின்றது. அத்தோடு இருநாட்டு உயர்மட்ட தேசியப் பாதுகாப்பு அதிகாரிகள்; சிங்கப்பூரில் சந்தித்துப் பேசியதாகவும் - வன்முறை மற்றும் தாக்குதல்களில் இந்திய நடவடிக்கைகள் சார்ந்து தாம் சேகரித்த ஆதாரங்களைக் கனேடிய அதிகாரிகள் பகிர்ந்து கொண்டதாகவும் கனேடியப் பிரமதர் தெரிவித்திருந்தார். ஆனால் இந்தியா அனைத்து ஆதாரங்களையும் நிராகரித்துள்ளது. இராஜதந்திரிகளை ஈடுபடுத்தியதோடு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களைத் *(Organised crimes)* தேர்தெடுத்துக் கனேடியர்கள் மீது தாக்குதல்களை நடாத்தியதனூடாக இந்தியா ஒரு மாபெரும் தவறைச் செய்துவிட்டது என்றும் ட்ரூடோ விசனம் தெரிவித்துள்ளார். நிஜ்ஜார் படுகொலையில் இந்திய இராஜதந்திரிகள் தொடர்புபட்டிருப்பதை இந்தியாவிற்குக் கனடா அறிவித்தபோது இந்திய வெளியுறவு அமைச்சகம் அதனைக் கடும் சீற்றத்தோடு எதிர்கொண்டது. கொலையில் இந்தியத் தொடர்பு இருப்பதை நிரூபிக்கும் வகையிலான நம்பகமான ஆதாரங்கள் எதையும் ஒட்டவா பகிர்ந்து கொள்ளவில்லை என்று டெல்லி கூறியுள்ளது.

காலிஸ்தான் 'பிரிவினைவாதிகளுக்கு' கனடா ஆதரவாக நடந்துகொள்வதாக இந்தியா மீண்டும் மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது. கனேடியப் பிரதமரின் *(Liberal Party of Canada)* லிபரல் கட்சி நாட்டின் கணிசமான சீக்கிய சமூகத்தின் ஆதரவைக் கொண்டுள்ளது. இந்தியாவிலுள்ள அவர்களது சொந்த மாநிலமான பஞ்சாப்பிற்கு வெளியே அதிக தொகையைக் கொண்ட சமூகமாக சீக்கியர்கள் வாழும் நாடாகக் கனடா விளங்குகின்றது. கனடாவில் 770 000 வரையான சீக்கியர்கள் வசிக்கின்றனர். இது கனடிய மக்கட்தொகையில் இரண்டு வீதம். பஞ்சாப்பில் வாழும் சீக்கியர்களின் மொத்தச் சனத்தொகை 1,4 பில்லியன். (இந்திய மக்கட்தொகையின் 2 வீதம்)

### இந்தியாவின் நாடுகடந்த அடக்குமுறை ஆதாரங்கள்

இந்தியாவிற்கு வெளியில் வாழும் காலிஸ்தான் செயற்பாட்டாளர்களில் இந்திய அரசாங்கத்தினால் இலக்குவைக்கப்பட்டது நிஜ்ஜார் மட்டுமல்ல. நாடுகடந்த ரீதியில் மோடி அரசாங்கம் மேற்கொள்ளும் அடக்குமுறைகள் தொடர்பான ஆதாரங்களுடன் மேற்கின் பல தரப்புகள்; சுட்டிக்காட்டத் தொடங்கியுள்ளன. 2023 நவம்பர் அமெரிக்க மற்றும் கனடா நாடுகளின் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவரும் காலிஸ்தான் இயக்க முக்கியஸ்தருமான குர்பத்வந் சிங் பன்னம் *(Gurpatwant Singh Pannun)* மீதான கொலை முயற்சியை முறியடித்தாதாக அமெரிக்கப் புலனாய்வுத்துறையின் செய்தி ஒன்று வெளிவந்திருந்தது. இந்தியப் புலனாய்வு முகவரான விகாஷ் யாதவ் தான் அச் சதித்திட்டத்தை வகுத்த உளவாளி என்று தீர்ப்பளித்தது அமெரிக்க நீதித்துறை. அதேவேளை யாதவ் தனது பதவியதிகாரம் மற்றும் அதன் மூலம் அணுகலுக்குட்பட்டிருந்த இரகசியத் தகவல்களைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பயன்படுத்தி இந்திய அரசாங்கத்தை வெளிப்படையாக விமர்சிக்கும் ஒருவரை அமெரிக்க மண்ணிற் படுகொலை செய்ய முயன்றதாக அமெரிக்க போதைப்பொருள் அமலாக்க நிர்வாகம் அவர் மீது குற்றம் சாட்டியது. 2024இன் ஆண்டின் ஆரம்பத்தில், பிரித்தானிய சீக்கியர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக வெளியான செய்திகளின் பின்னணியில், பிரித்தானிய அனைத்துக்கட்சி அரசியற் குழுவினை அன்றைய பாதுகாப்பு அமைச்சர் ரொம் துகென்தாட் *(Tom Tugendhat)* அவர்களுடன் அவசரச் சந்திப்பு ஒன்றினைக் கோரியிருந்தது. இந்திய அரசாங்கத்தால் குறிவைக்கப்பட்டதாகக் கூறப்படும் சீக்கியச் செயற்பாட்டாளர்கள் சார்ந்த பொதுவான ஒற்றுமை அவர்கள் அனைவரும் காலிஸ்தான் இயக்கத்தின் உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் அல்லது தீவிர ஆதரவாளர்கள் என்பதாகும்.

தவிர அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்ரேலியா மற்றும் கனடாவைச் சேர்ந்த ஏனைய பல காலிஸ்தான் இயக்க முக்கிய செயற்பாட்டாளர்களுக்கும் உயிரச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்ட செய்திகள் வெளியாகியுள்ளன. புலம்பெயர்ந்து வாழும் 'பயங்கரவாதிகளை' ஒழிப்பதற்கான பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, பாகிஸ்தானில் உள்ள சில சீக்கியர்கள் உட்பட டஜன் கணக்கான நபர்களைப் படுகொலை செய்ய இந்தியா உத்தரவிட்டுள்ளதாக பிரித்தானியப் புலனாய்வுத் துறையை மேற்கோள் காட்டி கார்டியன் பத்திரிகை கட்டுரை ஒன்றினை *(04.04.2024)* வெளியிட்டிருந்தது. அமெரிக்க மண்ணில் கொலை முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுகளை மிகவும் தீவிரத்துடன் தாம் எடுத்துக் கொண்டதாக அமெரிக்கா கூறியுள்ளது. இந்நிலையில் அமெரிக்க அதிகாரிகளுடன் ஒத்துழைக்கச் சம்மதித்துள்ள இந்தியா, கனேடிய விசாரணையில் ஒத்துழைக்க மறுக்கின்றது என்று கனடா குற்றச்சாட்டுகின்றது. நிஜ்ஜார் மீதான கொலை மற்றும் இந்தியாவினால் நடத்தப்படும் பரவலான வன்முறை நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகளைத் தாம் தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகக் கனடா கூறியுள்ளது. அதற்கு அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளின் புலனாய்வுக் கூட்டணியின் *('Five Eyes', an intelligence-sharing alliance)* தகவற் பகிர்வும் ஒத்துழைப்பும் உள்ளதாகவும் கனடா கூறியுள்ளது.

### புலம்பெயர் நாடுகளில் 'காலிஸ்தான்' ஆதரவு

காலிஸ்தானுக்கான ஆதரவுச் செயற்பாடுகள் நாடு கடந்த ரீதியில் புலம்பெயர் சீக்கியச் சமூகங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக கனடாவில் உள்ள புலம்பெயர்ந்த சீக்கியர்களின் ஆதரவு அதிகமாக உள்ளது. பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்ற பிற நாடுகளிலுள்ள புலம்பெயர் சீக்கியர்களின் ஆதரவுகளும் உள்ளன. கனடாவில் காலிஸ்தான் தன்னாட்சிக்குத் தீவிரமாகக் குரல் கொடுக்கும் செயற்பாட்டாளர்களைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கனடாவைக் கோரி வந்துள்ளது. கனடா மறுத்து வந்துள்ளது. இதனால் நீண்ட காலமாக இரு நாடுகளுக்குமிடையே முறுகல் நிலவிவந்திருக்கின்றது. ஆனால் கனடா எடுத்துள்ள நடவடிக்கைகளும் அதன் காவற்துறை, சர்வதேச புலனாய்வுத்துறைகளுடன் இணைந்து கூட்டாக முன்னெடுத்துவரும் விசாரணைகள், கனேடியப் பிரதமரின் விமர்சனக் கருத்துகள் என்பனவற்றின் கூட்டுவிளைவு இருநாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவிற் பாரிய விரிசலை உருவாக்கியுள்ளன. இந்தச் சூழலைப் பயன்படுத்தி, கடந்த ஒரு வரிடமாக பயங்கரவாதிகள் மற்றும் இந்திய அரசுக்கு விரோதமான சக்திகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாடு என்ற சாயத்தினைக் கனடா மீது பூசுகின்ற தீவிரப் பிரச்சாரத்தை இந்தியா பல மட்டங்களில் முன்னெடுத்து வருகின்றது.

படுகொலை செய்யப்பட்ட நிஜ்ஜார் காலிஸ்தான் அமைப்பிற்கான நிதிதிரட்டற் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டவர். அவர் பயங்கரவாதத்தைத் திட்டமிட்டமைக்கான ஆதாரம் தம்மிடம் உள்ளதாக சொல்லி வருகின்றது. ஆனால் அதற்கான ஆதாரங்களை முன்வைக்கவில்லை என்று ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் தெற்காசிய ஆய்வுத்துறையிற் பேராசிரியராகக் கடமையாற்றும் *Arild Engelsen Ruud* கருத்துத் தெரிவித்துள்ளார் *(ABC Nyheter*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனடாவின் புலம்பெயர் இந்தியர்கள் எனும்போது முன்னர் ஒரு காலத்தில் முக்கியமாக பஞ்சாபிகள் மற்றும் சீக்கியர்கள் விளங்கினர். தற்போது கணிசமான எண்ணிக்கையிலான இந்துக்கள் மற்றும் தென்னிந்தியா மற்றும் மேற்கு மாநிலமான குஜராத்தில் இருந்து குடியேறியவர்கள் எனவாகப் பரந்த இந்திய சமூகங்களைக் கொண்ட நாடாகக் கனடாவின் இந்தியப் புலம்பெயர்ந்தோர் சூழல் மாறியுள்ளது.**

*21.10.2024).* இந்தியாவில் உள்ள தேசியவாத சக்திகளுக்கும் இந்த விவகாரம் உவப்பானது என்று கூறும் அவர், கனேடிய மண்ணில் இந்திய அதிகாரிகள் ஒரு நடவடிக்கையைச் (வன்முறை) செய்ய முடிந்துள்ளமை இந்தியா தொடர்பான மாறுபட்டதொரு உருவத்தை / தோற்றத்தை வெளிப்படுத்தும் முனைப்பாகும் எனவும் கருதுகிறார். அதாவது இறுதிக் காலங்களில் இந்தியா தன்னை உலக நாடுகளின் வரிசையில் முன்னணி வகிக்கும் ஒரு தேசமாக - ஒரு வல்லரசாக உணரத் தொடங்கியுள்ளது. உலகின் வல்லரசு நாடுகள் தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்று கருதும் விடயங்கள் உலகின் எந்த மூலையில், எந்தப் பாகத்தில் இருந்தாலும் தேடிச் சென்று அவற்றை வேட்டையாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளன. இப்போது இந்தியாவும் அந்த வரிசையில் இணைந்துள்ளதன் வெளிப்பாடே கனடிய மண்ணில் அது நிகழ்த்திய

**இந்துத்துவவாதிகளின் அச்சுறுத்தல்**

இந்துத்துவவாதிகளின் அச்சுறுத்தல்களுக்கு ஆளாவதாக பஞ்சாப் மாநில சீக்கியர்கள் உணர்கின்றனர். இது பொதுவாகவே பாரதிய ஜனதா ஆட்சியில் இத்துத்துவ சக்திகளின் செல்வாக்கு அதிகரித்துள்ளதான புறநிலைகள் பற்றிய அறிதலோடும் புரிதலோடும் நோக்கவேண்டிய சிக்கலாகும். அளவுகளில் வேறுபட்டாலும் இந்திய மாநிலங்கள் பலவும் இந்துத்துவ மதவாத ஒடுக்குமுறை மற்றும் ஆதிக்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளன. இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் கைகள் கனடா மண்ணில் நடாத்தப்பட்ட நிஜ்ஜர் மீதான படுகொலையிலும் அங்குள்ள சீக்கியர்களுக்கு எதிரான வன்முறை நடவடிக்கைகளிலும் நேரடியாகச் சம்மந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இதனை அதிகாரபூர்வமாக கனேடியப் பிரதமர், அந்நாட்டுக் காவற்துறை, புலனாய்வுத் துறை என்பன கூறியுள்ளன. உரிய ஆதாரங்கள் தம்வசம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். அமித் ஷா'வின் பொறுப்பிலேயே முழு இந்திய மாநிலங்களுக்குமான பாதுகாப்புப் படைகள் உள்ளன. பிரதமர் நரேந்திர மோடிக்கு அடுத்த நிலையில் நாட்டின் இரண்டாவது சக்திவாய்ந்த நபராகக் கணிக்கப்படுபவரும் அவரே.

புலம்பெயர் சீக்கியர்களை, அதாவது காலிஸ்தான் தனிநாட்டுக்கு ஆதரவாகச் செயற்படும் சீக்கிய சமூகங்களைக் கண்காணிப்பதற்கு இந்தியா சைபர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாகவும், கனேடிய அரசாங்க வலைப்பின்னல்களுக்கு எதிராகவும் சைபர் தாக்குதல்களை முடுக்கிவிட்டிருப்பதாகவும் கனடாவின் புலனாய்வு நிறுவனம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. ஷா பற்றிய கனடாவின் சமீபத்திய குற்றச்சாட்டுகள் கருத்திலெடுக்க வேண்டியவை என அமெரிக்க வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர் அண்மையிற் தெரிவித்திருந்தமையும் *(02.11.2024> Aljazeera)* குறிப்பிடத்தக்கது.

**தனிச் சீக்கியத் தாயகம்**

காலிஸ்தான் கோரிக்கை சார்ந்து கனேடிய சீக்கியர்களின் சுதந்திரமாக இயங்கக் கனடா அனுமதிக்கின்றது என்பது இந்தியாவின் நீண்டகாலக் குற்றச்சாட்டு. எனவே இருநாட்டு உறவு பல ஆண்டுகளாக அழுத்தத்தில் உள்ளது. கனேடியச் சீக்கியர்களிற் குறிப்பிட்ட விகிதத்தினர் இந்தியாவிலிருந்து சுதந்திரமான ஒரு தனிச் சீக்கியத் தாயக உருவாக்க முனைப்பினை ஆதரிக்கின்றனர். இதன்பொருட்டு இடம்பெறும் நிதிசேகரிப்பு, ஏனைய வளங்கள் சார்ந்த பங்களிப்புகள் மூலமும் அவர்களிற் பலர் ஆதரவு வழங்கிவருகின்றனர். கனடாவில் அதிகாரப்பூர்வமற்ற வாக்கெடுப்புகளையும் நடத்தியுள்ளனர். இது இந்திய அரசாங்கத்தினாற் கடுமையான கண்டனத்திற்கும் உட்பட்டிருந்தது.

சீக்கியப் 'பிரிவினைவாதச்' செயற்பாடுகளுக்கு கனடா களமும் ஆதரவும் வழங்குகின்றது என்று இந்தியா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தாலும்கனடா அதனைப்பொருட்படுத்தவில்லை. இந்திய அழுத்தத்திற்குத் தலைவணங்காது, சீக்கிய மக்களின் கருத்துரிமை சார்ந்த அரசியற் செயற்பாடாகவே கனடா இந்த விவகாரத்தைக் கையாண்டு வருகின்றது. கனேடியச் சீக்கியச் சமூகமும் காலிஸ்தான் விவகாரத்தை சுயாட்சிக்கான அமைதிவழி இயக்கம் என்ற நிலைப்பாடு சார்ந்ததாகத் தமது செயற்பாடுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயப்படுத்திவருகின்றனர். இந்தப் பின்னணியில் நீண்டகாலமாக நிலவிவந்த இராஜதந்திர பதட்டத்தைத் தணிக்கவும் 2018 பெப்ரவரியில் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்தியாவிற்கு ஒரு வார காலப் பயணம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார் (*John Paul Tasker, CBC News, 03.05.2024*). இந்தியாவுடனான கனடாவின் ஒப்பீட்டளவில் பலவீனமடைந்துவந்த வர்த்தக உறவை வலுப்படுத்தவும் இந்த பயணத்தைப் பயன்படுத்த ட்ரூடோ திட்டமிட்டிருந்தார். ஆனால் அந்தப் பயணம் அவரின் நோக்கத்திற்கு முற்றிலும் நேரெதிரான விளைவுகளை ஏற்படுத்தியதோடு இருதரப்பு முறுகலையும் கூர்மைப்படுத்தியது.



சீக்கிய காலிஸ்தான் இயக்கத் தொடர்புடைய நபரான ஜஸ்பால் அத்வால் (*Jaspal Atwal*) கனடாவில் வைத்து இந்திய அரசியல்வாதி ஒருவரைக் கொலைசெய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட நபர். இந்தியப் பயணத்தின் போது ட்ரூடோ கலந்துகொண்ட இரண்டு விழாக்களுக்கு லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் அழைக்கப்பட்டிருக்கின்றார். இந்த அழைப்பு, ட்ரூடோவால் அனுமதிக்கப்படவில்லை என்றபோதும் அது; இராஜதந்திர சங்கடத்திற்கு உள்ளாக்கப்பட்ட விவகாரமாக மாறியது. 1986 ஆம் ஆண்டு இந்திய அரசியல்வாதி ஒருவரைப் படுகொலைசெய்ய முயன்ற குற்றத்திற்காக தண்டிக்கப்பட்ட சீக்கியப் போராட்டக் குழு ஒன்றின் முன்னாள் உறுப்பினர் இவர். கனேடியப் பிரதமரின் முந்நாள் துணைவி சோஃபி கிரிகோயர்-ட்ரூடோ (*Sophie Gregoire-Trudeu*) உடன் எடுத்துக்கொண்ட நிழற்படமும் பொதுவெளியில் பகிரப்பட்டிருந்தது.

அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி 1984 ஆம் ஆண்டு அவரது மெய்க்காவலர்கள் படுகொலை செய்யப்பட்டதைச் சித்தரிக்கும் பதாகைகள் சீக்கிய அணிவகுப்பு ஒன்றில் கொண்டுசெல்லப்பட்டதை (2024 ஜூன் தொடக்கத்தில்) கனடா அனுமதித்திருந்தமையை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கண்டித்திருந்தார். 'சீக்கிய பிரிவினைவாதிகளின் வன்முறையை' மகிமைப்படுத்துகின்ற போக்காகவே இந்தியா அந்தப் பேரணியினைப் பார்க்கிறது. அதிலிருந்து இரண்டு வாரங்களுக்குப் பிறகு, (ஜூன் 18) ஹர்தீப் சிங் நிஜ்ஜார், சுட்டுக் கொல்லப்பட்டார்.

நிஜ்ஜாரின் மரணம் சீக்கியச் சமூகத்தினர் மத்தியில் இந்திய அரசாங்கத்திற்கு எதிரான குரல்களை உயர்த்த வைத்துள்ளது. நீதிக்கான சீக்கியர்கள் குழு (*The Group Sikhs for Justice*) இந்திய தூதரகங்களை முற்றுகையிட மக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

**சீக்கியர்களின் வரலாறு**

டெல்லியில் முகலாய ஆட்சிக்கு எதிராக சீக்கியர்கள் தொடர்ந்து போராடினர். ரஞ்சித் சிங் (1780-1839) ஆட்சியில் அவர்கள் லாகூரில் ஒரு தனி இராச்சியத்தை நிறுவினர். 1849 இல் ஆங்கிலேயர்களால் இராணுவ ரீதியாக அவர்கள் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து, அந்த இராச்சியம் 'பிரித்தானிய இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. 1857 ஆம் ஆண்டின் பெரும் கிளர்ச்சியின் போது சீக்கியர்கள் பிரித்தானிய ஆட்சிக்கு விசுவாசமாக இருந்தனர். இராணுவம், காவற்துறை மற்றும் நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகித்தனர். 1947இல் பிரித்தானியக் கொலனித்துவ ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை அடைந்த பிற்பாடும்; அவர்கள் அத்தகைய பதவிகளைத் தக்க வைத்துக் கொண்டனர். இருப்பினும், விடுதலையானது இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் 'பஞ்சாப் பிரிவினையை' உள்ளடக்கியது. பல சீக்கியர்கள் கொல்லப்பட்டனர், மேலும் 2.5 மில்லியன் சீக்கியர்கள் பஞ்சாபின் இந்திய பகுதிக்குத் தப்பிச் சென்று வாழ்ந்தனர். 1966 ஆம் ஆண்டில், பஞ்சாப் இந்துக்கள் ஆதிக்கம் செலுத்தும் ஹரியானா மற்றும் சீக்கியர்கள் ஆதிக்கம் செலுத்தும் பஞ்சாப் என அம்மாநிலம் பிரிக்கப்பட்டது.

1980 களில், சுதந்திர சீக்கிய அரசிற்கான 'காலிஸ்தான்' இயக்கத்திற்கு மக்கள் ஆதரவு அதிகரித்தது. ரஞ்சித் சிங்கின் இராச்சியம் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது, ஆனால் ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறியபோது, சீக்கியர்கள் தங்கள் இராச்சியத்தை திரும்பப் பெறவில்லை. நிலப்பரப்பு 'பிரித்தானிய-இந்தியாவின்' ஒரு பகுதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இந்திய- கனடா முரண்பாடு குறிப்பிடத்தக்க புவிசார் அரசியல் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். வளர்ந்து வரும் ஒரு வல்லரசென்ற நிலையில் இந்தியாவானது, அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற மேற்குலக நாடுகளுடனான முக்கிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார நட்பு நாடாக மாறியுள்ளது. இந்நிலையில் இந்திய அரசின்; நாடுகடந்த வன்முறைகள் குறித்த ஆதாரங்கள் வெளிச்சத்திற்கு வரும் புறநிலையில் இந்நாடுகளுடனான இந்திய உறவு சிக்கலானதாக ஆகுவதற்குரிய வாய்ப்புகள் உள்ளன.**

இருந்தது. பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் பிரிக்கப்பட்டது. காலிஸ்தான் இயக்கம் இதை ஏற்கவில்லை. ரஞ்சித் சிங்கின் ஆட்சியின்போது இருந்ததைப் போல சீக்கியர்கள் சுதந்திரமான பஞ்சாப் தேசத்திற்கு உரித்துடையவர்கள் என்ற கருத்து வலுப்பெற்றது. ஜர்னைல் சிங் பிந்திரன்வாலே (*Jarnail Singh Bhindranwale,1947-1984*) மற்றும் அவரைப் பின்பற்றியவர்கள் இயக்கத்தை ஆயுத வன்முறைப் போராட்டப் பாதையிற் செலுத்தினர். 1984 அமிர்தசரஸில் உள்ள தர்பார் சாஹிப்பில் (பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் நகரத்தில் அமைந்துள்ள பொற்கோயில்) அவரது போராளி ஆதரவாளர்கள் பலர் தஞ்சம் புகுந்தனர். அன்றைய பிரதமர் இந்திரா காந்தி கோவிலை ஆக்கிரமிக்குமாறு இராணுவத்திற்கு உத்தரவிட்டார். 76 மணி நேரம் நீடித்த அந்த மோதலில் அல்லது இராணுவத் தாக்குதலில் பல ஆயிரம் சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களிற் பலர் அப்பாவி யாத்ரீகர்களும் பொதுமக்களுமாவர். இந்தத் தாக்கதலுக்கு அந்த ஆண்டு (1985, ஒக்டோபர் 31) இந்திரா காந்தி அவரது இரு மெய்க்காவலர்களால் படுகொலை செய்யப்பட்டார். இந்திரா காந்தி மீதான படுகொலை, சீக்கியர்களுக்கு எதிரான படுகொலைகளை மேலும் தீவிரப்படுத்தியது. பல காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் பலர் இப்படுகொலைகளைத் தூண்டிய பின்னணியில் இருந்ததாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இதில் யாருக்கும் தண்டனை விதிக்கப்படவில்லை. இவ்வன்முறைகளில் குறைந்தது 10,000 சீக்கியர்கள் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது.

1984 நிகழ்வுகளுக்குப் பிறகு, பல சீக்கியர்கள் சுதந்திர காலிஸ்தானுக்கான ஆயுதப் போராட்டத்தை ஆதரித்தனர். ஆனால் அந்த இயக்கம் படிப்படியாக ஆதரவை இழந்தது. பொருளாதார ரீதியான பெரும் தாக்கங்கள் மற்றும் அந்த அமைப்பு தீவிர வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டமை உட்பட்ட பல்வேறு காரணிகளின் பின்னணியில் அது ஆதரவிழந்தது. 1990களில், இந்திய இராணுவம் இரும்புக்கரம் கொண்டு காலிஸ்தான் கிளர்ச்சியாளர்களை வீழ்த்தியது.

1970-80 களில் தோற்றம் பெற்ற காலிஸ்தான் விடுதலை இயக்கம் அடுத்தடுத்த தசாப்தங்களில் உள்நாட்டில் கிட்டத்தட்ட இல்லாமலாக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அது இந்திய அரசாங்கத்தினால் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குரிய அமைப்பாகப் பார்க்கப்படுகின்றது. கனடா போன்ற நாடுகளிலிருந்து செயற்படும் அதன் கிளை மற்றும் ஆதரவு அமைப்புகளால் பஞ்சாப் மாநிலத்தில் அந்த அமைப்பு மீளுருவாக்கம் பெற்றுவிடும் என்ற அச்சம் இந்திய அரசிற்கு உள்ளது. நாடு கடந்த அதன் வன்முறை ஊடான அழிப்பு நடவடிக்கைகளின் பின்னணி அதுவே.

### இந்திய-அமெரிக்கா உறவு

நாடு கடந்த ரீதியில் இந்தியா மீது சட்டத்திற்கு புறம்பான வன்முறை குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும்; இந்தியாவுடன் அமெரிக்கா தொடர்ந்து வணிக மற்றும் உற்பத்திசார் உடன்படிக்கைககளை மேற்கொண்டு வருகின்றது. புவிசார் மற்றும் பிராந்திய அரசியல் வகிபாகம் சார்ந்து இந்தியா ஒரு தனித்துவமான சக்திவாய்ந்த நிலையைத் தன்தாக்கிக் கொண்டுள்ளது. அமெரிக்காவைப் பொருத்தவரையில் தெற்காசியப் பிராந்தியத்தில்;, பொருளாதாரம் சார்ந்து இந்தியாவின்; வளர்ச்சியும் கொள்ளளவும் சீனாவிற்கு எதிரான ஒரு எதிர்ச்சமநிலையை வழங்குகிறது. அதேவேளை இந்தியப் புலனாய்வு முகவரான விகாஷ் யாதவ் மீதான அமெரிக்காவின் குற்றச்சாட்டு, இந்தியா நினைத்தபடி நடந்துகொள்வதை அமெரிக்கா அனுமதிக்காது என்ற சமிக்ஞையையும் இந்தியாவுக்கு வழங்குகின்றது.

இன்னொரு விடயம் முக்கியமானது. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவுடன் கனடா வரலாற்று ரீதியான வலுவான உறவினைக் கொண்டுள்ளது. இந்த நெருக்கமான உறவு கனடாவைக் காலவரையறையின்றி இந்தியா புறக்கணிக்க இடம்கொடுக்காது. கனடாவின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்குமாறு இரு நாடுகளும் இந்தியாவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. நாடுகளுக்கிடையிலான இத்தகைய குற்றவியல் வழக்கு விவகாரங்களில் ஏற்படக்கூடிய பொருளாதார விளைவுகள் மட்டுப்படுத்தப்பட்டவையே என்கிறார் *The Guardian* பத்திரிகையின் தெற்காசிய நிருபர் *Hannah Ellis-Petersen (The Guardian, 15.10. 2024)*. அரசாங்கங்கள் இவ்விவகாரங்களை வெறுமனே சம்பந்தப்பட்ட நபர்கள் மீது போட்டுத் தம்மை அவற்றிலிருந்து தூரவிலக்கிக் கொள்வதோடு, அவற்றைத் தனிநபர் விவகாரங்களாக மடைமாற்றவும் பின்நிற்கப்போவதில்லை. மிஞ்சிப்போனால் இந்த விவகாரம் இந்தியாவை முன்பைவிட ஒரு முரட்டு தேசமாக பார்க்கப்படுவதற்கான சித்திரத்தை ஏற்படுத்தக்கூடும். அதனைத் தாண்டிய பாரிய விளைவுகளுக்கு இட்டுச் செல்லப் போவதில்லை எனவும் ஹன்னா கருத்துரைத்துள்ளார்.

அமெரிக்க-சவுதி ஆரேபிய ஆகியவற்றுக்கிடையிலான ஒரு முரண்பாட்டை முன்னோடியாக எடுத்துக் காட்டி இச்சூழலை அவர் விளக்குகின்றார். 2018இல் வோசிங்டன் போஸ்ட் ஊடகவியாளர் ஜமால் கஷோகியின் *(Washington Post journalist Jamal Khashoggi)* கொலைக்கு சவூதி அரேபியாதான் காரணம் என்று அமெரிக்கா கண்டறிந்தாலும், சவுதியுடனான உறவைத் தொடர்ந்தது. அடிப்படையில் ஒரு சட்டத்திற்குப் புறம்பான கொலை எனினும் அதுகுறித்து முரண்படாமற் கண்ணை மூடிக்கொண்டு இரு நாடுகளும் உறவைத் தொடர்கின்றன.

### கனேடிய அரசியலில் சீக்கியர்களின் செல்வாக்கு

கனடாவின் குற்றச்சாட்டுகளை வாக்கு வங்கி அரசியலை மையமாகக் கொண்ட ட்ரூடோ அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சிநிரல் என்று இந்தியா கூறியது. அதற்குக் காரணம், ட்ரூடோ தலைமையிலான அரசாங்கத்திலும் கனேடிய லிபரல் கட்சியிலும் சீக்கியர்களின் செல்வாக்கு அதிகம். 2016ஆம் ஆண்டு ஒரு முறை ட்ரூடோ செய்தியாளர்களிடம் இப்படிக் கூறியிருக்கின்றார். அதாவது பிரதமர் நரேந்திர மோடியை விட தனது அமைச்சரவையில் அதிக சீக்கியர்கள் (4பூ) உள்ளனர். கனேடிய அரசியலில் சீக்கியர்கள்

கவிதை: **கவிஜி**



## முடிவிலி எனத் தெரிந்தும்

தனக்கு மட்டுமே நடக்கிறதென
நம்பும் மனதை நம்பாதீர்கள்
உனக்கு எனக்கு என
எவருக்கும் நடந்த
தருணம்தான் மனம்
உள்ளே வெளியே என
கல்லாகிக் கிடக்கும்
பாதி உடைந்த பின்னும் பார்
அதுவே தான் அது
தனித்து விடப்பட்டதாக
கற்பனிக்கும் அதற்கு
தன் போக்கென
சதா சுயம் அரிக்கும்
தாக்குண்டது போல
தவித்துப் போகும் மனதுக்கு
அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை
எல்லாம் ஒன்றெனவும்
நன்கு தெரியும்
மாறாக
மாற்றி யோசிக்கத் துடிக்கும்
பெரு நடிப்பு
அதன் வசீகரம்
பெருஞ்சிறகு அதன் பேராசை
முடிவிலி எனத் தெரிந்தும்
முனங்கிப் பார்க்கும்
சிக்குண்டு சிதறி
தனை நோக்கி தானே இழுபட்டு
எப்போதும்
கழுத்தில் தொங்கும்
ஒரு சுய தரிசன
தொடர் மரணம் அது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிசமான செல்வாக்கை செலுத்துகின்றனர், பொதுச்சபையில் 15 ஆசனங்களைக் கொண்டுள்ளனர். இது 338 மொத்த பொதுச்சபை உறுப்பினர்களில் நான்கரை வீதமாகும். கனேடிய மக்கட்தொகையில் சீக்கியர்கள் 2 வீதத்தினையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். 2020ஆம் ஆண்டு ட்ரூடோ இந்தியாவில் விவசாயிகளின் போராட்டங்கள் குறித்து தனது கவலையை வெளிப்படுத்தினார். அதனாலும் டெல்லியின் கடுமையான விமர்சனத்திற்கு ஆளானார்.

கனடாவின் புலம்பெயர் இந்தியர்கள் எனும்போது முன்னர் ஒரு காலத்தில் முக்கியமாக பஞ்சாபிகள் மற்றும் சீக்கியர்கள் விளங்கினர். தற்போது கணிசமான எண்ணிக்கையிலான இந்துக்கள் மற்றும் தென்னிந்தியா மற்றும் மேற்கு மாநிலமான குஜராத்தில் இருந்து குடியேறியவர்கள் எனவாகப் பரந்த இந்திய சமூகங்களைக் கொண்ட நாடாகக் கனடாவின் இந்தியப் புலம்பெயர்ந்தோர் சூழல் மாறியுள்ளது. இருதரப்பு உறவில் ஏற்பட்டிருக்கும் சரிவுக்குப் பல்வேறு காரணங்களும், பின்னணிகளும் உள்ளன. இந்தியா தனக்கு ஆபத்தாகவும் அச்சுறுத்தலாகவும் பார்க்கும் 'காலிஸ்தான்' விவகாரத்தைக் கனடா கருத்துச் சுதந்திரம் சார்ந்த செயற்பாடுகள் எனும் வரையறையின் கீழ் பார்க்கின்றது. அந்நிலைப்பாட்டில் விட்டுக்கொடுப்பினைச் செய்யவும் கனடா தயாராக இல்லை.

இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட நெடிய உறவு உள்ளது. கனடாவில் 1.3 மில்லியன் மக்கள் இந்தியப் பின்னணியைக் கொண்ட மக்கள் வாழ்கின்றனர். இது கனேடிய மக்கட்தொகையிற்; கிட்டத்தட்ட 4 வீதமாகும். அத்தோடு கனடாவிற்கும் இந்தியாவிற்குமிடையிற் கணிசமான அளவு பொருளாதார உறவும் உள்ளது. 2022இல் கனடாவின் 10வது பெரிய வர்த்தகப் பங்காளி எனும் வரிசையில் இந்தியா இருந்தது. 2018 முதல் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குக் கல்விக்காகப் புலம்பெயரும் மாணவர்கள் மத்தியில் முதன்மையான நாடுகளில் ஒன்றாகவும் கனடா விளங்குகின்றது. இப்படியாக இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை, புலம்பெயர்ந்தோரின் பன்முகத்தன்மை மற்றும் இருதரப்பு வர்த்தக அதிகரிப்பு, அதிகரித்த மாணவர் பரிமாற்றம் ஆகிய பன்முக உறவு முன்னெப்போதையும் விட மிகவும் பரந்த நிலையிலிருக்கின்றது.

**புவிசார் அரசியல் விளைவுகள்**

இந்திய- கனடா முரண்பாடு குறிப்பிடத்தக்க புவிசார் அரசியல் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். வளர்ந்து வரும் ஒரு வல்லரசென்ற நிலையில் இந்தியாவானது, அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற மேற்குலக நாடுகளுடனான முக்கிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார நட்பு நாடாக மாறியுள்ளது. இந்நிலையில் இந்திய அரசின்; நாடுகடந்த வன்முறைகள் குறித்த ஆதாரங்கள் வெளிச்சத்திற்கு வரும் புறநிலையில் இந்நாடுகளுடனான இந்திய உறவு சிக்கலானதாக ஆகுவதற்குரிய வாய்ப்புகள் உள்ளன.

'இந்தியாவை ஒற்றைத் தேசியவாத அடையாளத்தின் கீழ் அணிதிரட்ட பாரதிய ஜனதா ஆட்சிபீடம் பிரயத்தனம் கொண்டுள்ளது. காலிஸ்தான் இயக்கம் போன்றன வரலாற்று ரீதியாக இந்தியத் தேசியவாதத் திட்டத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றன' என்கிறார் கார்டியன் பத்திரிகையின் தெற்காசிய நிருபர் ஹன்னா எல்லிஸ் பெதர்சன் *(Hannah Ellis-Petersen, The Guardian, 22.10.24)*

பாகிஸ்தானுக்கு எதிராகத் தொடர்ந்து முன்வைக்கும் அதே குற்றச்சாட்டைத் தான் கனடாவுக்கு எதிராகவும் இந்தியா இப்போது முன்வைக்கிறது. இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதிகளுக்கு கனடா அடைக்கலம் அளித்து நிதியுதவி செய்வதாக அது குற்றம் சாட்டுகிறது. ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய இன்னொரு விடயம் உள்ளது. கனடாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் இந்தியா பிரயோகிக்கும் மொழி, பாகிஸ்தானுக்கு எதிராக பிரயோகிக்கப்படுவதைவிடக் கடுமையான தொனியாக உள்ளது.

**உசாத்துணை**


*Relations between Canada and India are at a standstill: – A fundamental mistake, ABC Nyheter, 21.10.2024*

*India slams Canada for linking minister Amit Shah to Sikh separatist plot, Al Jazeera, 02.11.2024*

*A timeline of Canada-India tensions — from 2018 to the latest diplomatic expulsions: Relations between Canada and India have been under pressure for years, John Paul Tasker, CBC News, 03.05.2024*

*India-Canada tensions, Hannah Ellis-Petersen- South Asia correspondent, The Guardian. 15.10.2024*

*Indian government ordered killings in Pakistan, intelligence officials claim, Hannah Ellis-Petersen, Aakash Hassan & Shah Meer Baloch, 04.04.2024, The Guardian*

*How relations between India and Canada hit rock bottom, Soutik Biswas, BBC, 15.10.2024*


•

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: ஜமாலன்

# புதிய உலக ஒழுங்கிற்கான "BRICS" கூட்டமைப்பின் நுண்ணரசியல்

பகுதி:1

"ஏகபோகங்கள், ஆதிக்கக் கும்பல், சுதந்திரத்திற்காக அல்லாமல் ஆதிக்கத்துக்கான முயற்சிகள், ஒருசில மிகுந்த செல்வந்த அல்லது மிகுந்த வலிமையான தேசங்கள் மேலும் மேலும் கூடுதலாகிச் செல்லும் சிறிய அல்லது பலவீன தேசங்களைச் சுரண்டுதல் - இவை எல்லாம், ஏகாதிபத்தியத்தின் தனிப்பட்ட குணாதியசயங்களை - புல்லுருவித்தனமான அல்லது அழுகிவரும் முதலாளித்துவமாக ஏகாதிபத்தியத்துக்கு இலக்கணம் கூறும்படி நம்மை நிர்பந்திக்கும் அந்த குணாதியசங்களை - தோற்றுவிக்கின்றன."

– வி. ஐ. லெனின்

"போரின் தவிர்க்க முடியாத தன்மையை அகற்ற, ஏகாதிபத்தியத்தை ஒழிக்க வேண்டியது அவசியம்"

– ஜோசப் ஸ்டாலின்

"ஒருலகு எதிர்பார்ப்புகள் முக்கிய மோதல்களின் இறுதியில் தோன்றுகின்றன. ஆனால், மனித வரலாறு முழுவதும் இரண்டு உலகங்கள் என்ற சிந்தனைப் போக்கு திரும்பத் திரும்ப வருகிறது. மக்கள் எப்போதுமே மக்களை நாம் X அவர்கள், உள்வட்டம் X வெளிவட்டம், நம் நாகரீக X அந்த காட்டுமிராண்டிகள் என்று பிரிப்பதற்குத் தூண்டப்படுகிறார்கள். ஆய்வாளர்கள் உலகத்தை கிழக்கு - மேற்கு, வடக்கு - தெற்கு, மையம் - விளிம்பு என்று பகுத்து நோக்கியிருக்கிறார்கள்."

– சாமுவேல் பி. ஹண்டிங்டன்

### 1. உலக ஒழுங்கு (World Order)

முதலாளியமும், காலனியமும், ஏகாதிபத்தியமும் நிகழ்த்திய முதலாம், இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு உருவான ஒரு அரசியல் கருத்தாக்கம் "உலக ஒழுங்கு" (*World order*). இன்றைய புவிக்கோளத்தை ஓர் ஒழுங்கமைப்பாக மாற்றுவதன் மூலம் உலகச் சந்தையை ஒரு அதிகார அமைப்பிற்குள் கொண்டுவருவதும், அதனை பங்கிடுதலுக்குமான ஒரு சொல்லாடல் புலமே "உலக ஒழுங்கு" என்பது. முதலாளியத்தின் வளர்ச்சியோடு உருவான இரண்டு முக்கியக் கூறுகள் ஏகாதிபத்தியம் மற்றும் காலனியம். இவ்விரண்டும் புவிக்கோளத்தை ஒற்றை உலகம் என்ற ஓர் ஒழுங்கமைப்பிற்குள் கொண்டு வந்தது. காரணம் செவ்வியல் சமூகம் எனப்படும் முதலாளியத்திற்கு முந்தைய சமூகங்களின் முடியாட்சிகளுக்கிடையே நடந்த பல போர்கள் தவிர்க்க இயலாமல் அவற்றை அந்நிய நாடுகளின் கூட்டமைப்பிற்கான தேவையை நோக்கி நகர்த்தியது. முன் நவீன சமூகங்களில் அதாவது 15-ஆம் நூற்றாண்டிற்கு முந்தைய சமூகங்களில் பல பேரரசுகள் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் உருவானதும், அவற்றை ஒட்டி நடந்த போர்களும், அப்போர்களுக்குப் பின்னிருந்த மதக் கருத்தியல்களும் உலக வரலாறாக அறியப்பட்டிருக்கிறது. அந்த வரலாற்றை இயக்கிய சக்திகள், அச் சமூகங்களின் வளத்தையும், உற்பத்தியையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வதற்காக நடந்த போர்களே.

இப்போர்களுக்குப்பின் வென்ற நாடுகள், வீழ்ந்த நாடுகளை தங்களது அடிமைகளாக மாற்றின. இப்படியாக உருவான பல பேரரசுகள் பல கூட்டமைப்புகளாக மாறி அதிகாரத்திற்கு போட்டியிட்டன. 15-ஆம் நூற்றாண்டிற்கு பிந்தைய முதலாளியச் சமூகம் முடியாட்சி முறைக்கு மாற்றாக குடியாட்சி முறையைக் கொண்டுவந்தது. இக்குடியாட்சி முறைக்கான அரசியல் வடிவமாக ஜனநாயகம், தேசிய அரசு (*National State*) என்பதை உருவாக்கின. அதுவரை முடியாட்சியில் நாடுகளாக அறியப்பட்டவை, தேசங்களாக மாறின குடியாட்சியில். நிலவுடமையிலும், மதத்திலும் கட்டுண்டுக் கிடந்த அறிவை முதலாளியம் விடுவித்தது. உலகில் அறிவியல் என்ற புதிய பார்வையும், அறிதலும் அறிமுகமானது. அதை ஒட்டி புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாளியமும், காலனியமும், ஏகாதிபத்தியமும் நிகழ்த்திய முதலாம், இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு உருவான ஒரு அரசியல் கருத்தாக்கம் "உலக ஒழுங்கு" (World order). இன்றைய புவிக்கோளத்தை ஓர் ஒழுங்கமைப்பாக மாற்றுவதன் மூலம் உலகச் சந்தையை ஒரு அதிகார அமைப்பிற்குள் கொண்டுவருவதும், அதனை பங்கிடுதலுக்குமான ஒரு சொல்லாடல் புலமே "உலக ஒழுங்கு" என்பது.**

அறிவியல் கண்டுபிடிப்புகளால் உருவான உற்பத்திப் பெருக்கம் தொழிற்புரட்சியை உருவாக்கியது. மிகப்பெரும் தொழில் நிறுவனங்கள், அதீதமான உற்பத்தி என முதலாளியத்திற்கு ஏற்பட்ட சந்தை நெருக்கடி அதனைப் பல்வேறு நாடுகளைக் கண்டுபிடிக்கவும் அவற்றை வென்று அடிமைப் படுத்துவதையும் நோக்கி நகர்த்தியது. முதலாளியம் அதன் உச்ச வளர்ச்சியை நோக்கி நகர்ந்த போது அது தொழில்துறை மற்றும் வணிகத்துறை சார்ந்த பல குழுக்களாக, கூட்டமைப்புகளாக மாறியது. 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நடந்த பெரும் போர்களை நிறுத்த போரில் ஈடுபட்ட பெரும் சக்தி வாய்ந்த நாடுகளுக்கிடையில் உருவான அரசுகளுக்கும், உலகிற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் உருவாக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 1648ஆம் ஆண்டு "வெஸ்ட்பாலியா அமைதி உடன்படிக்கை" உருவாக்கப்பட்டது. இது மத்திய ஐரோப்பாவில் பேரழிவுகளை உருவாக்கிய முப்பது ஆண்டுகாலப் போரை முடித்ததோடு 'உலகு ஒழுங்கு' குறித்த பார்வையை உருவாக்கியது.

இப்போர்களின் வழியாக முதலாளியம் தனது தேசிய எல்லைகளைத் தாண்டி பல காலனிய நாடுகளாக சந்தையை விரிவுப்படுத்தி, தன்னை உலகளாவியதாக நிறுவிக்கொள்வதன் மூலம், சந்தைகளை ஏகபோகமானதாக மாற்றிக் கொள்கிறது. சந்தைகளில் இரண்டுவகை உண்டு என்கிறார் லெனின். ஒன்று தடையில்லாப் போட்டி அடிப்படையிலான சந்தை. இதில் கடும் போட்டிகள் நிலவும். இதனை தீர்மானிப்பது அளிப்புக்கும் (supply), தேவைக்கும் (demand) உள்ள உறவு. இரண்டிற்கும் இடையிலான உறவைப் பொருத்து சந்தையின் மதிப்பும், விலையும் தீர்மானிக்கப்படுகிறது. இதில் நிலவிய முதலாளியப் போட்டி சந்தையைக் கட்டுப்படுத்த அதனை ஏகபோகமாக மாற்றுவதற்கு, முதலாளிகள் இடையே கார்டெல்கள் (கூட்டமைப்புகள்), கார்ப்பரேஷன்கள் (கூட்டுக் குழுமங்கள்), டிரஸ்டுகள் (அறக்கட்டளைகள்) என்ற வடிவில் பல அமைப்புகளை உருவாக்கி, அதன் வழியாக சந்தையை ஏகபோகமானதாக மாற்றுகின்றன. போட்டியில் தங்களுக்குள் ஒரு சமநிலை ஒப்பந்தங்களை உருவாக்கிக் கொள்கின்றன. அதன் வளர்ச்சிப் போக்கில், சிறு உற்பத்தியாளர்கள் அழிக்கப்பட்டோ, அல்லது கூட்டாகவோ பெருமுதலாளிய வளர்ச்சி உருவாகுகிறது. இப்படி உருவான முதலாளியத்தின் உச்ச கட்டத்தைத்தான் லெனின் ஏகாதிபத்தியம் என்று வரையறுத்தார். "முதலாளித்துவத்தின் ஏகோபோகக் கட்டமே ஏகாதிபத்தியம்" (பக்.142, "ஏகாதிபத்தியம் முதலாளியத்தின் உச்சகட்டம்"), என்கிறார் லெனின்.

ஏகாதிபத்தியத்தின் 5 அடிப்படை இயல்புகளைப் பற்றி லெனின் வரையறை செய்கிறார். "1. பொருளாதார வாழ்வில் தீர்மானகரமான பங்காற்றும் ஏகபோகங்களைத் தோற்றுவிக்கும் படியான உயர்ந்த கட்டத்துக்கு உற்பத்தியின், மூலதனத் தொழில் துறை மூலதனத்தின் ஒன்றுகுவிப்பு வளர்ந்துவிடுதல் 2. வங்கி மூலதனம் தொழில்துறை மூலதனத்துடன் ஒன்றுகலத்தலும், இந்த "நிதி மூலதனத்தின்" அடிப்படையில் நிதியாதிக்கக் கும்பல் உருவாதலும் 3. பண்ட ஏற்றுமதியிலிருந்து வேறுபடுத்த வேண்டியதாகிய மூலதன ஏற்றுமதி தனி முக்கியத்துவம் பெறுதல் 4. சர்வதேச ஏகபோக முதலாளித்துவக் கூட்டுகள் உருவாகி, உலகையே இவை தமக்கிடையே பங்கிட்டுக் கொள்ளுதல் 5. மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே அனைத்து உலகப் பரப்பும் பங்கிடப்பட்டுக் கொள்ளுதல் நிறைவேறுகிறது." (பக்.143)

இப்படி உருவான பல ஏகாதிபத்தியங்கள் சந்தைகளைப் பங்கிட்டுக்கொள்ள, பறித்துக்கொள்ள தங்களுக்குள் போரிட்டுக் கொண்டதே முதலாம் உலகப் போராக (WW-I) வெடித்தது. இத்தகைய உலகப் போர்கள் ஒரு சிறு நிகழ்வில் இரண்டு நாடுகளில் துவங்கி, பல நாடுகளின் கூட்டமைப்பாக மாறி, போரிடும் அணிகளாக உருவெடுக்கிறது. இவ்வணிகள் ஒரு கூட்டாக ஒப்பந்தங்களை உருவாக்குகின்றன. இத்தகைய ஒப்பந்தங்களின் வழியாக வென்ற நாடுகள், தோற்ற நாடுகளை பங்கிட்டுக் கொள்வது அல்லது இக்கூட்டமைப்புகள் வழியாக அவற்றின்மீது தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவது என்பது நிகழ்கிறது. இதன் தொடர்ச்சியாக தோற்ற நாடுகள் தங்கள் பொருளாதாரச் சுமைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து மீள மீண்டும் போரை நோக்கி நகர்கிறது. அது இரண்டாவது உலகப்போராக (WW-II) மாறியது. ஒவ்வொரு போருக்குப் பின்னும் இந்த உலகம் ஓர் ஒழுங்கமைப்பிற்கு மாற்றப்படுகிறது என்பதே முக்கியம். முதல் உலகப்போர் முதலாளியப் போட்டியில் நிகழ்ந்தாலும், அதன் விளைவாக சோவியத் ரஷ்யா என்கிற சமவுடைமைச் சமுகம் (Socialist Society) ஒன்று வரலாற்றில் புதிதாக உருவானது. அதன் பின் உருவான இரண்டாம் உலகப்போருக்குப் பின் சீனா, மக்கள் குடியரசாக மாறியது. இப்படிப் போர்கள் உருவாக்கும் மாற்றங்கள் உலகை ஆள்வதற்கான ஒரு கூட்டமைப்பின் தேவையை நோக்கி நகர்வதுடன் உலக ஆதிக்கத்திற்கான போட்டிகளையும் உருவாக்குவதாக அமைந்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் வென்ற நாடுகள் ஒன்று கூடி ஒரு உலகளாவிய அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்து உருவானதே ஐக்கிய நாடுகள் சபை (UN). இந்த வரலாறு மிகச் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. காரணம், நமது நோக்கம் உலகளாவிய அமைப்புகள் எப்படி உருவாகின என்பதைச் சுட்டுவதே.

## 2. புதிய உலக ஒழுங்கு

1945இல் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் சபை உலகளாவிய நாடுகள் போரைத் தவிர்க்கவும், தங்கள் பிரச்சினைகளைக் கூடிப் பேசவும் ஆன ஒரு அமைப்பாக உருவாக்கப்பட்டது. அதன்பின் உலகு ஒழுங்கு குறித்த கருத்தாக்கம் என்பது உலகளாவிய இரண்டு அதிகார மையங்களுக்கு கீழ் இயங்குவதாகியது. ஒன்று முதலாளிய நாடான ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றது பொதுவுடைமை நாடுகளாக அறியப்பட்ட சோவியத் ரஷ்யா. இவ்விரண்டு அதிகார மையங்களும் உலகை இருதுருவ அமைப்பாக மாற்றின. இவ்வமைப்பில் ஒன்றை ஆதரிப்பது என்ற நிலை அனைத்து நாடுகளுக்கிடையில் உருவானபோது, இந்தியப் பிரதமராக இருந்த ஜவர்கர்லால் நேரு ஒத்த உணர்வுள்ள நாட்டுத் தலைவர்களுடன் கூடி தொலைநோக்குடன் ஒரு புதிய அமைப்பை உருவாக்கினார். அதுதான் "அணிசேரா நாடுகள் கூட்டமைப்பு" (Non-Aligned Movement - NAM). இவ்வமைப்பு உலக ஆதிகாரப் போட்டியில் ஒரு சமநிலையை உருவாக்க முனைந்தது. ஐக்கிய நாடுகள் சபைக்கு வெளியே 120 நாடுகளின் கூட்டமைப்பாக இருந்தது. இது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், சோவியத் சமஉடமைக்கும் இடையில் நிகழ்ந்து வந்த பனிப்போரில் எந்த ஒரு அணியையும் ஆதரிக்காத நடுநிலையை எடுத்தன. 1989இல் சோவியத் வீழ்ச்சிக்கு பின் இப் பனிப்போர் முடிவிற்கு வந்தது. உலகம் இருதுருவ அதிகார மையத்தை இழந்தது. அமெரிக்க எகாதிபத்தியம் உலகை ஒற்றை துருவமாக மாற்றியது. அது "புதிய உலக ஒழுங்கு" (New World Order) என்பதை அறிமுகப்படுத்தியது.

பனிப்போரின் போது பல்வேறு நாட்டு அரசுகளின் தேசிய பாதுகாப்பைக் கருதி பல உலகளாவிய கூட்டு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (NATO), மத்திய ஒப்பந்த அமைப்பு (CENTO), தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைப்பு (SEATO) மற்றும் வார்சா ஒப்பந்தம் அடிப்படையிலான WTO (Warsaw Treaty Organization) போன்ற இராணுவக் கூட்டணிகள் உருவானது. இவ்வமைப்புகள் நாடுகளுக்கிடையலான ஆபத்துகளை கணக்கில்கொண்டு அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கையினைத் தீர்மானிப்பதாக மாறியது. சோவியத் ஒன்றியத்தின் சிதைவு மற்றும் 1991இல் பனிப்போர் முடிவடைந்த பின்னர், இராணுவ கூட்டணி உருவாக்கம் மற்றும் ஆயுதப் போட்டி ஆகியவற்றில் ஒரு தடை இருந்து வந்தது. ஐரோப்பிய ஒன்றியம் (EU), 1996இல் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) மற்றும் செப்டம்பர் 1999இல் ஜி20 (G20) போன்ற பிராந்திய சர்வதேச அமைப்புகளின் உருவாக்கம், உலக நாடுகளுக்கிடையிலான ஆயுதப் போட்டிகள் ஆகியவை பொருளாதார ஒருங்கிணைப்பில் உலகை மாற்றியமைக்கப்படுவதற்கு தெளிவான எடுத்துக்காட்டுகள் எனலாம். இத்தகைய அமைப்புகளின் பின்னிருக்கும் நுண்ணரசியல் ஐரோப்பிய, அமெரிக்க நலனே. இவை முன்வைக்கும் புதிய உலக ஒழுங்கு என்பது ஐரோப்பிய அமெரிக்க ஒழுங்கமைப்பை உலகம் முழுவதற்கானதாக மாற்றுவதே.

இதன் தொடர்ச்சியாக, 1990இல் நவதாராளவாத முதலாளியக் கொள்கையுடன் உலகமயமாதல் (Globalization) துவங்குகிறது. இது அமெரிக்கா அறிவித்த புதிய உலக ஒழுங்குடன் நெருக்கமான தொடர்புடையது. 'தற்போதைய நிலையில் உலகின் அதிகாரச் சமநிலை உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது' என்ற கருதுகோளை முன்வைத்தது. ஏகாதிபத்தியத்தில் இருந்து உலகமயமாக்கலுக்கு மாறுவது என்பது உலக வல்லரசுகள் ஆதிக்க வேட்கையில் ஒன்றை ஒன்று எதிர்ப்பதை விட ஒரு கூட்டு வலையமைப்பாக மாறிவிட்டன என்பதைக் குறிப்பதாகும். ஆனால் உலகமயமாக்கல் அரசியல், பொருளாதாரம் மற்றும் பண்பாடு என்ற மூன்று தளங்களிலும் செயல்படுவதாக உள்ளது. மார்க்ஸ் ஏங்கெல்ஸ் தங்கள் கம்யூனிஸ்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்தியத்தின் 5 அடிப்படை இயல்புகளைப் பற்றி லெனின் வரையறை செய்கிறார்.
“1. பொருளாதார வாழ்வில் தீர்மானகரமான பங்காற்றும் ஏகபோகங்களைத் தோற்றுவிக்கும் படியான உயர்ந்த கட்டத்துக்கு உற்பத்தியின், மூலதனத் தொழில் துறை மூலதனத்தின் ஒன்றுகுவிப்பு வளர்ந்துவிடுதல் 2. வங்கி மூலதனம் தொழில்துறை மூலதனத்துடன் ஒன்றுகலத்தலும், இந்த “நிதி மூலதனத்தின்” அடிப்படையில் நிதியாதிக்கக் கும்பல் உருவாதலும் 3. பண்ட ஏற்றுமதியிலிருந்து வேறுபடுத்த வேண்டியதாகிய மூலதன ஏற்றுமதி தனி முக்கியத்துவம் பெறுதல் 4. சர்வதேச ஏகபோக முதலாளித்துவக் கூட்டுகள் உருவாகி, உலகையே இவை தமக்கிடையே பங்கிட்டுக் கொள்ளுதல் 5. மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே அனைத்து உலகப் பரப்பும் பங்கிடப்பட்டுக் கொள்ளுதல் நிறைவேறுகிறது.”

அறிக்கையில் முன்வைத்த முழக்கம் “உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்” என்பது. ஆனால், இன்றைய உலகமயமாதல் எதிர்மறையாக “உலக முதலாளிகளை ஒன்று கூட” வைத்துள்ளது உலகமயக் கார்ப்பரேட்டுகளாக.

### 3. BRICSஇன் தோற்றம்

உலகமயமாதல் என்ற புதிய உலக ஒழுங்கில் உருவாகியிருக்கும் ஒரு புதிய உலகக் கூட்டமைப்பே “*BRICS*”. *Brazil, Russia, India, China, South Africa* ஆகிய நாடுகளின் கூட்டமைப்பின் முதல் எழுத்துக்களில் உருவான பெயர் சுருக்கமே “*BRICS*”. ஆனால், இந்த 5 நாடுகளைத் தவிர வேறு பல நாடுகளும் இன்று இணைந்துள்ளன. இவை எதிர்காலத்தில் விரிவடையும் என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள். ஐரோப்பிய, அமெரிக்க கூட்டமைப்பு நாடுகள் அல்லாத ஒரு கூட்டமைப்பு நாடாக, அவற்றிற்கு எதிரானதொரு அல்லது மாற்றாக உலக ஒழுங்கமைப்பை உருவாக்கும் நோக்குடன் துவங்கப்பட்டதே இக்கூட்டமைப்பு. அதாவது, இது ஐரோப்பிய-அமெரிக்க பெருமுதலாளிகள் அல்லாத வளர்ந்துவரும் நாடுகளின் பெருமுதலாளிகளுக்கான அமைப்பு. இதனையும், இதன் பின்னியங்கும் அரசியல் மற்றும் நுண்ணரசியலைப் புரிந்துகொள்ள முதலில் உலக ஒழுங்கு மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றின் தொடக்கம், வரலாறு, கொள்கைகள், தேவைகள், செயல்பாடுகளைப் புரிந்துகொள்வது அவசியம்.

‘கோல்ட்மேன் சாக்ஸ்’ என்ற அமைப்பின் பொருளாதார நிபுணர் ஜிம் ஓ நீல் 2001 இல் BRIC (பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா) என்ற வார்த்தையை உருவாக்கி, வரும் பத்தாண்டுகளில் இந்த நாடுகளின் பொருளாதார திறன்களின் வளர்ச்சியை எடுத்துரைத்தார். அதன்பின் உலக அரசியல் அரங்கில் BRIC என்ற சொல் பரவலாகியது. இது உலகப் பொருளாதாரத்தில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க திருப்பமாகும். அதாவது, உலக அரசியல் வளர்ந்த பொருளாதார நாடுகளிலிருந்து, வேகமாக வளரும் பொருளாதார நாடுகளை நோக்கித் திரும்பியது. 2007-09 நிகழ்ந்த சர்வதேச நிதி நெருக்கடியின் போது, உலகப் பொருளாதாரத்தில் BRIC ஒரு மாற்று சக்தியாக தன்னை உருவாக்கிக் கொள்ள முயல்கிறது. அதாவது பொதுவாக உலகப் போர்களை உருவாக்கும் இத்தகைய நெருக்கடிகளை சமாளிக்க உலக முதலாளித்துவம் கண்டுபிடித்த ஒரு உத்தியே இத்தகைய சர்வதேச அமைப்புகள். 2009 ஆம் ஆண்டு இந்த அமைப்பின் அடிக்கல்லை நாட்டியதிலிருந்து, சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வங்கி (WB) போன்ற சர்வதேச நாணய அமைப்புகளின் நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்திய மேற்கத்திய மற்றும் அமெரிக்க மேலாதிக்கத்தில் சில சீர்திருத்தம் தேவைப்படுவதை BRIC நிர்பந்தித்தது என்கிறார்கள் வல்லுனர்கள்.

ஜூன் 2009 இல், BRIC இன் முதல் உச்சி மாநாடு ரஷ்யாவின் யெகாடெரின்பர்க்கில் நடைபெற்றது. 2008ஆம் ஆண்டில் நிகழ்ந்த நிதி நெருக்கடி, உலகளாவிய வளர்ச்சி சிக்கல்கள், BRIC நாடுகளிடையே ஒத்துழைப்பு, பன்முகத்தன்மை, பரஸ்பர மரியாதை, சமத்துவத்தின் அடிப்படையில் மிகவும் ஜனநாயக மற்றும் நியாயமான உலக ஒழுங்கிற்கு அழைப்பு விடுத்தது. அன்றிலிருந்து ஒவ்வொரு பிரிக்ஸ் நாடுகளிலும் வருடாந்திர உச்சி மாநாடு நடைபெறத் தொடங்கியது. 2011 இல் சீனாவில் நடைபெற்ற மூன்றாவது BRIC உச்சிமாநாட்டில் தென்னாப்பிரிக்கா BRIC உறுப்பினரானது. இதனால் BRIC என்ற சுருக்கம் BRICS ஆனது. பிரிக்ஸ் நாடுகளின் மொத்த மக்கள்தொகை உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 40%. காரணம் சீனா, இந்தியா என்ற இரு மக்கள்தொகை அதிகமான நாடுகள் பங்கு பெறுவதால். இந்த ஆறு நாடுகளும் இணைந்து உலகப் பொருளாதாரத்தில் 20%. 2001 முதல் 2015 வரை அதன் மொத்த உள்நாட்டு வர்த்தகம் மொத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRICS வர்த்தக சதவீதத்தின் அடிப்படையில் 7.33% - 17.25% ஆக இரட்டிப்பாக்கப்பட்டது என்கிறது ஆய்வுகள். 2009இல் அதன் முதல் உச்சிமாநாட்டிலிருந்து, மக்கள் தொகை மற்றும் பொருளாதாரத்தின் அடிப்படையில் இது ஒரு மேலாதிக்க பிராந்திய சக்தியாக மாறக் கூடியதாக உள்ளது.

இக்கூட்டமைப்பு அடுத்து குறிவைத்தது உலகப் பொருளாதாரத்தின் முக்கிய கண்ணியான நிதிக்கட்டமைப்பை உருவாக்குவதை. அதற்கு நிதிமூலதன அமைப்புகளான வங்கிகளை உருவாக்கும் முயற்சியில் இறங்கியது. 2014 ஆம் ஆண்டில் புது டெல்லியில் நடந்த உச்சி மாநாட்டில், அதன் உறுப்பு நாடுகள் "புதிய வளர்ச்சி வங்கி (NDB -New Development Bank)" மற்றும் "தற்செயல் இருப்பு ஏற்பாடு (CRA -Contingent Reserve Arrangement)" ஆகியவற்றை 100 பில்லியன் அமெரிக்க டாலர்களின் ஆரம்ப மூலதனத்துடன் உருவாக்கின. இந்த புதிய வங்கி வளரும் நாடுகளில் உள்கட்டமைப்பு மற்றும் நிலையான வளர்ச்சி திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்கானதாக அமைக்கப்பட்டது. இவ் வங்கி அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஆதிக்கம் செலுத்தும் உலக வங்கி (World Bank - WB) மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு (International Monitory Fund-IMF) மாற்றாக செயல்படும் நோக்கம் கொண்டது.

உக்ரைனில் நடக்கும் போர் நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விரிவுபடுத்தும் நோக்கைக் கொண்டிருப்பதை உணர்ந்த ரஷ்யாவிற்கு இத்தகைய ஓர் அமைப்பு அவசியப்படுகிறது. BRICS விரிவாக்கக் கொள்கையானது மேற்கத்திய முகாம்களின் அரசியல் உத்தியின் ஒரு பிரதிபலிப்பாகத் தோன்றலாம், ஆனால் இது அவர்களின் முகாம்களை விரிவுபடுத்துவதன் வழியாக மற்றொரு உலக ஆதிக்க அமைப்பாக மாறமுயல்கிறது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். அதனால், ஐரோப்பா மற்றும் ஆசியாவில் உள்ள அதன் நட்பு நாடுகளுடன் ஒருங்கிணைக்க அதிக முயற்சி எடுக்கிறது. BRICS குழுவை உள்ளடக்கிய மூன்று சக்திவாய்ந்த அரசாங்கங்களான சீனா, இந்தியா மற்றும் ரஷ்யா ஆகியவை உள்நாட்டு மற்றும் சர்வதேச விவகாரங்களில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றன. இவற்றை சமன்செய்ய இத்தகைய உலக ஒழுங்கிற்கான அமைப்பை உருவாக்கி தங்களது வல்லாதிக்க வேட்கையை நிறைவு செய்துகொள்ள முயல்கின்றன. கூடுதலாக, மத்திய கிழக்கு, லத்தீன் அமெரிக்கா, தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவிலிருந்து பிறக்கும்

**உலகு ஒழுங்கு குறித்த கருத்தாக்கம் என்பது உலகளாவிய இரண்டு அதிகார மையங்களுக்கு கீழ் இயங்குவதாகியது. ஒன்று முதலாளிய நாடான ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றது பொதுவுடமை நாடுகளாக அறியப்பட்ட சோவியத் ரஷ்யா. இவ்விரண்டு அதிகார மையங்களும் உலகை இருதுருவ அமைப்பாக மாற்றின.**

பல மாநிலங்கள் BRICS இல் சேர விருப்பம் தெரிவித்துள்ளன. என்றாலும் புதிய உறுப்பினர்களை அமைப்பில் இணைத்துக்கொள்வது ஏற்கனவே இருக்கும் உறுப்பினர்களின் அரசியலையும்,ஒத்துழைப்பையும் வலுவாகச் சார்ந்துள்ளது. ஆக, இப்புதிய கூட்டமைப்பு உலகை இருதுருவமயமாக்கலுக்கும், பன்துருவமயமாக்கலுக்குமான ஒரு முயற்சியாகப் பார்க்கப்படுகிறது.

உலக ஒழுங்கு என்ற உலகை துருவமயப் படுத்துவது போர்களுக்கான கூட்டமைப்பு உருவாக்கமே. காரணம், ஏகாதிபத்தியங்கள் உலகமயமாக்கலாக மாறியபின் அவை பண்டைய பேரரசுகளைப் போன்ற வடிவத்தை எடுக்கின்றன என்கிறார்கள் "பேரரசு" (Empire) என்ற நூலை எழுதிய ஆண்டனியோ நெக்ரி மற்றும் மைக்கல் ஹார்டட் என்கிற பின்-மார்க்சிய ஆய்வாளர்கள். உலகமயம் என்பது இப்படியான பல சர்வதேச நிறுவனங்கள் வழியாக தனது தேசிய அரசுகளின் எல்லைகளைத் தாண்டிய ஒரு அதிகாரப் பகிர்வை உருவாக்குகின்றன. எல்லையற்றதாக இப் பேரரசின் அதிகாரம் உருவாகிறது. இது உலகின் அனைத்து உடல்களையும் பாதிப்பதாக, ஆள்வதாக மாறுகிறது என்று தொடர்கிறது அவர்களது ஆய்வுகள். இதன்மூலம் இவை உருவாக்கும் உலக ஒழுங்குகள் என்பது புதியவகை உலக ஆதிக்கமாக மாறுகிறது. இத்தகைய கூட்டமைப்புகளே உலகில் உள்ள அனைத்து தேசியங்களின் இறையாண்மையை தீர்மானிப்பதாக மாறுகிறது. அடிப்படையில் ஒற்றை உலக ஒழுங்கு அல்லது ஒற்றை துருவமாக்கல் (unipolar world) என்பது ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட வளைகுடாப் போர்களையும், இருமை துருவமாக்கல் (bipolar world) மற்றும் பன்மிய உலக ஒழுங்கு அல்லது பன்மிய துருவமாக்கல் (multipolar world) என்பது உலகப்போர்களையும் உருவாக்கக்கூடியது அல்லது அதற்கான பயத்தை பரவலாக்கம் செய்யக்கூடியது என்பதைத் தவிர உலகின் ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் இத்தகைய உலக துருவமாதலால் எந்த நற்பயன்களும் விளையப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றை துருமவாதலில் எதிரியை நேரடியாக காணமுடியும். அதாவது உலகின் எதிரியாக அமெரிக்க ஏகாதிபத்தியம் என்ற ஒற்றை வல்லரசை எதிர்ப்பதாக அமையும். அது உகளாவிய பயத்தின் ஒரு குறியீடாக அமையும். ஆனால் பன்மிய துருவமாதலில் எதிரிகள் பல முகங்கள் கொண்டவர்களாக இருப்பார்கள். இதில் தேசபக்தி என்பது ஒரு முக்கிய உணர்வுக் கருத்தியலாக அமையும். அதன் வளர்ச்சி தேசப்பெருமிதம் என்ற பெயரில் பாசிச அரசை நோக்கி நகர்த்தும். இவை இரண்டுமே சர்வதேசியத்தை முன்வைக்கும் மார்க்சியப் பார்வைக்கு எதிரானவை என்பதே முக்கியம். இன்றைய ரஷ்யா, இந்தியா, சீனா போன்ற நாடுகளின் வல்லரசு ஆசையின் விளைவாக உருவாக்கப்படும் தேசபக்தி என்பது அந்நாடுகளின் சுயதேசியப் பாசிசத்தை ஆதரிப்பதாக அமைந்துவிடும் அபாயத்தைக் கொண்டிருக்கிறது. நேருவின் அணிசேராக் கொள்கை என்பது ஓரளவு உலக வல்லாதிக்கத்திற்கு எதிரான ஒரு ஜனநாயகக் கூட்டமைப்பாக அமைந்தது. ஆனால், நேருவை தன் கனவிலும் கண்டு அச்சமுறும் இன்றைய பிரதமர் மோடியின் BRICS கூட்டமைப்பு இந்திய மக்களை தேசபக்தர்களாக மாற்றி பாசிசத்தை போற்றி, உலகை ஆளும் 'வசுதேவக் குடும்பம்' என்கிற பிற்போக்கு சனாதன மனநிலைக்கே இட்டுச் செல்லும். இது ஒரு பாசிசக் கூட்டமைப்பாக மாறி போர் வெறியர்களின் கூட்டமைப்பாக உலகை மாற்றுவதாக அமையும். இந்திய மக்களை உலக அதிகாரத்திற்காக பலியிடுவதாகவே இது மாறும். போரின் அரசியல் பொருளாதாரம் என்பது சந்தைக்கான போட்டியே என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்வது அவசியம்.

2024 ரஷ்யாவில் நடந்த BRICS உச்சிமாநாட்டின் முக்கிய கவனம் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை நவீனமயமாக்குதல், எண்மருவுதல் பணப்பரிமாற்றம் (*Digital Currency*), பயங்கரவாத எதிர்ப்பு முதல் கார்பன்-அலகு வர்த்தகம் வரையிலான முக்கிய விஷயங்கள் இதில் விவாதிக்கப்பட்டன. இணையப் பாதுகாப்பு, பயங்கரவாதம் மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை உள்ளிட்ட முக்கியமான பாதுகாப்பு சவால்களையும் இம்மாநாடு எதிர்கொண்டதாக அதன் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். தற்போது உலக ஒழுங்கில் உருவாகியிருக்கும் "புவிசார் தெற்கு (*Global South*)" என்கிற அரசியல் சொல்லாடல் புலத்தை இக்கூட்டமைப்பு பிரதிபலிப்பதாக உள்ளது. தொடக்கத்தில் இருந்து, BRICS தெற்கு-தெற்கு ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச நிறுவனங்களில் மேற்கத்திய மேலாதிக்கத்திற்கு எதிர்ப்பு ஆகியவற்றின் குழுவாகக் கருதப்படுகிறது. உண்மையில் இக்கூட்டமைப்பில் உள்ள சில நாடுகள் இரட்டை விளையாட்டை நிகழ்த்துகின்றன. குறிப்பாக இந்தியா ஒருபுறம் ஜி20 உள்ளிட்ட மேற்கத்திய அமெரிக்க சார்பு குழுமங்களில் பங்கு வகிப்பதும், மேற்கத்திய மற்றும் அமெரிக்காவிற்கு ஏற்ப தலையாட்டுவதும், மற்றொருபுறம் அதை எதிர்க்கும் ரஷ்ய, சீனாவிடம் அணுக்கமாகவும், அவற்றின் தலைமைத்துவத்தை காப்பதற்கான முயற்சியிலும் ஈடுபடுகிறது.

உண்மையில், இந்திய நாட்டின் உள்ளிருந்து வளர்ந்துவரும் பெருமுதலாளிகளான அதானி, அம்பானி குழுமங்களுக்கு பல வணிக ஒப்பந்தங்களை இக்கூட்டமைப்பு நாடுகளில் உள்ள சிறிய நாடுகளின் மீது ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஒரு தளமாகவே இது பயன்படுகிறது. புதிய வளர்ச்சி வங்கியின் (NDB) பிராந்தியக் கிளை இந்தியாவில் திறக்கப்பட வேண்டும் என்று பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார். இதன் பின்னிருப்பது இந்திய பெருமுதலாளியக் கும்பல் உலகின் ஏழை நாடுகளை சுரண்டுவதற்கான வாசலைத் திறப்பதே. அதற்கு இக்கூட்டமைப்பு வழிவகுப்பதாக அமைந்துள்ளது. அடிப்படையில் இத்தகைய உலகளாவியக் கூட்டமைப்புகள் முழுக்க பொருளாதார ஒப்பந்தங்கள் வழியாக தங்களது முதலாளித்துவ நெருக்கடிகளை தீர்க்கவும், ஒன்றுக்கு ஒன்று பரஸ்பரம் உதவிக் கொண்டு, உலகளாவிய எதிர்ப்பு இயக்கங்களை ஒடுக்குவதே நோக்கமாகக் கொண்டுள்ளன. அதற்கு அவை பயன்படுத்தும் சொல்லாடல் "பயங்கரவாத" எதிர்ப்பு. அதிக இராணுவத்திற்கான நிதியை ஒதுக்கக் கூடிய நாடுகளாக இன்று இருப்பவை இந்தியா மற்றும் ரஷ்யா. இவை எல்லாம் இன்னும் விரிவாக பேசப்படவேண்டியவை. அடுத்து, அமெரிக்க மேற்கத்திய நாடுகளின் பொருளாதார சரிவு, புதிய உலக ஒழுங்கு என்கிற அமெரிக்க ஒற்றை ஏகாதிபத்திய கனவு சரிந்துபோனது, டிரம்பின் அமெரிக்க நவ தேசியவாதம், BRICS+ ஆக தற்போது விரிவாகியுள்ள இவ்வமைப்பின் விரிவாக்கத்தின் உள்ளார்ந்துள்ள நுண்ணரசியல், அவை இந்தியாவிற்கு கொண்டுவரப்போகும் பொருளாதார, பண்பாட்டுச் சிக்கல்கள் என பலவும் பேசப்பட வேண்டும். அதை அடுத்த பகுதிக் கட்டுரையில் விரிவாக விவாதிக்கலாம்.

குறிப்பு: இக்கட்டுரைக்கான பார்வை நூல்கள் அடுத்த பகுதியின் இறுதியில் தரப்படும்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: **காக்கையார்**

### அமெரிக்காவில் அதானி மீது லஞ்ச வழக்கு..

# இந்தியாவில் மோடி பாதுகாக்கிறாரா?



**அமெரிக்காவில் உள்ள அதானியின் கிரீன் எனர்ஜி நிறுவனம் இந்தியாவில் ஐந்து மாநிலங்களில் சூரிய மின்சக்தி ஒப்பந்தங்கள் பெறுவதற்காக ரூ. 2,239 கோடியை (265 மில்லியன் டாலர்) அதிகாரிகளுக்கு லஞ்சம் அளித்ததாக அமெரிக்க நீதித்துறை குற்றம் சாட்டியுள்ளது. அமெரிக்காவில் நியூயார்க் கிழக்கு மாவட்ட கோர்ட்டில் இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதானி மற்றும் அவரது சகோதரர் மகன் சாகர் அதானி உட்பட ஏழு பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.**

மோடி ஆட்சிக்கு வந்த பின்பு இமாலய வளர்ச்சி பெற்ற கவுதம் அதானி மீது புதிய ஊழல் புகார் வந்துள்ளது. எங்கெங்கும் அதானி என்று கொண்டாடுபவர்கள் அமெரிக்கா வரை அதானியின் ஊழல் சிரிப்பாய் சிரிப்பதை பார்த்து மகிழ்ச்சி அடையலாம்.

அமெரிக்காவில் உள்ள அதானியின் கிரீன் எனர்ஜி நிறுவனம் இந்தியாவில் ஐந்து மாநிலங்களில் சூரிய மின்சக்தி ஒப்பந்தங்கள் பெறுவதற்காக ரூ. 2,239 கோடியை (265 மில்லியன் டாலர்) அதிகாரிகளுக்கு லஞ்சம் அளித்ததாக அமெரிக்க நீதித்துறை குற்றம் சாட்டியுள்ளது. அமெரிக்காவில் நியூயார்க் கிழக்கு மாவட்ட கோர்ட்டில் இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதானி மற்றும் அவரது சகோதரர் மகன் சாகர் அதானி உட்பட ஏழு பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஆந்திரா முதலமைச்சராக இருந்த ஜெகன்மோகன் ரெட்டியை அதானி நேரில் சந்தித்து ஒப்பந்தம் தொடர்பாக பேசி உள்ளார். அம்மாநில அதிகாரிகளுக்கு 1,750 கோடி லஞ்சம் கொடுத்ததாக தகவல் வெளியாகியுள்ளது. மொத்தம் 12,000 மெகாவாட் சூரிய மின்சக்தி விநியோகிப்பதற்கான திட்டங்களுக்கு இந்திய எரிசக்தி கழக நிறுவனம் (SECI) ஒப்புதல் அளித்தது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்தியாவின் மாநிலங்களில் மின்சார ஒப்பந்தம் பெறுவதற்காகத்தான் அதிகாரிகளுக்கு லஞ்சம் தரப்பட்டுள்ளது. அமெரிக்க வங்கிகள் மற்றும் முதலீட்டாளர்களிடம் இருந்து பல்லாயிரம் கோடி ரூபாயை அதானி குழுமம் திரட்டியது. இதன்போது அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்கும் விஷயம் மறைக்கப்பட்டு மோசடி செய்யப்பட்டுள்ளது என்பதே குற்றச்சாட்டு. அதானி நிறுவனத்தின் நடவடிக்கைகளை கண்காணித்த அமெரிக்க உளவுத்துறை (FBI) அதிகாரிகள் சாகர் அதானியிடமிருந்து சில ஆவணங்களை, மின்னணு கருவிகளை கைப்பற்றி உள்ளனர். இதன் அடிப்படையில் கவுதம் அதானிக்கு பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதானி நிறுவனமோ வழக்கம்போல் தவறு எதுவும் நடக்கவில்லை. சட்ட ரீதியாக சந்திப்போம் என்று விளக்கம் கொடுத்துள்ளது.

இப்படி மலையளவு ஊழல் புகார் அதானி மீது வந்தாலும் கடுகளவு நடவடிக்கை வராமல் இருப்பதற்கு யார் காரணம்? சொல்லாமல் புரியக்கூடிய விஷயம்தான். ஆஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்து நிலக்கரி சுரங்கம் காண்ட்ராக்ட் வழங்கப்பட மோடி உதவியாக இருந்தார் . தன்னுடனே அதானியையும் அழைத்துச் சென்று இந்த காண்ட்ராக்ட் கிடைக்கச் செய்தார். இந்தியாவில் ஏராளமான துறைமுகங்கள், விமான நிலையங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள் அவருக்கு கிடைக்க மோடி அரசு உதவி செய்துள்ளது. மோடி அரசின் அதானிக்கு சாதகமான கொள்கை நடைமுறைகள்தான் அதானி லாபம் குவிக்க காரணமாக இருந்துள்ளது. இதைத்தான் கூட்டுக் களவாணி முதலாளித்துவம் (Crony capitalism) என்று அழைக்கிறார்கள். இலங்கையில் மின்சார திட்ட ஒப்பந்தத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை: மஞ்சுளா



## கடவுள் தேடும் பொருள்

ஒரு பெண்ணால்
ஒரு பூவைப் பிரபஞ்சமாக
பார்க்க முடிகிறது
ஒரு ஓவியனால்
ஒரு பறவையை அலகிலா வானமாக
எண்ணிக் கொள்ள முடிகிறது
ஒரு கவிஞனால்
கடலை துளியளவு
கண்களால்
பருகிக் கொள்ள முடிகிறது
ஒரு சான்றோனால்
விண்முட்டும் மலையை மனமாக
உயர்த்திக் கொள்ள முடிகிறது
ஒரு ரசிகனால்
நல்ல கலைகளை ரசித்து
சிந்தனை சிறகு விரித்துப் பறக்கிறது
ஒரு அறிஞனால்
துன்பம் வரும்போதே
வாழ்க்கையின் அர்த்தம்
என்னவென்று புரிகிறது
ஒரு தியாகியால்
உள்ளம் உரமிட்டு வளர
உயிர் வாழ்வும்
பெரு மதியாகிறது
ஒவ்வொருவருக்குள்ளும்
தனித்துவமாய்
இருக்கும் குணங்களால்
வாழ்வு மேலும் மேலும்
அழகு பெறுகிறது
ஆனாலும் கவனியுங்கள் மனிதர்களே
மரணம் வருவதற்குள்
வாழ்வின் அர்த்தம் பொதிந்த
நமது கண்ணீருக்கும் சிரிப்புக்கும் இடையே
நாம் மனிதமாய் இருக்கிறோமா என்று சொல்வதற்கு
நமது புழக்கடைப் பக்கம்
எந்தக் கடவுளும்
புழுவின் வடிவில் கூட வருவதில்லை

அதானிக்கு தர மோடி கோட்டபய ராஜபக்சவை வலியுறுத்தினார் என்று அங்கே மின்சாரத்துறை அதிகாரியாக இருந்த பெர்டினான்டோ நாடாளுமன்ற குழுவில் கூறினார். அதானிக்கு கிடைத்த போலி (*Shell*) கம்பெனிகள் மூலம் 20,000 கோடி முதலீடு குறித்து ஹின்டன்பர்க் நிறுவனம் அம்பலப்படுத்தியது. அது குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணையை எதிர்க்கட்சிகள் கோரின. அதற்கு மோடி அரசு முன்வரவில்லை. அதன்பின்பு பங்குச்சந்தை ஒழுங்காற்று அமைப்பு (செபி) விசாரித்தது. புகார் நிரூபிக்கப்படவில்லை என்று சொல்லிவிட்டது. எந்த செபி அதானிக்கு ஆதரவாக தீர்ப்பளித்ததோ அந்த செபி அதிகாரி முறைகேடாக பங்குச்சந்தையில் முதலீடுகள் செய்ததும் அம்பலமானது.

இப்போது வெளிவந்துள்ள இந்த லஞ்சப் புகார் சாதாரண விஷயம் அல்ல. அமெரிக்காவில் வெளிநாட்டு ஊழல் நடவடிக்கைகள் தடுப்பு சட்டம் உள்ளது. இந்த அடிப்படையில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அதானி நிறுவன்த்தின் லஞ்சமளிக்கும் நடவடிக்கைகளை விசாரித்து வந்த அமெரிக்க அதிகாரிகள் கவுதம் அதானிக்கு கைது வாரண்ட் பிறப்பித்து உள்ளனர். இந்த நிலைமையில்தான் ராகுல் காந்தி இந்தியாவில் அதானி கைது செய்யப்பட மாட்டார். மோடியால் அவர் காப்பாற்றப்படுவார் என்று விமர்சனம் செய்துள்ளார். அமெரிக்க கோர்ட்டின் நடவடிக்கையை அடுத்து அதானியின் பங்குகள் இரண்டே கால் லட்சம் கோடி அளவுக்கு சரிந்துள்ளது. கென்யாவில் விமான நிலைய ஒப்பந்தம் ரத்தாகியுள்ளது. வங்கதேசத்தில் மின்சார திட்டம் என்ன ஆகும் என்று தெரியவில்லை. 265 மில்லியன் டாலர் ஒப்பந்தம் பெற்று 20 ஆண்டுகளில் இரண்டு பில்லியன் டாலர் லாபம் பெற அதானி திட்டமிட்டு இருந்தார். இந்த பிரச்சினை காரணமாக டிரம்ப்- மோடி உறவு தொடருமா? பெரும் பரபரப்பை உண்டாக்கி இருக்கும் இந்தக் குற்றச்சாட்டும் புஸ்வானம் ஆகுமா? ரஃபேல் ஜெட் விமான ஊழல் தொடங்கி இஸ்ரேலின் பெகாசஸ் ஒட்டுக் கேட்பு புகார் வரை எத்தனை புகார்கள் வந்தாலும் புனிதர் வேடமிட்டு மோடி உலா வருகிறார். எதிர்க்கட்சிகள் இவ்வளவு முறைகேடுகளையும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டியது அவசியம். மக்கள் மன்றத்திலாவது தண்டனை வரட்டும்.

•

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: **வல்லபாய்**



# ஒரு அரசியல் பிரசவமும் பிரவேசமும்

அன்பார்ந்த விஜய் ரசிகர்களுக்கு,

உங்கள் தளபதியின் அரசியல் பிரவேசம் வெகு விமரிசையாக விசாலையில் துவங்கியிருக்கிறது. மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்று விழி நிறைந்த நம்பிக்கையுடன் காத்திருக்கும் உங்களுடன் தமிழக மற்றும் பொது நலன் சார்ந்து சில நிமிடங்கள் சில விஷயங்கள் பேச வேண்டிய அவசியம் உணர்ந்து இந்த திறந்த மடல்.

திரை – சினிமா என்பதே தனியொரு மொழி. குகை ஓவியம் தொடங்கி தன்னை பிரதியெடுத்து பிரதிபலிக்கத் துடிக்கும், மனித சமூகத்தின் அந்த வேட்கையின் ஓவியம், புகைப்படம், இயங்கும் காணொளி என்கிற பரிணாமத்தின் உச்சம்தான் பேசும் சினிமா(*Talkies*). திரையிலே தெரிவதும், வருவதும், பேசுவதும், பாடுவதும், ஆடுவதும் எதிரே அமர்ந்து ரசிக்கும் பார்வையாளனின் ரத்தமும், சதையும், உயிரும், உணர்வுமாய் அந்தத் திரையுடன் ஒரு மையத்தில் குவியும்; இணையும். அரங்கத்தில் ஒருவரோ இருவரோ அல்ல; இனம் தெரியாத, முகமறியாத, அறிமுகமில்லாத ஒரு கூட்ட மக்கள் திரையில் வரும் நிகழ்வுகள், பாத்திரங்களுடன் ஒன்றி ஈர்க்கப்பட்டு ஒன்றாக மாறும் ஒரு மன ரசவாதத்தை சினிமா சாதிக்கிறது. ஆகையினால்தான் "சினிமா முற்றிலும் ஒரு சமூகச் செயல்" என்று மாற்றுத் திரை இயக்குநர் மிருனாள் சென் கூறுகிறார். இந்த அடிப்படையில்தான் உங்கள் விஜயை நீங்களாகவே நீங்கள் உணர்கிறீர்கள். அந்தந்த நாயகர்களின் ரசிகர்களும் அப்படியே உணர்கிறார்கள். பொதுச் சமூகத்தின் மேல் சினிமா என்கிற இந்தக் காட்சி ஊடகத்திற்கு இருக்கிற இந்த ஆழத்தையும், வீச்சையும் செல்வாக்கையும் அறிந்துகொண்ட சமூக விஞ்ஞானி தோழர் லெனின் ரஷ்யாவில் புரட்சி அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் முதலில் பொதுவுடமையாக்கியது சினிமாவைத்தான் என்பது உங்களுக்குப் புதிய செய்தியாக இருக்கலாம். இந்தப் புரிதலில்தான் திரையில் உங்கள் விஜயின் வீர தீர போராட்டங்களைப் போலவே சமூக அரசியலிலும் அவர் களமாடி ஒரு பொற்காலத்தைத் தருவார் என்கிற எதிர்பார்ப்புகளிலும் ஏக்கங்களிலும்தான் உங்களின் மடை திறந்த வெள்ளமாய் பங்கேற்ற மாநாட்டுப் படையெடுப்பும், கனவுகளும். நிழல் நிஜமாகுமா?

உங்கள் தளபதிக்கு எங்கிருந்து இந்த அரசியல் உத்வேகம் பீறிட்டுக் கிளம்பியது? இயல்பான அடுத்தவர் நலம் பேணும் அக்கறையா? தொண்டார்வமா? சொல்லிக் கொள்ளும்படியாக வெகு சமீபத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு கொடுத்த அன்பளிப்புகள் தவிர அப்படியான முன் நிகழ்வுகள் பங்கேற்புகள் எதுவுமில்லையே ? வேறு எப்படி? எம்.ஜி.ஆரும் என்.டி.ஆரும்தான் தன் ஆதர்சங்கள் என்று அவரே மாநாட்டில் சொல்லியிருக்கிறார். இந்தத் தமிழ் மண்ணில் எம்.ஜி.ஆரைப் பார்த்து சூடு போட்டுக் கொண்ட திரையுலகப் பிரபலங்களின் ஒரு சுவராஸ்யமான பட்டியல் இருக்கிறது என்பதை ஒரு முறை மனதிலே நிறுத்திக் கொள்ளுங்கள். ஆனால் இந்தக் காலத் தேர்வுக்கு ரஜினி ரசிகர்கள் இலவு காத்த கிளியாகிப் போனதுதான் முக்கியக் காரணம் என்பது உங்களுக்கும் புரியும் என்று நம்புகிறேன். இது ஒரு புறமிருக்க மக்கள் திலகமாக, புரட்சி நடிகராக மெருகேறி புரட்சித் தலைவராக அரசியலுக்குள் வெடித்துக் கிளம்பிய எம்.ஜி. ஆரின் பலம் எதுவென்று பார்ப்பது உங்களின் அரசியல் ஆசைகளுக்குப் பயனுள்ளதாய் இருக்குமென நம்புகிறேன்.

எம்.ஜி.ஆரின் திரையுலக நாயக பிம்பம்தான் அவரது அரசியல் வெற்றிக்குக் காரணம் என்பதான மேலெழுந்தவாறியான ஒரு துவக்கப் புரிதல்தான் அநேகரிடம் பரவலாக இருக்கிறது. ஆனால் உண்மை என்னவோ அது மாத்திரமல்ல. நாயக பிம்பத்திற்கு ஒப்பனைச் சாதனங்கள் அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைக்காத நிலவரத்தில் வேறு வழியில்லாமல் அரசியலுக்கு வந்தவரல்ல அவர். மந்திரிகுமாரி துவங்கி மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனாக நிறைவு செய்த நீண்ட திரைப் பயணத்தின் ஊடாகவே, சம காலத்திலேயே அரசியலிலும் பங்கேற்றவர் அவர். சுதந்திரப் போராட்டத்தை வழி நடத்திய காங்கிரஸ் வலுவாக இருந்த போதே அதிலிருந்து விலகி சமூகநீதியை முன்னிறுத்தி அரசியல் பிரவேசம் செய்த திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற மக்கள் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். காலப்போக்கில் காங்கிரஸ் பெருந்தனக்காரர்களுக்கான இயக்கமாக உருமாறும்போது அந்த அரசியலை மறுத்து, தமிழ் மண்ணின் பண்பாட்டுத் தளத்தில் தன் வேர்களை நங்கூரமிட்ட ஒரு மக்கள் கலாச்சார இயக்கத்துடன் தன்னை அடையாளப் படுத்திக் கொள்கிற அரசியல் பிரஞ்ஞை அவருக்கிருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் அறிஞர் அண்ணாவால் தமிழகத்தின் சாமானியர்களின் பாதுகாப்பு அரணாகக் கட்டமைக்கப்பட்டது. அந்த இயக்கத்தின் காவல் நாயகனாகத் திரையில் தன்னை நிலை நிறுத்திக்கொண்ட அந்த அரசியல் புரிதலை முழு மூச்சுடன், ஒரு அர்ப்பணிப்புடன் வலிந்து வடிவமைத்தவர். திரையில் அணியும் ஆடைகளிலிருந்து, பேசும் வசனங்கள் தொட்டு, கவிஞர்களின் பாடல் வரிகளுட்பட படம் முழுதிலும் தன் நாயகப் பாத்திரத்தை கழகத்தின் தூதனாக, தொண்டனாக, சராசரிப் பிரதிநிதியாக, தமிழகத்தின் அடி மட்ட உழைக்கும் மக்களுக்கு கொண்டு சேர்த்தவர். இந்த முன்மாதிரி தோற்றப் பொலிவின் காரணமாகவே மக்கள் திலகமாகப் பரிணமித்து அங்கீகரிக்கப்பட்டவர். '67ல் அரியணையேறிய திராவிட இயக்கம் - இரு கழகங்களாய்ப் பிரிந்தாலும் - இன்றளவும் தொடருகிற உண்மையின் பின்னணியில் கழகத்தால் எம்.ஜி.ஆரா இல்லை எம்.ஜி.ஆரால் கழகமா என்ற கேள்விக்கு கோழி முதலா அல்லது முட்டையா என்பதற்கு என்ன பதிலோ அப்படித்தான்.

எம்.ஜி.ஆர் என்கிற நாயகப் பிம்பத்தின் வெற்றியின் பின் மேலும் முக்கிய இரண்டு காரணிகளுண்டு. முற்றிலும் முழுக்கவும் எவ்விதத்திலும் எதிர்மறையற்ற நல்லவன், நன்மை செய்கிறவன், அநீதிக்கெதிராக நீதியின் பக்கம் நிற்பவன், மது மற்றும் புகை மறுக்கும் நற்பண்பாளன் என்பது தவிர இப்படி நிஜத்தில் தன் ரசிகர்கள் எதையெல்லாம் பேண முடியாமல் போராடுகிறார்களோ அதை நிழலில் அப்படியே மாதிரியாக ஒரு வலுவான தீவிரப் பிரஞ்ஞையுடன் வடிவமைத்தவர்; அப்படியே பாமரர்கள் மத்தியில் ஒரு படிமமாகவும் நிலைகொண்டவர். இந்தக் காட்சி ஊடகத்தின் வீச்சையும், வேகத்தையும், வலிமையையும் மிக ஆழமாகப் புரிந்துகொண்டு நல்ல நாயக வேஷம் மாத்திரம் பூண்ட நடிகர். நல்லவர் மாத்திரமேயல்ல; பொது நன்மைக்காய் நீதிக்காய் தன்னந்தனியே முஷ்டியையும் உயர்த்தும் அசகாய சூரரும் கூட. பொதுப் பிரச்சினைகளில் கண்டு கொள்ளாமல் ஒதுங்கச் சொல்லும் ஒரு நபும்சக சமூகத்தில் "முஷ்டியை உபயோகித்த முதல் நாயகன்" என்று பேராசிரியர் சிவத்தம்பி கூறுகிறார். நடிப்புதானேயென்று எள்ளளவும் எதிர்மறை வேஷமெதுவும் ஏற்காதவர்; வேறு எப்படியும் வேடமிடாதவர். அவரது முழு திரையுலகப் பயணத்திலும் இதை ஒரு புரிதலுடன் வலிந்து உறுதியாய்க் கடைப்பிடித்தவர். ஆகவே அவர் ரசிகர்களுக்கு, அவர் நிஜத்திலும் அரசியலிலும் நல்லவரே; அவர் மாத்திரம்தான் நல்லவர்; அவர் ஒருவரே மக்களுக்கு நன்மை செய்கிறவர். இது ஒரு மாய வலைதான் என்றாலும் அந்த மயக்கம் இன்றளவும் தொடர்கிறது.

இரண்டாவது, ஒரு ஆணாதிக்கச் சமூகத்தில் தாய்மையை உயர்த்திப் பிடித்ததின் வழி அவர் முன்னெடுத்த பெண்ணிய முன்னிலை அவரை பெண்களின் காவலனாக, பெண்ணியத்தின் பிதாமகனாக, பெண்களின் ஆதர்ச புருஷனாக உயர்த்திய ஒரு பரிணாமம் தமிழ் மண்ணில் நிலை கொண்டது வரலாறு. தவிரவும் பாலுணர்வுப் புரிதல் இலை மறை காய் மறையாக மிகப் பெரிய பௌத்திரமாகப் பாவிக்கப் படுகிற - காதலுக்கும் வீரத்திற்கும் அகமும் புறமும் கண்ட - இந்தத் தமிழ் மண்ணில் அந்தப் பாலுணர்வுக்கு அவருடைய பாடல் வழிக் காதல் மூலம் தீனி போட்ட ஆகப் பெரிய வணிக சாமர்த்தியர். அம்மையார் அபிநய சரஸ்வதி சரோஜாதேவி அவர்கள் குறித்த தயாரிப்பாளர் ஜி.என்.வேலுமணி அவர்களின் பேட்டியையும், மிகக் கூர்மையான விமர்சனப் படைப்பான ஜெயகாந்தனின் "சினிமாவுக்குப் போன சித்தாளு"வையும் இது வரையிலும் படிக்காதவர்கள் தேடிப் படியுங்கள். தமிழ் சினிமா தனக்குத் தந்த இத்தனை பெரிய, வலிய கவர்ச்சிக் கவசத்துடன் வலம் வந்ததால்தான், ஒரு சொந்த நிர்ப்பந்தத்தில் - கழகம் மற்றும் கலைஞரின் சகாப்தத்தை பலஹீனமாக்கத் தொடுக்கப்பட்ட டெல்லி அரசியல் சதுரங்கத்தில் முக்கியப் பாத்திரமேற்று - முழு நேர அரசியலில் தனி இயக்கம் கண்டு அதில் அசைக்க முடியாத வெற்றியும் பெற்றார்.

விஜயின் பின் அணி வகுக்கும் அருமை இளைஞர்கள் மற்றும் தோழியரே மேற்சொன்ன அம்சங்களில் எது ஒன்றாகிலும் உங்கள் தளபதிக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எளிமை, தியாகம், சீலம் இவற்றையெல்லாம் காட்சிப் பொருளாக்கிவிட்டு மாயையிலும், கவர்ச்சியிலும், பிரதிபலனுக்காகவும் மாத்திரம் தேர்ந்தெடுத்து அனுப்புகிற அரசியல்வாதியை மாத்திரம் வெட்கமே இல்லாமல் லஞ்ச ஊழல் முத்திரை குத்துகிற கபடம் வரையிலும், உறங்குவது போல் நடிக்கும் இந்தக் குருட்டு சமூகத்தில் உங்களுக்கும் உங்கள் தளபதிக்கும் லஞ்ச ஊழல் பற்றிப் பேசவும் அதற்கெதிராக வெகுண்டெழவும் முகாந்திரமோ உரிமையோ இருக்கிறதென்று உங்களால் உறுதியாய்ச் சொல்ல முடியுமா?**

பொருந்துமா என்பதை உங்கள் சிந்தனைக்கே விடுகிறேன். விஜய் மாத்திரமல்ல, எம்.ஜி.ஆருக்குப் பிறகு அரசியலுக்குப் படையெடுத்துவந்த தமிழ் நட்சத்திரங்கள் எவருக்கும் இந்த அடையாளங்கள் எதுவும் கிடையாது. எவரும் சோபிக்கவும் இல்லை. நடிகர் திலகமாய் இணையாகப் போட்டியாகப் பயணித்த சிவாஜி அவர்கள் கழகத்திலிருந்து காங்கிரஸில் இணைந்த அந்த நேரெதிர் பயணத்தில் இளைத்து, இறுதியில் அவரும் தனி இயக்கம் கண்டு களைத்து ஒதுங்கினார். சற்று ஏறி வந்த விஜயகாந்தின் குடும்ப அரசியல் பேரங்கள், பொதுவெளியில் கடைப்பிடிக்க வேண்டிய குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளும் அம்பலமான போது அவரும் வலுவிழந்தார்.

அருமையானவர்களே இந்த முதலாளித்துவ ஜனநாயக அரசியல் அனைவருக்குமானது; அதில் ஐய்யமேயில்லை. எவரும் அதில் இடைபடலாம். விஜய் திரையில் காவலனாக வலம் வரலாம். அரசியலில் உண்மையிலேயே அவர் காவலரா அல்லது சேவகரா என்கிற அங்கீகாரம் மக்களிடமிருந்து வர வேண்டும். முதல் துவக்க மாநாட்டிலேயே அது கிடைக்கப் பெற்று விட்டதாகக் கருதி அவர் உரையாற்றிய தொனி, அந்த மோஸ்தர் கனிந்த நாகரீகமாகத் தெரியவில்லையே? அவர் உரையெங்கும் ஒரு எகத்தாளம்தான் தென்பட்டது. அவருடைய அதீத வார்த்தைப் பிரயோகங்கள் - அது எழுதித் தரப்பட்டதானாலும், அவருடையதேயானாலும் - அரசியல் புரிதலின் பூஜ்யத்தையே உணர்த்தியது. ஆகப் பெரிய எம்.ஜி.ஆரே, சந்தித்த முதல் பொதுத் தேர்தலில் கலைஞருக்குப் பதில் தருகிற போது தனக்கு அரசியல் - ஊழல் செய்யும் அரசியல் - தெரியாதென்றுதான் ஒரு பணிவான நகையுடன் தன்னை வெளிக்காட்டினார்.

நாற்பதுகளின் இறுதியில் இயக்கத்தை ஆரம்பித்து அறுபதுகளின் இறுதியில் அரியணையேறிய அறிஞர் அண்ணாவே சட்ட மன்றத்தில் "உங்கள் நாட்கள் எண்ணப்படுகின்றன" என்று எச்சரித்த காங்கிரஸ் செங்கல்வராயனிடம் "நாங்கள் அளந்துதான் நடக்கிறோம்" என்ற தன் அரசியல் முதிர்வை வெளிப்படுத்தினார். புள்ளிவிவரப் புலிகள், அரசியல் விஞ்ஞானிகள், பாயசமாகிய ஃபாசிஸம், உழைப்பின் மேன்மையைப் பேசும் மீன் கதையை மலினமாக்கியது என்ற இந்தப் பட்டியல் தொடர்கின்றது. உங்கள் தளபதியின் இந்த அலட்சிய ஆக்ரோஷ முழக்கங்களை நீங்கள் ரசிக்கலாம். இந்த சுயமரியாதைப் பூமி அதை எப்படி எடைபோடுகிறது என்பதைக் காலம்தான் சொல்லும்.

தனக்குரிய ஆகப் பெரிய பலமாக அவரே அடையாளம் காட்டிய சந்தையின் உச்சத்திலிருந்து அதைத் துறந்து அரசியலுக்கு வந்திருப்பதான அவருடைய தியாக சீலம்? அவர் ஊதியம் உச்சத்திலிருக்கலாம் - ஆனால் இன்னும் எத்தனை நாட்கள்? அசகாய வீர சூர நாயகர்களைப் புறம்தள்ளி வாழையும், மாமன்னனும், பரியேறும் பெருமாளும் தமிழ்த் திரையில் தழைக்கின்ற நாட்கள் உருவாகியிருக்கின்றன. கூழாங்கல்லும், கொட்டுக் காளியும் என ஒரு சர்வதேச மாற்றுப் பயணத்தில் தமிழ்த் திரை காலெடியெடுத்து வைக்கிறபோது இளம் ஃபார்முலா நாயகர்கள் சலித்துப் போகிறபோது, மூன்றே நாட்களில் கருப்பில் கட்டணம் வசூலித்து சந்தையைத் தக்க வைத்துக் கொள்கிற நிர்ப்பந்தத்தில், மாற்றுத் திரையும் (OTT) மற்ற தொழில்நுட்ப வளர்ச்சிகளின் அதிரடித் தாக்கத்தில், அதற்குள்ளாக அப்பா வேஷத்தை ஜீரணிக்க முடியாத நெருக்கடியில் உங்கள் விஜய் அரசியலுக்குள் பிரவேசித்திருக்கிறார்; அதுவும் முன்னோடித் தளபதி ரஜினி அஞ்சி ஒதுங்கிக் கொண்டபின், உடனடிப் போட்டிகள் ஒருவரும் இல்லை என்பது உறுதியான பின் உள்ளே நுழைந்திருக்கிறார். விஜய் வராமல் தமிழ் சமூகம் தத்தளிப்பதாக ஒரு பெரிய கூக்குரலோ கோரிக்கையோ எதுவுமில்லையே? அவராகத்தான் வலிய வருகிறார்; நீங்களாகத்தான் சிலிர்த்துப் புறப்பட்டிருக்கிறீர்கள். வாழ்த்துக்கள்.

சமூக சேவைதான் மூச்சென்றால் மூன்று மாதங்களுக்கும் மேலாகக் களம் கண்டு கொண்டிருந்த ஸாம்சங் தொழிலாளிகள் குறித்து வாயே திறக்கவில்லையே? ஏன்? அரசியலுக்கு இன்றுதான் வந்தார், நல்லது. ஆனால் இது வரையிலும் செய்த சமூகப் பணியென்றாவது எதுவும் உண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திமுகவின் குடும்ப அரசியல்? தந்தை சந்திரசேகர் இல்லாத இளம் நாயகன் விஜயை நீங்கள் கனவு கூட கண்டிருப்பீர்களா? இவர் கூடவே திரைக்கு வந்த விஜயகுமார் புதல்வரின் நிலையை இவரோடு ஒப்பிடுவோமா? நடிகர் மகன் நடிகராக, மருத்துவர் மகன் மருத்துவராக, வக்கீல் குடும்பத்தில் ஒருவ்ராவது கருப்பு கவுன் போட, ஆடிட்டர் மகன் அப்படியே தொடர, ஆசிரியர் குடும்பத்து வம்சாவளியின் பெருமை காக்க, ராணுவச் சேவையில் தன் வாரிசும் தொடர்வதை பீற்றிக் கொள்ள, தொழில் வணிக சாம்ராஜ்யம் அப்படியே தழைக்க, தொடர - அரசியல்வாதி மகன் மாத்திரம் ஆடு மேய்க்கப் போக வேண்டுமா?எனக்கு இந்த ரகசியம் புரிவதேயில்லை? என்னவோ இந்த தேசத்தின் எண்ணற்ற இளைஞர்கள் தீராத பொதுநலச் சேவையில் துடித்தெழுந்து பங்கேற்க விழைவது போலவும் அவர்கள் எல்லோரையும் வாரிசு அரசியல் தடை செய்வது போலவும் ஒரு பிம்பம் இங்கே கட்டமைக்கப்படுகிறது. உங்கள் தளபதி மேடையில் உட்கார வைத்திருந்த நாலு பேரில் யார் யாருக்கு விஜய் குடும்ப பரிச்சயம் என்பது வெளிச்சமாகியிருக்க நீங்கள் விழித்துக் கொள்வீர்களென நம்புகிறேன்.

லஞ்சம் - ஊழல் - எல்லா இந்தியக் குடி மகனும் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று புலம்புகின்ற இரண்டு வார்த்தைகள். தன் கண்ணிலே இருக்கிற உத்திரத்தை சட்டை செய்யாமலே அடுத்தவன் கண்களில் இருக்கிற தூசியைக் குற்றம் சாட்டுகிற ஒரு குருட்டு தேசத்தின் குடிகள் நாம். உறுதியாய் ஊழலை ஒழிக்கப் புறப்பட்டால் உங்களில் ஒருவர் கூட தளபதியின் முதல் நாள் காட்சிக்குப் போக முடியாது என்று தெரிந்திருந்தும், தன் பாதிச் சம்பளத்தை கருப்பில் கோடிகளாக வாங்கும் அவர் ஊழலை ஒழிக்கப் போவதாகக் கூறினால் உற்சாகத்தில் குதிக்கும் உங்களையும் என்னவென்று சொல்வது? மக்களை மிகப் பெரிய ஏமாளிகள் என்று எடையிட்டு எந்த அரசியல்வாதியும் ஊழல் பற்றிப் பேசுவதில்லை; மாறாக அது இந்தக் கலியுகம் முடிந்து துவங்கும் கிருத யுகத்திலும் தொடர்ந்து விடுமோ என்கிற அச்சத்தில் இதை அவ்வப்பொழுது நாம் ஒருவருக்கொருவர் நினைவு படுத்திக் கொள்கிறோம்.

சற்றே சிந்தியுங்கள். மீட்டருக்கு மேல் பத்து ருபாய் கேட்கும் ஆட்டோ ஓட்டுநரிலிருந்து, காசு வாங்காமல் கோப்பை நகர்த்த மறுக்கும் - லஞ்சத்தைப் பிறப்புரிமையாகக் கருதும் - அரசு ஊழியரிலிருந்து, பொதுச் சொத்தைப் பேணுவது குறித்த எவ்வித அக்கறையுமின்றி அதை சூறையாடுவதும் அலட்சியப்படுத்துவதுமான சமூகத்தின் பொதுப்புத்தியிலிருந்து, சக மனிதனை பணத்தை மாத்திரம் மையமாகக் கொண்டு மதிப்பீடு செய்யும் உடமை சமூகத்தில் அதீத லாபம் மாத்திரம் குறியாகக் கொண்டு இயங்கும் சிறு, குறு, பெரு வணிகர்கள் மற்றும் பெரு வணிகக் குழும நிறுவனங்களிலிருந்து, வணிகமாகிப் போன கல்வி மற்றும் பொதுச் சுகாதாரம் பற்றி எவ்விதச் சுரணையும் இல்லாமல் மற்றவர் வரிப்பணத்தில் உருவாகும் அரசு கல்வி நிறுவனங்களில் படித்துவிட்டு பட்டம் பெற்ற பின் அதை அப்படியே மறந்து மருத்துவராகும் இளைய தலைமுறை வரை -

எளிமை, தியாகம், சீலம் இவற்றையெல்லாம் காட்சிப் பொருளாக்கிவிட்டு மாயையிலும், கவர்ச்சியிலும், பிரதிபலனுக்காகவும் மாத்திரம் தேர்ந்தெடுத்து அனுப்புகிற அரசியல்வாதியை மாத்திரம் வெட்கமே இல்லாமல் லஞ்ச ஊழல் முத்திரை குத்துகிற கடடம் வரையிலும், உறங்குவது போல் நடிக்கும் இந்தக் குருட்டு சமூகத்தில் உங்களுக்கும் உங்கள் தளபதிக்கும் லஞ்ச ஊழல் பற்றிப் பேசவும் அதற்கெதிராக வெகுண்டெழவும் முகாந்திரமோ உரிமையோ இருக்கிறதென்று உங்களால் உறுதியாய்ச் சொல்ல முடியுமா? கருப்பட்டிப் பானைக்குள் கை விட்டவன் புறங்கையை நக்கினால் அது இயல்பு. இன்று இந்த தேசத்தின் துரதிர்ஷ்டம் - பானைகளே முழுங்கப் படுகின்றன என்பதுதான் உண்மை.

காந்தி, காந்தி என்றொரு மானுடன், - சாம்பலிலும் புழுதியிலும் நீடு துயிலுற்றிருந்த ஜனக் கூட்டத்தைத் தட்டியெழுப்பி, அந்நிய நுகம் முறித்த - அந்த அரை நிர்வாணி சொன்னது நினைவிருக்கிறதா? “எது மாற வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதுவாக முதலில் நீங்கள் மாறுங்கள்” *(Be the change you want to be)* என்றாரே? எழுபத்தைந்து வருடங்களில் எங்கே நிற்கிறோம்? எங்கே போகிறோம்? “தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்” என்று மக்கள் கவிஞன் பாடியிருக்கிறான். பெரியாரைச் சொல்லாமல், பேசாமல் எந்தக் கொம்பனாலும் இந்த மண்ணில் அரசியல் செய்ய முடியாது. அவரை சொல்லிவிட்டு அவசர அவசரமாய் ஆத்திக அரிதாரத்திற்கு அப்படிக் கல் விடுவது ஏன்? யாரைக் குளிப்பாட்ட? சுயமரியாதையோடு கூடிய ஆத்திகத்திற்கு தமிழ்ச் சமூகம் என்றோ தயாராகிவிட்டது. உங்கள் தளபதியிடம் யாரும் அதற்கு உத்தரவாதம் கோரவில்லை.

சித்தாந்த எதிரி ஒருவன்; அரசியல் எதிரி மற்றொருவன். அப்படியானால் உங்கள் விஜயின் தலைமையில் நீங்கள் செய்யப் போவது சித்தாந்தமற்ற பதவி அரசியல் மாத்திரம்தானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்த எதிரியை பகிரங்கமாக அடையாளம் காட்டாமல் உங்கள் சித்தாந்தத்தை நிறுவுவது எப்படி? அந்தச் சித்தாந்த எதிரி உங்களுக்கு எதிராக அரசியல் செய்தால் கொதித்து எழுவீர்களா/ இல்லை குனிந்து மண்டியிடப் போகிறீர்களா? எந்த அவசியத்தில் ஃபாசிஸம் எனும் கொடிய விஷத்தை நீர்த்துப் பாயாசமாக்கினார் ?

ஈரமுள்ள மனசாட்சியோடு நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள் பிரியமானவர்களே -

பில்கிஸ் பானுவிடமும், நிர்வாணமாக்கப்பட்ட நம் அருமை மணிப்பூர் சகோதரியரிடமும் உங்கள் தளபதியின் வார்த்தைகளுக்காய் மன்னிப்பு கோருவீர்களா? இல்லை பாயாசம் கேட்பீர்களா? எல்லாவற்றுக்கும் மேலாக அவரே சொல்லியபடி நட்சத்திர உச்சத்திலிருந்து உதிர வேண்டிய அவசியம் எந்த நிர்ப்பந்தத்தில், யாரிடமிருந்து வந்த அழுத்தத்தில் நேர்ந்தது என்பது ஊரறிந்த இரகசியம். அது உங்களில் அநேகருக்கும் கூட தெரிந்திருக்கும். ஆனால் இன்றைக்கு உரக்க உயர்த்திப் பிடித்திருக்கிற "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" கோஷத்தை அது திரை மறைவில் விழுங்கும் போது, அந்தச் சாயம் வெளுக்கும் போது, தளபதியின் என் அன்பு ரசிகர்களே உங்கள் முகத்தை நீங்கள் எங்கே வைத்துக் கொள்வீர்கள்? தமிழ் மண்ணின் திராவிட மாற்று அரசியலை எப்படியாகிலும் புரட்டிப் போட தமிழ் தேசிய வார்த்தை வனத்தில் சில சீமான்களை சீண்டி விட்டார்கள். ரஜினி எனும் ஒரு தோற்றப் பிழை கழுவிய மீனில் நழுவிய மீனாய் கழட்டிக் கொண்ட பின், இரட்டை இலை சின்னத்தை ஒரு சூதாட்டத்திலேயே நிறுத்திக் கொண்ட பின், உங்கள் தளபதியைச் சூ காட்டி இந்த தமிழ் மண்ணின் அரசியலெனும் குழம்(ப்)பிய குட்டையிலே தாமரையை மலரச் செய்யும் ஆர்.எஸ்.எஸ் சித்பவன சித்து விளையாட்டுகளுக்குப் பலியாகத் தயாராயிருக்கிறீர்களா எனதருமை ரசிகப் பெருமக்களே?

ஊடகத்தின் சில மதிப்புக்குரிய அரசியல் விமர்சகர்கள்/வித்தகர்கள் உங்களையும் தளபதியையும் உடன்பட்டு உயர்த்திப் பிடிக்கிற போது, துக்ளக் ரமேஷும், ரவீந்திரன் துரைசாமியும் உங்களுக்கு சவால் விட்டிருப்பது கூட நாக்பூர் இயக்கும் நாடகத்தின் ஒரு அங்கமாகத்தான் தெரிகிறது. எது எப்படியானாலும் இந்த தமிழ் மண்ணின் 2026 தேர்தல் நாடகத்தில் சுவராஸ்யங்களுக்கும், ஹாஸ்யங்களுக்கும் பஞ்சமே இருக்காது என்கிற எதிர்பார்ப்புகளுடன், இவ்வளவு பெரிய ரசிகர் பட்டாளமாகிய உங்களை ஒரு ஆக்க பூர்வ அரசியலில் இனம் காண விழையும்

-ஆர்வத்துடனும் வாழ்த்துக்களுடனும்,

உங்கள் நண்பனாக

•

கட்டுரையாளர்: மொழிபெயர்ப்பாளர்

கவிதை: செ . புனிதஜோதி



# மனம்

வீசியச் சொற்களையும்
கடந்தக் காலத்தையும்
எத்தனை முறை
திரும்பிப் பார்ப்பது...

முனையொடித்த கிளை
வளரவில்லையா என்ன?

சொற்களைத் தூர ஒதுக்கிவிட்டு
நிதர்சனத்திற்குள் தலையை நுழைத்துவிட்டால்
பாவம் தப்பித்துவிடும் மனம்...

எத்தனைமுறைதான்
அதனை குனிய வைத்து
பச்சைகுதிரை விளையாட்டை விளையாடுவது...

அது உடைந்துவிட்டால்
எதுவும் இல்லாமல் போய்விடும்
நான், நீ ,நாம் உட்பட...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: **ஏகன்**

# வைரலில் குலுங்கும் சமூகம்

நமது அன்றாட வாழ்வில் சமூக ஊடகங்கள் எந்த அளவுக்கு ஊடுருவியிருக்கின்றன என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. குறிப்பாக, சமீப காலங்களில் தமிழ்கூறும் நல்லுலகில் கண்ணுக்குத் தெரியாமல் பரவும் நோய்த் தொற்று போல, சமூக ஊடகங்களின் ஆதிக்கமும் அத்துமீறலும் எந்த அளவுக்கு வாழ்வியல் சிக்கல்களை ஏற்படுத்தி வருகின்றன என்பதும் திறன்பேசி - அதாவது சமூக ஊடகங்களைப் பார்க்க வல்ல ஸ்மார்ட் ஃபோன் - வைத்திருக்கும் அனைவரும் அறிவார்கள்.

திருச்செந்தூரில் கோவில் யானை மிதித்து பாகன் உள்பட இருவர் உயிரிழந்ததாக செய்தி வருகிறது. அடுத்த ஓரிரு நாளில், பிரபலமான ஒரு நடிகர், எப்போதோ அந்தக் கோவிலுக்குச் சென்ற போது, யானையின் துதிக்கைக்கு நெருக்கமாக இருக்கும் புகைப்படம், சமூக ஊடகத்தில் பகிரப்படுகிறது. அந்தச் செய்தியைக் குறிப்பிட்டு, அதன் தொடர்பில் இப்போது இந்தப் படம் வைரலாகி வருவதாக அச்சு ஊடகம் பதிவு செய்கிறது. இதை எப்படி தமிழ் சமூகம் புரிந்துகொள்ளும் அல்லது புரிந்துகொள்ள வேண்டும்...? புரியவில்லை.

ஒரு பிரபல நடிகர் மணவிலக்கு செய்கிறார். அதை வெளிப்படையாக அறிவித்துவிட்டு, தங்கள் தனியுரிமையையும் உணர்வையும் மதிக்குமாறு வேண்டுகோளும் விடுக்கிறார். சமூக ஊடகம் விட்டபாடில்லை. அந்தப் பிரிவுக்கு காரணம் இன்னொரு நடிகர் என்று தகுந்த ஆதாரம் இல்லாமல் குற்றம்சாட்டி பரபரப்பாக்குகிறது. உடன், அவருக்கு ஆதரவாகவும் எதிராகவும் சூடான விவாதங்கள் கிளம்புகின்றன. இதுபோல் இன்னொரு விவகாரம் கிடைத்தவுடன் அதைப் பற்றிக்கொள்கிறார்கள்.

ஓர் ஆவணப்பட வெளியீட்டுக்கு முன்பு நடந்த பரபரப்பான குற்றச்சாட்டுகள், உச்ச இசையமைப்பாளரின் எதிர்பார மணமுறிவு வரை பலவாறாக சமூக ஊடகப் பரபரப்பு தொடர்கிறது. நாளை என்பது வழக்கொழிந்த சொல். அடுத்து என்பதே இங்கே புழக்கம். அடுத்து என்பது, அடுத்த நிமிடமாகவோ அல்லது நொடியாகவோ இருக்கலாம்.

பிரபலங்களுக்கு, சமூக ஊடகங்களில் ஆதரவாளர்கள் தன்னால் பெருகுவது "ஆர்கானிக்" அல்லது சொந்த பலம் எனக் கருதப்படுகிறது. பெருக்கப்படுவது வேறு கணக்கு. ஒரு படத்தின் அசையும் சுவரொட்டி - அதாவது "மூவிங் போஸ்டர்" வெளிவந்த சில மணி நேரங்களில், நீங்கள் கற்பனை செய்ய முடியாத எண்ணிக்கையைத் தொட்டிருக்கும். மறுநாள் கடந்தால், அது வைரலாகி 1 மில்லியன், அதாவது பத்து லட்சத்தைக் கடந்துவிட்டது என்று அச்சு ஊடகத்தில் பதிவாகும். இந்த "அற்புதம்" எப்படி நிகழ்கிறது என்ற கேள்விக்கு யாரும் பதில் சொல்ல முடியாது.

சமூக ஊடக செல்வாக்கை அதிரடியாக ஏற்றுவதற்கென்றே தொழல்ரீதியாக செயல்படும் நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றைத்தான் பெரும்பாலான பிரபலங்கள் நாடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. பல பிரபலங்களுக்கு அவர்களது சமூக ஊடக கணக்குகளை நிர்வகிப்பதற்கென்றே "ஏஜென்சி"கள் செயல்படுகின்றன. பிரபலம் தொடர்பான எந்த மாதிரி புகைப்படங்களை, வீடியோக்களை எப்போது, எப்படிப் பகிர வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்கிறார்கள் என்பதெல்லாம் பரவலாக அறியப்பட்ட செய்திகளே.

சமூக ஊடகங்களில் எவ்வாறு பதிவிட்டால் அனுதாபம் திரளும் அல்லது ஆதரவு பெருகும் என்று கணித்து, தங்களை "கொடையாளிகளாக" வளர்த்துக்கொள்ளும் சாதுரியக்காரர்களும் உண்டு. என்ன, ஏது என்று எதுவும் புரியாமல் "அந்த மனசுதான் சார்...." என்று பின்னூட்டம் போடும் கூட்டமும் பெருகி வருகிறது.

பிரபலங்கள் சார்ந்த பதிவுகளில், அவர்களது தனிவாழ்க்கை பற்றியோ அல்லது சாதியப் பின்புலத்தை குறிக்கும் வகையிலோ தகாத வார்த்தைகளால் இழிவு படுத்துவது இன்னொரு முக்கியமான போக்கு. அரசியல் பதிவுகள் தொடர்பான பின்னூட்டங்களில், காழ்ப்பும் வன்மும் கற்கால மொழியில் வெளிப்படும்.

இதையெல்லாம்விட "ஸ்பெஷல் ஐட்டம்" ஒன்று உண்டு.

சீரியஸாக எதிர்வினை புரியும் பாவனையுடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரபலங்களை அல்லது பதிவு தொடர்பான தவறான தகவல்களை, அன்றி அடிப்படையற்ற மிகையான தகவல்களை, நல்ல தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பின்னூட்டம் செய்யும் மெய்நிகர் தந்திரக்காரர்களின் கூட்டமே அது. இவர்களில், சொந்த அடையாளத்துடன் வெளிப்படுபவர்கள் மிகக் குறைவு. இவர்களின் பின்னூட்டங்களை தொடர்ந்து வாசிக்கும் சமூக ஊடக "பாமரர்கள்" நிரந்தரமாக தவறாக வழிநடத்தப்படவும் அதன்வழி, அப்படியான தவறான செய்திகளை அவர்களே மேலும் பரப்பும் அபாயமும் அதிகரித்து வருகிறது.

சினிமா நட்சத்திரங்களின் திரை மற்றும் தனி வாழ்க்கை, 2026 தேர்தலை நோக்கிய அரசியல் கட்சிகளின் அசைவுகள் அல்லது பாவனைகள், திராவிடம் - தமிழ் தேசியம் சார்ந்த குழப்பங்கள், திராவிடத்துக்கு எதிரான மிகையுணர்வுடன் பொங்கும் வெறுப்புகள் ஆகியவை இன்றைய தமிழ் பரப்பில் இயங்கும் சமூக ஊடகங்களில் மேலோங்கியிருப்பதாகச் சொல்லலாம். (இது ஆய்வின் பாற்பட்டதல்ல.)

முதல் நாள், முதல் காட்சி பார்த்துவிட்டு திரையரங்கிலிருந்து வெளியேறும் பார்வையாளர்களின் எதிர்மறை கருத்துகளை உடனுக்குடன் யூ டியூப் போன்ற சமூக ஊடகத் தளங்களில் வெளியிட்டதால், சமீபத்தில் வெளியான இந்தியன்-2, வேட்டையன் மற்றும் கங்குவா ஆகிய படங்களின் வசூல் பாதிக்கப்பட்டதாகவும், அது இனி கூடாது என்றும் தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் கோரியிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அப்படியெனில், குப்பை படங்களை, நடிகர்களின் தீவிர ரசிகர்கள் "வேற லெவல்" என்று சொல்வதை வெளியிட்டு சமூக ஊடகங்கள் "பில்ட்-அப்" செய்யும்போது, அதனால் கிடைக்கும் பொருளாதார அனுகூலங்களை தயாரிப்பாளர்கள் சப்தமின்றி அனுபவிக்கிறார்களே.... அது எந்தக் கணக்கில் சேரும்?

உலகெங்கிலும் முகநூலில் மட்டும் 290 கோடி பேர் தீவிரமாக இயங்குகிறார்கள் என்கிறது புள்ளிவிரம். யூ டியூப்பில் 280 கோடி பேரும் வாட்ஸ்அப் தளத்தில் 240 கோடி பேரும் இன்ஸ்டாகிராமில் 200 கோடி பேரும் டிக்டாக் தளத்தில் 170 கோடி பேரும் இயங்குகிறார்கள் என்று கணக்கிடப்படுகிறது. நாளுக்கு நாள் இந்த எண்ணிக்கை ஏறுமுகத்தில் செல்கிறது. உலகின் எந்த நாட்டில், எந்தப் பகுதியில் சமூக ஊடகப் பழக்கம் அதிவேகமாக உயர்கிறது, மையமான பேசுபொருள்கள் எவை என்பதெல்லாம் தனி ஆய்வுக்குட்டது.

பிரபல ஹாலிவுட் நடிகர் லியானர்டோ டி காப்ரியோ, நமது எதிர்காலத்தை கவலைக்குள்ளாக்கியிருக்கும், பருவநிலை மாற்றங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சமூக ஊடகப் பதிவுகளை பயன்படுத்துகிறார். பிரபல அமெரிக்க பாப் இசைப் பாடகி டெய்லர் ஸ்விட் வாக்காளர்களின் ஜனநாயகக் கடமையை நினைவூட்டுவதற்கு பயன்படுத்துகிறார். மனித உரிமை அத்துமீறல்கள் மீதான கவன ஈர்ப்பு வரை, பல்வேறு பிரபலங்கள் சமூக ஊடகங்களை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துகிறார்கள். இங்கேயும் அப்படியான பிரபலங்களை நாமறிவோம்.

பாதிப்புகள் உண்டு என்பதால் சமூக ஊடகங்களைத் தவிர்த்துவிட முடியாது. தவிர்க்க முடியாது என்பதால், அப்படியே ஏற்றுக்கொள்வதும் சரியில்லை. அதுவும் ஏ.ஐ. என எல்லோரும் அறிந்த செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் துணையுடன் சமூக ஊடகம் புதிய பாய்ச்சலுக்கு தயாராகி வரும் நிலையில், இன்னும் சிக்கல்கள் அதிகம். இந்தக் கட்டத்தில் சமூக ஊடகங்களைக் கையாளும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் குறைந்தபட்ச தெளிவும் அற உணர்வும் அவசியம்.

அமைப்போ அல்லது சட்டமோ சமூக ஊடகங்களை ஓரளவுக்கு நெறிப்படுத்தலாம். மற்றபடி, சுய-தணிக்கைதான் ஒரே வழி. சக மனிதன் மீது கரிசனம் கொண்டவர்கள், அதன் பொருட்டு தாங்களாகவே முன்வந்து ஏற்றுக்கொள்ளும் கட்டுப்பாட்டில் விளைவதே அது. ஒரு சமூகம் பண்பாட்டுப் பொலிவுடன் முன்நகர்வதற்கும் அதுவே வழி.

•

**கட்டுரையாளர்: மூத்த எழுத்தாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவேந்தல்: **வீ. அரசு**

# தமிழ்ச் சமூக வரலாற்று ஆய்வறிஞன் ராஜ் கவுதமன்

(1950-2024)



கடந்த 13.11.1924 அன்று விடிகாலைப் பொழுதில் காலத்தில் கரைந்த கெழுதகை நண்பர் ராஜ்கௌதமன் (1950-2024) குறித்த இந்தப் பதிவில், நான் உணர்ந்த, கண்டறிந்த ராஜ்கவுதமன் (இனி கவுதமன்) அவர்களின் வாழ்க்கைப் பயணம் என்பது, தமிழ்ச் சமூகம் குறித்த ஆய்வுப் பயணமாகவே நடந்து முடிந்திருப்பதைக் காண்கிறேன். அந்தக் காட்சியைப் பதிவு செய்யும் கடமை எனக்குண்டு.

கவுதமன் உருவாக்கிய ஆக்கங்கள் என்பவை பல வடிவங்களில், பல பரிமாணங்களில் இருப்பதை உணர முடிகிறது. சிறிய அளவிலான ஆய்வுக் கட்டுரைகள், குறுவடிவில் அமைந்த ஒரு பொருள் குறித்த தனிப்பொருள் வரைபுகள் (*Monographs*), விரிவான ஆய்வுநூல்கள், மொழியாக்க நூல்கள், புனைவுகள் முதலிய வடிவங்களில் கணிசமான அளவில் நம்முன் இருக்கின்றன. இவைகளில் கவுதமன் பயணித்திருக்கும் பொருண்மைகளை, நமது வசதி கருதி, கீழ்வரும் வகையில் பதிவுசெய்யலாம்.

- பின்னை நவீனத்துவ நவ வரலாற்றியல் (*New Historicism*) பார்வை சார்ந்து, நமது செவ்வியல் ஆக்கங்களில் தொழிற்படும் கருத்து நிலைகளை வெளிக்கொணருதல், இதன் மூலம் தமிழ்ச் சமூக வரலாற்றைப் புதிய அணுகு முறையில் புரிந்து கொள்ளும் முறையியலை தமிழ் ஆய்வுலகில் கொண்டு வந்துள்ள பாங்கு பற்றிப் பேசும் தேவையுண்டு.
- ஒடுக்கப்பட்டோரின் நிலை சார்ந்து, அதற்கான வரலாறு, சமகால நிகழ்வுகள் முதலியவை குறித்த 'தலித்திய நிலைப்பாடு' எனும் கருத்து நிலை மரபில், தமிழ்ச் சமூக இயங்கு தளத்தில் செயல்படும் அனைத்துப் பிரதிகள் தொடர்பான உரையாடல்கள்.
- பெண் எனும் உயிரி, சமூகத்தில் எதிர்கொள்ளும் பல்வேறு நிலைப்பாடுகளை முதன்மையான புரிதலாகக் கொண்ட ஆய்வு முறைமைகள், அதற்கு உதவும் வகையில், பெண்ணிய வரலாறு பெண்ணிய கோட்பாடு குறித்த மொழியாக்கங்கள் என்ற செயல்பாட்டைப் பேசும் தேவையுண்டு.
- தமிழ்ச் சூழலில் மார்க்சியம் தொடர்பான உரையாடல்களை முன்னெடுத்த மரபில், மார்க்சியம் தொடர்பான வேறுபட்ட அணுகுமுறைகள் கொண்ட ஐரோப்பிய அறிஞர்களின் பார்வைகளை அறிமுகப்படுத்தும் நோக்கம் சார்ந்து செயல்பட்ட போக்கை குறித்துப் பேசுதல்.
- அவைதீக மரபில் உருவான கதை நூல்களை மொழியாக்கம் செய்வதன் மூலம், இந்தியக் கதை உருவாக்க மரபில் வேறுபட்ட பார்வைகளைத் தமிழ்ச் சூழலுக்குள் கொண்டுவந்த பார்வை குறித்துப் பேசுதல்.
- தமிழில் தனித்த ஆளுமைகளாக செயல்பட்ட பல்வேறு மனிதர்கள் குறித்த கருத்து நிலை சார்ந்த ஆய்வுகளை உருவாக்கிய மரபு குறித்துப் பேசும் தேவையுண்டு.
- தன் வாழ்வை, ஒரு அரசியல் பிரதியாகவே கருதி, புனைவு வடிவிலும் பயண அனுபவம் எனும் வடிவிலும் பதிவு செய்திருக்கும் பாங்கு.

கவுதமன் எனும் புலமைத்துவ அறிவுச் செயல்பாட்டில் இயங்கிய மனிதரின், புலமைத்துவ செயல்பாடுகளை முதன்மைப்படுத்தும் வகையில் இப்பதிவு அமைய விரும்புகிறேன். ஏனெனில், கவுதமன் பல ஆய்வாளர்களில் ஒருவராக இல்லை; பல நிலைகளிலும் தனித்தன்மைகளைக் கொண்டவராகவே இருக்கிறார்; இந்தப் பின்புலத்தில் அவரது ஆக்கங்களின் கருத்து நிலைகளை முதன்மைப்படுத்தி இந்த உரையாடலை அமைக்கவும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் செவ்விலக்கிய பதிவுகள் உருவாக்க மரபு என்பதை மூன்று அடிப்படைகளில் கவுதமன் வகைப்படுத்துகிறார்.

- நிலவுடைமை சமூக நாகரீகத்திற்கு முந்தைய இனக்குழு சமூகத்திற்கும் நாகரீக காலத்தில் வாய்மொழியாக உருவாகியிருந்த இனக் குடிகளின் பாணர் மரபு.
- நிலவுடைமைச் சமூக நாகரீக காலத்தில் புரவலர்களை போற்றுதற்காக உருவாக்கப்பட்ட புலவர் மரபு.
- இந்தியத் துணைக் கண்டத்தில் பெருங்கதையாடலாகப் பரவியிருந்த சாஸ்திர மரபினை அடியொற்றித் திணை இலக்கியங்களின் கோட்பாட்டு விதிகளை வகுத்த முந்து நூல் மரபு கொண்ட தொல்காப்பிய மரபும் அது ஏற்படுத்திய தொடர்ச்சியான உரை மரபும் *(2018:313).*

மேற்குறித்தவாறு உருவான நமது செவ்வியல் மரபு குறித்த விரிவான, புதிய முறையிலான ஆய்வை கவுதமன் நிகழ்த்தியிருக்கிறார். செவ்விலக்கியப் பிரதிகளில் செயல்படும் கருத்து நிலைகளை, தமது அம்பேத்கர், பெரியார் மற்றும் மார்க்சிய வாசிப்பு சார்ந்த சொல்லாடல்களில் வெளிப்படுத்துவதைக் காண முடிகிறது. அந்தப் பிரதிகளில் செயல்படும் அறமும் அதிகாரமும் ஒடுக்கப்பட்ட மனிதர்கள் மீது நிகழ்த்தும் செயல்களை விரிவாகவே பதிவு செய்திருக்கிறார். பிற்கால வளர்ச்சி சார்ந்த கருத்துப் புரிதலை அடிப்படையாகக் கொண்டு, பழைய பிரதிகளைப் பற்றிப் பேசும்போது, அன்றைய சூழலின் கருத்து நிலை, அதனை செயல்படுத்தும் முறை சார்ந்த சமூக வரலாற்றைப் புதிய சட்டகத்தில் பேசுவதைக் காண்கிறோம்.

1997 இல் உருவாக்கிய ‘அறம் அதிகாரம்’ என்ற நூலை 2006 இல் மீண்டும் திருத்தி எழுதுகிறார். முன்னர் பேசப்பட்ட கருத்துக்கள் பலவற்றை இப்போது மறுதலிக்கிறார். இதற்குக் காரணம், பின்னாளில் கண்டறியப்பட்ட தொல்பொருள் ஆய்வுகள் போன்றவை, தமது முற்கால கருத்து நிலை தவறு என்பதை உறுதிப்படுத்துவதாகப் பேசுகிறார். குறிப்பாக வடமொழி மரபு சார்ந்த சாஸ்திர மரபுகள், நமது செவ்வியல் ஆக்கங்களில் செல்வாக்கு செலுத்தியது என்று அவர் பதிவு செய்திருப்பதை மறுபரிசீலனை செய்கிறார். இவ்வகையில் உயிர்த்துவமான ஆய்வு மரபை முன்னெடுத்த ஆய்வாளராகக் கவுதமனை இனம் காண முடிகிறது.

* * *

தலித் பண்பாடு: தேசிய இனம், மொழி ஆகியவற்றை ஊடறுத்துக் கொண்டு, தங்களைப் போல பிறப்பால் ஏற்பட்ட கருப்பு நிற தோலாலும் பாலியல் வேறுபட்டாலும் ஒடுக்கப்பட்ட கருப்பின பெண்ணிய பண்பாட்டுக் கூறுகளோடு இனம் காண வேண்டியது முக்கியம். அதோடு கூடவே இந்திய தேசியத்தில் தங்களைப் போலவே தேசிய இனம் என்று கருத முடியாத அதற்கும் கீழ்ப்பட்ட தேசியங்களான மலைவாழ் மற்றும் இனக்குழு பண்பாட்டுக் குழுக்களுடன் இணைந்து தலித் பண்பாட்டை ஒரு தேசிய இனத்திற்கும் குறைந்த *(Sub National)* பண்பாடாக, பிறவகை பட்ட தேசிய இனங்களில் இருந்து தனித்த ஒன்றாக கட்டி எழுப்ப வேண்டும். இப்படி எழுப்பப்படும் தலித் பண்பாடு *(Dalit Sub National Culture)*, இனக்குழு, கருப்பர், பெண்கள் இயக்கக் கருத்துகளோடு பெருமளவு இயைபுகள் கொண்டதாக இருப்பது தவிர்க்க முடியாததாகும். *(1993:17)*

கவுதமன் தலித்திய அரசியல் குறித்து விளக்கமாக பதிவு செய்த இந்த கருத்து மரபு, அவரது அனைத்து ஆக்கங்களிலும் ஊடுபாவாக செயல்பட்டிருப்பதைக் காண முடிகிறது. செவ்விலக்கியங்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், தனிப்பாடல்கள், இருபதாம் நூற்றாண்டு புனைவுகள் அனைத்திலும் இத்தன்மையை தொடர்ச்சியாகப் பேசி வந்திருப்பதை அறிய முடிகிறது. அவரது ஆய்வின் அடிச்சரடாக ஒடுக்கப்பட்ட மக்களை தலித்தாக அடையாளப்படுத்தும் அரசியலை முன்னெடுத்திருப்பதைக் காண முடிகிறது. தமிழ்ச் சூழலில் இக்கருத்து நிலை இன்று பல்வேறு பரிமாணங்களில் உரையாடலுக்குட்படுத்த முடிகிறது. அது அம்பேத்கரியம் என்ற மரபாகக் கட்டமைக்கப்படுகிறது. இவ்வகையான உரையாடலுக்கு தளம் அமைத்தக் கருத்துப் போராளியாக கவுதமன் அவர்களை இனம் காண முடிகிறது.

* * *

ஜெர்மெய்ன் கிரீர், கேர்மில்லற், சாரா காம்பிள், டோரில் மோய் ஆகிய பெண்ணியக் கோட்பாட்டாளர்களின் நூல்களைக் கவுதமன் மொழியாக்கம் செய்துள்ளார். தமிழ்ச் சூழலில் பெண்ணியத்தை அதன் கோட்பாட்டுத் தளத்துடன் கற்றறிய வேண்டும் என்ற அக்கரையை கவுதமன் மொழியாக்கங்கள் வழி அறிந்து கொள்ள முடிகிறது. இந்நூல்கள் பாலியல் அரசியல், பாலியல் அரசியல் கோட்பாடு, பாலியல் புரட்சியின் வரலாற்றுப் பின்புலம் ஆகிய பிற குறித்தப் புலமைத்துவ உரையாடல்களை கொண்டவை. கவுதமன் தமது ஆய்வுகள் அனைத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்பட்டோர் என்று பதிவிடும் போது பெண்களை முதன்மைப்படுத்தியே எழுதியுள்ளார். தலித் ஒடுக்குமுறைகளைப் பற்றி பேசும்போது பெண் ஒடுக்குமுறை குறித்தும் விரிவாகவே பேசுகிறார்.

செவ்விலக்கியப் பிரதிகள் குறித்த ஆய்வுகள், நவீன புனைகதைகள் குறித்த ஆய்வுகள் ஆகிய அனைத்திலும் பெண்ணிய அரசியலை முதன்மைப்படுத்தி இருப்பதை அறிய முடிகிறது. பெண்மைக்குரிய வாழ்க்கைவட்டச் சடங்குகளான பூப்பு, திருமணச் சடங்குகள், குழந்தைப்பேறு, கைம்மை ஆகிய அனைத்து நிலைகளிலும் பெண்ணை எவ்வாறு கீழ்மைப்படுத்துகிறார்கள் என்பது குறித்த விரிவான ஆய்வுகளை கவுதமன் நிகழ்த்தியுள்ளார். நவீன தமிழ் ஆய்வுலகில் பெண்ணியம் குறித்த விரிவான ஆய்வுகளை மேற்கொண்டவர்களில் கவுதமன் அவர்களுக்கு தனித்த இடம் இருப்பதாகவே கருதுகிறேன். எந்தப் பொருண்மை குறித்துப் பேசினாலும் அதில் பெண்ணியம் சார்ந்த கருத்து நிலையை முன் வைப்பதில் கவுதமன் தெளிவாகச் செயல்பட்டு இருப்பதைக் காண முடிகிறது.

* * *

"தமிழகத்தில் 1980களில் செயல்பட்டுக் கொண்டிருந்த சிறுபான்மை 'அறிவாளர்'களுடைய சிறு பத்திரிக்கைச் சூழலில் எரிக் ஃபிராம் பற்றிய அறிமுகம் கிடைத்தது. அப்போது இச்சூழலில் ஓரணியினராகச் செயல்பட்ட நிறுவனம் சாராத, மற்றும் நிறுவனம் சார்ந்தும் சாராத, அல்லது தீவிர நிலைப்பாடு மேற்கொண்ட பலதரப்பட்ட மார்க்சிய சிந்தனையாளர்களும் அனுதாபிகளும்........... சேர்ந்து கருத்தரங்குகளை நடத்தி வந்தார்கள். சிறுசிறு கலாச்சாரப் போராட்டங்களில் ஈடுபட்டு நிறைவு கண்டார்கள். தீவிர இடதுசாரி குழுக்களின் அனுதாபிகளும் இதில் கலந்து கொண்டார்கள்." *(2014:13)*

எரிக்ஃபிராம் என்ற மார்க்சிய அறிஞரின் நூலை மொழிபெயர்த்து அதற்கு எழுதி உள்ள மொழிபெயர்ப்பாளர் முன்னுரையில் மேற்குறித்த தகவலை கவுதமன் பதிவு செய்துள்ளார். இந்தியாவில் 1975 இல் கொண்டுவரப்பட்ட அவசரநிலைக் காலம் தொடங்கி, தமிழ்ச் சூழலில் மார்க்சியம் பேசும் பிரிவினர், அதற்கு மாற்றான என்ற பிரிவினர் என்ற போக்கு இருந்தது. எழுபதுகளின் இறுதியில், கவுதமனும் அவரது நண்பர் நடராசனும் (இப்போது ஜெகப்பிரியா) சேர்ந்து 'இலக்கிய வெளிவட்டம்' என்னும் சிற்றிதழைக் கொண்டு வந்தனர். அப்போது வெளிவந்து கொண்டிருந்த மாவோயிசக் கருத்து சார்பு 'பிரக்ஞை' இதழின் தொடர்ச்சியாகவே 'இலக்கிய வெளிவட்டம்' வந்தது.

வெங்கட் சாமிநாதனின் முதலீட்டில் 'கொல்லிப்பாவை' என்ற இதழும் அந்தக் காலத்தில் வெளிவந்தது. இந்த இதழின் கருத்து நிலையை எதிர்கொள்வதாக 'இலக்கிய வெளிவட்டம்' வெளிவந்தது. இந்தப் பின்புலத்தில் மார்க்சிய படிப்பு மரபில் உருவானவர் தான் கவுதமன். இந்தச் சூழலோடு அவர் எரிக்ஃபிரேம் மொழியாக்கத்திற்கு எழுதும் முன்னுரையை புரிந்துகொள்ள வேண்டும். இதன் தொடர்ச்சியாக 1990களில் உருவான அம்பேத்கர் எழுச்சி சார்ந்து தலித்திய நிலைப்பாடு எனும் கருத்துநிலை சார்ந்த ஆய்வுகளில் அவர் தன்னை இணைத்துக் கொள்வதைக் காண முடிகிறது.

1970-1990 காலங்களில் தமிழ்ச் சூழலில் உருவான மார்க்சிய கருத்துநிலைச் சார்ந்த தமிழ் அறிஞர்களின் வளர்ச்சியாகவே கவுதமன் தனது ஆய்வுகளை பின்னர் மேற்கொண்டார். இறுதிக் காலங்களில் மார்க்சியத்தின் போதாமை குறித்தெல்லாம் பேட்டிகளில் அவர் பதிவு செய்திருப்பதைக் காண முடிகிறது. கவுதமன் மொழியாக்கம் செய்த, தத்துவ மரபு சார்ந்த நூல்கள், தமிழகத்தில் தொழில் பட்ட மார்க்சிய தத்துவ மரபு இவற்றின் தொடர்ச்சியாக தலித்திய கருத்து நிலை சார்ந்த ஆய்வுகள் என்பதாகக் கவுதமன் அவர்களை நாம் இனம் காண முடியும்.

* * *

இந்தியத் துணை கண்டத்தில் உருவான கதைகளின் பாடுபொருள்கள் சுவையானவை. அவை அவைதீக மரபுகளான பௌத்தம், சமணம் ஆகிய பின்புலத்தில் உருவான கதைகள். அவைதீகக் கருத்து மரபுகளை கதைகளாகக் கட்டியிருக்கும் முறைமைகள் மீதும், அதில் எடுத்துரைக்கும் பாங்கு குறித்தும் ஈடுபாடு உடையவராக கவுதமன் இருந்தார். புராதான வட இந்தியக் கதைகளின் தொகுப்பான 'கிளி எழுபது' (2012) என்னும் தொகுப்பை மொழியாக்கம் செய்தார். இதன் தொடர்ச்சியாக "கதைக் கருவூலம்" (சமணக் கதைகள்) 2020 இல் மொழியாக்கம் செய்துள்ளார்.

இக்கதைகளை மொழியாக்கம் மூலம் சமணம், பௌத்தம், ஆசிவகம் ஆகிய அவைதீக மரபுகளின் கருத்துகளைத் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகப்படுத்துகிறார். வைதீகர்கள் கட்டமைத்துள்ள புராணிய கதைகளுக்கு மாற்றாகக் கவுதமன் அவைதீக மரபுக் கதைகளை மொழியாக்கம் செய்துள்ளார் என்று கருத முடிகிறது. தர்க்க மரபற்ற புராணியக் கதைகள் மீது கவுதமன் செலுத்திய எதிர்வினையாக,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத்தை முதன்மைப்படுத்தும் தர்க்க மரபுகளை பேசும் கதைகள் கவுதமன் மொழியாக்கம் செய்துள்ள கதைகள். கவுதமனின் இவ்வகையான பணிகள் குறித்தும் தமிழ்ச் சமூகம் விதந்து பேசும் தேவையுண்டு.

* * *

பத்தொன்பதாம் நூற்றாண்டின், தமிழ்ச் சீர்திருத்த மரபின் அடையாளமாக இருப்பவர் இராமலிங்கர் எனும் வள்ளலார் *(1823-1874)*. பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக செயல்பட்டவர் அயோத்திதாசர் *(1823-1914)*, தமிழ் நவீனப் புனைவுலகில், இருபதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில், வேறுபட்ட சிந்தனை மரபுகளுக்குச் சொந்தக்காரராக இருந்தவர் அ.மாதவையா *(1872-1925)*, தமிழ்ப் புனைவுலகில் தனக்கு இணையான மரபுகள் இல்லாமல், அவரது மரபை தமிழின் தலையாய மரபு என்று அறியப்படும், கதை சொல்லியாக இருந்தவர் புதுமைப்பித்தன் *(1906-1948)*, இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் தொடங்கி தமிழ் நவீனப் புனைவுலகிலும், ஆய்வு உலகிலும் தொடர்ந்து செயல்பட்டவர் சுந்தர ராமசாமி *(1931-2005)*. இந்த மனிதர்கள் குறித்த கவுதமன் செய்துள்ள பதிவுகள் மிகுந்த கவனத்தைக் கோரி நிற்பவை.

தனிப்பொருள் வரைபுகள் *(Monographs)* என்னும் வடிவத்தில் மேற்குறித்தோர் குறித்து கவுதமன் செய்துள்ள உரையாடல்கள் தனித்தன்மை மிக்கவை; மனிதர்களை அவர்கள் வாழ்ந்த காலச்சூழல், அவர்கள் கொண்டிருந்த கருத்து நிலை, அதனை அவர்கள் வெளிப்படுத்திய முறை எனப் பல பரிமாணங்களில் கவுதமன் பதிவு செய்திருக்கிறார்.

திருமூலர் மரபு, பட்டினத்தார் மரபு, தாயுமானவர் மரபு, முதலியவற்றின் நவீன மரபாக வள்ளலாரின் ஆன்மீகப் பயணம் எவ்வாறு வடிவம் பெற்றிருக்கிறது என்பதை கவுதமன் தெளிவுபடுத்துகிறார். வாழ்க்கையின் தொடக்கக் காலத்தில் பக்தி மரபு சார்ந்த பாடல்களை உருவாக்கியவர் வள்ளலார். ‘ஜீவகாருண்ய ஒழுக்கம்’ *(1859)* தொடங்கி, ‘சமரச சுத்த சன்மார்க்கம்’ *(1865)* என்ற கருத்து நிலையை முன்னெடுத்தவர் வள்ளலார். இதன் வெளிப்பாடுகளாக சாதி, சமயம், மதம், சடங்குகள், ஆச்சாரங்கள் ஆகிய அனைத்து குறித்தும் கடுமையான விமர்சனங்களை முன்னெடுத்தவர். வள்ளலாரின் இந்த மரபை கவுதமன் சிறப்பாகப் பதிவு செய்திருக்கிறார்.

அயோத்திதாசரின் செயல்பாடுகள் இருபதாம் நூற்றாண்டில் மீள் கண்டுபிடிப்புக்கு உள்ளானது. தலித்திய எழுச்சி இயக்கங்கள் உருவான சூழலில், அயோத்திதாசர் புதிதாகப் பேசப்படுகிறார். இவ்வகையான பதிவுகளை செய்ததில் கவுதமனுக்கு தனித்த இடம் இருக்கிறது. பௌத்த மரபு இந்திய மண்ணில் உருவான முதல் சீர்திருத்த மரபு. இதனை அம்பேத்கர் சோவியத் புரட்சி போல் நடந்த புரட்சி என்று பதிவு செய்கிறார். இந்தப் புரட்சிக்கு எதிராகச் செயல்பட்டு பௌத்தப் புரட்சி எவ்வாறு தோற்கடிக்கப்பட்டது என்பது குறித்து விரிவான உரையாடலை மேற்கொண்டிருக்கிறார். தமிழ்ச் சூழலில் பண்பாட்டு வரலாற்று நோக்கில், பௌத்தம் எவ்வாறு மடைமாற்றம் செய்யப்பட்டது; அதனை மீட்டெடுக்கும் செயல்பாடுகள் எவை எவை என பேசியவர் அயோத்திதாசர். அயோத்திதாசரின் வரலாற்றுச் சிறப்புமிக்க செயலை, இன்றைய தலைமுறைக்கு அறிமுகம் செய்யும் அரிய பணியைக் கவுதமன் செய்திருக்கிறார்.

தனது முனைவர் பட்ட ஆய்வுப் பொருளாக அ.மாதவையாவின் ஆக்கங்களை எடுத்துக் கொண்டார் கவுதமன். அந்த நோக்கத்தில் மாதவையா புனைவுகள் வழியாக, அவர் முன்னெடுத்த சமூக விழுமியங்களின் முற்போக்கான கட்டங்களை கவுதமன் பதிவு செய்திருக்கிறார். தமிழில் மாதவையா தனித்தன்மைகளை கொண்டிருந்தவர் என்ற புரிதலை, கவுதமன் ஆய்வு நமக்கு அறிமுகப்படுத்துகிறது. ஐரோப்பிய புத்தொளி மரபை உள்வாங்கிய நவீன காலம் மனிதராக, சனாதனத்துக்கு எதிராக செயல்பட்டதை நாம் அறிகிறோம். இவ்வகையில் மாதவையா குறித்த கவுதமன் பதிவுகள் நம் கவனத்தை கோரி நிற்பவை.

‘புதுமைப்பித்தன் எனும் பிரம்மராக்ஷஸ்’ பற்றிய கவுதமனின் பதிவு மிக முக்கியமானது. வாய்ப்பு நேரும்போதெல்லாம் புதுமைப்பித்தன் பற்றிப் பேசுவதை கவுதமன் வழக்கமாகக் கொண்டிருந்தார். தலித்தியக் கருத்தாடல், பெண்ணியக் கருத்தாடல், அரசியல் கருத்து நிலை சார்ந்த கருத்தாடல், முதலிய பிறவற்றில் புதுமைப்பித்தனைப் பற்றிப் பேசாமல், கவுதமன் இருந்ததில்லை. அந்த அளவிற்கு புதுமைப்பித்தன் கவுதமனுக்குள் நிறைந்திருந்தார். புதுமைப்பித்தனுக்குள் பயணிக்கும் போது இத்தன்மைக்கு உள்ளாவது தவிர்க்க முடியாதது.

“புதுமைப்பித்தன் எந்தக் கட்சிக்குள்ளும் மாட்டிக்கொள்ளாதவர். அவருடைய சிந்தனையின் ஆதார இயல்பு இதுதான். அவர் காலத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்திய வல்லாண்மைச் சிந்தனையின் கருத்துகள், சோசலிச கருத்துகள், கலை இலக்கியம் பற்றிய புதிய விமர்சனக் கருத்துகள், ஏகதேசியம் பேசிய இந்துத்துவ கருத்துகள், பெரியாரின், காந்தியின் கருத்துகள், ஆகிய சீர்திருத்தக் கருத்துகள், சித்தர் மரபில் வந்த சிந்தனைகள், சைவ வேளாளத் தாக்கங்கள், கீழை .-மேலை நாத்திகக் கருத்துகள் ஆகிய அனைத்தும் அவரை வெவ்வேறு அளவில் பாதித்தன" (2000:3) என்று புதுமைப்பித்தனை கவுதமன் மதிப்பிடுகிறார். தான் புதுமைப்பித்தன் கருத்து நிலைக்கு பெரிதும் உடன்பாடானவன் என்றும் ஏதேனும் ஒரு அமைப்போடு, தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் வாழ்ந்தது, புதுமைப்பித்தன் தாக்கத்தில் உருவானது என்றும் பதிவு செய்கிறார். இவ்வகையில் தன்னைப் பெரிதும் பாதித்த ஆளுமையாக புதுமைப்பித்தனை இனம் காண்கிறார்.

கவுதமனுக்கு சுந்தரராமசாமி குறித்த ஈடுபாடு நீண்ட காலமாக இருந்து வருவதாகக் கூறுகிறார். அவரது 'புளியமரத்தின் கதை'யை வாசித்த காலம் தொடங்கி அது தொடர்வதாகக் கூறுகிறார். இதன் உச்ச வெளிப்பாடாகவே "சுந்தரராமசாமி: கருத்தும் கலையும்" (2017) என்ற கவுதமனின் நூல் அமைகிறது. சுந்தர ராமசாமியின் கட்டுரைகள், மேலைய இயக்கங்கள் குறித்து அவரது பதிவுகள், சுந்தர ராமசாமி எழுதிய கதைகள் ஆகிய மூன்று அடிப்படைத் தரவுகளைக் கொண்டு, சுந்தரராமசாமியை மதிப்பிடுகிறார். சுந்தரராமசாமியின் கருத்தியல் கவுதமன் பேசும் கருத்தியலுக்கு உடன்பாடானதாக இருக்கிறதா? அல்லது முரண்படுகிறதா? என்ற கேள்வியை எழுப்பி கவுதமனின் சுந்தரராமசாமி பற்றிய மதிப்பீட்டிற்குள் பயணிக்கும் அனுபவம் கிட்டுகிறது. அந்த வகையான விவாத மரபை கவுதமன் முன்னெடுக்கவில்லை; மாறாக சுந்தரராமசாமி எனும் புலமைத்துவ ஆளுமையை நமக்கு கவனப்படுத்துகிறார். கவுதமனின் வழக்கமான ஆய்வு மரபிலிருந்து வேறுபட்ட முறையில் இந்த ஆய்வில் தொழிற்பட்டிருப்பதை உணர்கிறோம். கவுதமனின் ஆளுமைப் பரிமாணத்தில் இதனைப் புரிந்து கொள்ளும் தேவையுண்டு. சுந்தரராமசாமி குறித்த கவுதமன் செய்துள்ள பின் கண்ட பதிவு கவனத்தில் கொள்ளத்தக்கது.

"சாதி போற்றும் இந்த பிராமணிய இனக்குழுச் சமூக நிலையை மாற்றி அமைக்க உருவான ஒரு சமூக இயக்கத்தை, போராட்டத்தை சாதிவெறி, மொழிவெறி என்றே பிராமணிய இனக்குழு மனோநிலை நோக்கியது. இச்சந்தர்ப்பங்களி லெல்லாம் சாதி, மொழிவெறிகளின் பட்டியலில் மதவெறி பற்றிச் சு.ரா மௌனம் காக்கிறார்." (2017:11)

இவ்வகையில் தமிழ்ச் சமூகத்தின் முதன்மையான ஆளுமைகளை, சமூக வரலாற்றுப் பின்புலத்தில் கவுதமன் செய்திருக்கும் பதிவுகள் மிக்க புலமைத்துவ மரபு சார்ந்த செயல்களாக இருப்பதை உணருகிறோம்.

* * *

கவுதமன் மொழி என்பது எள்ளல், நக்கல், இரட்டுறமொழிதல் ஆகிய பல்வேறு பண்புகளைக் கொண்ட தனித்த மொழிக்குச் சொந்தக்காரர். பேச்சு மொழி மரபும், எழுத்து மொழி மரபும் பெரிதும் இடைவெளியற்றவை. கவுதமன் எழுத்துக்களை வாசிக்கும் போது அவரோடு உரையாடுவது போன்ற உணர்வைத் தரவல்லது. இந்த மரபில் தன்னையே புடம் போட்டு, விமர்சனப் போக்கில் வெளிப்படுத்தும் ஆக்கங்களாக அவரது புனைவுகள் உள்ளன. 'சிலுவைராஜ் சரித்திரம்' எனும் அவரது தன் வரலாறு, புனைவு மொழியில் பதிவாகியுள்ளது. இரு பகுதிகளாக அவை வெளிவந்துள்ளன. அவரது லண்டன் வாழ்க்கையும் பயண மொழி மரபில் வெளிவந்துள்ளது. இந்த ஆக்கங்களில் பயணிக்கும் போது, தமிழ்ச் சமூகத்தின் பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டின் சமூக வரலாற்று நிகழ்வுகளோடு நாம் பரிச்சயம் கொள்ள முடிகிறது.

கவுதமன் பிறந்து வளர்ந்த சிற்றூர், முதல் தலைமுறையாக உயர்கல்வி பெறும் வாய்ப்பு, கிறித்துவத்தின் செயல்பாடுகள், அது இந்துத்துவா மரபிலிருந்து வேறுபடும் புள்ளிகள், அரசியல் இயக்கங்களில் நிலவிய கருத்து நிலைகள், அவை ஒடுக்கப்பட்ட தலித்துகளை, பெண்களை எதிர்கொண்ட மரபுகள் ஆகிய அனைத்தும் புனைவு மொழியாக, கேலியும் கிண்டலுமாக பதிவாக்கியுள்ளார் கவுதமன். இவ்வகையில் கவுதமன் கதை சொல்லியும் கூட.

ராஜ்கவுதமனின் பல்வேறு பரிமாணங்களை நினைவுபடுத்துவதே அவருக்குச் செய்யும் அஞ்சலியாகக் கருதுகிறேன். வாய்ப்பு நேருமானால் கெழுதகை நண்பரின் முழுப் பரிமாணத்தையும் பதிவு செய்வேன் என்று மனதளவில் சொல்லிக் கொள்கிறேன்.

•

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: **ஜி.சரவணன்**




# நூறாண்டு காணும் தோழர் ஆர். நல்லகண்ணு

**1925**ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் தேதி ஸ்ரீவைகுண்டத்தில் விவசாயக் குடும்பத்தில் நான்கு ஆண்கள், ஐந்து பெண்கள் கொண்ட பெரிய குடும்பத்தில் மூன்றாவதாகப் பிறந்தவர் தோழர் நல்லகண்ணு. பெற்றோர்கள் ராமசாமி - கருப்பாயி. ஸ்ரீவைகுண்டம் காரனேசன் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர், மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியில் இண்டர்மீடியட் படித்தார், தமிழில் பி.ஓ.எல். படிப்பு இரண்டாண்டுகள் படித்த நிலையில் தீவிர அரசியல் ஈடுபாட்டால் முழுமையடையவில்லை.

1936ஆம் ஆண்டிலிருந்தே பிரிட்டிஷ் அரசுக்கெதிராகச் செயல்படத் தொடங்கினார். 1937இல் நடந்த தேர்தலில் காங்கிரசுக்கு வாக்களிக்கும்படி சிறுவர்களோடு சிறுவனாகக் கேட்டுக்கொண்டபோது அவருக்கு வயது 12. 1938ஆம் ஆண்டு நடந்த ஹார்வி மில் தொழிலாளர் வேலைநிறுத்தத்தின் போது பெரியவர்களுக்கு உதவியாகச் சென்று அரிசி வசூலில் ஈடுபட்டார். அரிசிப் பெட்டிகளைத் தலையில் சுமந்து சென்றார்.

1939ஆம் ஆண்டு பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது போர் ஆதரவுப் பிரச்சார நாடகம் நடத்தப்பட்டது, சுதந்திரப் போராட்டத் தாகம் கொண்ட மாணவர்கள் துணையுடன் அந்நாடகத்தை எதிர்த்து முன்னணியில் நின்று குரல் கொடுத்தார். அப்போது ஒரு காவல் அதிகாரி மாணவர்களை அடித்தார். உடனே அதைக் கண்டித்து மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அப்போது காவல்துறைக்கு ஆதரவாகச் செயல்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியரிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு உரிமையை நிலைநாட்டினார்.

1940ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்த நிதி வசூலை இவர் எதிர்த்துக் குரல் கொடுத்தபோது 'மாணவர்' என்ற காரணத்தால் கைது செய்யப்படாமல் அடித்து விரட்டியடிக்கப்பட்டார். 1943-44இல் 'கலைத் தொண்டர் கழகம்' எனும் அமைப்பை உருவாக்கி அதன் செயலாளராகச் செயல்பட்டார். எட்டையபுரத்தில் பாரதி நினைவு மண்டபம் கட்ட அவ்வமைப்பின் சார்பில் 400 ரூபாய் நிதி வசூல் திரட்டிக் கொடுத்தார். 1944இல் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரானார். அதைத் தொடர்ந்து சென்னைக்கு வந்து 'ஜனசக்தி' அலுவலகத்தில் செய்திக்குழுவில் பணியாற்றத் தொடங்கினார். அப்போது ஸ்ரீவைகுண்டம் பகுதியில் இரண்டாயிரம் மூடை நெல் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்து ஜனசக்தி பத்திரிகையில் எழுதினார். அதைப் படித்த மாவட்ட ஆட்சியர், உடனடியாக நடவடிக்கை எடுத்து நெல் மூடைகளைப் பறிமுதல் செய்தார். நகர வாழ்க்கை பிடிக்காததால் சென்னையிலிருந்து புறப்பட்டு நாங்குனேரி தாலுகாவில் விவசாயச் சங்க ஊழியராகச் செயல்பட்டார்.

அம்பாசமுத்திரம், சிவகிரி, புளியங்குடி, தென்காசி, நாங்குனேரி பகுதிகளில் திருவாவடுதுறை ஆதீனம் மற்றும் ஜீயர் மடங்களுக்குச் சொந்தமான நிலங்களில் விவசாயம் செய்த மக்களைப் பல மைல்கள் தினசரி நடந்தே சென்று பேசிப்பேசி முயன்று ஒன்று திரட்டி மடங்களுக்கு எதிராகப் போராடச் செய்தார். மிரட்டல்களுக்குப் பணியாமல் துணிச்சலாக விளைந்த நெல்லை அவரவர் வீடுகளுக்குக் கொண்டு செல்லும் நிலையினை ஏற்படச் செய்தார். மடத்துத் தரப்பில் வழக்குகள் போடப்பட்டும் ஒன்றும் செய்யமுடியவில்லை.

நாங்குநேரிக்கு ஒரு மேதினத்தன்று வில்லிசைக் கலைஞர் பிச்சைக்குட்டி, பேராசிரியர் நா.வானமாமலை ஆகியோர் வந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்போது அங்கு சில தெருக்களில் பிற சமூகத்தினருக்கு அனுமதி கிடையாது; ஆனாலும் ஆயிரக்கணக்கான பேர் மீறிச் சென்றதால் ஜீயர் மடத்து ஆட்களால் எதுவும் செய்யமுடியவில்லை. கூட்டம் முடிந்து இரவு திரும்பிய நல்லகண்ணுவை ஒரு தூணோடு சேர்த்துக் கட்டி வைத்து அடித்தனர் மடத்து அடியாட்கள்.

1948இல் கட்சி தடை செய்யப்பட்டபோது தலைமறைவானார். 1949 டிசம்பரில் அவர் கைது செய்யப்பட்டபோது கூட்டாளிகளைப் பற்றியும் அவர்களது மறைவிடங்கள் பற்றியும் கேட்டு அவரது மீசையைப் பொசுக்கியும் முடிகளைப் பிய்த்தும் போலீசார் சித்திரவதை செய்தபோது தன் நிலைப்பாட்டில் தெளிவாகவும் உறுதிப்பாட்டுடனும் இருந்தார். சிகரெட் நெருப்பால் தன்னுடைய மீசை முடியைப் பொசுக்கியதால் இப்போது வரை அவர் மீசை வைப்பதேயில்லை. நாங்குனேரி சப் ஜெயிலில் ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்த நிலையில் நெல்லைச் சதி வழக்கிலும் சேர்க்கப்பட்டதால் அவரது 29வது வயதில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு மதுரைச் சறையிலும் கொக்கிரகுளம் சிறையிலும் ஏழாண்டுகள் தண்டனை அனுபவித்து 1956இல் விடுதலையானார். விடுதலையாகி வெளியில் வந்ததும் அப்போதைய முதல்வர் காமராஜரைச் சந்தித்து சிறையிலிருக்கும் மற்ற தோழர்களையும் விடுதலை செய்யக் கேட்டுக்கொண்டார்.

மாநில அரசின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவர்களை விடுதலை செய்யலாம் என்றும் மத்திய அரசின் சட்டங்களுக்கு உட்பட்டவர்களை விடுதலை செய்ய இயலாது என்றும் கூறினார் காமராஜர். இவரது முயற்சியின் காரணமாக சிறையிலிருந்த பலருக்கும் 'பி' வகுப்பு சிறை கிட்டியது. (மதுரை சிறையில் நல்லகண்ணு இருந்தபோது அரசியல் கைதிகளுக்கான 'பி' வகுப்பு சிறை கேட்டு 12 நாட்கள் உண்ணாவிரதமிருந்தது குறிப்பிடத்தக்கது). சிறையிலிருந்து வெளிவந்த நல்லகண்ணுவுக்கு சாதி ஒழிப்புப் போராளி அன்னச்சாமியின் மகள் ரஞ்சிதம் என்பவருடன் 5.6.1958 அன்று நெல்லையில் திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் (வாழ்க்கைத் துணையாகவும் உற்ற தோழராகவும் இருந்த இவரது மனைவி 2016ஆம் ஆண்டு மறைந்தார்).

விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்காக இவர் 1966ஆம் ஆண்டு அம்பாசமுத்திரத்தில் உள்ள கடனா நதியில் அணை கட்ட வேண்டும் என்று 11 நாட்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்தார். பக்தவத்சலம் ஆட்சியின் பிடிவாதம் தளர்ந்து அக்கோரிக்கை ஏற்கப்பட்டு அணை கட்டப்பட்டது.

1967ஆம் ஆண்டு நொச்சிக்குளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகள், அவர்கள் பயிரிட்டு வந்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டதை எதிர்த்து இவரது தலைமையில் போராட்டம் நடைபெற்றது. அப்போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதனைக் கண்டித்து பன்னிரண்டு நாட்கள் தொடர்ந்து பட்டினிப் போராட்டம் நடத்தி அப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டார். சுற்றுச்சூழலில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்ட இவர் தொடர்ந்து எதிர்க்குரல் எழுப்பிக்கொண்டிருப்பவர். 1985இல் குற்றாலம் அருவிக்கு அருகில் 'ரேஸ் கோர்ஸ்' அமைக்கும் முயற்சி நடந்ததை எதிர்த்து 'தாமரை'யில் கட்டுரை எழுதிய பிறகு அம்முயற்சி கைவிடப்பட்டது. 2010ஆம் ஆண்டு தாமிரபரணி ஆற்றில் மணல் கொள்ளையைத் தடுக்க அவரே உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் ஆஜராகி வாதாடித் தடை உத்தரவு பெற்றார். தொடர்ந்து ஸ்ரீவைகுண்டம் அணையில் மணல் கொள்ளை நடப்பதற்கு எதிராகத் தீவிரமாகப் போராடினார். 1969இல் விவசாயிகள் பிரதிநிதியாக கிழக்கு ஜெர்மனிக்குச் சென்றார். 20 நாள் சுற்றுப்பயணத்திற்குப் பின்னர் மாஸ்கோ



சிறையில் இருந்த காலத்தில் உண்டான வாசிப்புப் பழக்கத்தைத் தொடர்ந்த காலங்களில் விசாலப் படுத்திக்கொண்டார். வாழ்நாள் முழுதும் ஏராளமான புத்தகங்களை வாசித்துக் குறிப்புகளை எடுத்து வைக்கும் பழக்கம் சிறையிலிருந்தே தொடங்கியது. அவ்வப்போது கவிதைகளும் கட்டுரைகளும் எழுதுவார். ஏதேனும் இதழ்களில் நல்ல கட்டுரையை வாசித்துவிட்டால் சிறியவர் பெரியவர் என்றில்லாமல் கட்டுரையாளரைத் தொடர்பு கொண்டு பாராட்டுவதை வழக்கமாகக் கொண்டவர்.

லெனின்கிராடில் ஐந்து நாள்கள் தங்கியிருந்து பின்னர் நாடு திரும்பினார். 1973இல் சோவியத் யூனியன் சென்று மூன்று மாதங்கள் மார்க்சியப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு நாடு திரும்பினார்.

சிறையில் இருந்த காலத்தில் உண்டான வாசிப்புப் பழக்கத்தைத் தொடர்ந்த காலங்களில் விசாலப் படுத்திக்கொண்டார். வாழ்நாள் முழுதும் ஏராளமான புத்தகங்களை வாசித்துக் குறிப்புகளை எடுத்து வைக்கும் பழக்கம் சிறையிலிருந்தே தொடங்கியது. அவ்வப்போது கவிதைகளும் கட்டுரைகளும் எழுதுவார். ஏதேனும் இதழ்களில் நல்ல கட்டுரையை வாசித்துவிட்டால் சிறியவர் பெரியவர் என்றில்லாமல் கட்டுரையாளரைத் தொடர்பு கொண்டு பாராட்டுவதை வழக்கமாகக் கொண்டவர். காசியில் பாரதியார் வாழ்ந்த வாழ்க்கைக் குறிப்புகளைத் திரட்டிக் கட்டுரை எழுதினார். 'பி.சீனிவாசராவின் வாழ்க்கை வரலாறு' (1975), 'விடுதலைப் போரில் விடிவெள்ளிகள்' (1982), 'கங்கை காவிரி இணைப்பு' (1986), 'பாட்டாளிகளைப் பாடிய பாவலர்கள்' (1986), 'நிலச்சீர்திருத்தம்', 'மடம், கோயில் நிலங்கள்', 'கிழக்கு ஜெர்மனியில் கண்டதும் கேட்டதும்' எனும் பயண நூல் ஆகியவற்றை எழுதியுள்ளார். "இந்திய விவசாயிகள் பேரெழுச்சி" எனும் நூலை மொழிபெயர்த்துள்ளார்.

சுமார் 25 ஆண்டுகள் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்தார். 13 ஆண்டு காலம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராகப் பணியாற்றினார். தற்போது மத்திய கமிட்டி உறுப்பினர், தேசிய கட்டுப்பாட்டுக் குழுத் தலைவராக இருந்து வருகிறார்.

அவரது 80-வது பிறந்த நாளை முன்னிட்டு ஒரு கோடி ரூபாய் வசூலித்துக் கொடுத்தது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. அதைக் கட்சிக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார். தமிழக அரசு 'அம்பேத்கர் விருது' கொடுத்து ஒரு லட்சம் ரூபாயை வழங்கியது. அதில் பாதியைக் கட்சிக்கும் மீதியை விவசாயத் தொழிலாளர் சங்கத்துக்கும் கொடுத்துவிட்டார். இவர் மீதான அன்பினாலும் அக்கறையினாலும் ஒரு பத்திரிகையாளர் அவருக்குக் கார் ஒன்றைப் பரிசாக அளித்தபோது அதனையும் கட்சிக்கே கொடுத்துவிட்டார். தனக்கென பெரிதாக எந்தத் தேவையும் நோக்கமும் கொண்டவராக ஒருபோதும் அவர் இருந்ததில்லை என்பதன் எளிய சான்றுகளே இவை.

நூறு வயதைத் தொடும் நிலையில் இன்றளவும் விவசாயிகள் தொழிலாளர் நலனுக்காகவும். சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்காகவும் கார்ப்பரேட்களுக்கு எதிராகவும் சாதி, மதவெறிக்கு எதிராகவும் தொடர்ந்து குரலெழுப்பி வருகிறார் தோழர் ஆர்.நல்லகண்ணு.

(தோழர் நல்லக்கண்ணுவின் நூற்றாண்டுத் தொடக்கத்தினையொட்டி எழுதப்பட்ட கட்டுரை)

•

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: **ஆ. சிவசுப்பிரமணியன்**

## முனைவர் விமல்ராஜ் அழகையாவின்

# "பாஸ்கா நாடகம் அரங்கியலும் அரசியலும்"

## நூலுக்கான முன்னுரை

"பாஸ்கா நாடகம் அரங்கியலும் அரசியலும்" என்ற தலைப்பிலான இந்நூல் பேராசிரியர் விமல்ராஜ் அழகையா அவர்களின் முனைவர் பட்ட ஆய்வேட்டின் அச்சு வடிவமாகும். கல்விப்புல ஆய்வு மரபிற்கேற்ப தம் ஆய்வேட்டின் அறிமுக உரையில் ஆய்வின் மையப் பொருளான பாஸ்கா நாடகத்தின் பெயரிலிருந்தே தம் அறிமுக உரையைத் தொடங்குகிறார். இதில் அவர் குறிப்பிடும் செய்திகள், விவிலிய வாசிப்பு - தேவாலய வழிபாடு - வழிபாட்டுச் சடங்குகள் - மன்றாட்டுகள் - திருவிழாக்கள் என்ற வட்டத்திற்குள் மட்டுமே சுழலும் சராசரிக் கிறித்தவரகளுக்கும் கூட சில புரிதல்களை ஏற்படுத்தும் இயல்பின.

ஆய்வேடு வரைவின் விதிமுறைகளுக்கேற்ப ஆய்வு எல்லை - ஆய்வு நோக்கம் - கருதுகோள் - ஆய்வு அணுகுமுறை - இதே களத்தில் முன்னோடிகளாக இயங்கியவர்கள் என்பனவற்றை அறியச் செய்யும் வகையில் ஒரு தெளிவான சுருக்கமான அறிமுக உரையை எழுதியுள்ளார். எனவே இவை குறித்துத் திரும்பவும் எழுதி முன்னுரையை வளர்க்க விரும்பவில்லை. நேரடியாக நூலுக்குள் நுழையலாம்.

நாட்டார் வழக்காற்றியல் என்ற அறிவுத் துறையானது நூறுக்கும் மேற்பட்ட வகைமைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. இவை அனைத்தும் "வழக்காறு" *(Lore)* என்ற பொது அடையாளத்தைத் தாங்கி நிற்பவை. எனினும் இவ்வகைமைகளில் சில ஒன்றுடன் ஒன்று வேறுபட்டும் சில இணக்கமாகவும் அமைந்திருக்கும். இங்கு இணக்கம் என்பது ஒரு வழக்காறுக்கும் மற்றொரு வழக்காறுக்கும் இடையிலான ஒற்றுமைக் கூறு ஆகும். ஒற்றுமைக் கூறுகளின் அடிப்படையில் நாட்டார் வழக்காறுகளை வகைமைகளாக வகைப்படுத்தும் போக்கு அறிமுகமானது. இவ்வகையில் அறிமுகமான ஒரு வகைமைப்படுத்தல் (1) வாய்மொழி வழக்காறு அல்லது வாய்மொழி இலக்கியம், (2) சமூகப் பழக்கவழக்கங்கள், (3) நாட்டார் நிகழ்த்து கலைகள், (4) பொருள்சார் பண்பாடு என நான்கு தலைப்புகளைக் கொண்டுள்ளது.

இம்மூன்றாவது வகைமையில் இடம்பெறும் நிகழ்த்து கலைகளில் ஒன்றே நாட்டார் நாடகம். இந்நூல் தமிழ்நாட்டிலும் சிரிலங்காவின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் மிகுதியாக வாழும் வடமாகாணமான யாழ்ப்பாணப் பகுதியில் வாழும் கிறித்தவர்களிடமும் (பெரும்பாலும் கத்தோலிக்கர்கள்) வழக்கிலுள்ள பாஸ்கா நாடகத்தை ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது. இது போன்ற சமயம் சார்ந்த நிகழ்த்து கலையை ஆய்வுப் பொருளாகக் கொள்ளும்போது ஆய்வாளன் மூன்று தளங்களில் இயங்க வேண்டியுள்ளது. முதலாவது நாடகத்தின் பனுவலைப் படித்தவனாகவும் அதன் நிகழ்த்துதலின் பார்வையாளனாகவும், நாடகக் கலைஞர்கள் அதன் இயக்குநர்கள், பார்வையாளர்கள், புரவலர்கள் ஆகியோருடன் கலந்துரையாடுபவனாகவும் இயங்க வேண்டும். நாடகம் ஒரு தொன்மத்தை அடிப்படையாகக் கொண்டது எனும்போது அத்தொன்மம் குறித்த புலமையுடன் அச்சமயம் சார்ந்த சடங்குகளையும், கோட்பாடுகளையும் அறியும் ஆர்வம் கொண்டவனாகவும் இருக்க வேண்டும்.

இரண்டாவது, நாடகத்தின் மையக் கருத்ததை விட்டு விலகி வெளிப்படும் மற்றொன்று விரித்தல் செய்திகளைப் புறக்கணிக்கும் ஆசாரத்தன்மை கொண்டவனாக இல்லாது அவற்றையும் பதிவிடும் மனநிலை உள்ளவனாக இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, நாடகப் பனுவல், நாடக அரங்கம் என்பதுடன் நின்றுவிடாமல் ஒப்பனைப் பொருள்கள், அரங்கப் பயிற்சி, நிதி ஆதாரம் என்பனவற்றை அறிய வேண்டும். ஓலை, காகித ஆவணங்கள், துண்டறிக்கைகள், அரங்கம் மற்றும் வரலாற்றுப் பின்புலம் தொடர்பான கட்டுரைகள், நூல்கள் என்பனவற்றைக் கண்டறிந்து வாசிக்கும் ஆர்வம் இருக்க வேண்டும்.

இந்நூலாசிரியர் இம்மூன்று தளங்களிலும் ஆர்வத்துடன் செயல்பட்டுள்ளார். நூலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நாட்டார் வழக்காற்றியல் என்ற அறிவுத் துறையானது நூறுக்கும் மேற்பட்ட வகைமைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. இவை அனைத்தும் "வழக்காறு" (Lore) என்ற பொது அடையாளத்தைத் தாங்கி நிற்பவை. எனினும் இவ்வகைமைகளில் சில ஒன்றுடன் ஒன்று வேறுபட்டும் சில இணக்கமாகவும் அமைந்திருக்கும்.**



அறிமுகப் பகுதியில் பாஸ்கா என்ற சொல்லின் மூலமொழி அச்சொல்லின் ஆங்கில வடிவம், தமிழ் வடிவம் என்பனவற்றைக் குறிப்பிட்டுவிட்டுப் பாஸ்கா என்ற சொல்லின் பொருளை விளக்கிச் சென்றுள்ளார். அடுத்து, பாஸ்கா விழா குறித்த விவிலியச் செய்திகளையும் அறிமுகம் செய்துள்ளார். தொடக்கத்தில் பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட பாஸ்கா நிகழ்வு பின்னர் மனிதர்கள் நடிக்கும் பாஸ்கா நிகழ்வாக மாற்றம் பெற்றதையும், இதன் வளர்ச்சி நிலையாக நாடக வடிவம் பெற்றதையும் குறிப்பிட்டுள்ளார். இச்செய்திகளின் விரிவாக்கமாகவே முதல் நான்கு இயல்களும் அமைந்துள்ளன. இடையிடையே ஆய்வு நோக்குடன் கூடிய கருத்துக்களையும் வெளிப்படுத்தியுள்ளார்.

"சமுதாய அரங்கியலும் பண்பாட்டு அரசியலும்" என்ற தலைப்பிலான ஐந்தாவது இயல் நூலின் இறுதி இயலாக அமைந்துள்ளது. முந்தைய நான்கு இயல்களிலும் அவர் கூறியுள்ள கருத்துக்களின் துணையுடன் இவ்வியலை உருவாக்கியுள்ளார். இவரது ஆய்வுப் புலமையை வெளிப்படுத்தும் தன்மையில் இவ்வியல் அமைந்துள்ளது. தமது ஆய்வின் மூன்று கருதுகோள்களில் இரண்டாவது கருதுகோளாக, "பாஸ்கா வெறுமனே ஒரு நாடக வடிவமாக இல்லாமல் அஃது ஒரு சமுதாய அரங்க வடிவமாக உருவாயிருக்கின்றது" என்று அறிமுக உரையில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். பாஸ்கா என்ற சமயச் சடங்கின் வளர்ச்சி நிலையில் உருவான பாஸ்கா நாடகங்களில் சமுதாய அரங்கிற்கான கூறுகள் உள்ளன என்பதே நூலாசிரியரின் கருத்தாகும்.

சமுதாய அரங்கம் என்பது குறித்த வரையறையை யூஜின் வான் எர்வென் (*Eugene van Ervin*) என்பவரின் கூற்றாக மேற்கோளாகக் காட்டியுள்ளார். அது வருமாறு:

"சமூக அரங்கமென்பது இயக்கமுடையது, ஏற்புடையது, ஆற்றல் மிக்கது. அது மக்கள் குழுக்களையும் நிகழ்த்துபவர்களையும் வலுப்படுத்தும். ஏனென்றால் இது பெரும்பாலும் வரையறுக்கப்பட்ட வெளிகளுக்கு அப்பால் உள்ள இடங்களிலேயே நிகழ்த்தப்படுகிறது. இக்கலைவடிவம் பெரும்பாலும் மேட்டுக்குடி மக்களாலும் கொள்கை உருவாக்குபவர்களாலும் பெரிதும் புறக்கணிக்கப்படுகிறது."

இம்மேற்கோளையடுத்துச் சில விளக்கங்களைத் தந்துவிட்டு சமய நாடகமான பாஸ்கா நாடகம் எவ்வாறு சமூக நாடகமாகிறது என்பதை நிறுவுகிறார். அதே நேரத்தில் இது வெகுசன அரங்கிலிருந்து வேறுபாடான அரங்கம் என்ற கருத்தையும் முன்வைத்துள்ளார்.

மானுடவியல் துறையினர் பண்பாட்டு ஆய்வில் பயன்படுத்தும் கலைச்சொற்களில் ஒன்று "பண்பாடு ஏற்றல்" (*Inculturation*). ஒரு குறிப்பிட்ட பண்பாட்டினர் மற்றொரு பண்பாட்டுக் கூறுகளை உள்வாங்கிக்கொள்வதே பண்பாடு ஏற்றலாகும். இது கத்தோலிக்கத்திலும் இடம்பெற்றுள்ளது. இது குறித்து விரிவாகவே நூலாசிரியர் விவாதித்துள்ளார். பாஸ்கு நாடக நிகழ்வுடன் இணைந்த சில பண்பாடு ஏற்றல்களையும் எடுத்துக்காட்டாகத் தந்துள்ளார்.

தமிழ்நாட்டின் சைவ வைணவக் கோயில்களில் நிகழும் திருவிழாக்களில் சில அவ்வச் சமயத் தொன்மங்களுடன் தொடர்புடையன. அத்தொன்மக் கதைகளைச் சார்ந்தே சில திருவிழாக்கள் நிகழ்கின்றன. வைணவர்களின் வேடுபறித் திருவிழா, அழகர் வைகை ஆற்றில் இறங்கும் திருவிழா, சைவர்களின் மாங்கனித் திருவிழா (காரைக்கால்), மதுரை மீனாட்சி அம்மன் கோவில் பிட்டுத் திருவிழா, பல்வேறு கோவில்களில் நிகழும் இறைவனின் திருக்கல்யாண விழாக்கள் என்பன இச்சமயங்களின் தொன்மங்களை அடிப்படையாகக் கொண்டு உருவானவையே.

எந்தச் சமயத்தைப் பின்பற்றுபவரானாலும் தம் சமயத்தின் தொன்மங்கள் உண்மையில் நிகழ்ந்தவற்றின் பதிவு என்றே நம்புகின்றனர். அவ்வாறு தாம் நம்புவதை ஒரு நிகழ்த்துக் கலை போன்று திருவிழாவாக நடத்துகின்றனர். இவ்வகையில் பெரும்பாலான திருவிழாக்கள் அந்தச் சமயத்தவர் உண்மையென்று நம்பும் தொன்ம நிகழ்வுகளை மீண்டும் நிகழ்த்திக் காட்டுவனவாகவே அமைந்துள்ளன. இச்செயலை "மீண்டும் நிகழ்த்திக்காட்டல்" (*Re enactment*) என்பர்.

பாஸ்கு நாடகமும் இது போன்று மீண்டும் நிகழ்த்திக் காட்டும் வழிமுறை சார்ந்த சமய விழாதான். நாடகம் நிகழும் முன்னர் நிகழும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவக்காலம், குருத்தோலைத் திருவிழா, பெரிய வியாழன், புனித வெள்ளி, ஈஸ்டர் ஞாயிறு என்பன தொடர்பாக வீடுகளிலும் தேவாலயத்திலும் ஊரிலும் மக்களின் செயல்பாடுகள் யேசுவின் இறுதிக்கால நிகழ்வுகளாக விவிலியத்தில் இடம்பெற்றுள்ள செய்திகளை உள்ளடக்கியுள்ளன.

பாஸ்கா பண்டிகையில் காணப்படும் பண்பாடு ஏற்றல் தொடர்பாக நூலாசிரியர் முன்வைக்கும் செய்திகள் கிறித்தவத்தைத் தமிழ்மண் சார்ந்த ஒன்றாக மக்கள் பாவிக்கும்படி செய்துள்ளன. "தங்கள் வாழ்வியலோடு கலந்த பல விடயங்களைத் தமிழர்கள் பாஸ்காவினுள் பிரதிபலிக்க வைத்துள்ளனர்" என்ற ஆசிரியரின் கருத்து சரியான ஒன்று.

நூலாசிரியர் மேற்கொண்ட ஆய்வு பாஸ்கா என்ற கிறித்தவப் பண்டிகையுடன் இணைந்த பாஸ்கா நாடகம் குறித்தது. இதன் அடிப்படையில் இதனை, சடங்கு சார்ந்த அரங்கு என்று கூறமுடியும். சடங்கு சார்ந்த அரங்கு என்பதால் சடங்கு, அரங்கு என்ற இரண்டும் ஆய்வுப் பொருளாகின்றன. அத்துடன் சடங்கு என்பதும் அதை நடத்தி வைக்கும் சமயக் குருவுடன் மட்டுமே தொடர்புடையதாக இல்லை. இது மக்கள் உருவாக்கி, தனித்தோ கூட்டாகவோ நடத்தும் சடங்குகளையும் உள்ளடக்கியது.

பாஸ்கு நாடகம் ஒரு நாட்டார் நாடகம் என்பதன் அடிப்படையில் நாட்டார் வழக்காறுகளின் முக்கிய இயல்புகளில் ஒன்றான வட்டாரத் தன்மையை உள்வாங்கியுள்ளது. நடிகர்கள் கூட இது நடைபெறும் ஊரின் முகாமையான சாதியினராகவே உள்ளனர். வேறு சாதியினர் உள்ளே நுழைய முடியாது. சான்றாக காமநாயக்கன்பட்டி, காரங்காடு, மேட்டுப்பட்டி, இடைக்காட்டூர் ஆகிய ஊர்களின் பாஸ்கா நாடகக் குழுக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சாதி சார்ந்து இயங்குகின்றன. அரங்க அமைப்பு, நடித்தல், உரையாடல், ஆடை, ஒப்பனை என்பனவற்றிலும் வேறுபாடுகள் உண்டு.

இவ்வாறு வட்டாரத்தன்மைகொண்டிருந்தாலும் சமய நாடகம் என்பதால் நாடகத்தின் கதையில் மட்டும் மாறுபாடு கிடையாது. இருப்பினும் காமநாயக்கன்பட்டி நாடகத்தில் யேசுவை சிலுவையில் அறையச் செய்வதில் முன்நின்ற கைப்பாஸ் என்ற யூத மதக்குருவை நரகத்தின் தலைவனான லூசிபர் நரகத்திற்கு அழைத்துச் செல்கிறான் (இந்நாடகத்தின் பனுவல் இலங்கையின் குருநகர் என்ற தீவில் உருவானது). இச்செய்தி விவிலியத்தில் இடம் பெறவில்லை.

ஒரு புனிதரின் கொலைக்கு உடந்தையாக இருந்தவன் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நாட்டார் நீதியின் (*Folk Justice*) பாற்பட்டது என்று இதைக் குறிப்பிடலாம். சில நேரங்களில் மற்றொன்று விரித்தல் (*digression*) என்ற உத்தியின் துணையால் சில விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதுண்டு. இது நாடகம் நிகழ்த்தப்படும் களத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதால் நாடகப் பனுவலில் இடம்பெறுவதில்லை. வாய்மொழிப் பனுவலாகவே இடம்பெறுகிறது. அடுத்த ஆண்டு இது இடம்பெறாமலும் போகலாம். இதனால் எழுத்து வடிவிலான நிலைத்த பனுவல் (*Fixed Text*), மற்றொன்று விரித்தலுக்கு ஆட்பட்டு நிலைத்த பனுவலில் அவ்வப்போது இடம்பெறும் வாய்மொழிப் பனுவல் என இருவகைப் பனுவல்கள் உருவாகிவிடுவதும் உண்டு. வாய்மொழிப் பனுவல்கள் வழி வெளிப்படும் மற்றொன்று விரித்தல் பெரும்பாலும் சமயப் பணியாளர்கள், மேட்டிமையோர், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை மையமாகக் கொண்டே உருவாகிறது. இவர்களை நேரில் விமர்சிக்க முடியாத நிலையில் மற்றொன்று விரித்தல் துணைபுரிகிறது.

இவற்றை எல்லாம் விரிவுபட எடுத்துரைப்பின் முன்னுரை நீண்டுவிடும். இதைத் தவிர்க்கும் முகமாக இந்நூலின் இறுதி இயலாகவும் முக்கியப் பகுதியாகவும் விளங்கும் "சமுதாய அரங்கியலும் பண்பாட்டு அரசியலும்" என்ற இயல் நுவலும் செய்திகளைக் காண்போம்.

• •

**நூ**ல் தலைப்பின் இறுதியில் இடம்பெற்றுள்ள அரசியல் என்ற சொல் கட்சி அரசியலைக் குறிக்கவில்லை என்பது வாசகர்கள் பலருக்கும் தெரிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. நாடகமும் அரசியல் பின்புலத்தைக் கொண்டதல்ல என்பதும் வெளிப்படை. அவ்வாறாயின் இச்சொல் வெளிப்படுத்தும் அரசியல்தான் யாது? என்ற வினா எழுவது இயற்கை. இங்கு கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகார மையத்திற்கும், இதற்கு வெளியில் நிற்கும் சாமானியக் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் பாஸ்கு நாடக நிகழ்வை மையமாகக் கொண்டு உருவாகும் முரண்பாடு முக்கியக் காரணமாக அமைகிறது. இம்முரண்பாட்டை அறிய பாஸ்கு நாடகம் தமிழ்க் கிறித்தவத்தில் அறிமுகமான காரணத்தை அறிந்து கொள்வது அவசியமாகிறது.

தமிழ்நாட்டின் நிறுவனச் சமயங்களான சைவம் வைணவம் என்ற இரண்டும் தேரோட்டம், சப்பர உலா என்ற இரண்டையும் வெகுமக்களின் பங்களிப்புடன் நடத்தின. இது திருக்கோயில்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும் கணத்தாரின் கட்டுப்பாட்டில் நிகழ்ந்தது. இவை இரண்டிற்கும் தேவையான உடலுழைப்பை நல்குவதே உழைக்கும் மக்களின் கடமையாயிற்று.

கதாகாலட்சேபம், கூத்து நாடகம், ஈட்டியம், இசை என்பனவற்றை நடத்தியபோது உழைக்கும் மக்கள் பார்வையாளர்களாயினர். சமய நம்பிக்கை என்பதுடன் பொழுதுபோக்குத் தன்மையும் இதில் இணைந்திருந்தது. இம்மக்களில் கிறித்தவர்களாக மாறியோர், வழக்கம்போல பார்வையாளர்களாகச் செல்லத் தொடங்கினர். பழைய சமய நம்பிக்கைக்கு அவர்கள் திரும்பிவிடக் கூடாது என்றஞ்சிய தொடக்ககால காலனியவாதிகள், எழுத்தறிவு மறுக்கப்பட்டிருந்த மக்கள் திரளுக்குச் சமயமும் பொழுதுபோக்கும் இணைந்த ஒரு கலைவடிவத்தை உருவாக்கினர். இக்கலைவடிவம் மரப் பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட பொம்மலாட்டமாக அமைந்தது. இது அறிமுகமான காலத்தில் போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்கக் குருக்கள் மறைப் பணியாற்றி வந்தனர் (தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பெரியதாழை என்ற கடற்கரைச் சிற்றூரில் பொம்மை பாஸ்கா நாடகத்தைப் பார்த்த டேனிஷ் குஷன் என்ற பாதிரியார், தாம் பார்த்த பொம்மை பாஸ்கா குறித்து விரிவாக எழுதியுள்ளார்).

பின்னர் பாஸ்கு நாடகம், வாசாப்பு (வாசகப்பா) நாடகம், மேடை நாடகம் என்ற வடிவங்களாக வளர்ச்சியுற்றது.

பாஸ்கு நாடகத்தின் மையப் பாத்திரமாக விளங்கும் யேசு சிலுவையில் அறையுண்டு இறப்பை எதிர்கொள்கிறார். இது ஒருவகையில் கொலைக்காட்பட்டமையை ஒத்ததுதான். அவரது நேரடிச் சீடர்களான பேதுரு (பீட்டர்), யாக்கோபு (*Jacob*), தோமையர் ஆகியோரும் பின்னர் கொலைக்கு ஆட்பட்டனர். ஆதிக் கிறித்தவம் பரவியபோது சமயக் குருக்கள், அதைத் தழுவியோர், ஆகியோரில் சிலர் சித்திரவதைகளுக்கும் கொலைக்கும் ஆளாயினர். இவர்களுள் சிலரை வேதசாட்சி (*Martyr*), புனிதர் (*Saint*) என்றழைத்துக் கத்தோலிக்கத் திருச்சபை சிறப்புச் செய்தது. தமிழ் நாட்டின் சைவம் வைணவம் என்ற இரு சமயங்களும் முறையே நாயன்மார், ஆழ்வார்கள் என்ற சமயப் பணியாளர்களைக் கொண்டு விளங்கினாலும் இத்தகைய முறை இடம்பெறவில்லை. இது போல் சைவத்தின் சிவனும் வைணவத்தின் விஷ்ணுவும் யேசுவைப் போல் கொலைக்கு ஆளாகாவில்லை. இவர்கள் தம் எதிரிகளை அழித்தவர்களே தவிர எதிரிகளால் கொல்லப்பட்டவர்களில்லை. ஆனால் இதற்கு நேர்மாறாக, தமிழ்நாட்டின் நாட்டார் சமய (*Folk Religion*) நெறியின்

கவிதை: ச.ஆனந்தகுமார்



# காத்திருப்பு

சுனைகள் மலடாகி
வெயிலறைகிற பாறைகளில் விரவிக்கிடக்கிற
வெப்பவானிலை மாறுமென்கிற ஏக்கம் போல்..

கிளைகள் விரிக்கும்
ஒற்றை மரமொன்றுத்தேடி
நெடுந்தூரம் பயணிக்கும்
பறவையொன்றின் ஆயாசம் போல...

சுழிக்காற்று கடந்து மௌனமணிந்த
ஆழ்கடலில் மூழ்கடிக்கப்பட்டு
சுவாசம் தேடித் திணறும்
உயிரைப் போல்..

முதுகில் விழுப்புண் வாங்கி
களிறின் காலில் மிதிபடாமல்
வடக்கிருத்தலின் மத்தியில்
இரக்கமற்ற காலத்தை
சபிக்கிற அரசன் போல்..

யாமத்தில் யாக்கையின்
துயர்தாளாது பிரிவின்
நரகத்தில் உழல்கிற மனம்போல்..

காற்றில் எழுதிய வார்த்தைகள்
காணாமல் போனதுபோல்..

படைப்புகள் அனுப்பிவிட்டு
பதிலுக்காய்
நம்பிக்கை நிறைத்து
காத்திருக்கிறான் படைப்பாளி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளர்கள் அமைந்தனர். இவர்களில் ஒரு சிலர் தற்கொலை செய்து பின்னர் கடவுளாக்கப்பட்டவர்கள். பெரும்பாலோர் போரில் பங்கேற்றும், எதிரிகளின் சூழ்ச்சிக்கும் ஆதிக்கச் சாதியினரின் பகைமை அல்லது பொறாமைக்கு ஆளாகியும் சாதி மீறிக் காதலித்தும் கொலைக்கு ஆளானவர்கள். கொலையுண்டபின் இவர்கள் ஆவி வடிவில் சைவ வைணவச் சமயங்களின் கடவுளர்களிடம் சென்று வரம் பெற்றுத் தம் எதிரிகளை அழிக்கத் தொடங்குவர். அச்சமுற்ற எதிரிகள் இவர்களிடம் சரணடைந்து இவர்களை வணங்குவதாகக் கூறி பீடமோ சிலையோ அமைத்து வழிபடத் தொடங்குவர். இத்தெய்வங்கள் உருவாக்கத்தில் ஒரு நுண்ணரசியல் உள்ளது. கொலையுண்டு இறந்த ஆவிக்கு சிவன், காளிதேவி போன்ற தெய்வங்களின் துணையால்தான் ஆற்றல் வருகிறது. இதனால் இத்தெய்வங்கள் ஆற்றல் குன்றிய தெய்வங்கள் என்றாகிறது. இது காரணம் பற்றியே திருநாவுக்கரசர் "சிறு தெய்வம்" என்று பெயர் சூட்டியுள்ளார். இவ்வழிபாட்டு நெறி சிறு மரபு (*Little Tradition*) என்றும் நிறுவனச் சமய நெறி பெருமரபு (*Great Tradition*) என்றும் அழைக்கப்படுகிறது.

ஆதிக் கிறித்தவம் அடிமைகள் போன்ற ஒடுக்கப்பட்டோரின் சமயமாக விளங்கியது போன்று தமிழகத்தில் பரவிய தொடக்ககாலக் கிறித்தவம் அடித்தள மக்களது சமயமாகவே விளங்கியுள்ளது. அதன் காலனியச் சார்புநிலைப்பாடு ஒரு பக்கம் என்றால் மற்றொரு பக்கம் புதிய கிறித்தவர்களுக்குச் சில பண்பாட்டு அடையாளங்களையும் சமூக நீதியையும் பெற்றுத் தருவதில் துணை நின்றுள்ளது. இப்புதிய கிறித்தவர்களில் பெரும்பாலோர் மேலே குறிப்பிட்ட நாட்டார் சமய நெறி சார்ந்தவர்கள். இவர்களது தெய்வங்கள் மனிதர்களாக வாழ்ந்து கொலையுண்டு பின்னர் தெய்வமானவர்கள்.

இங்கு கிறித்தவத்தின் முக்கிய அடையாளமான யேசு கொலையுண்டவர்தான். வேதசாட்சிகள் சமயத்திற்காக உயிரை அர்ப்பணித்தவர்கள். புனிதர்களிலும் கொலையுண்டு இறந்தோர் உண்டு. கொலைக்கு ஆளாதல் - பின்னர் தெய்வமாதல் என்ற தமிழக நிகழ்வுகள் அடித்தள மக்களையும் கிறித்தவத்தையும் இணைக்கும் சரடாகியுள்ளன. ஆனால் தமிழக நாட்டார் சமய நெறிக்கும் கிறித்தவத்திற்கும் இடையே இறையியல் பார்வையில் ஆழமான வேறுபாடு உண்டு. என்றாலும் உளவியல் இணைப்பாக இதைக் கொள்ளலாம்.

அடுத்து தமிழர்களின் தாய்த்தெய்வ வணக்கம் என்பது யேசுவின் அன்னை மரியாளின் வழி வெளிப்படுவதையும் குறிப்பிடலாம். இதன் தாக்கம்தான் பாஸ்கா நாடகத்தில் அல்லது புனித / பெரிய வெள்ளிக்கிழமையன்று தேவாலயத்தில் சிலுவைப்பாதை நிகழ்வில் வியாகுல மாதா புலம்பல் கூட்டாகப் பாடப்படுவது.

அடித்தள மக்களின் மண்சார்ந்த இவ்வுறவுகளை மட்டுமின்றி பாஸ்கா அரங்கம் அவர்களுடையதாக இருந்ததையும் குறிப்பிட வேண்டும். ஆனால் பாஸ்கா அரங்கின் "இறைமக்கள்" குழு மீது போர்ச்சுக்கீசியர் காலம் தொட்டு இன்று வரை கத்தோலிக்கத் திரு அவையின் அதிகார அரசியல் ஆதிக்கம் செலுத்தி வந்ததையும் அது பாஸ்கா அரங்கில் ஏற்படுத்திய தாக்கங்களையும் நூலாசிரியர் பதிவிட்டுள்ளார். எல்லாவற்றையும் விட யேசு உயிர்த்தெழுந்ததை நினைவுகூரும் ஈஸ்டர் பண்டிகையை அடுத்து பாஸ்கா நாடகம் நடத்தும்படி இட்ட கட்டளையைக் கூறலாம். சடங்குடன் இணைந்திருந்த ஓர் அரங்கைச் சடங்கிலிருந்து பிரித்து உளவியல் அடிப்படையில் பார்வையாளருக்கும் அரங்கிற்கும் இடையே பிளவை ஏற்படுத்திய செயலாக இது அமைந்தது. இதையும் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார். ஐரோப்பிய நாடகமுறையை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பாஸ்கா அரங்கை "இந்த நாடக முறைமை மக்களின் அதிகார மையத்தை உடைத்து தேவாலய மையத்தை உருவாக்கியது" என்று துணிச்சலாகக் குறிப்பிட்டுள்ளார்.

யாழ் திருமறைக் கலாமன்றத்தின் நிறுவனர் மரிய சேவியருக்குப் பாஸ்கு நாடகம் நடத்த யாழ்ப்பாண ஆயர் நிதி உதவி செய்தது குறித்து ஆசிரியர் கூறும் செய்திகள் அழுத்தமானவை.

தமிழக நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் வாய்மொழி வழக்காறுகளில் ஒன்றான நாட்டார் பாடல்களையே ஆய்வுப்பொருளாகக் கொண்டிருந்தன. நாட்டார் நிகழ்த்துக் கலைகளில் ஒன்றான தோற்பாவை நிழற்கூத்தை ஆய்வுப் பொருளாக்கி முனைவர் மு.இராமசாமி முதல்முறையாக மடைமாற்றம் செய்தார். சிறுபான்மைச் சமயத்தினரின் வழக்காறுகள் கண்டுகொள்ளப்படாத நிலையில் தற்போது ஓரளவுக்கு மாற்றம் நிகழ்ந்து வருகிறது. இந்நூல் அதற்கான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும். இந்நூலாசிரியர் இப்பணியில் தொடர்ச்சியாக ஈடுபட வேண்டுகிறேன்.

முனைவர் விமல்ராஜ் அழகையாவுக்கு வாழ்த்துக்கள்.

•

**கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல், ஆய்வாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம்: **க. கணேசன்**



## சாதி ஒழிப்பு:

# இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பார்வையில்

**I.நூலின் அட்டைப் படம் சொல்லும் செய்திகள்.**

**1. இந்திய அரசியலமைப்புச் சட்ட முகப்புரை**

இந்திய நாட்டின் இறையாண்மையையும், தேச ஒருமைப்பாட்டையும் உயர்த்திப் பிடித்து, சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவற்றை வளர்த்தெடுக்க, இந்திய அரசியல் சாசன அமைப்பின் முகப்புரையில் உறுதிப்படுத்தும் ஜீவனான பண்புகளே இந்த "சாதிஒழிப்பு; அரசியல் அமைப்புச் சட்டத்தின் பார்வையில்" நூலின் முதன்மையான அடித்தளம்.

**2. அய்யன் திருவள்ளுவர்**

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய் தொழில் வேற்றுமையான்"**

என்ற மனிதனுக்கு மனிதன் யாரும் யாருக்கும் பிறப்பால் வேற்றுமையில்லை என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நெறிமுறை பாய்ச்சிய திருவள்ளுவர் தான் இந்த நூலின் அடித்தளத்தில் முதன்மையானவராகத் திகழ்கிறார்..

**3. அய்யா வைகுண்டர்**

"தாழக்கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்

மாளக்கிடப்பார் மதத்தார் என்மகனே" என்றும்

"சாதியெனும் பாம்பு சதி செய்யும் பாம்பு"

"சாதியொரு நிரப்பாய் தானாள்வாய் என்மகனே" என்றும்

அய்யா வைகுண்டர் படைத்த அகிலத்திரட்டு ஏட்டில் சாதி சமத்துவத்தைப் போதித்தவர், தனது இறுதி காலத்தில் நோய்வாய்ப்பட்டு இருக்கும்போது இறுதியாக பார்க்க வந்த பல சமூக மக்களிடம்

"ஒன்னு சொன்னதை ஒன்னு கேட்டு

ஒருவருக்கொருவர் நிரப்பாய் இருந்திடுங்கோ"

என்றும் போதனை செய்த தென்முனைச் சூரியன் அய்யா வைகுண்டர்.

**4..அருட்பிரகாச வள்ளலார்**

"கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போக" என்றும்

சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்

சாத்திரப் குப்பையும் தணந்தேன்"

என்றும், சாதியின்மீது சம்மட்டி கொண்டு அடித்தவர் வள்ளலார் சுவாமிகள்.

**5. சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்**

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர். முதன்முதலாக இந்தியாவில் மே தினத்தை சென்னையில் கொண்டாடியவர். சோசலிசப் புரட்சி ரஷ்யாவில் நடப்பதற்கு முன் இந்தியாவில்தான் நடந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்காமல் போனதற்கு இங்கிருக்கும் பிரத்யேகமான சாதிய முறைதான் தடையாக இருக்கிறது. என்று சாதியின் மிகப்பெரிய தடையைச் சுட்டிக்காட்டியவர் தோழர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்

**6. செக்கிழுத்த செம்மல் வ. உ. சிதம்பரனார்**

1927ல் சேலம் அரசியல் மாநாட்டில் அவர் பேசிய சுதந்திரப் போராட்ட உரையில் "ஆங்கிலேயரிடம் நாம் சுய அரசாட்சி கேட்கும்போது, அதற்கு நாம் தகுதியானவர்தானா? என்று கேள்வி கேட்டுவிட்டு, அதற்குப் பதிலாக "பெருந் தொகையினராயுள்ள ஜாதியார்கள் சிறு தொகையினராயுள்ள ஜாதியார்களைத் தாழ்த்தி, அவமதித்து, வருந்தும் சுபாவத்தை நம்மிற் பெரும்பாலோர் விட்டு விட்டனரா? என்று மனதில் உறுத்தும்படி கேட்டவர்தான் நமது கப்பலோட்டிய தமிழர் வ உ சி.

**7. தந்தை பெரியார்**

"சாதி ஒழியவேண்டும்.. அதை நிலை நிறுத்தும் சாத்திரங்களும் மனுதர்மமும் ஒழிய வேண்டும்." என்று சமத்துவ மருந்து ஊசியை மக்களிடம் செலுத்தியவர் தந்தை பெரியார். டாக்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பேத்கர் 1936ல் வெளியிட்ட "சாதி அழித்தொழிப்பு" நூலை முதல் முதலாக தந்தை பெரியார் தமிழில் வெளியிட்டவர்.

### 8. கர்ம வீரர் காமராஜர்

சாதிபேதத்தை தனது உணர்வில் கொண்டிருந்த அன்றைய சென்னை மாகாண முதலமைச்சர் ராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வித் திட்டத்தை, தந்தை பெரியாரோடு கைகோர்த்து விரட்டியவர் கர்மவீரர் காமராஜர்.

### 9.. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

.. தேவதாசி முறையும்,, பெண்ணடிமைக் கொடுமைகளும் சாதியக் கொடுமைகளுக்கு நிகரான கொடூரங்கள்தான். இவற்றை எதிர்த்துக் குரல் கொடுத்து சட்டமாக்கிய பெருமைக்குரியவர்.

### 10. பாபாசாகேப் டாக்டர் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர்

1916 லேயே அமெரிக்காவில் படிக்கும்போது கொலம்பியா பல்கலைக் கழகத்தில் " இந்தியாவில் சாதிகள்' அதன் அமைப்பியக்கம், தோற்றம், வளர்ச்சி" என்ற ஆய்வேட்டை சமர்ப்பித்தவர். 1936 ல் "சாதி ஒழிப்பு" என்ற நடைமுறை சாத்தியப்பாட்டுக்கான ஆய்வு நூலை வெளியிட்ட மாமேதை பாபாசாகேப் டாக்டர் பி. ஆர். அம்பேத்கர். சாதி ஒழிப்பையே உயிர் மூச்சாகக் கொண்ட பாபாசாகேப் சாதி இழிவுகளிலிருந்து மக்களை விடுதலை செய்யவே சமத்துவ பௌத்தத்தை ஆறு லட்சம் மக்களோடு தழுவியவர்.

மேற்குறிப்பிட்ட மிகப்பெரிய சமூக அர்ப்பணிப்பு ஆளுமைகளோடு மகாத்மா ஜோதிராவ் பூலே, சாவித்திரிபூலே, உஸ்மான் ஷேக், பாத்திமா ஷேக், பகத்சிங், சுகதேவ், ராஜகுரு ஆகியோரின் தியாகத் தடங்களும்தான் இந்நூலுக்கான் அடித்தளம் ஆகும்..

## II. இந்நூல் பிறந்ததற்கான பின்னணி

1. இந்த நூலின் அட்டைப் படத்தில் பொறிக்கப்பட்டுள்ள இந்திய அரசியல் சாசன முகப்புரை
2. அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுகளான 14, 15, 16, 17,19, 21, 46 ஆகியவைகள்.
3. நாங்குநேரியில் மாணவர்களிடையே நடந்திட்ட சம்பவம்,
4. இதையொட்டி நாங்குநேரியில் பொதுப் பள்ளிக்கான மாநில மேடை நடத்திய கள ஆய்வு.
5. இந்தக் கள ஆய்வையொட்டி "சாதியெனும் தாழ்ந்தபடி நமக்கெல்லாம் தள்ளுபடி" என்ற பாரதிதாசனின் கவிதை வரிகள் தலைப்பில் பல இடங்களில் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோரின் ஈடுபாட்டோடு நடைபெற்ற கருத்தரங்கங்கள். அக்கருத்தரங்குகளில் ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் மூலம் கிடைத்த உற்சாகச் சிந்தனைகள் ஆகியவைகள்தான் இந்த நூல் உருவாகக் காரணம்..

## III. நூல் நோக்கம் பகுதி

நூல் நோக்கம் பகுதியில் நூல் தொகுப்பாளர் கல்வியாளர் பு.பா. பிரின்ஸ் கஜேந்திரபாபு விளக்கும்போது," பள்ளிகளில் படிக்கும்போதே மாணவர்கள் கற்றல் செயல்பாட்டைத் தொடங்கும் போதும், தொடரும்போதும், சமூகப் பாகுபாட்டைப் போக்கும் விதத்தில் கல்விச் சூழல் அமையவில்லை" என்று குறிப்பிட்டு, அதற்கு ஏராளமான காரணங்களைக் குறிப்பிடுகிறார்.

"அனைவரையும் கல்வி வளாகத்திற்குள் வரவழைத்து சமத்துவத்திற்கான புரிதல் கொண்ட கற்றறிந்த மாந்தர்களை உருவாக்குவதே சமூகநீதி. அதற்கு நேரெதிராக "வளாகமே இல்லாத கல்வி" என்ற நிலைக்கு இந்தியாவை இட்டுச் செல்கிறது கல்வி மறுப்பு அரசியலின் நவீன வடிவமான தேசியக் கல்விக் கொள்கை 2020"

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், சமூகப் பாகுபாடுகள் ஆகியவை அனைவருக்கும் சமத்துவமான வாழ்க்கை முறைக்குப் பெரும் இடையூறாக அமைகின்றது.

"பாகுபாடுகள் நிறைந்த சமூகக் கட்டமைப்பில் இருந்து பள்ளிக்கு வரும் குழந்தைகள் பாகுபாடுகளைக் களையும் பெரும் ஆற்றலைப் பெற கல்வி நிலையங்கள் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். அத்தகைய பெரும் பொறுப்புடைய கல்வி வளாகங்களில் மாணவர்கள் சாதிய ரீதியாக அணி திரள்கிறார்கள் என்பது வேதனைக்குரியது என்பது மிகவும் வேதனை செய்தி"

"புத்தர், திருவள்ளுவர் உள்ளிட்ட சமூக விஞ்ஞானிகள் முன்வைத்த "சமூக உரையாடல்" கோட்பாட்டின் அடிப்படையில் பொதுப்பள்ளிக்கான மாநில மேடை மக்களுடன் சாதி ஒழிப்பிற்கான உரையாடலைத் தொடங்குகிறது." உட்பட பல காரணங்களை நூல் நோக்கப் பகுதியில் விரிவாகக் காண முடியும்.

## IV பரப்ப வேண்டிய கும்மி நடனப் பாட்டு

அடுத்த பகுதியாகக் கருத்தரங்கிற்கும், பள்ளிகளில் பொது விழிப்புணர்வு மேடைகளிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடி நடனம் ஆடுதற்கும் ஒரு பாடல் தயாரிக்கப்பட்டது. இந்தப் பாடல் கருத்தரங்கம் நடத்திய பல மாவட்டங்களில் பெற்றோர், ஆசிரியர் உதவியோடு மாணவிகள் நடன நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர். அந்தப் பாடல் இந்நூலில் இடம்பெற்றுள்ளது.தென்காசி மாவட்டக் குழந்தைகள் பள்ளிக் கல்வி அமைச்சர் முகாம் அலுவலகத்தில் அவரின் அலுவலக அறையிலேயே தன்னெழுச்சியாக நடத்திக்காட்டினர். இந்த நூலும் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### V. மாணவர்கள் ஆசிரியர்களுக்கான உறுதிமொழிகள்

மாணவர்களின் சாதி ஒழிப்பிற்கான உறுதிமொழிகள் ஆசிரியர்களுக்கான உறுதிமொழிகள் பகுதி மிகவும் முக்கியமான அம்சமாகத் திகழ்கிறது. இந்த உறுதிமொழிகளை இரு தரப்பினரும் ஏற்றெடுக்கும்போது, நிச்சயமாக அவர்களின் சிந்தனையில் ஒரு ஈர்ப்பை உருவாக்கும். சமத்துவ சமுதாயக் கற்றல் கற்பித்தல் திசையை நோக்கி உந்தித் தள்ளும் விதமாக அமைந்திருப்பது மிகவும் சிறப்பான பகுதியாகும்

### VI. .நாங்குநேரியில் களப்பணியில் கண்டறிந்த உண்மைகளும், அரசிற்கு கோரிக்கைகளும் என்ற மிகப் பெரிய ஆய்வுப் பகுதி இடம்பெற்றுள்ளது..

நாங்குநேரியில் வாழ்கின்ற பட்டியலின மக்களின் சமூகப் பொருளாதார நிலையை ஆய்வு செய்து விளக்குகிறது. தாக்குதலுக்கு உள்ளான மாணவனையும், தனது அண்ணனை வெட்ட வந்த அரிவாளைத் தடுத்து தங்கள் இருவரின் உயிரையும் காத்த தங்கையையும், இவர்களின் தாயாரையும் பார்த்து கேட்டறிந்த விபரங்களையும் எடுத்துக்காட்டுகிறது. தாக்குத்லை நடத்திய மாணவரின் பெற்றோரையும் பார்த்து அவர்கள் வெளிப்படுத்திய கருத்துகளையும் முன்வைக்கிறது. தாக்குலுக்கு உள்ளான மாணவர்களும், தாக்கிய மாணவனும் படிக்கும் பள்ளியில் சென்று தலைமையாசிரியர் மற்றும் சில ஆசிரியர்களையும் சந்தித்துக் கேட்ட கருத்துகளையும் அறிக்கைப் பதிவு செய்திருக்கிறது..

தாக்குதலுக்கு உள்ளாகி கடுமையாகத் தனது உடல்நிலையில் பாதிப்படைந்த மாணவர் மாணவிக்கு அவர்களின் மேற்படிப்புக்கும், பாதுகாப்புக்கும் அவர்களது குடும்பத்திற்கு வாழ்வாதாரத்திற்கும் உதவும் வகையில் அரசுக்கு நியாயமான கோரிக்கைகள் பலவற்றை விளக்கமாக இப்பகுதியில் முன்வைக்கிறது.

### VII பிஞ்சு நெஞ்சங்களில் சாதிய நஞ்சை வளர்க்கும் சூழ்ச்சிகளை முறியடிக்க தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ற அடுத்த பகுதி.

தனது ஆய்வு முடிவுகளையும், தமிழ்நாடு அரசுக்கு பல பரிந்துரைகளையும் வழங்குகின்ற அறிக்கையாக விரிவாக அமைந்துள்ளது. முன்வைத்திருக்கின்ற பரிந்துரைகளில் எந்த அம்சமும் தவிர்க்க முடியாததாக அமைந்துள்ளது.

.நாங்குநேரிப் பகுதியில் இளம் மாணவர்கள் மத்தியில் சாதியப் பாகுபாட்டு வன்முறைச் நிகழ்வு உணர்த்துவது என்ன என்பதற்கானச் சூழலை எடுத்துரைக்கின்றபோது, 1.சாதிய உணர்வைத் தூண்டுகின்ற உள்ளூர்க் காரணிகள், 2. பட்டியலின மக்கள் வாழும் பகுதிகளில், அவர்களின் வாழ்வாதார நலத்திட்ட உரிமைகளை அமுல்படுத்துவதில் போதாமை. 3. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுகள்14, 15, 16, 17, 19, 21 ஆகியவைகளை அமுல்படுத்துவதில் தேக்கம். 4. சாதியச் சங்கங்களின் தலைவர்களின் நடவடிக்கைகளும் போக்குகளும் ஆகியவற்றையும் விளக்குகிறது இந்த நூல்.

### VIII. சாதிய ரீதீயான வன்கொடுமைகளைத் தடுக்க அரசு மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகள்

மாநிலப் பள்ளிக் கல்வித்துறை, மாவட்டக் கல்வித் துறை, சமூகப்பாதுகாப்புத் துறை, சமூகநலத்துறை, உள்துறை, வருவாய்த்துறை ஆகியோருக்கான வேண்டுதல்களை முன்வைக்கிறது

பாதிக்கப்பட்ட இரு தரப்பு மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தவதை உறுதிப்படுத்தவது. பாதிக்கப்பட்ட மாணவர்களின் மன நலங்களைச் சீராக்குவது, இரு தரப்பு மாணவர்களின் படிப்பு முடிந்த பின்பு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வேலை அல்லது சுயதொழில் உதவிகளை அரசு வழங்குவது. பள்ளிகளில் பரவி வரும் சாதியப் பாகுபாட்டு வெறிச் சிந்தனைக்குக் காரணமாயிருக்கின்ற, சமூகப்புறச் சூழலையும் மாணவர்களிடம் விளக்குவது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடத்திட்டங்களில் சாதி ஒழிப்பு குறித்து அறிவியல் பூர்வமாகவும், சிந்தனையை மேம்படுத்தும் விதமாகவும் இணைப்பது, ஆகிய அம்சங்களடங்கிய 36 கோரிக்கைகளை அறிக்கையாக அரசிடம் முன்வைக்கிறது இந்த நூல். வாசகர்களாகிய பொது ஜனங்களையும் அறிவி ஜீவிகளையும் முற்போக்குச் சிந்தனாவாதிகளையும் கருத்தில் ஒன்றுபட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுப்பதிவு:



**பு**துச்சேரி அய்யா மாரியப்பனார் சுந்தராம்பாள் அறக்கட்டளை மற்றும் நண்பர்கள் தோட்டம் இணைந்து 15.11.2024 அன்று ஸ்ரீ ராஜராஜேஸ்வரி திருமண மண்டபத்தில், நூல் வெளியீடு, அரசு பொது தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பணப்பரிசு சான்றிதழ் வழங்குதல், சாதனையாளர்களுக்கு விருது வழங்குதல் என முப்பெரும் விழா நடைபெற்றது. மேற்கண்ட விழாவில் சென்னையில் இருந்து வெளிவரும் காக்கைச் சிறகினிலே நவம்பர் திங்கள் இதழை, புதுச்சேரி சட்டப்பேரவை உறுப்பினர் திருமிகு. மு. வைத்தியநாதன் அவர்கள் வெளியிட, புதுச்சேரி தமிழ்ச் சங்கச் செயலாளர் கல்விச்செம்மல் சீனு. மோகன்தாசு பெற்றுக் கொண்டார். தொடர்ந்து தமிழ்ச் சான்றோர்கள் மு. பாலசுப்பிரமணியன், ப. திருநாவுக்கரசு, யுகபாரதி, ந.மு. தமிழ்மணி, அ. உசேன், சுந்தர. முருகன், அறக்கட்டளை தலைவர் மா. மாரியப்பன், திருவண்ணாமலை வள்ளல்.மாதவ. சின்ராசு, மு. அருள் செல்வம், அகவை முதிர்ந்த தமிழறிஞர் நலச் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் இரா. துரைமுருகன் ஆகியோர் இதழை பெற்றுக் கொண்டனர். விழாவில் புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி கலந்துகொண்டு சாதனையாளர்கள் 15க்கு மேற்பட்டவர்களுக்கு விருது வழங்கினார்.

–இரா. துரைமுருகன்

---

செழுமைப் படுத்த இந்தக் களப்பணி நூல் அறைகூவி அழைக்கிறது..

### IX. கவனத்தை ஈர்க்கும் கட்டுரைகள்

சமூகச் செயல்பாட்டாளர்களிடமிருந்தும் கட்டுரைகள் பெறப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

"சாதியெனும் தாழ்ந்தபடி நமக்கெல்லாம் தள்ளுபடி" என்ற பொருளில் 6-1-2024 அன்று தென்காசியில் பொதுப்பள்ளிக்கான மாநில மேடை சார்பில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. அதையொட்டி தென்காசி மாவட்டம் முழுவதும் உள்ள பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் ஓவியப்போட்டிகளும், கட்டுரைப் போட்டியும் நடத்தப்பட்டன. பாரதி, பாரதிதாசன், வள்ளலார், ஆகியோரின் கவிதைகளில் சாதி சமத்துவ வரிகளிலும், உழைக்கும் வர்க்கமென அணிதிரள்வோம் என்ற பொதுத் தலைப்பிலும் கட்டுரைகளுக்குத் தலைப்பு கொடுக்கப்பட்டன. அதில் பெற்றோர்களுக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டது. ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஆசிரியப் பெருந்தகைகளும் கட்டுரை வழங்கினர். தேர்வு செய்யப்பட்ட 31 சிறந்த கட்டுரைகள் இந்த நூலில் இடம் பெற்றிருக்கின்றன..

"கருதுக செயல்படுக" எனும் தலைப்பில் பொதுப்பள்ளிக்கான மாநில மேடை அமைப்பின் தலைவர் பேரா. பி. இரத்தினசபாபதியின் கட்டுரை, சாதி ஒழிப்புக்கான இயக்கத்திற்கும், காலங்காலமாக கல்வியிலும் சாதிய ஒடுக்குமுறையென்ற இழிவிலும் வீழ்ந்தோரை உயர்த்திவிட முன்னுரிமை வழங்கும் சான்றிதழ் வழங்குவதற்கும் சம்பந்தமில்லை என்பதை பளிச்செனச் சுட்டிக்காட்டுகிறது.

சாதிப்பற்று என்ற பெயரில் இளம் நெஞ்சங்களில் சாதிவெறி என்ற நஞ்சைத் தெளிக்கும் வஞ்சகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய உறுப்பினர் ஒவ்வொருவரும் அகற்ற முன்வரவேண்டும் என்ற அறைகூவலை இலக்கியச் சுவையோடு முன்மொழிகிறது இக்கட்டுரை.

“பூங்குன்றனாருக்கு உலகெல்லாம் உறவினர்- ஆப்பிரிக்காவில் வேர்” என்ற தலைப்பில் பேராசிரியர் பா. தயானந்தன் அவர்களின் நீள் கட்டுரை காலத்திற்கேற்றபடி இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

“நம்மைப் போன்ற நவீன கால மனித இனம் ஆப்பிரிக்காவைத் தவிர வேறு எங்கும் வாழாத காலம் அது. ஆப்பிரிக்கா ஒரு இருண்ட கண்டம் என்று ஏளனம் செய்து, காலனித்துவப்படுத்தி, ஒரு கோடிக்கும் மேல் தங்கள் சொந்த தொலைதூர உறவினர்களை அடிமைப்படுத்தியவர்கள் உட்பட, ஆப்பிரிக்கா அனைத்து மனிதர்களின் பிறப்பிடமாகும்” என்பதை அறிவியல் பூர்வமாக விளக்குகறது..நால்வர்ண முறையையும், சாதி அமைப்பு முறையையும் இக்கட்டுரை கேள்விக்கு உட்படுத்துகின்றது. இக்கட்டுரை வாசகர்களை நிச்சயம் பாகுபடுத்தும் சாதிய உணர்வுச் சட்டையைக் கழட்டி எரியத் தூண்டும்.

“ஒரு தாய் மக்கள் நாம் என்போம்” என்ற பேரா. முனைவர் கு. இரவிக்குமார் அறிவியல் செயல்பாட்டாளர் வடித்த, சார்லஸ் டார்வினின் பரிணாமக் கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்டது. உயிரினங்களின் பரிணாமத்தை ஆய்வு செய்த உயரிய முயற்சிகளை விவரிக்கிறது..

இந்தக் கட்டுரை சமீபத்திய ஆய்வுகளையும் இணைத்திருப்பதால் “எல்லா மனிதர்களும் ஒரு பொதுவான மூதாதையரிடமிருந்து தோன்றியுள்ளோம். இந்த இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட பல்வேறு அறிவியல் வளர்ச்சிகளின் மூலம் நம்மால் இதை இன்று சான்றுகளுடன் நிறுவ முடியும் என்ற சிந்தனையை விதைக்கிறது.

ஆசிரியர் க. பிச்சைக்கனியின் “சமூகக் கட்டமைப்பும் கற்றல் செயல்பாடுகளும்” என்ற கட்டுரை. “சமூகத்தில் இருக்கின்ற சாதியை, மாணவர்களை உணரச் செய்து, சாதியை அறிவியல் பூர்வமாக அணுகி, அதை எப்படித் தகர்க்க வேண்டும் என்பதை ஆசிரியர் பயிற்சியின்போது மிகத் தெளிவாகப் பயிற்சி வழங்க வேண்டும். ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் இந்தச் சமூகத்தைக் கட்டமைக்கும் பொறுப்புமிக்க சமூக விஞ்ஞானிகள் என ஒவ்வொரு ஆசிரியரையும் உணரச் செய்யவேண்டும்” என்பது உள்ளிட்ட நடைமுறை சாத்தியமுள்ள பல வழிகாட்டல்களை நமக்கு வழங்குகிறது.

கட்டுரைகள் அனைத்தையும் ஊன்றிப் படித்தால், கலந்துரையாடல் மாதிரியே நமக்குப் புலப்படும். ஒருவர் ஒரு கட்டுரையில் அவர் மனதில் பட்ட சமூகப் பொதுப்புத்தியில் இருப்பது வெளிப்படும்போது, இன்னொருவரின் கட்டுரையைப் படிக்கும்போது அதற்குச் சரியான ஏதார்த்தமான அல்லது அறிவியல் பூர்வமான பதில் வருவதாகவே அமைந்திருக்கிறது. வாசிப்பவர்களால் பொருத்திப் பார்க்க முடியும் எனக் கருதுகிறேன்.

**முடிவுரையாக**

இந்த நூலைத் தமிழ்நாடு அரசின் கவனத்திற்குப் பொதுப்பள்ளிக்கான மாநில மேடை சார்பாகவும், தென்காசி மாவட்ட மாணவர்கள் சார்பாகவும் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

அரசு பாடத்திட்டத்தில் சாதி ஒழிப்பு பற்றி சேர்க்க வேண்டும் என வலியுறுத்தி கருத்தரங்கங்கள் சென்னையில் பொதுப்பள்ளிக்கான மாநில மேடை நடத்தியுள்ளது. இந்த நூலில் இடம்பெற்றுள்ள சிறப்புக் கட்டுரைகளையும், ஆசிரியர் மாணவர் பெற்றோரின் கட்டுரைகள் சிலவற்றைப் பள்ளி கல்லூரிகளில் பாடத்திட்டத்திற்குப் பொருந்தும்படி தமிழ்நாடு அரசு இணைத்தால் மிகச் சிறப்பாக இருக்கும். இந்நூல் இளம் நெஞ்சங்களில் சாதி ஒழிப்புச் சிந்தனையை நடைமுறைப் படுத்தும் வழிகாட்டியாக இந்நூல் நிச்சயம் அமையும்.

தமிழ்நாடு அரசு 1989-90 ஆண்டுகளில் எண்ணறிவும் எழுத்தறிவும், விழிப்புணர்வும் அடங்கிய அறிவொளி இயக்கம் நடத்தியதைப் போல தமிழ்நாடெங்கும் “சாதி ஒழிப்பு” இயக்கம் நடத்துவது சீர்திருத்தவாதிகளின் கனவை நனவாக்குவதோடு, இந்திய அரசியல் சாசனத்தை நாடெங்கும் பரப்பி இந்திய இறையாண்மையை உயர்த்திப் பிடிப்பது தமிழ்நாட்டின் சமூக- அரசியல் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை நிற்கும். தமிழ்நாட்டின் இச்செயல்பாடு இந்தியா முழுவதும் ஆக்கபூர்வமான தாக்கத்தை உருவாக்கும். நாடு சிறக்கும்.

நூலின் தொகுப்பாசிரியர்:
கல்வியாளர் பு. பா. பிரின்ஸ் கஜேந்திரபாபு
வெளியீடு : சிந்தன் புக்ஸ்
பக்கம் 216 விலை ரூ. 225
நூல் கிடைக்குமிடம்:
சிந்தன் புக்ஸ், 327 / 1 திவான் சாகிப் தோட்டம்
டி டி கே சாலை ராயப்பேட்டை, சென்னை 14
தொலைபேசி; 044-28114164 கைபேசி; 9445 123 164
மின்னஞ்சல்; kmcomrade@gmail.com

•

*கட்டுரையாளர்: பேராசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை: மலையாள மூலம் : மோபின் மோகன் தமிழில் : பா.ஆனந்தகுமார்

# மிஷன் நேஷனல் பார்க்

முகநூலில் வந்த ஓர் இணைப்பின் மூலம் உலகத்திலேயே மிகவும் அழகான பத்துத் தேனிலவு மையங்களைப் பற்றிய கட்டுரையை வாசித்துக் கொண்டிருந்த போதுதான் அஸ்வின் குமாருக்கு விஷால் சக்ரவர்த்தியின் அழைப்பு வருகிறது. வியப்பு கலந்த ஆவலுடன் அவன் அலைபேசியைச் செவியோடு சேர்த்தான். எதிர்முனையில் இருந்து வட இந்தியச் சுவையுள்ள மலையாளம் முழங்கியது.

'ஹலோ அஸ்வின் குமார், நமது அடுத்த மிஷன் ஆரம்பிக்கிறது. மிஷன் நேஷனல் பார்க். கூடுதல் விபரங்களை இப்போதே நான் மெயில் பண்றேன். பை..' அளவான வார்த்தைகளிலான சுருக்கமான உரையாடல் என்றாலும் அஸ்வின் குமார் அந்த ஏசி அறையில் இருந்தும் வியர்வையில் குளித்தான்.

கம்பெனியின் வற்புறுத்தலால் தனியாக உருவாக்கப்பட்ட மின்னஞ்சல் கணக்கைத் திறந்து வைத்து விஷால் சக்ரவர்த்தியின் மின்னஞ்சல் வருகைக்காகக் காத்திருந்தான். மூன்று மாதங்களுக்கு முன்னர் தான் கடைசியாக விஷால் சக்ரவர்த்தியின் அழைப்பு வந்தது. சரியாகச் சொன்னால் ஜூன் பதினாறில். மிஷன் நாராயண் ராவுடன் சம்பந்தப்பட்டதாக இருந்தது அது.

கேம்பஸ் செலக்சன் மூலமாக அஸ்வின் குமாருக்கு கம்பெனியில் வேலை கிடைத்தது. கல்வித் தரங்களில் பின்னால் இருந்தும் கெட்டிக்காரர்களான பல மாணவர்களையும் பின்னுக்குத் தள்ளி இம்பாக்ட் என்ற மல்டி நேஷனல் கம்பெனி, நான் கனவில் கூட நினைத்துப் பார்க்காத சம்பளத்தில் என்னைத் தேர்ந்தெடுத்தது எந்த அடிப்படையில் என்பது அன்றொரு கேள்வியாக அஸ்வின் குமார் மனதில் எழுந்தது. அந்தக் கேள்வியின் முனையை ஒடித்தது, மிஷன் நாராயண் ராவினுடைய வெற்றியோடாக இருந்தது.

வேலை கிடைத்ததற்குப் பின்னர் கம்பெனியுடனான அனைத்துத் தொடர்புகளும் விஷால் சக்ரவர்த்தியோடு மட்டும் தான் இருக்கிறது. ஆனால் ஒரு முறை கூட விஷால் சக்ரவர்த்தியை நேரில் கண்டதில்லை. ஆக இருப்பது நிமிடங்கள் மட்டுமே அளவுள்ள விஷால் சக்ரவர்த்தியினுடைய அரிதாகவரும் அலைபேசி அழைப்புகளும் பிறகு மின்னஞ்சல்கள் மட்டும். பெயரைக் கேட்கும் போது ஒரு வங்காளி என்று தோன்றினாலும் இவ்வளவு நன்றாக விஷால் சக்ரவர்த்தி எப்படி மலையாளத்தில் பேசுகிறாரென்று அவன் யோசித்ததுண்டு. ஆனால் உரையாடல்களுக்கு இடையே அத்தரத்திலான குசல விசாரணைகளுக்கு விஷால் சக்ரவர்த்தி வாய்ப்பு கொடுத்ததில்லை.

கேம்பஸ் இண்டர்வியூவிற்கு இரண்டு நாட்கள் கழித்து தான் முதன் முதலாக விஷால் சக்ரவர்த்தியின் அழைப்பு வந்தது. கொச்சியில் காக்கநாடில் உள்ள மூர்த்தி பில்டர்ஸின் நான்காம் தளத்திலுள்ள அனைத்துத் தளவாடங்களையும் கொண்ட ஒரு அபார்ட்மெண்ட் தான் அலுவலகம் என்றும் அஸ்வின் குமார் மட்டுமே இப்போது கம்பெனியின் ஊழியராக இருக்கிறார் என்றும் செக்யூரிட்டி அதிகாரி கையிலிருந்து சாவியை வாங்கிக் கொள்ள வேண்டுமென்று இருந்தது கம்பெனியின் அறிவுறுத்தல். உடனடியாக சில பிராஜெக்ட்டுகளை கையிலெடுக்க வேண்டியதிருக்கும் என்று விஷால் சக்ரவர்த்தி முன்னறிவிப்பும் கொடுத்திருந்தார்.

அப்படியாக ஆயிரத்திற்கும் அதிகமான சதுர அடிகள் கொண்ட அந்தப் பெரிய அலுவலகத்தில் அந்த ஒற்றையாள் வாழ்க்கை நடத்தத் தொடங்கினான். முதல் இரண்டு மாதங்களும் கம்பெனியில் இருந்து தனிப்பட்ட அறிவிப்புகளோ பிராஜெக்ட்டுகளோ வரவில்லை. ஒவ்வொரு வாரமும் விஷால் சக்ரவர்த்தியின் மின்னஞ்சல் வரும். 'அவர் மிஷன் வில் பீ ஸ்டார்ட்டட் ஸூன்' குறிப்பிட்ட வேலை ஒன்றும் இல்லாவிட்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வங்கிக் கணக்கிற்குச் சம்பளம் சரியாக வந்தது, இரண்டு தடவையும். மூன்றாம் மாதம் மிஷன் நாராயண் ராவினைப் பற்றிச் சொல்ல விஷால் சக்ரவர்த்தியின் அழைப்பு வந்தது. தொடர்ந்து மிஷனைப் பற்றி விரிவாக விளக்கிக் கொண்டு மின்னஞ்சலும் வந்தது.

மிஷன் நடத்த வேண்டியது புனேயில் ஷிரூரை அடுத்துள்ள கோண்டாபுரி என்ற கிராமத்தில் இருந்தது. மராத்தா பேஷ்வாவாக இருந்த நாராயண் ராவின் ஒரு வெண்கலச் சிலை அங்கே வைக்கப்பட்டிருந்தது. அதனை எந்த வழியிலாவது கொச்சி துறைமுகத்திற்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதாக இருந்தது மிஷன். பரஸ்பர அறிமுகம் இல்லாத ஏராளமான கண்ணிகள் நாட்டில் அங்குமிங்கும் கம்பெனிக்கு இருக்கிறதென்பதை அவன் அறிந்தது அந்த மிஷனோடாக இருந்தது. அடுத்த நாள் கம்பெனி வாகனம் மூர்த்தி பில்டர்ஸின் முற்றத்தை அடைந்தது. ஓட்டுநர் ஒரு சீக்கியனாக இருந்தான். அந்த வாகனத்தில் தான் அவன் கோண்டாபுரியை அடைந்தான். கிராமவாசிகள் ஒரு தெய்வீகக் களையை அந்தச் சிலைக்கு வழங்கி இருந்தனர். அந்தச் சிலையை எப்படிக் கொச்சி துறைமுகத்திற்குக் கொண்டு செல்வது என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாக இருந்தது. விபரங்களை அவன் விஷால் சக்கரவர்த்திக்கு சரியான இடைவேளைகளில் மின்னஞ்சல் செய்து கொண்டிருந்தான்.

நாராயண் ராவின் பழைய வெண்கலச் சிலைக்குப் பதிலாக புதிய வெண்கலச் சிலை என்ற சலுகைக்கு ஊர் பெரிய மனிதர் வாயிலாக கிராமத்துவாசிகளை சம்மதிக்க வைப்பதில் அஸ்வின் குமாரின் கூர்மதி வெற்றி பெற்றது. மிஷனுக்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவளிக்கலாம் என்ற விஷால் சக்ரவர்த்தியின் உறுதிமொழி தான் அவனுக்கு ஊக்கம் தந்தது. அப்படியாக இருபத்தைந்தாம் நாள் பழைய வெண்கலச் சிலைக்குப் பதிலாக புதிய சிலை கம்பெனி வாகனத்தில் கிராமத்தை அடைந்தது. அன்றிரவே பழைய சிலையுடன் அஸ்வின் குமார் கொச்சிக்குத் திரும்பினான். வழி நெடுக காவல் சோதனைச் சாவடிகள் இருந்தபோதிலும் கம்பெனி வாகனத்தை தடுக்கவில்லை. கொச்சியை அடைந்த போது விஷால் சக்ரவர்த்தியின் அழைப்பு வந்தது.

"மிஷன் நாராயண் ராவு ஆபரேஷன் வெற்றி பெற்றுள்ளது. வாழ்த்துக்கள் தங்களுக்கு. இனி வாகனத்தில் இருந்து இறங்கலாம். மிஷனை வெற்றி பெறச் செய்தமைக்கான சன்மானம் உடனே கிடைக்கும். "

வண்டியில் இருந்து இறங்கியபோது சீக்கியன் முதன் முதலாக அவனைப் பார்த்துச் சிரித்தான். அலுவலகத்தை அடைந்தபோது விஷால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்ரவர்த்தியின் மின்னஞ்சல் வந்திருந்தது. மிஷன் வெற்றி பெறச் செய்தமைக்கான சன்மானம் அஸ்வின் குமார் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதைத் தெரிவிக்கும் மின்னஞ்சலாக இருந்தது அது.

மிஷன் நாராயண் ராவுக்குப் பிறகு மூன்று மாத இடைவெளி கழிந்துதான் விஷால் சக்கரவர்த்தியின் ஓர் அழைப்பு வருகிறது மிஷன் நேஷனல் பார்க்கைப் பற்றிச் சொல்லிக்கொண்டு. நாராயண் ராவ் மிஷன் நடந்ததற்குப் பிறகு அஷ்வின் குமாரின் மனதினூடாகப் பல கேள்விகள் கடந்து போயிருக்கின்றன. நான் வேலை பார்க்கிற இம்பாக்ட் என்ற கம்பெனி எந்த மண்டலத்தில் செயல்படுகிறது? கம்பெனியின் தன்மை எத்தகையது? யாரெல்லாம் அதன் உயர்ந்த பதவிகளில்? நான் வேலை பார்ப்பது ஏதாவது மோசமான செயல்பாடுகள் நடக்கின்ற நிறுவனங்களுள் ஒன்றா, இத்தகைய நூறு கேள்விகளில் மனது மூழ்கிய போது அவனுக்கு ஆறுதல் தருவதாக இம்பாக்ட்டின் இணையதளம் இருந்தது. மத்திய அமைச்சர்களும் பல மாநில முதலமைச்சர்களும் வெள்ளைக்காரர்களுடனும் அராபியர்களுடனும் சேர்ந்து நின்று இம்பாக்ட் கம்பெனியின் பல நிகழ்வுகளைத் தொடங்கி வைக்கின்ற போட்டோக்கள், இம்பாக்ட்டினுடைய பல சமூக சேவை நிகழ்ச்சிகளைப் பற்றியுள்ள செய்திகள், இவையெல்லாம் அந்த இணையதளத்தில் நிறைந்திருந்தன.

ஒரு சமயம், விஷால் சக்கரவர்த்தியிடம் அவன் கம்பெனியைப்பற்றி கேட்டு மின்னஞ்சல் செய்தபோது அதற்குப் பதிலாக வந்த மின்னஞ்சலில் சக்கரவர்த்தி சொன்னது, இம்பாக்ட் கம்பெனியின் மிஷன் பிரிவில் அவர்கள் வேலை பார்க்கிறார்கள் என்றும் கம்பெனியினுடைய அந்நிய தேசங்களுடைய அது போல சர்வதேசிய சங்கங்களினுடைய நிறுவனங்களுடைய பெரிய புராஜெக்ட்டுகளின் முகவர்களாக இருப்பதுதான் நம்முடைய கடமை என்றளவில் இருந்தது. அப்போது, நாராயண ராவின் சிலை எந்த அந்நிய தேசத்திற்குக் கொண்டு போகப்பட்டது என்று கேட்க வேண்டுமென்று அஸ்வின் குமாருக்குத் தோன்றியது. ஆனால், அதை அவன் கேட்கவில்லை.

'மிஷன் நேஷனல் பார்க்' என்னவாக இருக்கும் என்று அதனைப் பற்றி ஆலோசித்தபோது தான் விஷால் சக்கரவர்த்தியின் மின்னஞ்னல் வருகிறது. ஆவலுடன், அவன் அதைத் திறந்தான். அரசாங்கம் அந்நிய முதலீடுகளுடன் முதன்முதலாக ஒரு நேஷனல் பார்க்கைத் தொடங்கப் போகிறது. கேரள - கர்நாடக எல்லையிலுள்ள முதுமலைத் தேசியப் பூங்காவிற்கு நூறு கிலோமீட்டர் தெற்கே அபூர்வ உயிரினங்களும் மூலிகைச் செடிகளும் கொண்டுள்ள முழுமையான நூறு ஹெக்டேர் காடுதான் நேஷனல் பார்க்கிற்குத் தேவை என்று உத்தேசிக்கிறது. அரசாங்கத்திற்கும் இந்த புராஜெக்டில் நம்முடைய வாடிக்கையாளருமான வெளிநாட்டுக் கம்பெனிக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பிரச்சனை வனப்பகுதியில் தங்கியிருக்கிற மடாயி பிரிவிற்குட்பட்ட நாற்பத்தியிரண்டு ஆதிவாசி குடும்பங்களாகும். அவர்களை அங்கிருந்து அகற்றி ஒப்படைக்கும் வேலையைத்தான் ஏற்றுக்கொண்டுள்ளோம். இப்படிச் செய்தால்தான் புராஜெக்ட் நடக்கும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு கட்டுவதற்கு வேறொரு இடமும் பணமும் கொடுக்க கம்பெனி தயாராக இருக்கிறது. இதற்கு அவர்களைச் சம்மதிக்க வைக்க வேண்டும் என்பதுதான் அஸ்வின் குமாரின் இத் தவணை தூதுச் செயல்பாடாக இருந்தது. மின்னஞ்சலை வாசித்து முடித்தபோது கொஞ்சம் கேள்விகள் அஸ்வின் குமாரின் மனதில் வெடித்து முளைத்தன. எதற்காக அந்நிய முதலீட்டுடன் கூடிய நேஷனல் பார்க்?

நாராயணராவின் சிலையைக் கடத்தியது போல இங்குள்ள மூலிகை மருந்துகளைக் கடல்தாண்டி கடத்துவார்களோ? கேள்விகளில் புத்திசாலித்தனம் புகையும்போது அலைபேசியில் விஷால் சக்கரவர்த்தியின் குறுந்தகவல் வருகிறது.

'ஸ்டார்ட் அவர் மிஷன் டுமாரோ'

அடுத்தநாள் காலையிலேயே கம்பெனி வாகனம் மூர்த்தி பில்டர்ஸின் முன்னாள் வந்து நின்றது. ஒரு கன்னடக்காரனாக இருந்தான், ஓட்டுநர். மாலை நேரத்திற்குள்ளாகவே மடாயி ஆதிவாதிகளின் குடிசைகளை அடைந்தார்கள்.

மிஷன் நாராயணன் ராவு வெற்றி பெற்றது கோண்டாபுரியில் இருந்த கிராமத்து தலைவரைச் சரிக்கட்டியதோடுதான். அதே தந்திரத்தைத்தான் இங்கேயும் பின்பற்றுக என்பதாக இருந்தது, அஸ்வின் குமாரின் முடிவு. பலவீன மனம் படைத்தவர்களின் தலைமைத்துவம் தானல்லவா எப்போதும் சுரண்டல்வாதிகளின் பிடிகயிறு.

கன்னடமும் துளுவும் கலந்த மொழியாக இருந்தது மடாயிகளுடையது. இந்த மொழியை கையாளுவதில் திறமை பெற்றவன்தான் டிரைவராகக் கூட வரவேண்டுமென்று விஷால் சக்கரவர்த்தி மின்னஞ்சல் செய்திருந்தார்.

காட்டினூடாக பல கிலோமீட்டர் தொலைவு நடந்துதான் இருவரும் மடாயிகளின் அருகில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'இந்த வனத்திலுள்ள மரத்தாய்களும், தாவர உயிரினங்களும் காற்றும் எல்லாம் எங்களுடைய முன்னோர்கள் செய்த நன்மைகளின் விளைவுகளாகும். குலதெய்வங்களுடைய குல முன்னோர்களுடைய படை குடிகொண்டிருக்கின்ற இந்த மண்ணிலிருந்து ஒரு காலத்திலும் எங்களால் வெளியேற முடியாது. இந்த வனத்திலுள்ள ஏராளமான பச்சைப் புல்வெளிகள்தான் எங்களுடைய வளர்ச்சி. காட்டின் அகத்தை அறிவதுதான் எங்களுடைய கல்வி. இனி, இந்த விஷயத்தைச் சொல்லிக் கொண்டு இந்தப் பக்கமாக வரக்கூடாது. நீங்கள் போகலாம்'.**

வந்து சேர்ந்தனர். தங்களுடைய பழங்குடிச் சமூக மரியாதைகளை அவர்கள் அஸ்வின் குமாருக்கும் டிரைவருக்கும் வழங்கினார்கள். மழையில் முளைத்த காளான்களைப் போல அடுத்தடுத்து இருந்தன மடாயிகளின் குடிசைகள். மடாயி மூப்பனை 'தாயி' என்றுதான் அவர்கள் அழைத்திருந்தனர். வெள்ளி ரோமங்கள் முளைத்திருக்கும் பழைய வேடதாரியான ஒரு கிழவனைத்தான் தாயியாக அஸ்வின் குமார் எதிர்பார்த்திருந்தான். ஆனால், நாற்பத்தைந்தோ ஐம்பதோ வயதுள்ளவரைப் போல் தோற்றமளிக்கும் உடல் நலமுள்ள ஒரு ஆளாக இருந்தான் தாயி. மிகவும் சந்தோஷத்துடன் தாயி அவனுடைய வீட்டிற்குள் இருவரையும் வரவேற்றான்.

பாதுகாப்பற்ற காட்டுவாழ்க்கையிலிருந்து நாற்பத்தியிரண்டு குடும்பங்களையும் காப்பாற்றி நவீனவசதிகளுடன் கூடிய வீடுகளும் புதியவேலையும் வாழ்வதற்குத் தேவையான பணமும் தருவதற்காகத்தான் வந்தோம் என்றும் மடாயிகளுடைய வாழ்க்கையைப் புரட்டி போடப்போகின்ற இந்த அரிய சந்தர்ப்பத்தை நன்றாக வழங்கவேண்டுமென்றும் அவர்கள் தாயியிடம் சொன்னார்கள். மடாயிகளின் அடுத்த தலைமுறையினருக்கு நல்ல கல்வியும் நல்ல பாதுகாப்பும் கிடைக்கப்போகிறது. தங்களுடைய குலத்தைக் காப்பாற்றுவதற்கு உறுதியான முடிவெடுக்கப்போகின்ற தாயியின் பெயரை மடாயிகள் தலைமுறை தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லப் போகிறார்கள். ஒரு உசிதமான முடிவைக் கேட்க எங்களுடைய மனம் ஏங்குகிறதென்று அஸ்வின் குமார் தாயியிடம் சொன்னான். இரவு நேரம் அதிகமாகி விட்டதால் முடிவை நாளை சொல்லலாம் என்றும் இன்று மடாயிகளின் வீட்டில் ஓய்வெடுக்கலாம் என்பது தாயியின் அறிவுறுத்தல் .

அஸ்வின் குமாரால் இரவு முழுவதும் ஒருமுறை கூட கண்ணயர முடியவில்ல. கோண்டாபுரியில் இருந்த கிராமத்தலைவனைக் காட்டிலும் பக்குவத்தோடும் உறுதிப்பாடோடும் கூடியவனாக தாயி நடந்துகொண்டிருந்தான். தான் சொன்னதைப் பலமுறை அலசியெடுத்து அவன் கேள்வி கேட்டதாக அஸ்வின் குமாருக்குத் தோன்றியது. இது ஒன்றையும் அலட்சியம் செய்யாமல் ஓட்டுநர் குறட்டைவிட்டுத் தூங்கினான்.

அடுத்தநாள் அவர்கள் தாயியிடம் சென்றிருந்தார்கள். 'இந்த வனத்திலுள்ள மரத்தாய்களும், தாவர உயிரினங்களும் காற்றும் எல்லாம் எங்களுடைய முன்னோர்கள் செய்த நன்மைகளின் விளைவுகளாகும். குலதெய்வங்களுடைய குல முன்னோர்களுடைய படை குடிகொண்டிருக்கின்ற இந்த மண்ணிலிருந்து ஒரு காலத்திலும் எங்களால் வெளியேற முடியாது. இந்த வனத்திலுள்ள ஏராளமான பச்சைப் புல்வெளிகள்தான் எங்களுடைய வளர்ச்சி. காட்டின் அகத்தை அறிவதுதான் எங்களுடைய கல்வி. இனி, இந்த விஷயத்தைச் சொல்லிக் கொண்டு இந்தப் பக்கமாக வரக்கூடாது. நீங்கள் போகலாம்' . தாயியினுடைய வார்த்தைகள் உறுதியாக இருந்தன. மனதில் எங்கேயோ ஒரு அலை உடைவதை அஸ்வின் அறிந்தான். கம்பெனி வாகனத்தில் திரும்பி பயணம் மேற்கொண்ட போது தாயியினுடைய உறுதிகொண்ட முகமாக இருந்தது அவனுடைய மனம் முழுவதும். மனதின் ஓரத்தில் எங்கேயோ தாயியின் மீதான மதிப்பு குவிந்து கூடிக்கிடப்பதை அவன் அறிந்தான்.

ஒருவேளை நான் முன்னால் வைத்த சலுகையை தாயி நிராகரிக்க வேண்டுமென்று மனப்பூர்வமாக நான் ஆசைப்பட்டிருந்தேனோ... விவரங்களை அஸ்வின் குமார் விஷால் சக்கரவர்த்திக்கு மின்னஞ்சல் செய்தான். 'ஷிட்' அவன் திருப்பி மின்னஞ்சல் செய்திருந்தான்.

சதிக்குள்ளாக இருந்த ஒரு மக்கள் கூட்டம் அவர்களின் தலைவனுடைய தீர்க்கதரிசனத்தின் மூலம் காப்பாற்றப்பட்டிருக்கிறது. நூற்றாண்டுகள் கொள்ளையடித்தும் ஆசை தீராது இந்த நாட்டை நோக்கி எச்சில் வடிக்கின்ற கண்களைப் பற்றி அஸ்வின் குமார் சிந்தித்தான். நாம் குடிக்கின்ற தண்ணீரில் கூட அந்நிய முதலீடு இருக்கிறது என்று பிரசங்கம் செய்திருந்த ஒரு பழைய தோழருடைய முகம் நினைவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகத்திற்கு வந்து சேர்ந்து இரண்டு நாட்கள் கழிந்தும் விஷால் சக்ரவர்த்தியின் மின்னஞ்சல் ஒன்றும் வரவில்லை. ஆனால் மூன்றாம் நாள் பெட்டிக்குள் வந்த விஷால் சக்ரவர்த்தியினுடைய மின்னஞ்சலின் உள்ளடக்கத்தைப் பார்த்த அஸ்வின் குமாருக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை நடுங்கியது.

"மிஷன் நேஷனல் பார்க் வெற்றி பெற்றுள்ளது. மடாயிகளை அங்கிருந்து வெளியேற்றாமலே பார்க் ஆரம்பிக்க நமது வாடிக்கையாளர் சம்மதித்துள்ளார். மடாயிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான தனிப்பட்ட பூங்காவாக அது மாறும்."

வரையாடுகளையும் காண்டாமிருகங்களையும் பாதுகாப்பதற்கென பல தேசிய பூங்காக்கள் இந்தியாவில் இருக்கின்றனவென்று அஸ்வின் குமார் அறிந்து வைத்திருந்தான். காஸிம் தேசியப் பூங்காவையும் இரவிகுளம் தேசியப் பூங்காவையும் அவன் பார்த்துமிருக்கிறான். ஆனால் மனிதனைப் பாதுகாக்க வேண்டி ஒரு தேசியப் பூங்கா என்பதை அவன் முதன் முதலாய்க் கேட்கின்றான் போலும். பல இனங்களைச் சேர்ந்த மனிதர்களை ஒரு மிருகக்காட்சி சாலையில் விலங்குகளைக் காட்சிப்படுத்துவதைப் போல பத்தொன்பதாம் நூற்றாண்டில் காட்சிப்படுத்தியிருந்தனர் என்றும் அதனை 'ஹ்யூமன் ஸூ' என்று அழைத்திருந்தனர் என்றும் அஸ்வின்குமார் எங்கேயோ வாசித்திருக்கிறான். எஸ்கிமோக்களையும் பிக்மிகளையும் நீக்ரோக்களையும் காட்சிப்படுத்திய மனித காட்சிசாலை ஐரோப்பாவில் இருந்தது அவ்வளவே.

இங்கேயும் வேறொரு வடிவத்தில் அது நிகழப் போகிறதோ? தலைக்குள் சிறியதும் பெரியதுமாக வெடிப்புகள் நடப்பதைப் போல அவனுக்குத் தோன்றியது. பாக்கெட்டில் இருந்து கைக்குட்டையை எடுத்து நெற்றியின் குறுக்காக அவன் இறுகக் கட்டினான், சாய்வு நாற்காலியில் தலை சாய்க்கத் தொடங்கிய போது தான் விஷால் சக்ரவர்த்தியின் மின்னஞ்சல் மீண்டும் வருகிறது. அவனால் அதனை முழுமையாக வாசிக்க முடியவில்லை.

'அவர் நெக்ஸ்ட் மிஷன் ஈஸ் இந்தியா' என்ற முதல் வாசகத்தை வாசித்தவுடனே அவனது கண்களை இருட்டு விழுங்கியிருந்தது.

●

கட்டுரையாளர்: பேராசிரியர்

கவிதை: ஜே. ஜெ. ஃபர்னாண்டஸ்



# காவிரியைக் காணவில்லை

காவிரிப்பூம் பட்டிணத்து
கழிமுகத்தில்
கடலை
கைகளால் அள்ளி
கண்களால் துழாவினேன்,
காவிரியைத் தேடி,
காணவில்லை அவள்.
ஆர்ப்பரிக்கும் கடலோ
அலைக் கரங்களைக்
கொட்டிச் சிரிக்கிறது.
காவிரியோ
காதலில் மயங்கி
கல்யாணமாகி
கடலுள் முயங்கி
காணாமல் போனாள்!
இரண்டற கலத்த லென்பது
இன்ப நுகர்ச்சியோ,
இனிய அடிமைத்தனமோ?
அவள்
அவளாக வாழ்வதில்
ஆக்கிரமித்த லென்பது
காதல், கல்யாணம், கணவனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: **செல்லப்பா**

# உண்மை நின்றிட வேண்டும்

**வி.**நா.மருதாசலனார் எழுதி 1935இல் வெளியிட்ட 'இந்தியப் பத்திரிகைத் தொழிலியல்' என்னும் நூலில், "இந்திய பத்திரிகை முதலாளிகளுக்குப் பத்திரிகைத் தொழிலாளர் ஒருவாறு அடிமை முறையில் தொழில் செய்ய வேண்டி இருக்கின்றது" என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்நூல் வெளியாகி ஏறக்குறைய 90 ஆண்டுகள் ஆகிவிட்டபோதும் இன்றும் நிலைமை அப்படியேதான் உள்ளது. இந்தக் கசப்பான உண்மையை இப்போது நினைவுபடுத்துவதற்குக் காரணம், தேசிய பத்திரிகையாளர் நாளான நவம்பர் 16 அன்று பத்திரிகையாளர் ஃப்ரண்ட் லைன் விஜயசங்கர் அவரது ஃபேஸ்புக் பக்கத்தில் பகிர்ந்திருந்த செய்தி ஒன்று. அதில், புதிய தலைமுறை ஊடக நிறுவனம் ஏறக்குறைய 40 ஊடகவியலாளர்களைப் பணி நீக்கம் செய்திருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார். அதைத் தொடர்ந்த பின்னூட்டம் ஒன்றில், தி இந்து குழுமத்திலிருந்து கடந்த சில ஆண்டுகளில் 600 ஊழியர்களும், 100 பத்திரிகையாளர்களும் வெளியேற்றப்பட்டிருப்பதாக அவர் எழுதியிருந்தார். புதிய தலைமுறையில் இப்படியான பணிநீக்கம் இது முதன் முறையன்று; அங்கு அது தொடர்கதை. இந்நிறுவனத்தில் அண்மையில்தான் பத்திரிகையாளர் சமஸ் பணியில் சேர்ந்து தலைமைப் பொறுப்புக்கு வந்திருக்கிறார் என்பது கூடுதல் தகவல்.

வாள் முனையைவிட வலிமையானது பேனா முனை என்றார் பிரெஞ்சு அறிஞர் வால்டேர். இந்தச் சொற்றொடர் ஊடகவியலாளர்களை உசுப்பேற்றுவதற்காகச் சொல்லப்படுவது வழக்கம். இப்போது பேனாவால் எழுதாத, இன்னும் சொல்லப்போனால் எழுதவே எழுதாத ஊடகவியலாளர்களே ஊடகத்திலும் சமூகத்திலும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்ற போதும், இதழியல் துறை வெகுமக்கள் மத்தியில் தன் மானம், மரியாதையைப் போதுமான அளவுக்கு இழந்துவிட்டபோதும், இன்றைக்கும் இந்தச் சொற்றொடர் அதன் பொருளை இழந்துவிடவில்லை. அதற்குக் காரணம் இன்னும் உண்மையான எழுத்துக்கு இருக்கும் மரியாதை.

வலிமையான பேனாவை ஆயுதமாக ஏந்திச் செயல்படும் உழைக்கும் பத்திரிகையாளர்களின் நிலைதான் உள்ளபடியே வலியும் வாதையும் நிறைந்தது. நித்திய கண்டம் பூரண ஆயுசு என்பதே அவர்களது நிலை. அவர்களது தலைக்கு மேலே பணிப் பாதுகாப்பின்மைக் கத்தி எப்போது வேண்டுமானாலும் அறுந்துவிழக்கூடிய நிலையில் தொங்கியபடியே உள்ளது. அந்த ரணகளத்துக்கிடையே வாசகர் கிளுகிளுப்புக்காக அவர்கள் பரபரப்புடன் பணியாற்றி வருகிறார்கள். ஆனால், மிகவும் இயல்பாக அவர்களது வாழ்வாதாரப் பறிப்பு நாள்தோறும் நடந்தேறுகிறது.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் தமிழின் முன்னணி வார இதழான ஆனந்தவிகடன், நாளிதழான இந்து தமிழ் திசை, காட்சி ஊடகமான புதிய தலைமுறை உள்ளிட்ட பல பெரிய ஊடகங்களும் ஊதியக் குறைப்பு நடவடிக்கையிலும், ஆள்குறைப்பு நடவடிக்கையிலும் இறங்கின. கொரோனா பெருந்தொற்று ஊடக நிறுவனங்களுக்கு அதன் ஊழியர்களைக் கசக்கிப் பிழியும் கம்பசூத்திரத்தைக் கற்றுக் கொடுத்துவிட்டது; சமூகத்தில் எல்லாவற்றையும் அறச்சீற்றத்துடன் கேள்வி கேட்கும் ஊடகவியலாளர்களையோ தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக முணுமுணுக்கக்கூட விடாமல் முடக்கிவிட்டது.

ஊடகவியலாளர்கள் பணிநீக்கம் செய்யப்படுவதைவிடப் பணிநீக்கம் செய்யப்படும்போது, அவர்கள் நடத்தப்படும் விதம்தான் சீற்றம் தருகிறது. பணி நீக்கத்துக்குரிய முறையான இழப்பீடுகள், அதாவது சட்டப்படி உரிமையான இழப்பீடுகள் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. பெரும்பாலான பத்திரிகையாளர்களுக்குத் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சட்டப்படியான உரிமை குறித்தோ உழைக்கும் பத்திரிகையாளர் சட்டம் குறித்தோ விழிப்புணர்வு உள்ளதா என்பதே கேள்விக்குறி. பெரும்பாலான ஊடக நிறுவனங்கள் ஒப்பந்தப் பணியாளர்களைக் கொண்டே இயங்கிவருகின்றன. இந்த ஒப்பந்தங்கள் உழைக்கும் பத்திரிகையாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சட்டபூர்வ உரிமையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதைத் தடுக்கும் வகையில் மிகவும் கவனமாகத் தயாரிக்கப்படுகின்றன. இத்தகைய ஒப்பந்தங்களில் கையெழுத்திடாமல் எந்த ஓர் ஊடகவியலாளரும் ஊடகப் பணியில் சேர இயலாது எனும்போது, அவர்கள் வாய்மூடி மௌனித்திருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறார்கள்.

சமூகத்தில் இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக ஆவேசத்துடன் வாள் சுழற்றும் தலைமைப் பொறுப்பு ஊடக சூராதிசூரர்கள் சக பத்திரிகையாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டும்காணாமல் பெருந்தன்மையுடன் நடந்து, நிறுவனத்திடம் நல்ல பெயர் எடுத்துக் கொள்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், பல ஊடக நிறுவனங்களில் தலைமைப் பொறுப்பில் இருக்கும், ஊடகவியலாளர்கள் பெயரில்தான் இத்தகைய பணிநீக்க நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுகின்றன. நமது அறிவுச் சமூகமோ கஸ்தூரி, நயன்தாரா, விஜய் செய்திகளுக்கு மூச்சு முட்டுமளவு விவாதிக்கிறது; ஊடகவியலாளர்கள் கொத்துக்கொத்தாகப் பணிநீக்கம் செய்யப்படும் போதோ, வாளாவிருக்கிறது.

கொரோனா பெருந்தொற்றைக் காரணங்காட்டி இந்து தமிழ் திசை பணிநீக்கிய ஏறக்குறைய பதினைந்து பேரில் நானும் ஒருவன். உண்மையில் எத்தனை பேர் பணிநீக்கம் செய்யப்பட்டனர் என்பது எவருக்குமே தெரியாத அளவுக்குப் பணி நீக்கம் ரகசியமாக நடத்தப்பட்டது. அந்நிறுவனத்தில் மூத்த துணை ஆசிரியராக பணியில் சேர்ந்து, உதவி செய்தி ஆசிரியர் நிலையில் இருந்த வேளையில் என்னைப் பணிநீக்கம்செய்தார்கள். நூறாண்டுப் பாரம்பரியம் கொண்ட ஊடகம் என மார்தட்டிக்கொள்ளும் நிறுவனம் ஒன்றிலிருந்து வெளியான இந்து தமிழ் திசை நாளிதழ் பணி நீக்க விவகாரத்தில் நடந்துகொண்ட விதம் உண்மையிலேயே ஊடக அறம் மீதான அடிப்படை நம்பிக்கையையே அற்றுப் போகச் செய்துவிட்டது.

பணி நீக்கத்துக்குச் சில மாதங்களுக்கு முன்னர் அந்நிறுவனம், கொரோனா பெருந்தொற்றைக் காரணம்காட்டி, ஊழியர்களின் ஊதியத்தை 20 விழுக்காடு குறைத்தது. இப்படியான ஊதியக்குறைப்பில் நிறுவனம் அநியாயத்துக்குச் சமூக நீதியுடன் நடந்துகொண்டது. லட்சக்கணக்கில் ஊதியம் பெறும் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கும், வாய்க்கும் வயிற்றுக்கும் சண்டைபோடும் சாதாரண ஊழியருக்கும் ஒரே மாதிரியாக 20 விழுக்காட்டைக் குறைத்தது. அப்படிக் குறைத்தபோது, ஊழியர்களுக்கு முறையான அறிவிப்பு எதையும் அந்நிறுவனம் செய்திருக்கவில்லை. வங்கிக் கணக்கில் ஊதியம் செலுத்தப்பட்ட பின்னர் ஊழியர்களுக்கு வங்கியிலிருந்து அனுப்பப்படும் குறுஞ்செய்தியைப் பார்த்த பின்னர்தான் ஊதியக் குறைப்பு நடவடிக்கை பற்றி அறிந்துகொள்ள முடிந்தது. செய்திகளை முந்தித் தரும் துடிப்புள்ள ஊடக நிறுவனங்களுக்கு எந்தச் செய்தியைக் காலதாமதமாகத் தர வேண்டும் என்ற நுட்பமும் தெரியும் என்பதை அப்போதுதான் உணர்ந்துகொள்ள முடிந்தது.

ஊதியக் குறைப்பை அறிந்துகொண்ட உடன், அந்நாளிதழின் ஆசிரியர்கள் என அழைக்கப்படுபவர்களுக்கு 2020 மே 4 அன்று அனுப்பிய மின்னஞ்சல் வழியே எனது வருத்தத்தையும், கண்டனத்தையும் தெரிவித்திருந்தேன். நான்கு மாதங்கள் கழித்து கொரோனா பெருந்தொற்றைக் காரணம் காட்டி ஊடக நிறுவனம் ஆள்குறைப்பு நடவடிக்கை என்பதைச் சொல்லாமல் பணி நீக்க நடவடிக்கையில் இறங்கியபோது, நான் பணி நீக்கம் செய்யப்பட்டேன். உழைக்கும் பத்திரிகையாளராக நான் பணியாற்றிய இணைப்பிதழின் பொறுப்பாளரும், சுற்றுச்சூழல் ஆர்வலரும், நற்குணசீலரும், தோழருமான ஆதி வள்ளியப்பன் கைபேசி வழியே அழைத்து என்னைப் பணியிலிருந்து நீக்கியிருப்பதாகவும் மின்னஞ்சல் வழியே தகவல் உறுதிசெய்யப்படும் என்றும் உணர்ச்சியற்ற, உள்ளடங்கிய குரலில் சொன்னார். எந்தவித முன்னறிவிப்புமின்றி, ஆள்குறைப்பு என்ற சொல்லையே பயன்படுத்தாத, உரிய பதவியின் பெயர் குறிப்பிடப்படாமல் அநாமதேய கையெழுத்தைத் தாங்கியிருந்த பணிநீக்க அறிவிப்பு, மின்னஞ்சல் வழியே வந்தது. இயந்திரத்தின் துல்லியத்துடன் நிறுவனத்தின் வரவுசெலவு கணக்கைக் கவனித்துக்கொள்ளும் அலுவலர் கிருஷ்ணன், இழப்பீடாக இரண்டு மாத ஊதியம் அதிலும் அடிப்படை ஊதியம் மட்டுமே வழங்கப்படும் என்று கூறியபோது, பணியிலிருந்து நீக்கப்பட்ட அதிர்ச்சியைவிட அந்தப் பெரிய நிறுவனத்தின் சிறுமையான நடவடிக்கை பேரதிர்ச்சியை அளித்தது.

அறிந்த செய்தியை உடனடியாகப் பொதுச் சமூகத்துக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற ஊடகக் குருதி உந்த, அந்தச் செய்தியை முகநூல் தளத்தில் பதிவிட்டேன். பணி நீக்கம் தொடர்பாக நாளிதழின் தலைமைப் பொறுப்பிலிருந்த அசோகனுடன் பேசியபோது, தனது கையறு நிலையை வெளிப்படுத்திய அவர், சட்டப் போராட்டம் நடத்த வாய்ப்பிருப்பதைக் குறிப்புணர்த்தினார். அதன் பின்னர் சென்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையாளர் சங்கத்தின் உதவியுடன் தொழிலாளர் ஆணையத்தில் முறையிட்டேன்; அங்கு நீதிகிடைக்காத நிலையில் தொழிலாளர் நீதிமன்றத்தில் நிறுவனத்தின் அநீதிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தேன் (O.P. No: 107/2021). அந்த வழக்குத் தொடர்ந்ததால் எனக்கு நன்மையோ இல்லையோ அதன் பின்னர் கொரோனா பெருந்தொற்றைக் காரணம்காட்டி வேறு எவரையும் இந்து தமிழ் திசை நிறுவனம் பணியிலிருந்து நீக்கியிருக்கவில்லை. அநீதிக்கு எதிராகப் பலவீனமாக ஒலித்த எனது மெல்லிய குரலால் நண்பர்களுக்குக் கிடைத்த நன்மை என்னும் வகையில் அது எனக்கு அற்ப மகிழ்ச்சியைத் தந்தது.

உதவி செய்தி ஆசிரியராகப் பணியாற்றிவந்த நான் உழைக்கும் பத்திரிகையாளர் அல்ல என்பது மாதிரியான வாதத்தைத் தொழிலாளர் நீதிமன்றத்தில் மவுண்ட் ரோடு மகாவிஷ்ணுவின் சவலைக் குழந்தை இந்து தமிழ் திசை முன்வைத்தது. ‘சீச்சீ நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு’ என்னும் பாரதியாரின் வரிகள் உங்களுக்கு நினைவுக்கு வரலாம். நீதிமன்ற விசாரணை முடிந்து தீர்ப்பு வழங்கப்பட்டதற்கிடையே, ஒருநாள் என்னை அழைத்து, ஒரு லட்சம் ரூபாய் தருவதாகவும் வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படியும் நிறுவனத்தின் சார்பில் கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய நிபந்தனைகள் ஏற்புடையதாக இல்லை ஆகவே, நான் உடன்படவில்லை. தொடர்ந்து சட்டப் போராட்டத்தைத் தொடர்ந்தேன். இறுதியாக வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பில் நீதிபதி நான் உழைக்கும் பத்திரிகையாளர் என்பதை உறுதிசெய்திருந்தார்.

ஊடகவியலாளர்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது, அவர்கள் காக்கும் மௌனமே ஊடக நிறுவனங்களுக்குப் பலம். ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்களைப் பணிநீக்கம் செய்தால், உடனே அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் தரும் சொற்பத் தொகையைப் பெற்றுக்கொண்டு எவருக்கும் தெரியாமல் அடுத்த ஊடக நிறுவனத்தில் சேர வேண்டும் என்பதில்தான் ஊடகவியலாளர்கள் முனைப்புக் காட்டுகிறார்கள். ஏதேனும் எதிர்த்துக் கேள்வி கேட்டாலோ, நீதிக்காகச் சட்டப்போராட்டத்தைக் கையில் எடுத்தாலோ அடுத்த நிறுவனம் பணி தராமல் போய்விடுமே என்னும் அச்சமே அவர்களிடம் தொக்கி நிற்கிறது. அவர்கள் அச்சத்தில் நியாயம் இல்லாமலும் இல்லை. அதே நேரத்தில் ஏன் பணி நீக்கம் செய்யப்பட்டோம், அதற்கான முறையான சட்டப்பூர்வ இழப்பீட்டுத் தொகையை வழங்குகிறார்களா போன்ற அடிப்படையான அம்சங்களில்கூட அவர்கள் கவனம் எடுத்துக் கொள்வதில்லை என்பது வருத்தமளிக்கிறது. பணிவிலகல் கடிதம் எழுதிக் கொடுக்க நிறுவனம் கோரும்போது, எதுவும் எதிர்த்துப் பேசாமல் அப்படியே எழுதிக் கொடுக்கும் கிளிப்பிள்ளைகள் இங்கே காணப்படுகிறார்கள் என்பதை என்னவென்பது? பாலியல் குற்றத்தைப் பெண்கள் வெளியே சொல்லத் தயங்குவதற்கும் ஊடகவியலாளர்கள் தங்களது பணிநீக்கத்தை வெளியே சொல்வதை மானக்கேடாகக் கருதுவதற்கும் பெரிய வேறுபாடில்லை.

இதில் இன்னொரு வருந்தத்தக்க செய்தி பத்திரிகையாளர் சங்கங்களைப் பற்றியது. பத்திரிகையாளர்கள்தாம் பலவீனமாக இருக்கிறார்கள் என்றால் பத்திரிகையாளர் சங்கங்களோ அவர்களைவிடப் பலவீனமாக உள்ளன. ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையே பாலமாகச் செயல்பட்டுப் பணிநீக்கம் போன்ற விவகாரத்தை முடிந்தவரை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவைக்கக்கூடிய பெரிய பொறுப்பைக் கொண்ட பத்திரிகையாளர் சங்கங்களைச் சேர்ந்தவர்களோ தங்களில் யார் பெரியவர் என்னும் குஸ்திப் போட்டியிலேயே முஷ்டி உயர்த்திக்கொண்டு திரிகிறார்கள். பத்திரிகையாளர் சங்கத்துக்குள்ளும் சங்கங்களுக்குள்ளும் ஏற்படும் உள் முரண்பாடுகளைத் தீர்க்கவே தனி தீர்ப்பாயம் அமைத்தால் தேவலை என்று சொல்லத்தக்க அளவில் அறிவுச் சமூகத்தினரிடையே அவ்வளவு முரண்கள்.

இப்படியான சூழலில் நியாயமான கேள்விகளை நிறுவனங்களை நோக்கிப் பத்திரிகையாளர்கள் கேட்கத் தொடங்கும்போதுதான், இத்தகைய அவலங்கள் சிறிதாவது மட்டுப்படும்; பொதுச் சமூகத்தின் பார்வைக்கும் தெரியவரும், ஊடகவியலாளர்கள் தங்களுக்கு ஏற்படும் அநீதிக்கு எதிராக வெளிப்படையாகக் குரல் கொடுக்கத் தொடங்கினால், சங்கங்களும் அவர்களுக்குக் கைகொடுத்து பிரச்சினையைத் தீர்க்க முனைந்தால்தான் சமூகத்தில் அவர்களுக்கு ஆதரவான குரல் எழும்பும். சமூகச் சீர்கேடுகளை, இழிவுகளைத் தட்டிக்கேட்க வேண்டிய நான்காம் தூணே சீர்கேடடைவதும், ஊடக அறத்தைக் காற்றில் மிதக்கவிட்டுவிடுவதும் நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதல்ல.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: சு.இராமசுப்பிரமணியன்

## பாலியல் அடையாளம்:

# உயிரியல் உண்மையா? சமூகக்கட்டமைப்பா?

### (Gender as Biological Fact or Gender as Social Construction)

நீண்ட காலமாகவே தமிழ்த்திரைப்படங்களில் நகைச்சுவை என்னும் பெயரில் பால்திரிந்தவர்களை (மூன்றாம் பாலினத்தவர்கள்) கொச்சைப்படுத்தும் காட்சிகள் இடம்பெற்று வருகின்றன. பல்லாயிரம் இரசிகர்களை வைத்திருக்கும் உச்சநாயகர்கள்கூட கொஞ்சமும் பொறுப்பின்றி அப்படிப்பட்ட காட்சிகளில் நடிப்பதையும் நாம் கண்டு வருகிறோம்.

இங்கு மட்டுமின்றி, அறிவியல், தொழில்நுட்பத்தில் முன்னேறியதாகச் சொல்லிக்கொள்ளும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளிலும், நகைச்சுவைக் காட்சிகள் என்னும் பெயரில் பால்திரிந்தவர்களைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் பேசிவருகின்றனர். மதம்போன்ற அறிவியலுக்கு அப்பாற்பட்ட கோட்பாடுகளும் *(metaphysics)* அதற்குத் துணைநிற்கின்றன.

எப்படி, ஆண் அல்லது பெண் என்பது இயற்கையோ அப்படித்தான் பால்திரிபும் இயற்கையே. பாலினம் என்பது இரண்டு மட்டுமே *(sex or gender is binary)* என்று வைத்துக் கொண்டாலும் கூட, பால்திரிபவர்களும் தங்களை அந்த இரண்டில் ஒன்றாகத்தான் தங்களை அடையாளப்படுத்துகின்றனர். என்றாலும் பொதுச்சமூகம் அதனை ஏற்க மறுக்கிறது. இதுபற்றிய மெய்யியலாளர்களின் கருதுகோள்களும், விவாதங்களும் அவர்களை ஆதரித்தும், எதிர்த்தும் நடந்துவருகின்றன.

ஆண், பெண் என்னும் பாலியல் வேற்றுமைகள் *(Gender differences)* உயிரியல் *(Biology)* சார்ந்ததா? அல்லது பண்பாடு *(culture)* சார்ந்ததா? என்னும் கேள்விகள் எழும்போது, அது இரண்டையும் சார்ந்தது என்று சொன்னாலும்கூட பெரிதும் உயிரியல் சார்ந்தது *(Biological fact)* என்று அறிவியல் கூறுகிறது.

அமெரிக்கப் பெண்ணிய மெய்யியலாளர் ஜூடித் பட்லர் *(Judith Pamela Butler)* அதனை வேறு ஒரு கோணத்தில் அணுகுகிறார். "பாலியல் அடையாளம் *(gender)* என்பது, திரும்பதிரும்ப செய்யும் உடல் அசைவுகளால் உருவாகிறது. சட்ட திட்டங்களுடன் கூடிய திடமான ஒரு சட்டகத்திற்குள் மீண்டும்மீண்டும் செய்யப்படும் செயல்களின் தொகுதியானது காலப்போக்கில் அந்த உடலின் தோற்றமாக மாறிவிடுகிறது. அது இயற்கை போன்ற தோற்றத்தையும் தந்துவிடுகிறது. அது ஒருவிதத்தில், பாலியலைக்கட்டமைக்கும் 'அரசியல் மரபணுவியல்' *(political genealogy)* என்றும் கூறலாம். இயற்கையான பாலியல் தோற்றத்தைவிட்டு விலகி, பல்வேறு கூறுகளால் கட்டுப்படுத்தப்படும் *(compulsory frames)* சமூகத் தோற்றமாக *(social appearance)* மாறிவிடுகிறது" என்கிறார் ஜூடித் பட்லர்.

பட்லருக்கும், அவரைப்போன்ற பலருக்கும் பாலியல் வேறுபாடு என்பது இயற்கை என்பதைவிடவும், சமூகக் கட்டமைப்பு காரணமாக செயற்கையாக உருவாக்கப்படுவதுதான். பண்பாட்டுப்போர்கள் *(cultural conflicts)* என்பவையெல்லாம், பாலியல் சார்ந்த செயல்பாடுகளின்மீது உயிரியல் இயற்கைக்கும், சமூகக்கட்டுப்பாட்டின் செயற்கைக்குமான சார்புப்பொறுப்பு *(relative responsibility)* என்று ஆகிறது.

*Sex, gender* என்னும் இரண்டு ஆங்கிலச் சொற்களும் பொருள் மயக்கத்தைத் தரக்கூடியவை. *Sex*, உயிரியல்சார்ந்த பாலியல் அடையாளம் *(biological sex)* என்றும், *gender*, பண்பாடு, சமூகம் சார்ந்த பாலியல் அடையாளம் *("cultural and social sex)* என்றும் குறிப்பிடலாம். அவற்றை வேறுபடுத்திச் சொல்லும் இரண்டு நேரடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பால்திரிந்தவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும், அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களுக்கும் இடையிலான தொடர்பை அறிந்துகொண்டால் மட்டுமே, அந்தவிதமான மனநோயைக் குணப்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டடைய முடியும்.**

தமிழ்ச்சொற்கள் இருக்கின்றனவா என்றால், நான் அறிந்தவரையில் , இல்லை .

மெய்யியலாளர்கள் இருகூறுகளாக பிரிந்து கருத்துகளை முன்வைத்து விவாதம் செய்துகொண்டிருக்கின்றனர். ஒரு பிரிவினர், அறிவியல் அடிப்படையிலேயே பாலியல் அடையாளம் உணரப்படுகிறது என்று சொல்கிறார்கள். மற்றொரு பிரிவினர், சமூகக் கட்டமைப்பும் அது ஏற்படுத்தும் உறுதியான கட்டுப்பாடுகளுமே பாலியல் அடையாளத்தை முடிவுசெய்கிறது என்று சொல்கிறார்கள். முதல் பிரிவினர், 'வலதுசாரி பழமைவாதிகள்' என்றும் இரண்டாம் பிரிவினர் 'இடதுசாரி முற்போக்காளர்கள்' என்றும் கருதப்படுகின்றனர்.

பாலியல் திரிபு தொடர்பான விவாதங்களில், பால் திரிந்தவர்களைக் கொச்சைப்படுத்துபவர்கள் பால்திரிந்தவர்களின் வலியை உணர்வதில்லை, அவர்களை மனித பிறப்புகளாகவே மதிப்பதில்லை என்றெல்லாம் குற்றம்சாட்டலாம். அவர்கள்மீதான வெறுப்பை வேண்டுமென்றே காண்பிப்பதாகவும், அதன் காரணமாக அவர்களைத் துன்புறுத்துவதாகவும் கூறலாம். பல நகைச்சுவை நிகழ்ச்சிகளின் தூண்டுபொருளாக இது உள்ளது.

பாலியல் அடையாளம் பற்றிய இரட்டைப்பார்வையில், ஒரு சாரார் தேவைக்கு அதிகமாக உணர்ச்சிவசப்படுகிறார்கள் என்றும், மற்றொரு சாராருக்கு சமூகம்பற்றிய விழிப்புணர்வு இல்லாததால், அவர்கள் எவ்வித உணர்ச்சியும் இல்லாதிருக்கிறார்கள் என்றும் பார்க்கப்படுகிறது.

இப்படிப்பட்ட பார்வைகள், *gender* என்பது ஆண் அல்லது பெண் என்னும் 'இருமை' *(binary)* என்பதாகவும், இல்லைஇல்லை அது பாலியல்நீட்சி *(gender isn't a binary, it's a spectrum)* என்றும் இருவேறு கருத்தியல்களுக்கு இட்டுச்செல்கிறது.

சில அடிப்படை கேள்விகள் எழுகின்றன. பால்திரிதல், ஒருவரை மனித இனமே இல்லை என்று ஆக்கிவிடுமா? அனைத்துக் கழிவறைகளும் பொதுவானதாக *(gender neutral)* இருக்குமா? விளையாட்டுப் போட்டிகளில், பால்திரிந்தவர்கள் அந்தந்த பாலினத்தொகுதியில் போட்டியிட அனுமதிக்கப்படுவார்களா? சமூகத்தின் அடிப்படை ஒழுங்கு, பால்திரிந்தவர்களால் அழிந்துவிடும் என்னும் கூக்குரல் சரியா?

சிந்தனைகளின் மேம்பட்ட தெளிவான கருத்தியலை அடைவதற்கான வழியாக சார்ல்ஸ் சேண்டர்ஸ் பியர்ஸ் *(Charles Saanders Peirce)* முதன்முதலாக ஓர் ஒழுக்கவிதியை கூறினார். வேதியலாளர் வில்ஹெம் ஆஸ்வல்ட் *(Wilhelm Ostwald)* இதனை சுருக்கமாக இப்படி கூறுகிறார். "இந்த 'பதிலி' *(alternative)* உண்மையாக இருக்குமானால், இந்த உலகம் எந்தவிதத்தில் வேறுபடும்? அப்படியான வேறுபாடு எதுவுமில்லையென்றால், 'மாற்றம்' என்பதே பொருளற்றதாகிவிடும்."

இந்த உலகில், *gender* என்பது உயிரியல் உண்மை என்று வைத்துக்கொள்வோம். *gender* என்பது சமூகக்கட்டமைப்பு என்றும் வைத்துக்கொள்ளலாம். அனுபவத்தின் அடிப்படையில் இரண்டுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேற்கத்திய தத்துவவியலாளர்கள் இப்போதுதான் இதுபற்றி பேசியும், எழுதியும், விவாதம் செய்தும் வருகின்றனர். ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகம் அடைந்துவிட்ட தமிழ்ச்சமூகம் இதனை மிக எளிதாக அனுகியிருக்கிறது. அதற்கான சான்றைத் தொல்காப்பியத்திலிருந்து நாம் பெறலாம்.**

என்ன வேறுபாடு உள்ளது? காட்சிப்பதிவுகள் (*observations*), சோதனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இரண்டு கருத்தியல்களுக்கும் இடையில் வேறுபாடு காணமுடியுமா? அப்படிப்பட்ட இரண்டு உலகங்களிலும், உயிரியல் செயல்பாடும், சமூக செயல்பாடும் ஒரே மாதிரியாக இருப்பதால், உண்மையில் அவற்றிற்கிடையே எவ்வித வேறுபாடும் காணமுடியாது அல்லவா?

பாலினம் என்பது பெரிதும் அறிவியல் சார்ந்தது என்று வைத்துக்கொண்டாலும், சில பண்புகள் வெறுக்கக் கூடியனவாகவும், வேறுசில மறுக்கக் கூடியனவாகவும் உள்ளன. இந்தப் பார்வை, பாலினம் சமுகக் கட்டமைப்பு சார்ந்தது என்றாலும் உண்மையே. பாலின அடையாளம் பற்றிய முரண்கள் ஏற்படும் இடங்களாக, கழிவறைகள், விளையாட்டு வீரர்களை வகைப்படுத்தல், சிறுவர்களுக்கு ஹார்மோன் மருத்துவம் செய்தல் உள்ளிட்ட பல சூழல்களைக் குறிப்பிடலாம். பாலின அடையாளம் பற்றிய இரட்டைக் கருத்தியல்களின் (*twin views*) வேறுபாடுகள், சான்றுகளின் வகைகளில் இருப்பதில்லை. மாறாக, அவர்கள் வெளிப்படுத்தும் செயல்களைச் சார்ந்திருக்கிறது.

இரட்டைக் கருத்தியல்கள் (*twin views*), ஒழுக்கம்சார்ந்த நன்னடத்தையை படித்தரமாகக் கொண்டவை. (*moral-behaviour as standard*) அவற்றின் வழியாக ஒருவரின் நடத்தையை மதிப்பிடுவதும் ஆகும். நடத்தை சரியா, தவறா என்று சொல்வதாக அறம்சார்விதிகள் உள்ளன. இப்படியெல்லாம்தான் வாழவேண்டும் என்று வரையறைசெய்வதுதான் 'பண்பாடு', அறம் (*ethics*) என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.

நம்முடைய அன்றாட நடவடிக்கைகளைக் கோட்பாடுகளாக மாற்றுவதால் குழப்பம் ஏற்படுகிறது. காலப்போக்கில் அன்றாட நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்துகொள்ளாத மனைவி, கணவனையும், கணவன் மனைவியையும் குறைகாண்பதும், வெறுப்படைவதும் அப்படிப்பட்ட ஒன்றுதான்.

அதுபோலத்தான், பாலியல்பற்றிய இரட்டைக்கருத்தியல்களும் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன. பாலியல் நடத்தைகளை வைத்துக்கொண்டு, ஒரு நபரின் சமூக செயல்பாடு (*social activity*), உயிரியல் செயல்பாடு (*biological activity*) என கோடுகிழித்துப் பிரித்துவிடுவது மனித சமூகத்தில் நிகழ்ந்துவிடுகிறது. உண்மையில், பாலினம் ஆண், பெண் என இரண்டு மட்டுமேதானா, அல்லது அதையும் கடந்ததா என்பதற்கு, நாம் ஒருவரை ஒருவர் எப்படி நடத்தவேண்டும் என்னும் புரிதலில்தான் அதற்கான விடை உள்ளது.

இயங்கு ஒளிப்படங்களில் (*videos*), மூன்றாம் பாலினத்தவரைக் கிண்டல்செய்யும் நிகழ்ச்சிகளை நீக்கவேண்டுமா அல்லது அவற்றைப் பேச்சுச் சுதந்திரம் என்று பார்க்கவேண்டுமா என்னும் கேள்வியும் எழுகிறது. இதற்கான விடையை நடைமுறை அனுபவ அறிவிலிருந்தே சொல்லமுடியும். அறம்சார்ந்த கோட்பாடு அடிப்படையில் (*ethics*) மூன்றாம் பாலினத்தவர் உடல் அளவிலும், உளவியல் அடிப்படையிலும் துன்புறுத்தப்படுவது களையப்படவேண்டும். இதனை மனதில்வைத்தே கோட்பாடுகளை உருவாக்கவேண்டிய தேவை உள்ளது. இலக்கை அடைவதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்பது முதன்மையானது. மூன்றாம் பாலினத்தவருக்கு எதிரான வன்முறைகளை, 'பொது நலன்' (*social health*) என்னும் கண்ணாடி அணிந்து பார்க்கவேண்டும். அப்போதுதான், பொதுநலனைக் கருத்தில்கொண்டு, உலக அளவில் பால்திரிந்தவர்களுக்கு எதிராக நிகழும் வன்முறைகளை இல்லாமல் ஆக்குவதற்கான வழிமுறைகளைக் கண்டடைய முடியும்.

பால்திரிந்தவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும், அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களுக்கும் இடையிலான தொடர்பை அறிந்துகொண்டால் மட்டுமே, அந்தவிதமான மனநோயைக் குணப்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டடைய முடியும். பாலினத்திரிபு பற்றிய மேலோட்டமான புரிதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால்கூட, அவர்கள் வாழ்க்கையைவைத்து நகைச்சுவை நிகழ்ச்சிகள் செய்யமாட்டார்கள். மனிதர்கள், அவர்கள் என்னவாக (ஆண் அல்லது பெண்) உணர்கிறார்களோ, அப்படியே இருப்பதற்காக, நடந்துகொள்வதற்காக, வாழ்வதற்காக துன்புறுத்தப்படுவதும், அவமானப்படுத்தப்படுவதும், கொல்லப்படுவதும் நிகழ்கிறது.

பால்திரிந்தவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் களைவதற்கு பொதுநலத்துறை *(Social Health Department)*, அதன் கட்டமைப்பைப் பயன்படுத்தித் தீர்வுகாணவேண்டும் என்று சொல்வதும் சரியே. ஆனாலும், அது தொடர்பில் சமூகமாக நாம் பிளவுபட்டிருக்கிறோம் என்பதும் கவலைக்குரியதே. அதிலிருந்து மீண்டு நாம் அவர்கள்பக்கம் நின்று, புரிந்து செயல்படுவதற்கு, அறிவுக்கும், அறிவியலுக்கும் புறம்பான *(meta-physics)* கருத்தியலிலிருந்து விடுபடவேண்டும்.

**பழந்தமிழ்நாட்டில் மூன்றாம் பாலினம்:**

மேற்கத்திய தத்துவவியலாளர்கள் இப்போதுதான் இதுபற்றி பேசியும், எழுதியும், விவாதம் செய்தும் வருகின்றனர். ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகம் அடைந்துவிட்ட தமிழ்ச்சமூகம் இதனை மிக எளிதாக அனுகியிருக்கிறது. அதற்கான சான்றைத் தொல்காப்பியத்திலிருந்து நாம் பெறலாம்.

ஆணுடல் பெண்ணாக மாறுவதும், பெண்ணுடல் ஆணாக மாறுவதும் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் காணக்கிடைக்கின்றன. அப்படிப் பால்திரியும் மூன்றாம் பாலினத்தவரை, தொல்காப்பியர் உயர்திணையில் சேர்த்திருப்பதைப் பார்க்கும்போது, அவர்கள் மற்றவர்களைப் போலவே பண்டைய தமிழ்ச்சமூகத்தில் வாழ்ந்திருக்கின்றனர் என்று புரிந்துகொள்ள முடிகிறது.

**"ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல்,**
**பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி,**
**அம்முப்பார் சொல் உயர்திணை யவ்வே"**
**(தொல். சொல்லதிகாரம், 485)**
**"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
**தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
**இவ்வென அறியும் அந் தம்தமக் கிலவே**
**உயர்திணை மருங்கின் பால் பிரிந் திசைக்கும்."**
**(தொல். சொல். 487)**

ஆடூஉ என்பது ஆணையும், மகடூஉ என்பது பெண்ணையும் குறிக்கும் சொற்கள். தொல்காப்பியர் கூற்றின்படி, ஆண், பெண் உயர்திணையாகும். அவர்களோடு தெய்வமும், பால்திரிந்தவர்களும் உயர்திணையாகும்.

ஆண் என்னும் பாலினத்தைக் குறிக்கும் சொல்லின் ஈற்று எழுத்து 'ன்' ஆகும்.

(எ.கா) இருந்தான், எழுந்தான்.

பெண் என்னும் பாலினத்தைக் குறிக்கும் சொல்லின் ஈற்று எழுத்து 'ள்' ஆகும்.

(எ.கா) வந்தாள், சென்றாள்

ஆண், பெண்ணாகப் பால்திரிந்தால், அந்த மூன்றாம் பாலினத்தவர், 'பேடி' எனப்படுவார்.

(எ.கா) பேடி வந்தாள். (பெண்பாலுக்கான ஈற்றெழுத்து)

பெண், ஆணாகப் பால்திரிந்தால், அந்த மூன்றாம் பாலினத்தவர், 'பேடன்' எனப்படுவார்.

(எ.கா) பேடன் சென்றான். (ஆண்பாலுக்கான ஈற்றெழுத்து)

பேடன், பேடி என்னும் இருவருக்கும் பொதுப்பெயர், 'பேடு' . இம்மூவருக்கும் பலர்பால்பெயர் முறையே, பேடர், பேடியர், பேடுகள்.

ஆண், பெண், தெய்வத்தோடு பேடி, பேடன் ஆகிய பால்திரிந்தவர்களும் உயர்திணையில் வைக்கப்படுவதாகத் தொல்காப்பியம் கூறுகிறது.

ஆண், பெண்ணாகப் பால்திரியும்போது, 'பேடி' என்னும் பெண்பெயரால் சுட்டப்படுவதாலும், பெண் ஆணாகப் பால்திரியும்போது, 'பேடன்' என்று ஆண்பெயரால் சுட்டப்படுவதாலும், பால்திரிந்தவர்கள் தங்களை ஆண் அல்லது பெண் என்று என்னவாக உணர்கிறார்களோ, அப்படியே ஏற்கப்பட்டிருக்கின்றனர் என்பது தெளிவாகிறது. இன்றைய காலங்களில், பால்திரிந்தவர்களின் வாழ்நாள் போராட்டமே இதற்காகத்தான் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அதற்காகத்தான், மெய்யியலாளர்களும், சமூக செயற்பாட்டாளர்களும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

சங்க இலக்கியங்களில், பால்திரிந்தவர்களைக் குறிக்கும் மோசமான பதிவுகள் எதுவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. உலகின் அனைத்துத் தத்துவங்களுக்கும் முன்னோடியாக இருக்கும் தமிழர் பண்பாட்டைப் புறக்கணிப்பவர்கள்தான் மேலைநாடுகளின் தத்துவங்களைத் தேடி அலைந்துகொண்டிருக்கின்றனர்.

•

***கட்டுரையாளர்: பேராசிரியர்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: க.பழனித்துரை

# குழப்பத்தில் நாம் என்ன செய்வது?

ஒரு இணைய வழி சந்திப்பில் நடந்த விவாதம் ஒன்றில் நான் இணைந்திருந்தேன். அந்த சந்திப்பில் இணைந்திருந்தவர்களுக்கு அந்த நிகழ்வில் முக்கிய வழிகாட்டியாக விளங்கியவர் உரையாற்றினார். இன்றைய மாணவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று ஒரு இளைஞரிடம் அவர் கேட்டார். அவர் உடனே மாணவர்களை பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேற்றி அவர்களுக்கு நல்ல வழிகாட்டிகள் இருந்து வழிகாட்டினால் மாணவர்கள் நல்ல பண்புமிக்க மனிதர்களாக உருவாகிவிடுவார்கள் என்றார். சரி சாதாரண ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் இந்தக் கல்வியிலிருந்து வெளியேறிவிட்டால் வாழ்வதாரத்திற்கு என்ன செய்வது என்ற அடுத்த கேள்வியைக் கேட்டபோது அந்த இளைஞரிடம் பதில் இல்லை. அந்த இணைப்பில் இருந்த மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர் கூறும்போது ஒரு ஆழமான பதிவை முன் வைத்தார். இன்றைய கல்வி சாரமற்றது. முழு மனிதனை உருவாக்காத கல்விதான், ஆனால் அந்த முறையைத்தான் நாம் நம்பி வாழ வேண்டிய சூழல் உள்ளது. இதிலிருந்து தப்பிக்க முடியாது. அது தேவைதான். எனவே அந்தக் கல்வியை நாம் புறக்கணிக்க முடியாது. அதைப் பெற்றாக வேண்டும். அந்தச் சான்றிதழ் வேண்டும் நமக்கு. ஆனால் அது நம் வாழ்க்கையை மேம்படுத்தாது.

எனவே அதில் நீங்கள் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றார். அதே நேரத்தில் நாம் முழு மனிதராக வந்து, வாழ்க்கையில் வெற்றி பெற்று வாழ்க்கையைப் பொருள்ளதாக மாற்றி, சமுதாயம் மதிக்கக்கூடியதாக ஆக்க வேண்டும் என்றால் நாம் நமக்கு பொறுப்பெடுத்து நம்மை முழுவதுமாக நாம் இயக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு நாம் நமக்கு வழிகாட்டும் நிறைய இடங்கள் இருக்கின்றன, அந்த இடங்கள்தான் டியூஷன் மையங்களாக பல இடங்களில் கட்டணம் இன்றி இயங்கிவரும் குருகுலங்கள். அங்கு சென்று படிக்கும்போது அவர்களுடன் இணையும்போது நாம் சான்றிதழுக்காக படிப்பதைத் தாண்டி வாழ்வியலுக்குத் தேவையான ஒரு கல்வியைப் பெறமுடியும். இன்று இந்த வாழ்வாதாரக் கல்வியும் சான்றிதழ் பெறும் கல்வியாக மாறியுள்ளது அடுத்த பெரும் சோகம். கல்வியே சிதிலமடைந்த நிலையில் இருப்பதை அனைவரும் விவாதித்தாலும் அதற்கான தீர்வினை எட்ட நம் சமூகத்தால் இயலவில்லை. இந்த நிலையில் நாம் வாழ்க்கையில் முன்னேற நம் தனித்திறமை என்ன என்று கண்டு அதை வளர்க்க வேண்டும். அடுத்து நாம் நற்பண்புகளை நம் சிந்தனையில், நடத்தையில், செயல்பாடுகளில் வளர்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் நாம் எங்கு சென்றாலும் பொறுப்பெடுத்து செயல்பட்டு நம் தலைமைப் பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவற்றையும் கடந்து சமூகக் கண்ணோட்டம் கொண்டு செயல்படும் பக்குவத்தை வளர்த்துக் கொண்டு சமூகம் தேடும் மனிதராக நாம் வளர வேண்டும் என்று விளக்கினார்.

மேலே கூறிய தனித்திறன் வளர்த்தல், நற்பண்புகள் வளர்த்தல், பொறுப்பெடுத்து தலைமைத்துவத்தை உருவாக்கல், சமூகக் கண்ணோட்டம் பெறுதல் என அனைத்தையும் எப்படி நாம் செயல்பட்டு உருவாக்கி வளர்த்துக் கொள்வது என்பதற்கு ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணத்தைக் கூறி விளக்கினார். அத்துடன் நமக்குக் கிடைக்கும் 24 மணி நேரத்தை இந்தப் பருவத்தில் பள்ளியில் செலவழித்த நேரத்தைக் கடந்து மீதமுள்ள நேரத்தை இந்த நான்கு நடவடிக்கைகளில் நீங்கள் செலவிடுவது என்பது நீங்கள் உங்களை செயல்பாட்டில் ஈடுபடுத்திக் கொள்கிறீர்கள். இதற்கு உதவிசெய்ய ஒரு வழிகாட்டி தேவை. அதைத்தான் நாங்கள் உங்களுக்குச் செய்து வருகிறோம் எனக் கூறி முடித்தார்.

அவர் ஆற்றிய உரையில் இரண்டை தெளிவு படுத்தினார். நாம் இன்று வாழ இந்தக் கல்வியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணிக்க முடியாது. அதை இன்று உடனடியாக நம்மால் மாற்றவும் முடியாது. ஆனால் நமக்கு இந்தக் கல்விக் கூடத்திற்கு வெளியே நமக்கு உதவ நிறைய அமைப்புக்கள் காத்திருக்கின்றன. அப்படி உதவுவதாகக் கூறி பணம் பறிக்கும் நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகள் ஏழை எளிய நம் போன்ற மாணவர்களுக்குத் தேவையில்லை. கட்டணம் இல்லாது, இப்படிப்பட்ட மாணவர்களுக்கு உதவுவது என்ற வாழ்வின் லட்சியமாகச் செயல்படும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து அதில் தன்னை இணைத்துக்கொண்டு நம்மை நாம் முழுமனிதராக உருவாக்கிக் கொள்ள செயல்பாட்டில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதை தெளிவாக்கினார்.

அந்த உரையை முடித்துவிட்டு, நான் கூறிய கருத்தின் மீது, உங்கள் கருத்துக்களைக் கூறுங்கள் என்று கேட்டார். அப்பொழுது ஒரு

கிடையாது. வாழ்வியல் கல்வியை கல்விக்கூடத்திற்கு வெளியே பெற்று முழு மனிதராக உருவாகும்போது தான் ஏழையாக அந்த மாணவன் இருந்தாலும் சமூகத்திற்கு பயன்படுவார். அவ்ரால் தான் சமூகம் மாறும். அப்படி சமூகம் தேடும் மனிதராக நாம் மாற வேண்டும் என்ற புரிதல் கிடைத்தது என்றார்.

இந்தப் பணிகளில் நம் பொதுப்பள்ளிக் கூடங்கள் ஈடுபடவில்லை என்ற காரணத்தால்தான் பல நல்ல சமூகக் கண்ணோட்டம் கொண்ட சமூகச் செயல்பாட்டாளர்கள் பள்ளிகளில் தங்களால் இயன்ற உதவியை மாணவர்களுக்குச் செய்து வந்தனர். இவர்கள்தான் இலவசமாக மாணவர்கள் நலனுக்காகப் பல உதவிகளைப் பள்ளிக்கு உள்ளும் வெளியிலும் செய்து வருகின்றனர். இவர்கள்தான் கட்டணம் இல்லாத டியூஷன் மையங்களை நடத்தி வருகின்றனர். இந்த கல்வி நிலையங்கள்தான் மாணவர்களுக்கு







பங்கேற்பாளராக இருந்த மாணவி "நான் கல்விக் கூடங்களில் மாணவர்களிடம் பேசுகின்றவர்கள் கூறுவதைத் தொடர்ந்து கேட்டிருக்கிறேன். அனைவரும் மாணவர்களால் மட்டுமே இந்த சமுதாயத்தை மாற்ற முடியும் என்பார்கள். இளைஞர்களால் மட்டுமே இந்த சமுதாயத்தை மாற்றமுடியும் என்று அகங்காரமாகக் கூறுவார்கள். அப்போது நான் எண்ணுவது இந்திய நாட்டில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கைப் பார்த்து வியந்து, இவ்வளவு எண்ணிக்கை இருந்தும் சமூகம் ஏன் இந்த அவலத்தில் இருக்கிறது என்று யோசிப்பேன். இன்று எனக்கு ஐயாவின் உரையிலிருந்து ஒன்று புரிந்தது. வாழ்வாதாரக் கல்வியைப் பெற்றவர்களால் தன் வாழ்வை உயர்த்திக் கொள்ள முடியும். இவர்களால் சமூகத்திற்கு எந்த நன்மையும்

பல்வேறு திறன் வளர்ப்புக்களைச் செய்து சமூகப் பொறுப்புமிக்கவராக மாற்றி வருகின்றன. இன்றையச் சூழலில் இவர்களின் கல்விச்சேவைதான் ஏழை மாணவர்களுக்குத் தேவையாக இருக்கின்றது. ஆனால் யாரோ ஒருவர் பள்ளியில் வந்து தலைவிதி பற்றி பேசிவிட்டார் என்று கூறி, பள்ளிக்குள் யாரும் வரக்கூடாது என உத்தரவைப் பிறப்பித்து விட்டனர். இந்தச் சூழலை மாற்ற நாம் முயலும் போது மாற்று எங்கே இருக்கிறது என்று சிந்திக்கும் போது நம்முன் தெரிபவர் பெரியவர் ரகுநாதன் நடத்திவரும் 'கற்பக விருட்ஷா' என்ற மாணவர் நல இல்லம்தான். தன் வாழ்க்கையை ஏழை எளிய மாணவர்களுக்காக தானும் தன் துணைவியாரும் அர்ப்பணித்து செயல்படுவதுதான் முன்னுதாரணம். தன் இல்லத்தையே அந்த மாணவர்களுக்காகத் தந்து, அந்த மாணவர்களுக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



டியூஷன் சொல்லித்தர ஏற்பாடு செய்து, நற்பண்புகளை வளர்க்க, தனித்திறன் வளர்க்க என அத்தனை வாழ்வியல் கல்விக்கும் வழிவகுத்து சமூகச் செயல்பாட்டுக்கு முன்னுதாரணமாகச் செயல்படுகிறார். அவர் சமூகத்திற்காக குறிப்பாக இந்த ஏழை எளிய மாணவர்களுக்காக செயல்படுவதை பார்க்கும்போது அவர் பூஜிக்க தக்கவராகவே நமக்குத் தோன்றுகிறார். அந்த மாணவர்களிடமே அவ்வளவு பொறுப்புக்களையும் கொடுத்து அவர்களைச் சமூகம் தேடும் மனிதராக மாற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். அந்த மாணவர்கள் தான் சமீபத்தில் மாம்பலத்தில் மூன்று வீதிகளை தங்கள் அதிரடிச் சேவையில் சுத்தம் செய்து மக்களை வியப்பில் ஆழ்த்தினர். இதேபோல் கல்பாக்கத்தில் இயங்கிவரும் இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் ஒன்றிணைந்து அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை 'ரிவார்டு' என்ற அமைப்பை உருவாக்கி செயல்பட்டு வருவதை நான் பார்த்திருக்கின்றேன். அந்தச் செயல்பாடுகளை ஒருங்கிணைத்த ஸ்ரீதரன் என்பவர் தான் கட்டிய புதுவீட்டையே இந்த மாணவர்கள் இல்லமாக மாற்றிவிட்டார். அவர் இறப்புக்குப் பிறகு அவர் மனைவி தன் கணவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்வது ஒரு தியாகத்தின் நீட்சியாகப் பார்க்கிறேன். இப்படி எத்தனையோ தனிமனிதர்கள், குடும்பங்கள் இணைந்து சாதாரணக் குடும்ப ஏழைக் குழந்தைகளுக்கு கல்விப்பணி செய்து வருகின்றனர்.

கர்ப்பக விருட்ஷா மாணவர்கள் அந்த தெருச்சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டபோது, அந்த வீதியில் உள்ள வீடுகளில் ஒரு கணக்கெடுப்பை நடத்தினர். எத்தனை வீடுகளில் கண்தானம் செய்ய, உடல்தானம் செய்ய, ரத்ததானம் செய்ய தயாராக உள்ளார்கள் என்ற கணக்கெடுப்பை எடுத்து அதனை முறையாக பதிவு செய்ய அத்தனை முயற்சிகளையும் அந்த மாணவர்கள்தான் செய்து வருகின்றார்கள். இவர்கள் பெரும் பணக்கார வீட்டுக் குழந்தைகள் இல்லை. இவர்கள் அனைவரும் ஏழைவீட்டுக் குழந்தைகள். இவர்கள் வளர்த்தெடுக்கப்பட்ட விதம் இந்தச் செயல்பாடுகளுக்கு இவர்களை தயார் செய்திருக்கிறது. இவர்களால்தான் இந்தச் சமூகத்தை மாற்ற முடியும். இவர்களால்தான் இந்தச் சமூகம் பொறுப்பு மிக்க சமூகமாக மாறப்போகிறது. இதுபோன்ற செயல்பாடுகள்தான் இன்று நம் சமூகத்திற்கு தேவையாக இருக்கின்றது. இதுபோன்ற செயல்பாடுகளும், இது போன்ற நிறுவனங்களும்தான் ஊக்குவிக்கப்பட வேண்டும். அவைகளைக் கண்டுபிடித்து ஊக்குவிப்பதுதான் நம் கல்வித்துறையின் பணிகளில் ஒன்றாக இருக்க வேண்டும். இன்றைய பள்ளிக் கல்வியிலோ, கல்லூரிக் கல்வியிலோ வாழ்வியல் கல்விக்கான கூறுகள் அற்று வணிகத்திற்காக கூறுகளை மட்டுமே கொண்டு செயல்படுவதால்தான் இன்று சுயநலம் கொண்டு இயங்கும் பெரும் கூட்டம் பெருத்துவிட்டது.

இன்றையச் சமூக அவலங்களுக்கு நாம் பார்க்கும் பொறுப்பற்ற தன்மை எல்லா இடங்களிலும் இருக்கின்றது. அதைப்போக்க வேண்டுமானால் சமூகக் கண்ணோட்டம் கொண்டு இயங்கும் அமைப்புக்களையும் நிறுவனங்களையும் ஒரு அரசாங்கம் தேடிக் கண்டுபிடித்து பொதுக்கல்வி நிறுவனங்களுடன் இணைத்துச் செயல்படுவதன் மூலம்தான் சாத்தியப்படும். இதை மிக எளிதாக ஒரு அரசு செய்திட முடியும். ஒருசில போலி நிறுவனங்கள் செய்யும் சமூக விரோதச் செயல்களை வைத்துக்கொண்டு பள்ளியை சமூகத்திலிருந்து தனித்து இயங்க வைப்பது எந்த விதத்திலும் நன்மை பயக்காது. போலிகளும் அசலும் எப்போதும் சமூகத்தில் இயங்கத்தான் செய்கின்றன. அசலைக் கண்டுபிடித்து அதற்கு உறுதுணையாக அரசு செயல்படுவதுதான் உண்மையான கல்விச் செயல்பாடாக இருக்கும். உண்மையான சமூக அக்கறை கொண்டு செயல்படும் நிறுவனங்கள் பொதுக்கல்வி நிறுவனங்களுடன் இணையும்போது போலிகளுக்கு இடமில்லாமல் போய்விடும். எனவே இன்றைய கல்விச் சிக்கலுக்கு இதுபோன்று உதவிக்கரம் நீட்டும் நிறுவனங்களை கண்டுபிடித்து இணைத்துச் செயல்படுவது மிகப்பெரிய மாற்றத்தை ஏழை மாணவர்களிடமும் சமூகத்திடமும் ஏற்படுத்த முடியும். அதுதான் இன்றைய தேவையும் கூட.

•

**கட்டுரையாளர்: பேராசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: **இரா. எட்வின்**

# 65/66

ஒரு சீட்டு இரண்டு சீட்டு வாங்கி என்ன செய்து கிழித்துவிட்டார்கள் இவர்கள் என்று இடதுசாரிகளைப் பற்றி நக்கலாகப் பேசுபவர்கள் இந்த மாதத்திலும் பேசிக்கொண்டிருக்கத்தான் செய்தார்கள். அடுத்த மாதமும் இதைப் பேசவே செய்வார்கள். இடதுசாரிகளால் மட்டுமே செய்ய முடிந்த நான்கு விஷயங்களை இந்த மாதமும் இவர்கள் செய்து முடித்திருக்கிறார்கள். ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

**ஒன்று,**

கோவை ஈஷா மையத்தில் தகன மேடைகள் இருப்பது கடந்த மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதை எதிர்த்தும், அப்படி தகனமேடைகள் இருப்பின்

- எத்தனை சடலங்கள் அங்கு எரியூட்டப்பட்டிருக்கின்றன?
- அங்கு எரியூட்டப்பட்ட சடலங்கள் குறித்த விவரங்கள் அரசிடம் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளனவா?

என்று பரவலான விவாதங்கள் சமூக வலைதளத்தில் எழுந்தன. வெளிப்படையாகப் பேசுவதெனில் பாஜக மற்றும் அவர்களது ஸ்லீப்பர் செல்களைத் தவிர அனைத்துக்கட்சித் தோழர்களும் மிகத் தீவிரமாகக் களமாடினர்.

இதுவரை தகனமேடைகளை ரகசியமாக வைத்திருந்த ஈஷா மையம் தான் வைத்திருக்கும் தகனமேடைகளுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கோவை மாநகராட்சியிடம் கோரிக்கை வைக்கிறது. கோவை மாநகராட்சியின் ஆளும் கட்சியான திமுக அவற்றை அனுமதிப்பதற்கான தீர்மானத்தை மாமன்றத்தில் கொண்டுவருகிறது.

- திமுக அவர்களது தோழமைக் கட்சிதான்
- அவர்களது வெற்றிக்கு பெரும் காரணம் திமுகதான்.
- அவர்களது எண்ணிக்கை மிகக் குறைவானதுதான்.

ஆனாலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி *(CPM)* அந்தத் தீர்மானத்தை மிகக் கடுமையாக எதிர்க்கிறது. வேறு வழியே இல்லாமல் ஈஷாவில் உள்ள தகன மேடைகளுக்கு அனுமதி வழங்குவதற்காகத் தாங்கள் கொண்டுவந்த தீர்மானத்தை திரும்பப் பெறுகிறது திமுக.

திமுகவின் பரம எதிரி என்று தங்களைத் தாங்களே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் அதிமுக திமுகவின் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கவில்லை.

**இரண்டு,**

சென்னையில் உள்ள ஒன்பது கால்பந்தாட்ட மைதானங்களையும் சில பூங்காக்களையும் தனியார் மூலம் நிர்வகிக்க சென்னை மாநகராட்சி முடிவு செய்கிறது. இந்த மைதானங்களில்தான் ஏழை தலித் குழந்தைகள் பயிற்சி பெறுகிறார்கள். அவர்களால் தனியார் நிர்ணயிக்கப்போகும் கட்டணத்தை செலுத்த முடியாது. மார்க்சிஸ்ட் உறுப்பினர்கள் மாமன்றத்திற்குள் கடுமையாகப் போராடுகிறார்கள்.

*SFI, DYFI* மற்றும் மார்க்சிஸ்ட் கட்சி தெருவில் இறங்குகிறது. சென்னை மாநகராட்சி அந்தத் தீர்மானத்தை திரும்பப் பெறுகிறது. இங்கும்,

- திமுக தோழமைக் கட்சிதான்
- அவர்களது வெற்றிக்கு திமுகதான் காரணம்
- மாமன்றத்திலும் வெளியேயும் அவர்களது பலம் மிகக் குறைவுதான்

ஆனாலும் போராடி ஏழை தலித் பிள்ளைகளை பாதிக்கும் தீர்மானத்தை எதிர்த்துப் போராடி திரும்பப்பெற வைத்திருக்கிறார்கள்.

**மூன்று,**

தீபாவளிக்கு அடுத்தநாள் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட *DYFI, SFI* மற்றும் *CPM* தோழர்கள் தமிழ்நாட்டின் தெருவெங்கும் கிடந்த பட்டாசுக் குப்பைகளை அகற்றி தெருக்களை சுத்தம் செய்யும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்

**நான்கு,**

*28.08.2014* அன்று கர்நாடகாவில் கொப்பல் மாவட்டத்தில் உள்ள மருகும்பி என்ற ஊரில் உள்ள திரையரங்கில் இரு பிரிவினரிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ ஒரு சிறிய பிரச்சினையின் பொருட்டு தள்ளுமுள்ளு ஏற்படுகிறது.

அன்று இரவு அந்த இரு பிரிவினரில் தங்களைத் தாங்களே ஆதிக்க சாதி என்று சொல்லிக் கொள்ளும் பிரிவினர் தங்களோடு பிரச்சினையில் ஈடுபட்ட தலித் மக்கள் வாழும் பகுதிக்குள் ஆயுதங்களோடும் தீப்பந்தங்களோடும் செல்கின்றனர். கண்ணில் பட்ட மக்களை எல்லாம் அடித்துத் துவைக்கிறார்கள், வீடுகளை இடிக்கிறார்கள், குடிசைகளுக்கு தீ வைக்கிறார்கள்.

யாரும் இதை கண்டுகொள்ளவில்லை. ஊடகங்கள் எப்போதும்போல் மௌனமாகி விட்டன. ஆனால் CPM இந்த விஷயத்தைக் கையிலெடுக்கிறது. களத்தில் போராடிக்கொண்டே நீதிமன்றத்திற்கும் செல்கிறது. களத்திலும் நீதிமன்றத்திலும் தொடர்ந்து போராடுகிறது.

25.10.2024 அன்று நீதிமன்றம் அந்த அட்டூழியத்தில் ஈடுபட்ட 98 நபர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறது.

- தாக்குதல் நடந்தது 28.08.2014 அன்று
- தீர்ப்பு கிடைத்தது 25.10.2024 அன்று

கிட்டத்தட்ட 122 மாதங்கள் இந்த அநீதிக்கு எதிராக விடாது தொடர்ந்து போராடிக்கொண்டே இருந்திருக்கிறது மார்க்சிஸ்ட் கட்சி.

இந்த நேரத்தில் வாச்சாத்தி பிரச்சினைக்கு எதிராக இதே கட்சி 360 மாதங்களுக்கும் மேலாக விடாது தொடர்ந்து போராடி நியாயத்தை பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

- சட்டத்திற்கு புறம்பாக ஈஷா கட்டியிருந்த தகனமேடைகளுக்கு நியாயத்திற்கு புறம்பாக வழங்கப்பட இருந்த அனுமதியை இடதுசாரிகள் தடுத்திருக்கிறார்கள்
- சென்னையில் தனியாரின் கட்டுப்பாட்டிற்கு செல்ல இருந்த மைதானங்களையும் பூங்காக்களையும் இடதுசாரிகள் தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள்
- பட்டாசுக் குப்பைகளை அகற்றி தெருக்களை சுத்தம் செய்திருக்கிறார்கள்.
- 122 மாதங்கள் போராடி பாதிக்கப்பட்ட மருகும்பி மக்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள்
- 360 மாதங்களுக்கும் மேலாகப் போராடி வாச்சாந்தி மக்களுக்கு நியாயம் பெற்றுத் தந்திருக்கிறார்கள்

ஆனாலும் இடதுசாரிகள் என்ன செய்து கிழித்துவிட்டார்கள் என்று அவர்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

அவர்கள் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். இவர்கள் இப்படியாகக் கிழித்துக்கொண்டேதான் இருப்பார்கள்.

• •

"டைம்ஸ் ஆப் இந்தியா" இதழை மேற்கோள் காட்டி தோழர் கே.பாலகிருஷ்ணன் வெளியிட்டுள்ள உத்திரப்பிரதேசத்தில் நடந்த அந்த நிகழ்வு நம்மை நெக்குருக வைக்கிறது. அந்த இளைஞனை நெகிழ்ந்து கையெடுத்து வணங்க வைக்கிறது.

தனது இரு குழந்தைகளுக்கும் உடல்நிலை சரியற்றுப் போகவே அவர்களை ஜான்சி நகரில் உள்ள லட்சுமிபாய் மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்.

அந்த மருத்துவமனையில் திடீரென தீ பிடித்து எரியத் தொடங்குகிறது. அங்கிருந்த இளைஞர்கள் மருத்துவமனையின் கண்ணாடிகளை உடைத்துக்கொண்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த குழந்தைகளை மீட்கிற பணியில் ஈடுபடுகின்றனர். அந்த இளைஞனும் அவர்களோடு இணைந்து சுழல்கிறான்.

எந்தச் சிந்தனையுமற்று குழந்தைகளை நெருப்பில் இருந்து காப்பாற்றி எடுத்து வந்து அந்தந்த குழந்தைகளின் பெற்றோரிடம் சேர்க்கிறார்கள்.

அவர்கள் அப்படியாக உள்ளிருந்து தூக்கி வந்த குழந்தைகளுள் பத்துப் பன்னிரெண்டு இறந்த குழந்தைகளும் அடக்கம். அதுவரை குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் அவனது சிந்தனை ஓடியதே தவிர அவனது குழந்தைக்கு என்ன ஆயிற்று என்ற எண்ணமே அவனுக்கு அதுவரை இல்லை. அவனது இரண்டு குழந்தைகளும் இறந்துபோன செய்தி அறிந்ததும் தன்னுடைய குழந்தைகளின் சடலங்களை நோக்கி கதறியபடி ஓடுகிறான்.

படிக்கப் படிக்க நெஞ்சு விம்முகிறது. ஒருதுளி பொய்யற்று சொல்கிறேன், அழுதபடிதான் இதை முடிக்கிறேன்.

தோழர்களே,

அந்த இளைஞனின் பெயர் யாகூப் மன்சூரி என்பது தற்செயலானதுதான்.

•

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




THE ZUSAANEI GROUPS
Since 1992

# முடியில்லா பிரச்சனைகளுக்கு தீர்வு

# NAYAGARA
## HAIR GRIP OIL

# மூச்சு குழாயின் சுவாசம் இலேசாகும்!
# ஆயுர்வேதம் தந்த அற்புதம்

மூலிகை ஆராய்ச்சியில் 33 வருடங்களாக ஈடுபட்டுள்ள மூலிகை ஆராய்ச்சியாளர் மற்றும் 15 வருடங்களாக ஆயுர்வேதத் துறையில் உள்ள ஆயுர்வேத மருத்துவர் ஆகியோரின் அற்புதமான தயாரிப்பு **ஸ்வாச ஃப்ரீ.**

**நாட்பட்ட ஆஸ்துமா, சளி, இருமல், தும்மல் உள்ளிட்ட நுரையீரல் சம்மந்தப்பட்ட அனைத்திற்கும் மிகச்சிறந்தது.**

கொரியர் / தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



கிடைக்குமிடம் :

**வெற்றி விநாயகர் மெடிக்கல்ஸ்**

தி சுசான்லி அக்குபஞ்சர் & ஆயுர்வேதிக் கிளினிக் வளாகம்,
11-A. பாரதிதாசன் தெரு, பிள்ளையார் கோயில் எதிரில்,
மஞ்சக்குப்பம், கடலூர்–1.

**செல் : 93676 22248, போன் : 04142-355418**

மேலும் விபரங்களுக்கு : **96003 09546, 93676 22256**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: **துருவன்**

# இஸ்ரோவின்
# லே அனலாக் ஆய்வு மையம்

**செவ்வாய் கோள் மற்றும் நிலவின் நிலப்பரப்புகளை நெருக்கமாக ஒத்திருக்கும் அதன் தனித்துவமான புவியியல் பண்புகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட லடாக்கில் இந்த அனலாக் ஆய்வு பணியை நடத்த இஸ்ரோ முடிவு செய்தது. அதன்படி இங்கு ஆராய்ச்சி தொடங்கியுள்ளது.**

விண்வெளிக்கும், வெவ்வேறு கோள்களுக்கு மனிதர்களை அனுப்பும் பயணத்திட்டத்தின் ஒரு பகுதியாக, லடாக்கில் புதிய அனலாக் ஆய்வு மையத்தை இந்திய விண்வெளி ஆய்வுநிலையம் (இஸ்ரோ) தொடங்கியுள்ளது.

இஸ்ரோ சார்பில் விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தின் ஆய்வுகள் தொடங்கி சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. அதேபோல், விண்வெளி மையம் ஒன்றை அமைக்கவும் இந்தியா முயற்சி மேற்கொண்டுள்ளது. வெவ்வேறு கோள்களுக்கு விண்வெளிக் கலன்களை அனுப்பவும் அடுத்தடுத்து திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், ககன்யான் திட்டத்தில் விண்வெளிக்கு அனுப்புவதற்காக விமானப்படையை சேர்ந்த 6 வீரர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு சிறப்பான பயிற்சியை இஸ்ரோ அளித்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், விண்வெளியிலும், அதற்கு அப்பால் உள்ள பிற கோள்களில் மனிதர்கள் உயிர் வாழ்வதில் இருக்கும் சிக்கல்களை கண்டறியும் நோக்கத்திலும், இஸ்ரோ ஆய்வுகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, லடாக்கில் உள்ள லே பகுதியில் சிறப்பு ஆய்வை இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடங்கியுள்ளனர். இதற்காக அங்கு அனலாக் ஆய்வு மையத்தை இஸ்ரோ அமைத்துள்ளது. இந்த ஆய்வு மையத்துக்கு ஹேப்-1 என்று பெயரிடப்பட்டுள்ளது. ஒத்திகை மூலம் விண்வெளி பயணத்தின்போது என்னென்ன சிக்கல்கள் ஏற்படலாம் என இளம் காண முடியும். சிக்கல்களை வரும்முன்னே இனம் கண்டு தீர்வுகளை இனம் காணுவதுதான் 'அனலாக் விண்வெளிப் பயணம்' என்னும் விண்வெளிப் பயண ஒத்திகை.

வேற்று கோள்களில் இருப்பது போன்ற சூழல் கொண்ட கலன்களை அமைத்து, அங்கு ஆய்வுகளை இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடங்கியுள்ளனர். விண்வெளி அல்லது வேறு கோள்களில் இருப்பது போன்ற தட்பவெப்பம் கொண்ட இடங்களில் இத்தகைய சோதனையை நடத்துவதற்கு முடிவு செய்த இஸ்ரோ விஞ்ஞானிகள் அந்த அடிப்படையில் இந்த, 'அனலாக்' சோதனையை லே பகுதியில் நடத்தி வருகின்றனர்.

இந்த அனலாக் ஆய்வு மையத்தில் புதிய தொழில்நுட்பம், ரோபோடிக் கருவிகள், வாகனங்கள், வேற்று கிரகம் அல்லது விண்வெளியில் பயன்படுத்தப்படும் வசிப்பிடங்கள், தகவல் தொடர்பு சாதனங்கள், மின் உற்பத்தி சாதனங்கள், இடம் பெயர் சாதனங்கள், இருப்பு வைக்கும் சாதனங்கள் ஆகியவை பரிசோதிக்கப்பட உள்ளன. லடாக் மலை மேம்பாட்டுக் குழுமம், மும்பை ஐஐடி, லடாக் பல்கலை ஆகியவற்றுடன் இணைந்து இஸ்ரோ இந்த சோதனையை நடத்துகிறது.

செவ்வாய் கோள் மற்றும் நிலவின் நிலப்பரப்புகளை நெருக்கமாக ஒத்திருக்கும் அதன் தனித்துவமான புவியியல் பண்புகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட லடாக்கில் இந்த அனலாக் ஆய்வு பணியை நடத்த இஸ்ரோ முடிவு செய்தது. அதன்படி இங்கு ஆராய்ச்சி தொடங்கியுள்ளது.

லடாக்கின் குளிர், வறண்ட நிலைகள் மற்றும் அதிக உயரம் ஆகியவை நீண்ட கால விண்வெளிப் பயணங்களுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் உத்திகளைச் சோதிக்க சிறந்த சூழலை வழங்குவதாக கூறப்படுகிறது. இந்த முயற்சியானது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அனுப்புவதை நோக்கமாகக் கொண்ட ககன்யான் திட்டம் உட்பட, மனித விண்வெளிப் பயணம் மற்றும் கோள்களுக்கு இடையேயான ஆய்வுகளில் அதன் திறன்களை மேம்படுத்துவதற்கான ஒரு பகுதியாக இருக்கும் என்று தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரோ தனது எக்ஸ் தளத்தில் கூறியுள்ளதாவது: இந்தியாவின் முதல் அனலாக் விண்வெளிப் பயணம் லே பகுதியில் தொடங்குகிறது.

2047-ம் ஆண்டுக்குள் விண்வெளியில் இந்திய ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுதல், 2035-ம் ஆண்டுக்குள் பாரதிய அந்தரிக்ஷா ஸ்டேஷன் (பிஏஎஸ்) அமைத்தல், 2040-ம் ஆண்டுக்குள் நிலவுக்குப் பயணம் என்பதே இஸ்ரோவின் இலக்குகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அனலாக் என்றால் என்ன?

அனலாக் என்பது பல்வேறு அதிர்வெண்களின் சமிக்ஞைகளாக அனுப்பப்படும் மின்னணு தகவல்தொடர்பு ஆகும். டிஜிட்டல் சிக்னல்கள் ஆன் அல்லது ஆஃப் போன்ற பைனரி மதிப்பைத் தெரிவிக்கும் போது , அனலாக் சிக்னல்கள் வரைபடங்களாகசிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஹேப்-1 மையத்தில் என்ன நடக்கும்?

ஒத்திகை நிலையத்தில் ஒரு நபர் மட்டுமே வாழ முடியும். இதில் படுக்க இடம், சமைக்க இடம், கழிப்பறை, நீர், காற்று போன்றவற்றை மறுசுழற்சி செய்யக் கருவிகள் இருக்கும் என விண்வெளிக் கட்டிடக் கலை நிறுவனம், ஆகா ஸ்பேஸ் ஸ்டுடியோ தரவுகள் தெரிவிக்கின்றன. ஆனால், இந்த ஒத்திகை எப்போது தொடங்கும், இந்த ஒத்திகைப் பயணத்தை யார் மேற்கொள்வார்கள் என்பது போன்ற விவரங்களை இஸ்ரோ இதுவரை அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை.

**உலகின் முதல் ஒத்திகை மையம்:**

உலகிலேயே முதல் ஒத்திகை மையத்தை 1972இல் சோவியத் யூனியன் சைபீரியாவில் நிறுவியது. சுமார் 10 ஒத்திகைகள் இதில் மேற்கொள்ளப்பட்டன. அதில் ஒன்று, 180 நாள்கள் நீண்ட ஒத்திகை. BIOS-3 எனும் இந்த ஒத்திகை ஆய்வுகள் மூலம் அந்த நேரத்தில் இருந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, 99% காற்றையும், 85% தண்ணீரையும், தோராயமாக 50% உணவு ஊட்டச்சத்துகளையும் மறுசுழற்சி செய்ய முடிந்தது.

அதன் பின்னர் நாசா, ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனம், சீனா இதே போன்ற ஒத்திகை நிலையங்களை ஏற்படுத்தி யுள்ளன. 520 நாள்கள் நீடித்த ரஷ்யாவின் 'மார்ஸ் 500' என்னும் ஒத்திகைதான் இதுவரை நடத்தப்பட்டுள்ள ஒத்திகை ஆய்வுகளில் மிக நீண்டதும், தொடர் தனிமை கொண்டதுமான ஆய்வு. ரஷ்யா, சீனா, இத்தாலி, கொலம் பியா, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆறு நபர்கள் ஒன்றுசேர்ந்து இந்த ஒத்திகை நிலையத்தில் வாழ்ந்து சாதனை புரிந்துள்ளனர்.

•

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: ஜி.ஏ. கௌதம்

# ஆன்லைன் பரதேசிகள்

**குற்றங்களும் அதன் வகைகளும் வெவ்வேறு வடிவங்களில் அதிவேகமாகவும், அதிதீவிரமாகவும் பெருகிக்கொண்டேயிருக்க, அதற்கான விழிப்புணர்வு முன்னெடுப்புகளும் இன்னோர் பக்கம் அதே வேகத்தில் ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.**

நல்ல கூலி, தங்குவதற்கு வசதியான இடம், உண்ண மூன்று வேளை உணவு தருவதாக சொல்லும் கங்கானியின் ஆசை வார்த்தையை நம்பி தேயிலைத் தோட்டத்திற்கு சென்று, கொத்தடிமைகளாக மாறிய சென்னை மாகாணத்து மக்களின் வலிகளையும், வேதனைகளையும் சொல்லும் 'பால் ஹாரிஸ் டேனியல்' எழுதிய '*Red Tea*' என்ற நாவல் தமிழில் 'எரியும் பனிக்காடு' என்ற பெயரில் வெளியாகி வாசகர்களிடம் பெரும் வரவேற்பைப்பெற்றது. அக்கதையைத் தழுவி இயக்குநர் பாலாவின் இயக்கத்தில் 'பரதேசி' எனும் திரைப்படம் வெளியாகி பார்வையாளர்களிடம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ஆட்சி தன் கையில் இருப்பதை வைத்துக்கொண்டு வெள்ளையர்கள் மக்கள் மீது அதிலும் குறிப்பாக பெண்கள் மீது செலுத்திய ஒடுக்குமுறையினை இப்படம் பேசியது.

இதெல்லாம் நடந்தது வெள்ளையர்கள் காலத்தில் தானே. இப்போது ஏது இந்த அடிமை முறை என நீங்கள் நினைக்கலாம். ஆனால், இது போன்ற நிலை இன்னும் தொடர்கிறது என்றால், உங்களால் நம்ப முடியுமா? ஆம். அது தான் உண்மை. ஆனால் நேரடியாக இல்லை, மறைமுகமாக.

தாய்லாந்தில் வேலை என்று அழைத்துச் சென்று, அங்கிருந்து வாகனங்கள் மூலம் கம்போடியா கொண்டுவரப்பட்டு, அங்கே ஒரு ரகசியமான கான்கிரீட் வளாகத்தில் இணைய குற்றங்களை செய்ய நிர்பந்திக்கப்படுகிறார்கள். "இது என் வேலை இல்ல. நான் கிளம்புறேன்" என மறுத்தால, அங்கிருந்து வெளியேற அவர்கள் கேட்கும் சிறு தொகை (உதா: 10,000 அமெரிக்க டாலர் மட்டுமே) கொடுக்கவேண்டும், அல்லது அவர்கள் சொல்லும் சில ஆண்டுகள் மட்டும் (குறைந்தபட்சம் 10 ஆண்டுகள்) அவர்கள் சொல்லும் அனைத்து வேலைகளும் செய்தால் போதும். விரைவில் 'பரதேசி' திரைப்பட அதர்வாவைப்போல வெளியேறிவிடலாம்.

வெளிநாடு வந்துவிட்டோம் இனி நம் வாழ்க்கை மொத்தமாக மாறிவிடும் என நேற்று வரை நம்பியவர்களுக்கு, 'ஆடுஜீவிதம்' திரைப்படத்தில் நிகழ்ந்தது போல நாமும் ஒருவரிடம் அடிமையாக சிக்கிக்கொண்டோம் என்று தெரியவருகையில், அங்கிருந்து வெளிவரும் வரை அவர்கள் வாழ்க்கை எப்படியிருக்கும் என நினைத்துப்பாருங்கள். தனிமனிதர்களை விதவிதமாக ஏமாற்றிய இணைய வில்லன் கும்பல்கள் குறித்த செய்திகளை கேட்டிருப்போம். ஆனால் எதிர்ப்புறம் நிற்கும் வில்லன்கள் கும்பலில், தட்டச்சு செய்பவர்களின் கரங்களில் கட்டப்பட்டிருக்கும் நூல்கள், மேலிருக்கும் முகம் தெரியாத ஒருவனது விரல்களால் பொம்மலாட்டம் நிகழ்த்தப்படுவதால், நம்மிடையே பேசுபவர்களில் சிலர் நம்மைப்போன்ற ஒரு பலியாடாகக் கூட இருக்கலாம் என தெரிய வருகையில் பேரதிர்ச்சியாக இருக்கிறது. அவர்களைக்கொண்டு நடத்தப்படும்

சைபர் அடிமைகளுக்கு ஒரு நாளில் சுமார் 18 மணி நேரம் இது மட்டுமே வேலை. ஒரு நாளில் மட்டும் பல நூறு பேருக்கு நட்பு அழைப்புகளை விரிப்பதின் வழியே, அவர்களுக்கான வலையை வீச வேண்டும். அதில் சிக்கும் ஆட்களிடம் நாள் கணக்கில் மாதக்கணக்கில், ஏன் வருடக்கணக்கில் கூட அவர்களிடம் பேசி, அவர்களிடம் நன்மதிப்பை பெற வேண்டும். அந்த நன்மதிப்பை ஒரு விதை போல ஆங்காங்கே, அவர்கள் மனதில் நட்டு வைக்க வேண்டும். ஒரு கட்டத்திற்கு மேல், இனி நாம் என்ன சொன்னாலும் நம்புவார் என்ற நிலை வரும் போது, அவர்களின் விஷம் கலந்த முடிச்சுகளை ஒவ்வொன்றாக அவிழ்க்க வேண்டும். ஏற்கனவே விதைத்திருந்த நன்மதிப்புகள் இப்போது நன்கு வளர்ந்து மரமாகியிருக்கும். அந்த நம்பிக்கையில் இவர்களை நம்பி, இவர்கள் காட்டுகிற இடத்தில் எல்லாம் காசை கொட்டத்துவங்குவார்கள். கொஞ்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சமாக மொத்தப்பணத்தையும் பறித்தவுடன் அக்கணக்கிலிருந்து வெளியேறி இன்னோர் கணக்கை துவங்க வேண்டும். இது போன்ற மோசடிக்கு பன்றி கசாப்பு மோசடி (*Pig Butchering*) என்று பெயர்.

பிக் புச்சரிங் செய்வதற்காக ஒவ்வொரு தனிநபரிடமும் செலவழிக்க வேண்டிய காலம் மிகப்பெரிது. சில சமயம் இது வேலைக்காகாமல் கூட போகலாம். அப்போது தலைவிதியே என அடுத்தவரிடம் நகர வேண்டும். "என்ன ஆச்சு? அவன் ஏமாறவில்லையா? நீ அவனை சரியாக அணுகவில்லை" என ஆத்திரமடையும் மேனேஜர்(?!?) முதுகில் சலார் என்று சாட்டையில் அடித்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

இப்படியொரு பணியை செய்ய யார்தான் வருவார்கள்? அதனால் தான் 'வெளிநாட்டில் நல்ல சம்பளத்தில் வேலை' என்ற பெயரில் நன்கு படித்த இளைஞர்களை கம்போடியாவிற்குள் கடத்திவந்து, காம்பவுண்ட் சிறைகளுக்குள் அடைத்துவைத்து, இக்குற்றங்களை செய்யச் வைக்கிறார்கள்.

எடுத்த எடுப்பில் சொல்வதெல்லாம் கேட்பார்களா? நிச்சயம் மாட்டார்கள். நாலடி வாங்கினாலும்? ம்ஹூம்... படுத்தே கிடப்பேன் என நினைப்பவரை கூட ஒரு விஷயத்தில் க்ட்டுக்குள் கோண்டு வர முடியும். அது 'பசி'. சாப்பிடாமல் எத்தனை நாள் தான் ஒருவரால் இருக்க முடியும். பொறுத்துப்பொறுத்து பார்த்து பசி தாங்காமல், ஒரு வழியாக இறங்கிவந்து, தன்னிடம் வேலைகளை செய்தே ஆகவேண்டிய சூழலுக்கு அவர்கள் தள்ளப்படுவார்கள். அதற்காக தன்னிடம் கொடுக்கும் வேலைகளை எல்லாம் செய்ய முடியுமா என்றால் அதுவும் ஆரம்பத்தில் முடியாது. ஆனால் போகப்போக அதுவும் சாத்தியம்.

போரின் முடிவில், சிறைபட்ட போர் வீரர்களை காணும் அரசன் "உங்களுக்குள் அடித்துக்கொள்ளுங்கள். உயிரோடு இருக்கும் கடைசி ஒருவனுக்கு மட்டும் விடுதலை" என்று சொல்கிறார் எனில், ஒவ்வொருவரும் தங்கள் உயிரை காப்பாற்றிக்கொள்ள இன்னொருவனை எப்படி கருணையின்றி குரூரமாக கொலை செய்ய முனைவார்களோ அதே வகையில், நவீன 'பரதேசி' திரைப்படத்தைப்போன்று கணிணிகள் சூழ்ந்த ஒரு கான்கிரீட் வனாந்திரத்தில், மீட்க யாருமின்றி சிக்கிக்கொண்ட ஒவ்வொருவரும் தங்கள் விடுதலைக்காக எதையும் செய்யும் அளவுக்கு மனதளவில் தயாராவார்கள் அல்லது அப்படியொரு நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

ஒன்று அவர்கள் சொல்வதை செய்ய வேண்டும். இல்லையேல், எல்லார் கண் முன்பாக அவர்களால் குரூரமாக துன்புறத்தப்படுவார்கள். அதற்க்கும் மசியவில்லையெனில் அவர்கள் மரணத்தின் மூலம், இனியும் இன்னோர் கை யாரும் ஓங்காமல் பார்த்துக்கொள்வார்கள். லட்சங்களை அள்ளிக்கொடுத்தாலும் லட்சியம், கொள்கை என்று பேசி செய்யத் தயங்குபவர்கள் கூட, தன் கண் முன்பாக ஒருவன் செத்துக்கிடப்பதை பார்க்கும் போது சொற்ப சம்பளத்திற்காகவோ அல்லது விடுதலைக்காகவோ எதையும் செய்ய மனதளவி தயாராவார்கள்.

நல்லதோர் வீணை இப்படியாக கொஞ்சம் கொஞ்சமாக புழுதி பட ஆரம்பிக்கும். இதனால், அவர்கள் எந்தளவு மாறியிருப்பார்கள் என்றால், பின்னாளில் அவர்கள் செய்வது தவறு என்றே தெரியாத அளவுக்கு, இதனால் எத்தனை குடும்பங்கள் பாதிக்கும் என்பதைப் பற்றி துளியும் கவலை கொள்ளாத அளவுக்கு, அவர்கள் சிந்தனைக்குள் விஷம் ஊறிப்போயிருக்கும். உங்களுக்கு புரியும்படி சொல்ல வேண்டுமென்றால், முழுமையான சந்திரமுகியாக மாறியிருப்பார்கள்.

இதன் விளைவு வரன் தேடும் பெண்ணை மயக்கி சில நாட்கள் இணையத்தின் வழியாகவே தன்னை ஒருவனின் மனைவியாக உணர வைத்து, தன் ரகசியங்களையும், அந்தரங்க ஆசைகளையும், அது தரும் வெட்கங்களையும் பகிரும் அளவுக்கு அவளிடம் நெருங்கி, திருமணமாகும் அந்த திருநாளுக்காக காத்திருக்கையில் இவர்களின் திட்டப்படி விமானநிலையத்தில் சிக்கி விட்டதாக சொல்லி, அவர்களே சுங்க அதிகாரிகள் போல நடித்து பணம் பறித்து விட்டு காணாமல் சென்று விடுவார்கள். இதுவும் நிஜத்தில் நடந்த ஒரு கதை.

கம்போடியாவில் சைபர் குற்றம் செய்ய வைக்கும் கும்பலிடம் சிக்கிய ஒரு அழகிய இளைஞனுக்கு முதல் வேலையாக, தமிழ் மேட்ரிமோனியில் வரன் தேடும் ஒரு பணக்கார குடும்பத்தின் பெண்ணை இலக்காக வைத்திருந்தால் அவனும் இதையே தானே செய்திருப்பான்!

அதே சமயம், எதிரில் ஏமாறுபவரின் மனநிலையில் இருந்து பார்ப்பவர்களுக்கு மட்டுமே அவர்களின் வலி புரியும். ஏனெனில் வேறு எதன் வழியாகவும் பணத்தை இழக்கும் மனிதர்கள், காவல்துறை மூலம் எப்படியோ அதை மீட்டுக்கொள்வார்கள் அல்லது மீண்டும் சம்பாதித்துக் கொள்வார்கள். அதுவும் இல்லையா போய்த்தொலையட்டும் என்று விட்டு விடுவார்கள்.

ஆனால் நட்பின் மூலமோ, அன்பின் மூலமோ அல்லது காதலின் மூலமோ ஒருவரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழப்பதையோ ஏமாறுவதையோ மட்டும் மனிதர்களால் ஏற்றுக்கொள்ளவே முடிவதில்லை. காரணம் அன்பும், அது உருவாக்கும் நம்பிக்கையும். அந்த நம்பிக்கை உடையும் தருவாயில் இனி இந்த உலகில் யாரைத்தான் நம்புவது என்ற விரக்தி நிலைக்கே நம்மை அழைத்து சென்றுவிடும்.

குறிப்பாக, தனக்கான வருங்கால துணையை தேடும் ஒருவருக்கு இப்படி துணையாக வரப்போகும் ஒருவர் தன்னிடமிருந்து பறிக்கபோகும் பணத்திற்காகத்தான் இத்தனை காலம் பழகியிருக்கிறார் என்று தெரியவரும் போது, 'இத்தனை காலம் பொய்யாக நடித்த ஒருவரிடம் நாம் ஏமாந்திருக்கிறோமா! ஒருவரின் பொய்யான நடிப்பைக்கூட கண்டுபிடிக்கத்தெரியாமல் நம் உள்ளத்தின் அகச்சிந்தனைகளையும், வெளியில் சொல்ல வெட்கப்படும் உரையாடல்களையும் வடிகட்டாமல் பைத்தியம் போல அவரிடம் சென்றா கொட்டினோம்!' என்று முதலில் நம்மை நாமே வெறுக்கத் தொடங்கி சுயபச்சாதாபத்தில் மிதக்கத்துவங்குவோம்.

நமக்குத்தான் இத்தனை அகச்சிக்கல்கள். ஆனால், அவர்களின் பட்டியலில் நாம் வெறும் எண் மட்டுமே.

'எதிர்பார்த்த தொகை வந்துவிட்டதா, சரி கிளம்பு.

வேறு பெயர். வேறு ஆண்/பெண்'.

இவ்வளவு தான் அவர்கள் இருண்ட உலகின் நியதி. அங்கே கொள்கை, கோட்பாடு நியாயம், ஒழுக்கம் என எதுவும் இல்லை. அங்கிருப்பது ஒன்றே ஒன்று. தீராத அவர்களின் பணத்தின் மீதான பசி மட்டுமே. அந்தளவுக்கு பணத்திற்காக மனிதர்களுடைய உளவியலுடன், கையில் இருக்கும் பொம்மை மனிதர்களை கட்டளைகள் எனும் நூல்கள் மூலம் அசைத்து விளையாடுகிறது இந்த சைபர் கிரைம் கும்பல்கள்.

இந்திய சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையம் *(Indian Cyber Crime Coordination Centre -I4C)* அறிக்கையின் படி, 2024-ம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இணைய மோசடிகளில் இந்தியர்கள் இழந்த தொகை மட்டும் 1,750 கோடி ரூபாய். இதில் 500 கோடிக்கும் அதிகமான தொகை கம்போடியாவின் சைபர் காம்பவுண்டுகளில் இருந்து தான் திருடப்பட்டிருக்கிறது. வெறும் நான்கே மாதங்களில் இவ்வளவு தொகை ஏமாற்ற முடிகிறது என்பதால் தான், தகுந்த ஆட்களை கடத்தி வந்தாவது அவர்களின் மூலம் பணம் கொழிக்க வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறது சைபர் மாபியா. இதனால் தான், கம்போடியாவில் மட்டும் இரண்டு லட்சத்திற்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பு என்ற பெயரில் ஏமாற்றி அழைத்து வரப்பட்டு சைபர் அடிமைகளாகச் சிக்கியிருக்கிறார்கள் என்ற அதிர்ச்சித்தகவலை ஐநாவின் 2023 அறிக்கை தெரிவிக்கிறது.

இவ்வளவு நடக்கிறதே. அந்த நாட்டின் அரசாங்கம் என்ன உறங்குகிறதா என நீங்கள் கேட்கலாம். அவர்கள் உறங்கவில்லை. அதற்கு மாறாக இந்த சைபர் கொள்ளையர்களுக்கு சிவப்புக்கம்பளம் விரித்திருக்கிறார்கள். 'என்ன! அரசின் ஒப்புதலுடனா இவ்வளவும் நடக்கிறது...' என்று அதிர்ச்சியாகாதீர்கள். ஆம். பணம் வந்தால் பத்தும் பறக்கும். அதில் மக்களின் மீதான அக்கறையும் ஒன்று. 'எதிர்பார்த்த பெரும் தொகை வருகிறதா! அது போதும். எவன் செத்தால் நமக்கென்ன' என்று தரம் குறைந்த சாலை போடும், பாலம் கட்டும் ஒப்பந்ததாரர்களின் நீட்டிக்கப்பட்ட உருவமே இந்த கம்போடிய அரசாங்கம்.

வரலாற்றில் சற்றே பின்னோக்கி சென்றால், 1000 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்கானிஸ்தான் முதல் இங்கிலாந்து வரை பரந்துவிரிந்த அனைத்து தேசங்களின் கண்களும் இந்தியாவின் மீதே இருந்தது. காரணம், இந்தியாவிலிருக்கும் பெரும் செல்வம். அதனால் தான் முகம்மது கஜினி, முகம்மது கோரி, தைமூர் அதன் பின் வந்த ஆங்கிலேயர்கள் என பலருக்கும் இந்தியாவின் செல்வம் அள்ள அள்ள குறையாத செல்வமாக இருந்தது. அதன் டிஜிட்டல் வடிவமாக, நவீன இந்தியா இப்போது மீண்டும் இணைய கொள்ளையர்களின் இலக்காக மாறியிருக்கிறது.

விடியாத இரவு ஏது! இது போன்ற இணைய குற்றங்கள் ஒரு பக்கம் நடந்தாலும், பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்ற, அவர்கள் இழந்த தொகையை மீட்டெடுக்க துப்பாக்கிக்கு பதிலாக கீபோர்டை ஏந்திய சைபர் வீரர்கள் கொண்ட ஒரு தனிக்குழு 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. ஆனால், நேரில் பிடிக்கக்கூடிய் குற்றவாளியாகளைபோல் இல்லாமல், அவர்கள் முகம், இருக்கும் இடம், ஊர், நாடுகள் போன்றவற்றை எளிமையாக கண்டறிய முடியாமல் போவதால் சைபர் வீரர்களை விட பல மடங்கு அதிக எண்ணிகையில் குற்றங்கள் தொடர்ந்து பதிவாகிக்கொண்டே இருக்கின்றன. காவல்துறையும், இணைய குற்றவியல் துறையும் ஒரு பக்கம் போராடிக்கொண்டிருந்தால், எல்லோருக்கும் நீதி கிடைத்துவிடுமா என்றால் அதுவும் குற்றங்களின் வகையினைப்பொறுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவில், ஆறு வருடம் பழகிய ஒரு இணைய தோழியிடம் வங்கியின் தலைமை அதிகாரி க்ரிப்டோ முதலீடு என்ற பெயரில் 47 மில்லியன் அமெரிக்கன் டாலரை இழந்திருக்கிறார். (தன் மகளின் கல்லூரிக்கட்டணம் உட்பட) இனத்தால், மொழியால், மதத்தால் பிரிந்திருந்தாலும், ஏமாறுவதில் மட்டும் எல்லோரும் ஓர் இனம்.

இந்தியா போன்ற தொழில்நுட்பத்தின் வாசம் புகாத முந்தைய தலைமுறையினரைக் கொண்ட தேசத்தின், இன்னமும் அழைப்பு வந்தால் பச்சை பட்டனை மட்டுமே அழுத்த தெரியும் முதியோர்கள் சைபர் குற்றங்களுக்கான எளிமையாக களமாக இருக்கிறது. ஆங்கிலத்தில் நாலு வார்த்தைகளை சரளமாக பேசும் எவரும் நல்லவராகத்தான் இருப்பார்கள் என்று நம்பும் பிற்போக்குத்தனங்களை கொண்டிருக்கும் நம் பெற்றோரிடம், வங்கியின் பெயராலோ அல்லது அரசு அதிகாரிகள் எனும் பெயரிலோ ஏமாற்ற முடியும் தானே. ஒரு வேளை அவர்களுக்குள் சிறு சந்தேகம் பிறந்தாலும், பிள்ளைகளிடம் கேட்க ஈகோ பார்த்து பணத்தை தொலைத்த பெற்றோர்களும் அதில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இது போன்ற எளிய மனிதர்களும், அவர்களுக்குள் இருக்கும் அறியாமையும், யாரிடமும் உதவி கேட்காத இந்த வரட்டு பிடிவாதங்களும் தான் இந்தக் கொள்ளையர்களின் முதல் இலக்கு. உங்க கார்டு மேல இருக்குற 16 நம்பர சொல்லுங்க என்று சொல்லிக்கொண்டிருந்த காலம் போய், அடுத்தடுத்து நூதன முறையில் பணம் பறிக்க ஒரு அகராதியே தயார் செய்துவிட்டார்கள்.

குற்றங்களும் அதன் வகைகளும் வெவ்வேறு வடிவங்களில் அதிவேகமாகவும், அதிதீவிரமாகவும் பெருகிக்கொண்டேயிருக்க, அதற்கான விழிப்புணர்வு முன்னெடுப்புகளும் இன்னோர் பக்கம் அதே வேகத்தில் ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

மக்களிடம் அறியாமையை ஏற்படுத்துவதற்கு இதுவரை நிகழ்ந்த குற்றங்கள் மற்றும் அதன் தீர்வுகள் குறித்து 'ஆனந்த விகடன்' இதழில் தொடர்ந்து வெளிவருவதன் மூலம் பலரின் கவனத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் 'ஹரிஹரசுதன் தங்கவேலு' அவர்களின் 'இருள்வலை வில்லன்கள்' எனும் கட்டுரைத்தொடரில் சமீபத்தில் கம்போடியாவில் நடக்கும் நவீன சைபர் திருட்டினையும், அதன் பின்னணியில் இருக்கும் சைபர் அடிமைகளையும், இதற்கு துணை போகும் அதிகாரிகளையும் வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது.

குற்றங்களை புலனாய்வு செய்யும் காவல்துறையினர் போல, சைபர் குற்றங்களை கண்டறியும், அதற்கு தீர்வு சொல்லும் நிபுணர்கள் மூலம் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இது போன்ற கட்டுரைகள் மூலமும் தொலைக்காட்சி மற்றும் இணைய ஊடகங்கள் மூலமும் இது போன்ற சைபர் குற்றங்கள் குறித்து பலரும் விழிப்புணர்வுகள் ஏற்படுத்திக்கொண்டிருக்கையில், 'இருள்வலை வில்லன்கள்' பலரின் வாழ்க்கையையும் மாற்றியுள்ளது.

"எனக்கும் இது போன்ற அழைப்புகள் வந்தன. நல்ல வேளையாக விகடனில் அவரின் கட்டுரையை வாசித்தேன். அதனால் இது போன்ற அழைப்புகளை எதிர்கொள்ள தைரியம் வந்தது" என்று இது போல நன்றி தெரிவித்து பகிரப்பட்ட பலரின் குறுஞ்செய்திகளை சமூக ஊடகங்களில் காண முடிகிறது. அது மட்டுமின்றி, இதை வாசித்த பலரும் தங்கள் நண்பர்களுக்கு, சொந்தங்களுக்கு அனுப்பி அதன் மூலம் நிறைய பேர் காப்பற்றப்பட்டிருக்கிறார்கள்.

சில முகநூல் பதிவுகளிலும், யூடியூப் காணொளிகளிலும் பகிரப்பட்டு வந்த அவரது கட்டுரைகள் விகடன் போன்ற பெரும் வாசகர் கூட்டத்தை தமிழில் கொண்டிருக்கும் பத்திரிக்கையின் மூலமே இது போன்ற பெரும்பான்மையான குற்றங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. அலைபேசியில் டெபிட் கார்டு எண் கேட்பவர்களையோ, உங்கள் ஆதார் எண்ணில் பார்சல் சிக்கியுள்ளது போன்ற மிரட்டல்கள் மீதோ, உங்கள் அலைபேசி எண் தவறான பரிவர்தனைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுகளையோ தைரியமாக எதிர்கொள்ள வைத்திருக்கிறது.

இது தான் உண்மையான பத்திரிக்கையின் பலம். இதனால் தான் ஆயுதங்களுக்கு தடைவிதிக்காத பல நாடுகள் கூட பத்திரிக்கைகளுக்கு தடை விதித்திருக்கின்றன. ஏதோ ஒரு நாள் கட்டுரை வாசித்தோம் கடந்தொம் என்றில்லாமல், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு விதத்தில் ஏமாறும் ஏமாற்றப்படும் கதைகளை மக்கள் வாசிக்கும் போது, அது குறித்த காணொளிகள் காணும் போது மட்டுமே அவர்களுக்கு இந்தப்பிரச்சனையின் தீவிரம் புரியத்துவங்கும். இனிமேலும் இந்தியா உலகநாடுகளின் ஏமாறும் தேசமாக இருக்கப்போவதில்லை.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: தொகுப்பும் தமிழாக்கமும் நிழல்வண்ணன்



### கோமகள் எமில்ஜா புரோயெல் பளேட்டர்

# போலந்தின் ஜோன் ஆஃப் ஆர்க்

போலந்து மக்கள் தனது மூன்று அண்டை நாடுகளின் பிடியிலிருந்து தங்கள் நாட்டை மீட்பதற்காக மூன்றுமுறை முயற்சி செய்தார்கள். 1830 இல் நடந்த இரண்டாவது போராட்டத்தில் எமில்ஜா பிளேட்டர் தனித்துவமிக்க ஒரு பங்கினை வகித்தார்.

எமில்ஜா 1806 இல் வில்னோ என்ற ஊரில் போலந்தின் மிக உயர்ந்த பிரபுக்குலத்தின் உறுப்பினர்களாக இருந்த கோமகன் கெசாவரி மற்றும் கோமகள் அன்னா பிளேட்டருக்கும் மகளாகப் பிறந்தார். அவருடைய ஒன்பதாவது வயதில் அவரது பெற்றோர் மணமுறிவு செய்துகொண்டனர். எமில்ஜா அவருடைய தூரத்து உறவினரும் வில்னா ஆளுகைப் பகுதியின் துணை ஆளுனருமான மைக்கேல் பிளேட்டர் குடும்பத்தில் வளர்ந்தார். எமில்ஜியாவுக்கு அந்தக் காலத்தில் பெரும்பாலான பெண்களுக்குக் கிடைக்காத நேர்த்திமிகு பண்பாடான வாழ்க்கையும் கல்வியும் வாய்த்தது. அவர் மிகவும் அறிவார்ந்த மாணவியாக இருந்தார், குறிப்பாக கணிதத்திலும் வரலாற்றிலும் பெரும் ஆர்வம் கொண்டவராக இருந்தார் அவருடைய ஆசிரியர்களில் ஒருவர் தாகாவ்பில்ஸ் கோட்டையில் படைத்தலைவராகவும் இராணுவப் பொறியாளராகவும் இருந்த வில்ஹெல்ம் வான் டால்விக் என்பவர் ஆவார். போலந்தின் வரலாற்றுப் பெருமிதம் மதிக்கப்பட்டுவந்த ஒரு சூழலில் அவர் வளர்ந்தார். ஆட்டோமான்களுக்கு எதிரான கிரேக்க எழுச்சியில் பங்குபற்றிய லஸ்காரினா, போலந்துப் போராளி அன்னா டொரோட்டா மற்றும் ஜோன் ஆஃப் ஆர்க் ஆகியோரின் வாழ்க்கையை கற்றறிந்து, அவர்களால் ஈர்க்கப்பட்டார். குறிப்பாக ஜோன் ஆஃப் ஆர்க் அவருடைய வீரநாயக முன்னோடியாக இருந்தார்.

எமில்ஜா இளம் வயதிலிருந்தே வெளியே சென்று விளையாடுவதில் தீவிர ஆர்வம் கொண்டிருந்தார். புத்தகங்களில் மூழ்கியிராத நேரத்தில், வாள்வீச்சில் பயிற்சியெடுக்காத, குதிரைச் சவாரி செய்யாத, வேட்டைக்குச் செல்லாத நேரங்களில் அவர் நீண்ட தூரம் நடப்பார், கிராமப்புறங்களுக்கு நடந்தே செல்வார் ஆண்டு முழுதும் நடப்பார். அப்படி நீண்ட தூரம் நடந்து செல்கையில், விவசாயிகளின் குடிசைகளில் ஓய்வெடுப்பார், அப்படிச் செல்லும்போது அவர்களுக்காகச் சிறிய சிறிய பரிசுகளைக் கையோடு எடுத்துச் செல்வார். அவர்களுக்கு அறிவார்ந்த வகையிலும் கருணைமிகு சொற்களிலும் கற்பிப்பார். அருகாமையிலும் தொலைதூரத்திலும் கூட அவர் மக்களின் அன்பைப் பெற்றார். அவருடைய தேசியப் பற்று, அவருக்குத் திருமணம் செய்யும் முயற்சியின் போது வெளிப்பட்டது, அவருடைய பதினெட்டாவது வயதில் செல்வமும் செல்வாக்கும் பெற்ற இரசியர் ஒருவரை மணக்கும் சூழ்நிலை வந்தபோது ஒரே சொல்லில் "நான் போலந்துக்காரி" என்று கூறி மறுத்துவிட்டார். அவருடைய தாயாரும் தந்தையாரும் 1830 இறந்து போனார்கள்,

அப்போது இரசியப் பேரரசுக்கு எதிராக நவம்பர் எழுச்சி தொடங்கியிருந்தது. அதன் பிறகு உடனேயே இரசியாவுடன் போர் அறிவிக்கப்பட்டது. அப்போது எமில்ஜாவுக்கு இருபத்தைந்து வயது. போர்ச் செய்தியைக் கேட்ட அவர் சீற்றத்துடன் டுசியாட்டி என்ற சிறு நகருக்கு குதிரையில் பறந்தார். இப்போது அந்த நகரம் லித்துவேனியாவில் உள்ளது. அங்கு அவருடைய ஆவேசமான உரைகளைக் கேட்ட மக்கள் தேசபக்த உணர்வால் ஆட்கொள்ளப்பட்டார்கள். அங்கு அவர் தனது முதலாவது படைப்பிரிவை ஒருங்கிணைத்தார். அவரது படையில் 280 காலாட்படை வீரர்களும் 60 குதிரைப்படை வீரர்களும் அரிவாள்களை ஏந்திய ஏராளமான விவசாயிகளும் இடம் பெற்றிருந்தனர். அவரது அறிவார்ந்த தலைமை அந்த வீரர்களுக்கு எழுச்சியூட்டியது மட்டுமில்லாமல் நாட்டின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிறருக்கும் உணர்வூட்டக் கூடியதாக இருந்தது.

இரசியாவுடனான நிலையான போரில் எண்ணிக்கையில் மிகுதியாக இருந்த இரசியப் படைகளை எதிர்த்து எமில்ஜா தொடர்ச்சியான பல வெற்றிகளைப் பெற்றார். அவர் எப்போதும் தனது படைகளின் முன்வரிசையில் தலைமைதாங்கிச் சென்றார். போர் முழுவதிலும் முக்கியப் பங்கினை வகித்தார். ஆனால் முதன்மைப் படைகள் தளபதியாக இருந்த டெஸிடெரி சிலாபோவ்ஸ்கி ஒரு கட்டத்தில் போரை நிறுத்திவிட்டு, பிரசியாவுக்கு அடைக்கலம் தேடிச் செல்வதென்று முடிவெடுத்தார். ஆனால் தந்தையர் நாடு முழுமையான விடுதலையை அடையும் வரை தனது இராணுவச் சீருடையை அகற்றுவதில்லை என்று கூறி, எமில்ஜா போலந்தில் தொடர்ந்து போரிடுவதற்கு தன்னை ஒப்படைவு செய்துகொண்டார். அவருடைய முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர் 25 வது லித்துவேனிய காலாட்படைப் பிரிவின் முதலாவது குழுவின் படைத்தலைவராக ஆனார். போர்க்களத்தில் அவரது வீரத்தை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு அடுத்தடுத்து, படையின் துணைத் தலைவர், படைத் தலைவர் மற்றும் கர்னல் பதவிகள் அவரைத் தேடி வந்தன.

அவர்கள் சியாலியாய் என்ற இடத்தைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்தார்கள். எமில்ஜாவின் படைப்பிரிவு வழங்கல்களுக்கான தொடர்வண்டியைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்றிருந்தது. அந்தத் தொடர்வண்டி தாக்கப்பட்ட போது, 300 க்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். அந்த வழங்கல்கள் இரசியர்களால் கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் தளபதி சிலாபோவ்ஸ்கி எல்லையைத் தாண்டி பிரசியாவுக்குள் செல்ல முயற்சி செய்தார். அங்கு சிறைப்பட்டார். எமில்ஜா போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு வார்சா நோக்கிச் செல்ல முடிவு செய்தார். ஆனால் வழியிலேயே நோய்வாய்ப்பட்டார். அவரது உடல்நலம் தீவிரமான பாதிப்புக்கு உள்ளானது. அதைத் தொடர்ந்து 1831 டிசம்பர் 23 அன்று மரணமடைந்தார். அவரது உடல் கப்சியாமியெஸ்டிஸ் என்ற சிறுநகரில் புதைக்கப்பட்டது. அவரது மரணத்துக்குப் பிறகு அவரது சொத்துக்களை இரசிய அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

ஆனால் இரண்டாம் உலகப்போரின் போது, சோவியத் போலந்தின் முதலாவது பெண்கள் படைப்பிரிவுக்கு எமில்ஜா பெயர் சூட்டப்பட்டது. இரண்டாவது சோவியத் போலந்துக் குடியரசின் 20 ஸ்லாட்டி பணத்தாளில் அவரது படம் பொறிக்கப்பட்டது.

எமில்ஜா பிளேட்டரின் எழுச்சியூட்டும் வரலாறு எண்ணற்ற கலை மற்றும் இலக்கியப் படைப்புக்களுக்குத் தூண்டுகோளாக ஆனது. போலந்து லித்துவேனியா, பெலாரஸ் ஆகிய நாடுகளில் அவர் தேசிய வீர நாயகியாகக் கொண்டாடப்படுகிறார். அந்த நாடுகளில் எமில்ஜாவின் பெயர் (எமிலியா என்றும் அழைக்கப்படுகிறார்) பல தெருக்களுக்கும் கட்டிடங்களுக்கும் சூட்டப்பட்டுள்ளது.

எமில்ஜா புதைக்கப்பட்ட லித்துவேனியாவின் கப்சியாமியெஸ்டிசில் அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்பட்டுள்ளது. எமில்ஜாவின் 200 வது பிறந்தநாள் நினைவாக லித்துவேனியாவின் 50 லிடு நாணயத்தில் அவர் படம் பொறிக்கப்பட்டது.

ஒரு கர்னலின் மரணம் என்ற மிகிவிக்ஸ் என்பவர் எழுதிய கவிதை அவருக்கு அழியாப் புகழைத் தேடித்தந்தது. போலந்தின் ஊடகங்கள் அவரது வீரத்தைப் புகழ்ந்து செய்திகள் வெளியிட்டன. அந்தக் கவிதை கம்யூனிஸ்டு சுதந்திர போலந்தில் தொடக்கநிலைப் பாடப் புத்தகத்தில் இடம் பெற்றது. ஒரு நாவலும், ஏழு நாடகங்களும், பல கவிதைகளும் அவரது புகழை இன்றளவும் பரப்பி வருகின்றன.

**ஆதாரம்:** ***infinite women.com, Wikipedia***

•

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: ஏ.சண்முகானந்தம்

### வண்டுகள் ஓர் அறிமுகம்: 05

# மஞ்சள் கருவளையப் புள்ளி வண்டு



ஒளிப்படங்கள்: இர.ரங்கராஜன்

**அறிமுகம்**

உலகில் பரவியுள்ள உயிரினத் தொகுதி எப்போதும் வியப்பூட்டுவதாகவே இருந்து வந்துள்ளது. பாலூட்டிகள், பறவைகள், ஊர்வனங்கள், பூச்சிகள், இருவாழ்விகள் எனப் புவிப்பரப்பில் பரிணமித்துள்ள உயிரினங்களின் செயல்பாடுகளில் அறிந்தவற்றைவிட, அறியாத செய்திகள் அதிகம் உள்ளன. குறிப்பாக, பூச்சிகளின் உலகம் பிரமிப்பூட்டுவதாக நாளது வரை இருந்து வருகிறது. உலகில் கண்டறியப்பட்டுள்ள உயிரினங்களில் பூச்சியினங்களே அதிகளவில் காணப்படுகின்றன. பூச்சிகளின் தொகுதியில் வண்டினங்கள் பெரும்பான்மையாக உள்ளன. அதில் புள்ளி வண்டுகள் கண்ணையும், கருத்தையும் கவரும் வகையில் பல்வேறு நிறங்கள், வடிவங்களில் காணப்படுகின்றன.

அந்த வகையில், வண்டுகள் விலங்குகள் திணையில், கணுக்காலிகள் தொகுதியில், பூச்சிகள் வகுப்பில், வண்டுகளின் *(Coleoptera)* வரிசையில் புள்ளி வண்டுகள் *(Lady beetle)* அடங்குகின்றன. உலகளவில் 176 குடும்பங்களாகவும், இந்தியளவில் சுமார் 100 குடும்பங்களாகவும் பரவியுள்ள வண்டினங்கள்தான் உலகிலேயே அதிக எண்ணிக்கையில் கண்டறியப்பட்ட பூச்சியினங்களாக உள்ளன. இதுவரை 30,000 இனங்களில் சுமார் 3,90,000 வகைகள் உலகளவிலும், இந்தியாவில் சுமார் 15,000 வகை வண்டினங்களும் கண்டறியப்பட்டுள்ளன. இதில், உலகளவில் சுமார் 5000க்கும் மேற்பட்ட புள்ளி வண்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.

உயிரினத் தொகுப்பில் சுமார் 30 விழுக்காடாகவும், பூச்சிகளின் உலகில் சுமார் 40 விழுக்காடு அளவிலும் வண்டுகள் நிறைந்து காணப்படுகின்றன. இதில், சுமார் 1,000 வகைகள் வேட்டையாடிகளாக அறியப்பட்டுள்ளன. நான்கு பூச்சிகளுக்கு ஒன்று வண்டினங்களாகக் காணப்படுவதில் இருந்து, இவற்றின் பெருக்கத்தை அறியமுடியும். பல்வேறு நிறங்கள், வடிவங்களில் அழகாகக் காட்சியளிக்கும் வண்டுகளின் உலகம் பிரம்மாண்டமானது. பனி நிறைந்த ஆர்க்டிக் பகுதி தவிர உலகின் பெரும்பாலான பகுதிகளில் வண்டினங்கள் பரவியுள்ளன.

**வண்டுகள்**

கோலியாப்ட்ரா என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் வண்டுகளை, கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில், 'அதன் கடினத் தன்மையுள்ள இறகுகள், நீண்ட கொம்புகள், உணர்கொம்புகளை' அவதானித்து *'Koleopteros'* என்றழைத்துள்ளார். *Beetle* என்பது ஆங்கிலத்தில் 'சிறிய கடிக்கும்' என்று பொருள்படும் வகையில் அமைந்துள்ளது.

கோலியாப்ட்ரா *(Coleoptera)* என்ற கிரேக்கச் சொல்லுக்கு 'காப்பு இறகுகள்' *(Koleas – 'Sheath", Ptera – 'Wings' - Sheath Wing)* என்ற பொருளுக்கேற்ப கடினமான மேற்புற இறகுகளைப் பெரும்பாலான வண்டினங்கள் பெற்றுள்ளன. இவ்வகையில் முன்னிரண்டு இறகுகள் *('elytra' – forewings)* கடினத்தன்மையுடனும், உள்ளிறகுகள் இரண்டும் மெல்லியதாகவும், பறப்பதற்கேற்பவும் அமைந்துள்ளன. கடினமான மேற்புற சிறகுகள் விரிந்த நிலையில், கீழுள்ள மெல்லிய சிறகுகளின் உதவியால் வண்டுகள் பறப்பது சாத்தியமாகின்றது. வண்டு என்ற சொல் 'வளைந்தது' என்ற வேர்ச்சொல்லில் இருந்து வந்ததாகக் கருதப்படுகிறது. பெரும்பாலான வண்டுகளின் உடல் வளைந்து குமிழ் போல் இருப்பதால் தமிழில் 'வண்டு' என்ற பெயர் ஏற்பட்டதாகக் கருதமுடிகிறது.

பிணம் தின்னிக்கழுகுகள், நரிகள், ஓநாய், செந்நாய், காகம், நாகணவாய், கரப்பான்பூச்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்டு ஆய்வாளர்கள்: ஓர் அறிமுகம்

## எர்னஸ்ட் சார்லஸ் அகஸ்டே காண்டேஸ் [பெல்ஜியம்]

*(Ernest Charles Auguste Candeze (1827-1898)*

1827ஆம் ஆண்டு பிப்ரவரி 22ஆம் தேதி, கிழக்கு பெல்ஜியத்தின் லீஜில் (*Liège*) பிறந்த எர்னஸ்ட் காண்டேஸ் மருத்தவராகவும், பூச்சியியலாளராகவும் (*Entomologist*) செயலாற்றியவர். குறிப்பாக, கிளிக் வண்டுகள் (*Click Beetles or Elateridae*) தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்தவர். கிளிக் வண்டுகள் *elaters, snapping beetles, spring beetles or skipjacks* என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.

ஜீன் தியோடர் லாகோர்டேரினைப் (*Jean Theodore Lacordaire* (1801-1870) பின்பற்றி, லீஜில் செயல்பட்டு வந்த பூச்சியியலாளர்கள் வட்டத்தில் இணைந்து பங்காற்றினார். தொடர்ந்த நாட்களில் பெல்ஜியம் பூச்சியியலாளர்கள் சங்கத்தை (*Belgian Entomological Society*) நிறுவுவதில் நண்பர்களுடன் இணைந்து பங்காற்றியுள்ளார்.



*Félicien Chapuis* (1824-1879), *Edmond de Sélys Longchamps* (1813-1900), ஆங்கில பூச்சியியலாளர் *Robert McLachlan* (1837-1904) போன்றவர்கள் எர்னஸ்டின் நீண்ட கால நண்பர்களாக அறியப்படுகின்றனர்.

கிளிக் வண்டுகள் தொடர்பான ஆய்வுகளை ஆர்வத்துடன் முன்னெடுத்ததுடன், பல அரிய தரவுகளையும் திரட்டி ஆவணங்களாக்கியுள்ளார். பூச்சிகள் குறித்த அறிவியல் பார்வை மக்களிடம் பெருக, அறிவியல் புனைகதைகளையும் எர்னஸ்ட் காண்டேஸ் எழுதியுள்ளார்.

ஒளிப்படக்கலையில் ஆர்வம் கொண்டு ஒளிப்படக்கலைஞராக செயல்பட்டதோடு, மடக்கு வடிவ கேமராவையும் (*Foldable Camera*) மேம்படுத்தியுள்ளார். அக்கேமரா ஐரோப்பாவில் பெரும் வரவேற்பையும் பெற்றது.

அவர் எழுதியுள்ள நூல்கள்

*Aventures d'un grillon, Adventures of a cricket (Paris, 1877)*

*La Gileppe*

*les infortunes d'une population d'insectes Gileppe, misfortunes of a population of insects (Paris, 1879)*

*Périnette, surprising history of five sparrows... (Paris, 1886)*

போன்று வண்டுகளில் பெரும்பாலானவை துப்புரவாளர்களாகச் (*Scavangers*) செயலாற்றுகின்றன. மகரந்தச் சேர்க்கை மற்றும் பூச்சிகளின் கட்டுப்பாட்டிற்கும் வண்டுகள் பங்காற்றுகின்றன. பூச்சிகளில் ஐம்பது விழுக்காட்டிற்கும் மேலானவைகள் தாவரங்களை உண்டு வாழும் சூழலில், தாவர உண்ணிப் (*Herbivores*) பூச்சிகள் பெருகாமல், வண்டுகள் அவற்றை உணவாக்கிக் கட்டுப்படுத்துவதோடு, விவசாயத்திற்கும் நன்மை புரிகின்றன. சில வகைகள் மருத்துவத்திற்கும் பயன்படுகின்றன.

### மஞ்சள் கருவளையப் புள்ளி வண்டு

மஞ்சள் கருவளையப் புள்ளி வண்டுகளை (*Anegleis cardoni Weise*) முருங்கை, பூசணி உள்ளிட்ட தாவரங்களில் காண இயலும். இவற்றின் முட்டைகள் கடுகு போல சிறிய அளவில் காணப்படுகின்றன. நீள் உடலைக் கொண்ட இதன் புழுப்பருவத்தில் இலைகளை உணவாகக் கொள்கின்றன. சிவப்பு கலந்த அடர் பழுப்பு நிறத்தில் உடலின் இருபக்கமும் தென்பட, உடலின் நடுவிலும், இரு பக்கங்களிலும் இள மஞ்சள் கலந்த வெள்ளை நிறத்தில் திட்டுக்களும், கண்கள் கருப்பாகவும் காணப்படும். கால்கள் கருப்பு நிறத்தில் தென்படும். வெள்ளை கலந்த சிவப்பு நிறத் திட்டுக்கள், மஞ்சள் கலந்த வெள்ளை நிறத் திட்டுக்களோடு கூட்டுப்புழு காணப்படும். பளபளப்பான மஞ்சள் நிற உடம்பின் நடுவில் கருப்புப் பட்டையும், இரு பக்கமும் ஒன்றுக்கொன்று எதிர்ப்புறத்தில் வளைந்த நிலையில் கருப்புப் பட்டையும், உடலின் முடிவில் இரு கருப்புப் புள்ளிகளும், உடம்போடு ஒட்டிய நிலையில் முகமும், அதில் கருப்பு நிறத்தில் கண்களும் மஞ்சள் கருவளையப் புள்ளி வண்டுகளுக்கு அழகைக் கொடுக்கின்றன.

பூச்சிகளின் வாழ்வியல் சுழற்சியை உற்றுநோக்குவதும், ஆவணப்படுத்துவதும் தான், அறிவியல் ஆய்வுகளுக்கான தொடக்கமாக அமையும்.

நன்றிக்குரிய தரவு

*https://en.oxforddictionaries.com/definition/elytron*

•

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: ஏ.ஜி.நூரானி தமிழில்: அக்களூர் இரவி

# முஸ்லிம்கள் இன்று



ஃப்ரண்ட் லைன் 2018, பிப்ரவரி 14 இதழில் வெளிவந்த கட்டுரை.

மறைந்த ஆளுமை ஏ.ஜி.நூரானியின் நினைவாக

## 3

சென்ற இதழ் தொடர்ச்சி:

அவர் நினைவுகூர்ந்தார்: "முன்னர் இவ்வாறு நடந்தது. டில்லிப் பேரரசர் 1856ல் தூக்கியெறியப்பட்டார். அவரது மகன்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். டில்லியிலும், லக்னோவிலும் கிணறுகள் முஸ்லிம் உயர்குடி வாரிசுகளின் உடல்களால் நிரப்பப்பட்டன. குடிப்பதற்கு நீர் கிடையாது. ஏனெனில், எங்கும் இரத்தம். இறுதியில் பிரிட்டிஷாரின் ஆட்சி வந்தது. எனினும், நம் முன்னோர்கள் சுவரில் எழுதப்பட்டிருந்ததைப் பார்க்கவில்லை. ஒரு புதிய உலகம் பிறந்துவிட்டதையும், புதிய உலகத்தில் வாழ்வதற்குப் புதிய வாழ்க்கை முறை தேவை என்பதையும் அவர்கள் உணரவில்லை. இதை அறியாமலேயே சில பத்தாண்டுகள் கடந்து சென்றன. பல ஆண்டுகளுக்குப் பின்னர் தான், உத்திரப்பிரதேசத்தில் அலிகார் பல்கலைக்கழகத்தையும், பம்பாயில் அஞ்சுமான்-இ-இஸ்லாமையும் ஏனையவற்றையும் தோற்றுவித்த,தொலைப்பார்வை கொண்ட சிந்தனையாளர்கள் புதிய திசைகளில் முயற்சிகளைத் தொடர்ந்தனர். பெரும்பாலும், பழமைவாதிகளின் வலிமையான, தொடர்ச்சியான எதிர்ப்புகளை மீறித்தான் அவர்கள் செயல்பட்டனர். இறுதியாக, பல ஆண்டுகளுக்குப் பின்னர், இம்முயற்சிகள் சிறிய, தடைப்பட்ட பலன்களைக் கொடுக்கத் துவங்கின. இந்தத் தவற்றை நாம் மீண்டும் செய்யக்கூடாது. இந்தத் தேசத்தில் என்ன நிகழ்ந்தது என்பதை உணரவேண்டும். நிகழ்ந்தவற்றை நாம் ஆய்ந்தறிய வேண்டும்; தேவைக்கேற்றவாறு செயல்படவேண்டும்."

முஸ்லிம்களுக்கு இரண்டு நோக்கங்கள் இருந்தன; பொருளாதாரம் மற்றும் அரசியல் சார்ந்தவை. இந்தியாவின் அரசியலமைப்பையும் காங்கிரசின் அமைப்புவிதிகளையும் அவர் ஆய்வு செய்தார். அந்த நோக்கங்களை அடைய இவையிரண்டும் ஒரு குறுக்குவழியை அளித்தன. முஸ்லிம்கள், "மக்கள்தொகையில் மிகவும் ஏழ்மையானவர்களாகக் கணக்கில் கொள்ளப்படவேண்டும். இந்தியாவின் முக்கியமான அரசியல் கட்சிகள் அனைத்தும் முடிவாகவும், அதிலிருந்து பிறழா வகையிலும் சோசலிசத்துடன் தம்மைப் பிணைத்துக் கொண்டிருந்தன என்பது முஸ்லிம்களுக்குச் சாதகமாக அமைந்தது. புகழ்பெற்ற ஆவடித் தீர்மானத்தின் மூலம், இந்தியாவில் ஒரு சோசலிச அரசை நிறுவுவதைக் குறிக்கோளாகக் காங்கிரஸ் முன்னிறுத்தியது. சோசலிஸ்ட் கட்சி, அதனுடைய பெயரிலேயே சோசலிசத்திற்காக நிற்பதாகக் கூறியது. சோசலிசத்தை அடைவதற்கான வழிமுறைகளிலும், எடுக்கப்பட வேண்டிய, நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கான நேரத்தில் மட்டுமே மற்றவர்களிடமிருந்து கம்யூனிஸ்ட் கட்சி வேறுபடுகிறது." எளிமையான அரசியல் பேசும் வழக்கமான ஒரு வழக்குரைஞரின் சித்திரம் இது. அப்போதுமே யதார்த்தத்துடன் சிறிதும் தொடர்பற்றதாக இருந்தது; இன்றைக்கு, 2018ல் அபத்தமானது.

### அரசியல் விழிப்புணர்வின் முக்கியத்துவம்

அவர் மேலும் வலியுறுத்திக் கூறுவது: "முஸ்லிம்களின் பொருளாதாரப் புத்துயிர்ப்பிற்கு முதல்படியாக அவர்களின் அரசியல் விழிப்புணர்வு இருக்கிறது. அரசியலில் அவர்கள் துடிப்புடன் இயங்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஆளும் கட்சியான காங்கிரசில் அவர்கள் சேர வேண்டும்; அதில் செல்வாக்கு செலுத்தவேண்டும். ஸ்டேட் பாங்க் இந்தியா போன்ற, வளர்ந்துவரும், ஏராளமான அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள், தொழிற்சாலைகளின் சேர்மேன், உதவி சேர்மேன், அதன் இயக்குநர்கள் யாரென்பதைக் காங்கிரசின் செல்வாக்கு மிக்கவர்கள்தாம் முடிவு செய்கிறார்கள். ஆகவே, இந்த நிறுவனங்களிலும் தொழிற்சாலைகளிலும் வணிகரீதியான, தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த வேலைவாய்ப்புகள் முஸ்லிம்களுக்கும் கிடைக்க வேண்டும்."

மதச்சார்பற்ற உணர்வு கொண்டவராக இருந்தாலும்கூட, முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாக அரசியல் கட்சி ஒன்றில் இணைவது தவிர்த்துச் சிறந்ததாக வேறெதையும் நினைக்க முடியாது என்பது முக்கியமானது. ஒன்றைச் சொல்லவேண்டும். மாநிலக் கட்சித் தலைவர்கள் தங்களுக்கென்று முன்னுரிமைகளைக் கொண்டிருந்தார்கள். எனினும் அரசியல் பங்கேற்பை மட்டுமே வலியுறுத்துவது தவறானது என்பதே முக்கியமான ஆட்சேபணை. முஸ்லிம்களுக்கான மிகச் சிறந்த வழி, தேசிய வாழ்வை வடிவமைக்கும் அனைத்து நடவடிக்கை வெளிகளிலும் நிச்சயமாக அவர்களின் பங்கேற்பே: தொழிற்சங்க இயக்கம், கூட்டுறவு இயக்கம், பெண்கள் மற்றும் மாணவர்கள் அமைப்புகள். ஆற்றவேண்டிய, இதைக் காட்டிலும் முக்கியமான கடமையொன்றும் உண்டு: அரசியல் மேடைகளைப் பயன்படுத்தி தேசத்தின் பிரச்சனைகளைத் தேசியப் பார்வையில் பேசுவது. தேசிய நலனைப் பேசுபவர் இவர் என்று எல்லோராலும் ஏற்கப்பட்ட ஒரு தலைவர் முஸ்லிம்களின் குறைகளையும் எடுத்துரைக்கும்போது, அவரது வேண்டுகோள்கள் ஏற்படுத்தும் தாக்கம் அதிகம் வலிமை கொண்டது. தேசம் மட்டுமின்றி அந்தச் சமூகமும் அதனால் அதிகம் வளம் பெறும்.

1961இல் முஸ்லிம் சமூகம் மற்றுமொரு தவறான திசையில் சென்றது. ஜபல்பூரில் கலவரங்களுடன் அந்த ஆண்டு தொடங்கியது. பிரிவினைக்குப் பின்னர் நடந்த மிக மோசமான கலவரம். பழுத்த காங்கிரஸ்காரரான டாக்டர் சையத் மஃமூத் இந்திய முஸ்லிம்களின் மாநாடு ஒன்றை டில்லியில் ஜூன் 10-11, 1961இல் கூட்டினார். மாநாட்டின் துடிப்பு மிக்க நபர்களில் ஒருவராக மௌலானா ஹிஃப்சுர் ரெஹ்மான் இயங்கினார். மாநாட்டின் முன்னிருந்த முக்கியப் பிரச்சனைகளில் ஒன்று, அரசு நிறுவனங்களில், வணிகம் மற்றும் தொழில் துறைகளில் முஸ்லிம்களுக்குரிய பங்கைப் பெறுவது. உருதுவிற்கு அங்கீகாரம் வேண்டும்; அத்துடன், அவமதித்து எழுதப்பட்டிருக்கும் பாடநூல்களைத் திரும்பப் பெறுவது. டில்லி பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் பிரிஜ் மோகன் டூஃபான், பாராளுமன்ற உறுப்பினர் சுபத்ரா ஜோஷி, பம்பாய் பிஷப்களில் ஒருவரான பாதர் ஜே.எஸ்.வில்லியம்ஸ், காஷ்மீரின் ஜி.எம்.சாதிக், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இசட்.ஏ.அகமது ஆகியோர் மாநாட்டில் பங்கேற்றவர்களில் சிலர். ஏறத்தாழ 600 சார்பாளர்கள் கலந்து கொண்டனர் (தி டைம்ஸ் ஆப் இந்தியா, ஜூன் 11 மற்றும் 12 1961).

மாநாட்டை நடத்தியவர்கள் முஸ்லிம் மதவாதிகளைத் தவிர்த்திருந்தனர்; எனினும் தி டைம்ஸ் ஆப் இந்தியாவும் (ஜூன்13, 1961 தேதியிட்ட பதிப்பு) ஏனைய அச்சு ஊடகங்களும் அந்த மாநாட்டை வெளிப்படையாகக் கண்டனம் செய்ததை இவை எதுவும் தடுக்கவில்லை. முஸ்லிம்களின் சுய-உறுதிப்பாடு என்பது சமீபத்திய விஷயம். 1960களில், முஸ்லிம்களின் உரிமைகளுக்கு ஆதரவான பேச்சு எதுவும் அநாகரீகமாகக் கருதப்பட்டது. "முஸ்லிம்கள் தனிமையில்தான் அவதியுற வேண்டும். வலியின் வேதனையையும் வாய்விட்டுக் கதறி, வெளிப்படுத்தவும் அவர்களுக்கு அனுமதியில்லை" என்று டாக்டர் சையத் மகமுது வியந்து கூறுகிறார் (நூரானி, பக்கம் 362). அவர் தவறாக அவதானிக்கவில்லை. தொடங்கப்பட்ட மஜ்லிஸ்-இ-முஷாவரத்தால் உண்மையான செல்வாக்கைச் செலுத்த முடியவில்லை.

அதைத் தொடர்ந்த அகில இந்திய முஸ்லிம் சட்ட வாரியம் டைனோசர்கள் வசிக்கும் கூடாரமாகிவிட்டது. முஸ்லிம்களுக்கு எதிரான தவறான விஷயங்களை எதிர்த்துப் போராட அனைத்துக் குழுக்களையும் வரவேற்ற NAACPயின் வழியில் எந்த அமைப்பும் நிறுவப்படவில்லை. முஸ்லிம்களின் குறைகள் நியாயமானவையே. எனினும், அவை ஏற்கப்படவில்லை. (மத்திய உள்துறை அமைச்சகத்தின் குறிப்புகளின்படி எழுதப்பட்ட ஆசிரியரின் கட்டுரை, 'இந்திய முஸ்லிம்களின் குறைகள்'- ஒபீனியனில் மறு வெளியீடு- ஜூலை 8 மற்றும் 15, 1969; இந்தியாவின் முஸ்லிம்கள்-நூரனி, ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ், பக்கங்கள் 366-407).

**மோசமாகிக்கொண்டிருக்கும் நிலைமை**

முஸ்லிம்கள் முன்வைக்கும் குறைகள் பெருமளவிலான பிரச்சனைகளை உள்ளடக்கியவை: பொதுத்துறை, தனியார்த் துறைகளில் வேலைவாய்ப்பு; சட்டசபையிலும் அரசாங்கத்திலும் பிரதிநிதித்துவம்; கல்வி வாய்ப்பு; பாடநூல்களில் வெளிப்படையாகத் தெரியும் மதச் சார்புநிலை; வக்ஃப் சொத்துகள்; காவல்துறை வெளிப்படுத்தும் பாரபட்சம்; முஸ்லிம் உயிர்களுக்கும் சொத்துகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதில் அரசின் முழுமையான தொடர்ச்சியான தோல்வி. முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் எதுவும் இந்தச் சூழலில் தெரியவில்லை. பிஜேபி-ஆர்.எஸ்.எஸ் ஆட்சியில் அது மேலும் மோசமாகிவிட்டது.

உருதுவைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். பெருமளவிற்கு, அது முஸ்லிம்களின் மொழியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகிறது. அரசு வெளியீடு ஒன்றில் இந்தத் தகவல் கூறப்பட்டிருப்பது வியப்பூட்டும் ஒரு முரண். வெளியீட்டுத் துறை, அவ்வப்போது ‘இந்தியாவில் முஸ்லிம்கள்’ குறித்துச் சிற்றேடுகளை வெளியிடுகிறது. 1952ம் ஆண்டின் அத்தகைய வெளியீடு ஒன்றில், உருது குறித்த அத்தியாயத்தில் பிரதேச மொழியைத் தவிர்த்து, ‘ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள முஸ்லிம்கள் உருதுவையும் கற்கவேண்டும்’ என்று பெருந்தன்மையுடன் குறிப்பிட்டுள்ளது.

**லக்னோ மாநாடு**

1961இல் தான் எடுத்த தீரமான முயற்சிகளை டாக்டர் சையத் மகமுத் கைவிட்டார். ஆகஸ்ட் 8-9, 1964இல் லக்னோவில் முஸ்லிம் தலைவர்களின் சந்திப்பொன்றை தாருல் உலூம் நட்வதுல் உலேமா கூட்டினார். முஸ்லிம் அமைப்புகளின் ஐக்கிய முன்னணி ஒன்று உருவாகியது: லீகை உள்ளடக்கிய அகில இந்திய முஸ்லிம் முஜ்லிஸ்-இ-முஷாவரத், ஜமியாத்தின் ஜமாத்-இ-இஸ்லாமி, முற்போக்கு முஸ்லிம் லீக், அஞ்சுமான் தமிர்-இ-மிலாத், ஹைதராபாதின் இட்டேஹதுல் முஸ்லிமீன் ஆகியன அதில் பங்கேற்றன. டாக்டர் ஏ.ஜே.ஃபரிதி உள்ளிட்ட முக்கியமான தலைவர்களும் கலந்து கொண்டனர். முஷாவரத்தின் அமைப்பு விதிகளில் காணப்படும் நோக்கங்கள் குறித்த முதல் பத்தி, ‘பல்வேறு சமூகத்தினரிடையே மேலான புரிதலைக் கொண்டுவர வேண்டும் என்பதுடன் ஒற்றுமையை ஊக்குவிக்க வேண்டும்’ என்று நடைமுறைத் தேவையைக் குறிப்பிடுகிறது. மற்றொன்று, ‘இந்திய அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த அனைத்துச் சமூகத்தினரின் ஆதரவையும் திரட்டவேண்டும்’ என்று கட்டளையாகக் கூறுகிறது. எனினும், இது தாளில் மட்டுமே உள்ளது.

அதனுடைய உத்திரப்பிரதேசக் கிளை, புதிய கட்சி ஒன்றைத் தொடங்குவதென ஜூன் 3, 1968இல் முடிவெடுத்தது: முஸ்லிம் மஜ்லிஸ் தொடங்கப்பட்டது; அதன் தலைவர், ஃபரிதி. அக்டோபர் 13, 1968இல் மஜ்லிஸின் ஆதரவில், அகில இந்திய முஸ்லிம்கள், பட்டியல் வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினரின் சம்மேளனம் அமைக்கப்பட்டது. குடியரசுக் கட்சி, சீக்கியர்கள், கிறித்துவர்களின் பிரதிநிதிகளும் இதில் இருந்தனர். காங்கிரசிலிருக்கும் முஸ்லிம்களின் மீதான ஃபரிதியின் வெறுப்பு வெளிப்படையானது. ‘ஜெர்மனும் அல்லாத வெள்ளியும் அல்லாத ஜெர்மன் வெள்ளியைப் (*German Silver*) போன்றவர்கள் இவர்கள்’ என்று அவர் அடிக்கடிக் குறிப்பிடுவார்: காங்கிரசிலும் அல்லது முஸ்லிம்களின் மத்தியிலும் இவர்களுக்கு எந்த மதிப்பும் இல்லை. காங்கிரசும் அதனுடைய முக்கியமான முஸ்லிம் புள்ளிகளும் ஃபரிதியின் கூற்றுச் சரியென நிரூபித்திருக்கிறார்கள். பாபர் மசூதி இடிக்கப்பட்டப் பின்னர், பி.வி.நரசிம்ம ராவின் அமைச்சரவையில் இருந்த முஸ்லிம் உறுப்பினர் எவரும் ராஜினாமா செய்யவில்லை.

ஃபரிதி அகால மரணமடைந்தார். எனினும், அவர் வகுத்த செயல்தந்திரத்தைக் கைவிடப்பட்டதாக நிராகரிக்க முடியாது. உத்திரப்பிரதேச அரசியல் நிலைமை மோசமானதொரு நினைவூட்டல். குறுகியகாலத்திற்கு அதற்குக் கொஞ்சம் மதிப்பு உண்டு; எனினும், பின்னால் அது பேரழிவை ஏற்படுத்தும். முஸ்லிம்களுக்குச் சலுகைகள் பெறுவதற்காக அரசியல் கட்சிகளுக்கு இடையிலான வேறுபாடுகளைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் வெற்றி, ஹிந்துக்களின் எதிர்ப்புணர்வை உருவாக்கும்; முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பை அது ஒன்றுதிரட்டும்.

தீர்வு, குறைகளின் எதார்த்தத்தை மறுப்பதில் இல்லை. அரசியலில் முக்கியப் பங்காற்ற முஸ்லிம்களை இழுக்கக்கூடிய அதேநேரத்தில் முஸ்லிம் அல்லாதோரின் ஆதரவையும் திரட்டும் போராட்ட வடிவம் ஒன்றையும், அதற்குரிய நேரத்தையும் கண்டறிவதில் இருக்கிறது. என்றைக்கும் இது முயற்சிக்கப்படவில்லை. இது வெறும் செயல்தந்திரம் அல்ல. மிகையின்றி, மீட்சிக்கான பாதை இதுவே.

முஷாவரத்,என்றைக்கும் முஸ்லிம் பிரச்சினைகள் தவிர்த்து வேறெதைப் பற்றியும் அக்கறை கொள்ளவில்லை. 1971இல் ஷேக் அப்துல்லாவிற்கு இவ்வமைப்பு ஆதரவு அளித்தது. அவர் அப்போது இந்திரா காந்தியிடம் இருந்து விலகியிருந்தார். ஜூனில் ஏற்பட்ட பங்களாதேஷ் நெருக்கடியின்போது, பாகிஸ்தானிடம் சற்று மென்மையான அணுகுமுறையை வெளிப்படுத்தும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற இந்த அமைப்பைப் பயன்படுத்திக் கொண்டார். ஆகஸ்ட் 18, 1973இல் முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவிற்குத் தலைமையேற்று அவரைச் சந்திக்கச் சென்றார். அப்போது முஸ்லிம்களின் சில குறிப்பிட்ட குறைகளுக்கான தீர்வு குறித்து எடுத்துரைத்தார். அவற்றில் ஒன்று, அலிகார் பல்கலைக் கழகத்தின் இஸ்லாமியப் பண்பு குறித்து; மற்றொன்று, விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் மனைவிகளுக்குப் பராமரிப்புத் தொகை தருவது குறித்த புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டம் பற்றியது. அவர்கள் எடுத்துரைத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திற்குச் சம்மதம் தெரிவிப்பதில் இந்திரா காந்தி எவ்விதத் தயக்கமும் காட்டவில்லை. சட்ட முன்வரைவு திருத்தம் செய்யப்பட்டது. ஷா பானு பிரச்சனைக்கான விதைகள் இவ்வாறு தூவப்பட்டன *(1985-86)*.

**இந்திரா காந்தியின் பாதுகாப்புவாதமும் வெறுப்பு மனப்பான்மையும்**

இந்திரா காந்தி குறிப்பிட்ட இரு கருத்துகள் முக்கியமானவை. "முஸ்லிம் சமூகம் எதிர்க்கட்சிகளின் ஆதரவை நாடியது" என்று அவர் முறையிட்டார். முஸ்லிம் தலைவர்கள் 'போராட்ட அணுகுமுறையை' கைக்கொள்வதற்கு எதிர்ப்பும் தெரிவித்தார் (மிமியோ கிராப் படிவ கூட்டக் குறிப்புகள்). ஜெனரல் ஷா நவாஸ் கானுக்கான அவரது அறிவுறுத்தலும் இதுவே. ஜனவரி 21, 1983 தேதியிட்ட அவரது கடிதத்தில், 'மோதல் போக்கும் விரக்தியான சூழலைப் பரப்புவதும், மற்ற சமூகத்தினரிடம் எதிர்வினையைத் தூண்டும்; சிறுபான்மை சமுதாயத்தினருக்கு அது மேலதிகச் சேதத்தையே விளைவிக்கும்' என்றும் அவர் எச்சரித்தார் (முல்க்-ஓ-மில்லட் பச்சோ டெரிக்: பிரதம மந்திரி இந்திரா காந்தியுடன் அமீரின் கடிதப்போக்குவரத்து, பக்கம் 14).

ஹிந்து எதிர்வினை குறித்த இத்தகைய அச்சங்களைக் கொண்டிருந்தும், டில்லி ஜமா மஸ்ஜித்தின் ஷாகி இமாம் சையத் அப்துல்லா புகாரிக்கு, நவம்பர் 20, 1979இல் அவர் கடிதமொன்றை எழுதினார். அதில் முஸ்லிம்கள் முன்வைத்த குறைகளை விவரமாகப் பட்டியலிட்டு, அவற்றைத் தீர்ப்பதாக உறுதியும் அளித்திருந்தார். அதேநேரத்தில் தேர்தல்களில் அவர்களது ஆதரவையும் கோரியிருந்தார். இதற்கு முன்னதாக, இருவருக்கும் இடையில் சந்திப்பொன்று செப்டம்பர் 17, 1979இல் இந்திராவின் இல்லத்தில் நடந்தது. அக்கூட்டத்தில் சஞ்சய் காந்தியும் இருந்தார் (ஐ.நா. சபைக்கு 150 மில்லியன் முஸ்லிம்களின் அறைகூவல்... மார்ச் 1, 1983-புகாரி, பக்கங்கள் 10-11).

தேசிய அரசியலில் பங்கேற்க முஸ்லிம்களை இழுப்பதற்கு இந்திரா காந்தி சிறிதளவும் அக்கறை காட்டவில்லை. அவருடைய அணுகுமுறை நிச்சயமாக பாதுகாப்புவாதம் நிறைந்தது; அத்துடன், பெரும்பான்மையாக வெறுப்புத் தன்மை கொண்டது. (ஆசிரியரின் ஆய்வறிக்கை 'இந்திரா காந்தியும் இந்திய முஸ்லிம்களும்'- எக்கானமிக் & பொலிடிக்கல் வீக்லி, நவம்பர் 3, 1990).

1980ஆம் ஆண்டில் முஸ்லிம் தொகுதிகளில் காங்கிரசின் பக்கம் வாக்காளர்கள் திரும்பினர் என்று மிரான் வீனர் கூறுகிறார். எனினும், மற்றவர்கள் அளவிற்கு அதிகமாக இல்லை. (தேர்தல்களில் இந்தியா, 1980, மைரன் வீனர், அமெரிக்கன் எண்டர்பிரைஸ் இன்ஸ்டிடியூட், வாஷிங்டன், டி.சி., 1983 பக்கம் 124). 1977ஆம் ஆண்டில், மற்றவர்களைப்போல, அவர்களும் இந்திரா காந்திக்கு எதிராக வாக்களித்தனர் (மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 115).

இராஜிவ் காந்தியும் அதிகம் கொள்கைப் பிடிப்புள்ளவராக இருக்கவில்லை. ஷா பானு வழக்கில் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பைப் பயனற்றதாக்கக் கொண்டுவரப்பட்ட, முஸ்லிம் பெண்கள் (உரிமைகள் பாதுகாப்பு மற்றும் விவாகரத்து) சட்டம், முஸ்லிம்களுக்குக் கெட்ட பெயரை கொணர்ந்தது. எனினும், இதைத் தொடர்ந்து, பாபர் மசூதியின் கதவுகள் திறக்கப்பட்டன (நீர்ஜா சௌத்ரியின் கட்டுரை, தி ஸ்டேட்ஸ்மேன், ஏப்ரல் 20, 1986). இதற்கு முன்னதாக அல்ல. இந்திரா காந்திக்கும் விஸ்வ ஹிந்து பரிஷத்திற்கும் இடையில் 1984 ல் ஏற்பட்ட பேரத்தின் அடிப்படையில் இது நடைபெற்றது.

**பாபர் மசூதி பிரச்சினை**

பாபர் மசூதி பிரச்சினை 1986இல் வெடித்தபோது, முஸ்லிம் அமைப்புகளின் தலைவர்கள் எவரும் முஸ்லிம் அல்லாதோரின் ஆதரவைத் திரட்டுவதற்கு முயற்சி எடுக்கவில்லை; அதைச் சட்டப்பிரச்சனை ஆக்குவதற்கு முயலவில்லை. முஸ்லிம்களின் பிரச்சனையாகவே அதைக் கையாண்டனர். பொதுமக்களின் ஆதரவைத் திரட்டுவதற்கு ஏதுவாக விளக்கமளிப்பதற்கு ஆவணங்களையும், வரலாற்றுச் சான்றுகளையும் திரட்டும் அடிப்படை வேலையை அவர்கள் புறக்கணித்தனர். முஸ்லிம் அல்லாத அறிஞர்களான சுஷில் ஸ்ரீவத்ஸ்வா, ரொமிலா தாப்பர், எஸ்.கோபால், நீலாத்ரி பட்டாச்சார்யா போன்றவர்களின் உழைப்பால்தான் சிறந்த ஆய்வுகள் வெளிவந்தன. கடுமையாக உழைத்த முஸ்லிம் எழுத்தாளர்கள், முஸ்லிம் அரசியல் வாதிகள் என்ற வனப்பு மிக்க வட்டத்திற்கு வெளியில் இருந்தவர்களே (அனாடமி ஆஃப் எ கான்ஃப்ராண்டேஷன், எஸ்.கோபால், வைகிங், 1991).

டிசம்பர் 6, 1992இல் நிகழ்ந்த பாபர் மசூதி இடிப்பு, அந்த வட்டாரங்களில் எவ்வித மறு சிந்தனையையும் தூண்டவில்லை. அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் இதற்குமுன் இருந்ததைக் காட்டிலும் மேலும் துடிப்பு மிக்கதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியது. டிசம்பர் 27, 1972இல் பம்பாயில் நடந்த மாநாடு ஒன்றில் இது அமைக்கப்பட்டது. முஸ்லிம் அமைப்புகளில் தனித்துக் குறிப்பிடும்படி, இந்த ஒரு அமைப்பிற்குத்தான் போஹ்ராக்களின் தலைவர் ஆதரவளித்தார். தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்திக் கொண்டார்.

இவற்றில் எதுவும் மறைக்கப்படக் கூடியவையல்ல. சமயம் தொடர்பான சூழ்நிலைகள் அச்சமுறும் அளவிற்குச் சீர்குலைந்து விட்டன. கே.என்.பணிக்கர் குறிப்பிட்டதுபோல் வகுப்புவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் ஓர் அடிப்படைத் தவறு இருக்கிறது. அக்டோபர் 9, 1990இல் அவர் நிகழ்த்திய நான்காவது வி.பி. சிந்தன் நினைவு சொற்பொழிவில் அவர் இதைப் பற்றிப் பேசினார். "வகுப்புவாதத்திற்கு எதிரான போராட்டம், ஓர் எதிர்மறை போராட்டம். வகுப்புவாதப் பிரச்சாரத்தை எதிர்ப்பதற்கான வழிகளையும் நடவடிக்கைகளையும் உருவாக்கும் போராட்டம். ஆய்படுபொருளை அவர்கள்தாம் (மதவாதிகளால்) முடிவு செய்கிறார்கள். மதச்சார்பற்ற சக்திகள் அதற்கு எதிர்வினையாற்ற வேண்டியுள்ளது. ஒவ்வொரு நிலையிலும் மதச்சார்பற்ற சக்திகள் ஒரு மகான் அவைத்யநாத்தை அல்லது ஒரு அத்வானியை எதிர்கொள்கின்றன. அவர்கள் நமக்கு முன்னால் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டியது அவசியம். அதற்கு, வகுப்புவாதத்திற்கு எதிரான போராட்டத்தை மதச்சார்பின்மைக்கான போராட்டமாக நாம் மாற்றியமைக்க வேண்டும். மானுடத்திற்கான போராட்டத்தின் பகுதியாக அது இருந்தால்தான் அத்தகைய போராட்டத்திற்கு அர்த்தம் இருக்கும்; ஹிந்து, முஸ்லிம் அல்லது வேறு ஏதோ மதத்தைச் சேர்ந்தவர் என்றில்லாமல், மனிதர்கள் மனிதர்களாக அங்கீகரிக்கப்படும், மதிக்கப்படும் சமூகத்திற்கான போராட்டம். நேர்மையான சமூகத்திற்கான நெடிய போராட்டத்தில், மதச்சார்பின்மைக்கான போராட்டத்தை ஒன்றிணைக்கும்போதுதான் அத்தகைய போராட்டம் சாத்தியம்."

**நேர்மையான சமுதாயத்திற்கான போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கேற்பு**

2018இல் தொலைப்பார்வையுடன் கூடிய ஓர் அரசியல் இலக்காக இது தோன்றலாம். அதை நோக்கிய நகர்வு உடனடியாகவும் உறுதியாகவும் நடக்கவேண்டும். பொறுப்பு அவர்களுக்கு மட்டும் உரியதல்ல. நேர்மையான சமுதாயத்திற்கான போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கேற்பை உறுதி செய்வதில் மதச்சார்பற்றவை என்று சொல்லிக் கொள்ளும் கட்சிகளுக்கு அதிகப் பொறுப்பு இருக்கிறது. மதச்சார்பற்ற கட்சிகளின் தலைவர்கள் முஸ்லிம்களுக்கு உதவ வேண்டும்: போராட்டத்தில் இணையும் முஸ்லிம்களுக்கு அவர்களுடைய அனுபவப்பூர்வமான நியாயமான தேவைகளைத் தீர்க்க முயலுதல், அவர்களுக்கு முக்கிய இடமளித்தல், அவர்களது பிரச்சனைகளைக் கேட்டல் போன்ற உதவிகள் அவை. இவை குறித்தும் இதுவரை எந்த அறிகுறியும் தென்படவில்லை. குஜராத் தேர்தலின்போது காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் சமய உணர்வுகள் திடீரென்று வெளிவந்தன. நன்மதிப்பையும் பெற்றார். இதுவரையிலும் சமய உணர்வுகளை வெற்றிகரமாக மறைத்து வைத்திருந்தார். பல ஆண்டுகளுக்குமுன் வி.என். காட்கில் முஸ்லிம்களின் உரிமைகளுக்கு இணக்கமாக இருந்தால், ஹிந்துக்களின் வாக்குகளை இழக்க நேரிடும் என்று இந்திரா காந்தியை எச்சரித்தார். 1980ல் ஆட்சிக்கு வந்தவுடன் அவர் இந்தப் பாதையைத்தான் பின்பற்றினார்.

**இந்தியாவில் முஸ்லிம்கள் முற்றிலுமாக புறந்தள்ளப்பட்டிருக்கிறார்கள். முஸ்லிம் கட்சிகளின் இலட்சியங்களுடன் எவரும் இணக்கமாக இல்லை. ஆகவே, அக்கட்சிகளைக் குற்றம் சுமத்துவது நேர்மையற்றது.** புரிந்து கொள்ளக்கூடிய எதிர்வினை இது. ஆனால், அவர்களது பிரச்சனைக்கு இது தீர்வாகாது. முஸ்லிம் அரசியல் கட்சிகளும், அவர்களுடைய துயரங்களைப் பகிர்ந்து கொள்ளும் மற்றவர்களும் ஒன்று சேர்ந்து வலுவான செயலுத்தியைக் கண்டறியவேண்டும். தலித்துகளும், இடதுசாரிகளும், ஹர்ஷ் மந்தர் போன்ற தனிமனிதர்களும் இச்செயலுருவாக்கத்திற்கு அழைக்கப்பட வேண்டும். காங்கிரஸ் முஸ்லிம்களும் பி.ஜே.பி. தரகர்களும் தவிர்க்கப்பட வேண்டும். வருங்காலத்தில் இந்தியாவின் முஸ்லிம்கள் எந்தப் பாதையைப் பின்பற்ற வேண்டும் என்பது குறித்த, பொது விவாதத்திற்கான வரைவு அறிக்கை ஒன்றைச் சிறிய குழுவொன்று தயாரிக்கலாம்.

**முடிவுற்றது**

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

**Owned and Published and Printed by V.Muthiah and Published from 22/32 M.J.B Street,Triplicane, Chennai-600005 and Printed at Sekar Offset Printers, 50/168, Big Street, Chepauk, Chennai-600005. Editor: V.Muthiah**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மடல் திறப்பு

சிந்துவெளி ஆய்வு : அறிஞர் ஆர்.பாலகிருஷ்ணனின் புதிய கண்டுபிடிப்புகள் என்ற முனைவர் பக்தவத்சல பாரதியின் கட்டுரையைப் படித்தேன். ஒரு பண்பாட்டின் பயணம்; சிந்துமுதல் வைகை வரை என்ற நூல் குறித்தும் சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம் என்ற நூல் குறித்தும் ஆர்.பாலகிருஷ்ணனின் கடுஞ் சறுக்கல்கள் குறித்தும் ஆய்வுலகத்தைக் கவனப்படுத்த இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

ஒரு பண்பாட்டின் பயணம் சிந்துமுதல் வைகைவரை என்ற தலைப்பே தவறானது. தமிழ்ப் பண்பாடு வடக்கே தொடங்கித் தெற்கே வந்து வளர்ந்தது என்ற தவறான கருத்தோட்டத்தைக் கொண்டது. ஏனெனில் ஆர். பாலகிருஷ்ணன் குமரிக்கண்டம் பண்பாடு தமிழரின் தாய்ப்பண்பாடு என்பதையும் சிந்துவெளிப் பண்பாடு ஒருவழிப் பண்பாடு என்பதையும் அவர் உணராததால் ஒரு பண்பாட்டின் பயணம் வைகை முதல் சிந்து வரை என்ற தலைப்பை அவர் தம் நூலுக்கு இடவில்லை.

இந்திய வரலாற்றைத் தெற்கிலிருந்தே தொடங்க வேண்டுமென்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ஒரு நூற்றாண்டிற்கு முன்பே முழங்கியும், அவ்வாறு தெற்கிலிருந்து தொடங்குவதே ஏற்புடையது என உலக வரலாற்றாசிரியர் வின்செண்ட் சுமித் வழிமொழிந்தும் தேய்ந்துபோன பழைய வழித்தடத்தையே பற்றிச் செல்லும் ஆய்வாக ஆர்.பாலகிருஷ்ணன் ஆய்வு அமைந்துள்ளது.

சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம் என்ற நூல் சிந்துவெளிப் பண்பாட்டிற்குத் திராவிட அடித்தளம் கூறுகிறது. ஆனால், திராவிடர்களுக்கோ கமில்சுவலபில் கருத்தைத் தழுவி ஈரான் அடித்தளம் கூறுகிறது. இவ்வாறு பல்வேறு கோணங்களில் வரலாற்றுக் குறைபாடுள்ளவையாக ஆர்.பாலகிருஷ்ணன் நூல்கள் அமைந்துள்ளன.

**– க. முத்துச்சாமி, தமிழ்ப்பேராசிரியர் (ப.நி)**
**சிவகங்கை மாவட்டம்**

“பனைப் பொருளாதாரம்” “ஒரு கனவு” என்ற தலைப்பில் திரு க. பழனித்துரை அவர்களின் கட்டுரை தங்கள் நவம்பர் 24 இதழில் படித்து இன்புற்றேன். இது குறித்த எனது உணர்வினை தங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். பயனுள்ளதாய் இருக்கும் எனவும் நம்புகிறேன்.

அகில இந்திய அளவிலும் மாநிலங்கள் அளவிலும் கிராம பொருளாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் மற்றும் மாநில கதர் கிராம தொழில்கள் வாரியங்களும் பதிவு செய்யப்பட்டு ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 1966 ம் ஆண்டு முதலே நடைமுறையில் உள்ளன. கிராமத்தொழில்களில், தொழில் வாரியாக ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன் கருதி அவர்களுக்கான கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொழில் அலகுகள் பதிவு மேற்கொண்டு, அரசின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதல் படி தனித்துறையின் மூலம் இன்றும் செயல்படுகிறது.

இதில் பனைத்தொழில் முக்கியத்வம் கருதி தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் சென்னையை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. பனைத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து கூட்டுறவு அமைப்புகள் மூலம் பனைத் தொழிலை நிலைபெறச் செய்து மேம்படுத்துதல், பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் பனை பொருட்களின் உற்பத்தியை அதிகரித்திட நிறுவன ரீதியான உதவிகளை வழங்குதல், பனைத் தயாரிப்புக்கான வாழ்வாதாரத்திற்கான கூட்டுறவு தளத்தை அமைப்பது போன்றவை பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 720 ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், எட்டு மாவட்ட பனை வெல்லம் விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் ஒரு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இவைகள் அனைத்தும் பனைப் பொருட்களை உற்பத்தி செய்வது மற்றும் விற்பனை செய்வது போன்ற பணிகளில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றன

பதநீர் தவறாக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் முறையான உரிமத்தின் மூலம் மட்டுமே பதநீர் இறக்கவும் மற்றும் அதை விற்பனை செய்யவும் வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாணையின்படி ஒவ்வொரு நிதியாண்டிலும் பதநீர் இறக்குவதற்கான உரிமத்தினை தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தினால் புதுப்பித்து வழங்கிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலரே தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட மற்றும் மாநில பனை வெல்லம் விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் ஆகியவற்றிற்கு செயற்பதிவாளர் ஆவார். கட்டுரை ஆசிரியர் எடுத்துள்ள பனை நடவு குறித்த முன் முயற்சிகள் மேலும் சிறக்க மேற்படி தகவல்கள் சம்பந்தப்பட்ட கைவினைஞர்களுக்கு மீள எடுத்து செல்லும் வகையில் பகிறப்படுவது நற்பயன்களை அளிக்கும் என நம்புகிறேன்.

**– சாம்பமூர்த்தி, சென்னை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 /43921
Postal Registration No. TN/CH(C)/617/2024-2026
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel, Egmore. between 29th-4th of every month






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org